

OFFICE OF THE REGISTRAR OF BOOKS NOV 1949 MADRAS

# 'பாலுட்ரின்'

Trade Mark

மலேரியாவிலிருந்து பாதுகாத்துக் கொள்ளுவதற்கு

## இப்பொழுது

## கடைகளில் கிடைக்கிறது




புதிய
வாராந்திர
மாத்திரை

## புதிய இகானமி ஸ்டிரிபில்

பாலுட்ரின் இப்பொழுது ஒரு புதிய, பெரிய சைஸ், 0·3 கிராம் மாத்திரையாக கிடைக்கிறது. இந்த புதிய மாத்திரை உங்களை மலேரியாவிலிருந்து ஒரு. வாரம் வரை பாதுகாக்கிறது. மலேரியாவினால் கஷ்டப்படும் பொழுது, ஜுரம் இறங்கும் வரை, தினம் ஒரு மாத்திரை சாப்பிடவும்.

இந்தப் புதிய மாத்திரைகள், சுத்தமான முறையில், ஒரு ஸ்டிரிப்பில் 8 மாத்திரைகள் வீதம் பாக் செய்யப்பட்டிருக்கிறது. இவைகள் சீதோஷ்ணத்தால் பாதிக்கப் படாதவை.

அளவு
மலேரியாவிலிருந்து பாதுகாத்துக் கொள்ளுவதற்கு வாரத்திற்கு ஒரு மாத்திரை
மலேரியா வந்த ... தினம் ஒரு மாத்திரை ஜுரம் இறங்கும் வரை
குழந்தைகளுக்கு குறைந்த அளவு, டாக்டரின் சொற்படி



ஒரு ஸ்டிரிப்பின் விலை 8 அணா
அல்லது ஒரு மாத்திரையின் விலை

## ஒரு அணா

இம்பீரியல் கெமிகல் இண்டஸ்டிரீஸ் (இந்தியா) லிட்.

ICI

PH.18

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
NOV 1949
MADRAS





## எமது முதல்தரமான
## சொந்தத் தயாரிப்புகள் !!

மாவு மில், நெல் மெஷின், சீயக்காய் மெஷின், காபி மில், தண்ணீர் பம்புகள் முதலியனவும் அவற்றின் ஸ்பேர் சாமான்களும் எமது தொழிற்சாலையில் எமது சொந்த மேற்பார்வையில் தயாரிக்கப்படுகின்றன!

மற்றும் பெல்டிங்குகள், டேவீஸ் எமரி, பேரிங்குகள் முதலிய மில்லுக்கு வேண்டிய சகல சாமான்களும் எப்போதும் கிடைக்கும்!

**கே. சுவாமிநாதன் & கம்பெனி,**
**24, எர்ரபாலு செட்டி தெரு, சென்னை.**

பிராஞ்சுகள்: பெனிங்டன் ரோட், தஞ்சாவூர்.
No. 22, சில்வர் ஜூபிலி பார்க் ரோட், பெங்களூர் ஸிடி.
தொழிற்சாலை: 7, வால்டாக்ஸ் ரோட், சென்னை.



## ரூ. 300 இனாம்



இந்த மகாகாளி இயந்திரத் தகட்டை நீங்கள் முழு மனதுடன் உங்கள் கைவசம் வைத்திருந்தால், நீங்கள் நினைத்தவை கைகூடும். உங்கள் விரோதிகள் எவ்விதமான நிலைமையிலிருந்தாலும் உங்களுக்குப் பணிவார்கள். நீங்கள் எதைக் குறித்துத் தேடுகிறீர்களோ, அது உங்களைத் தேடி வரும். இந்தத் தகட்டைக் கைவசம் வைத்துக்கொண்டு தியானம்பண்ணும்போது, இந்த மகாகாளிதோன்றி நீங்கள் விரும்புவதை அடையும்படி செய்வாள். ஒரு யந்திரத் தகடு விலை ரூ. 1—4—0. ஒரே தடவையில் 3 ஆர்டர் செய்தால் ரூ. 3—2—0. உடனே பலன் தெரியக்கூடிய யந்திரத் தகடு ஒன்று ரூ. 3—15—0. தபாற் செலவு தனி. சக்தி இல்லையென்று நிரூபிப்பவர்களுக்கு ரூ. 300 இனாம்.

**THE BENGAL MESMERISM HOUSE (C. K.)**
**HOSHIARPUR.**


198041

# உங்கள் (தேக) ஆரோக்கியத்தை

# பருகுங்கள்




**போர்ன்-வீடா** பாலை விடச் சிறந்தது, அதில் சக்தி தரும் விடமின்களும், கால்ஷியமும் அடங்கியுள்ளன. விளையாட்டுக்காரருக்கும் பலஹீனருக்கும் ஒருங்கே இன்றியமையாதது. குழந்தைகள் அதன் சாக்லேட் மணத்தை விரும்புவர். காலையிலும் இரவிலும் சூடாகவோ அல்லது குளிர்ந்த பானமாகவோ, ஒரு கிளாஸ் பாலுடன் இரண்டு தேக்கரண்டியளவு சேர்த்துப் பருகவும்.

Cadbury

THE TREE OF HEALTH

—ஆரோக்கிய விருக்ஷம்—

புதியதாக குறைக்கப்பட்ட விலையைப் பற்றி கேட்கவும்




CFY-2-TAM

## காட்பரீஸ்

# போர்ன்-வீடா

கால்ஷியமும், ஏ & டி விடமின்களும் நிறைந்தது

காட்பரி-ப்ரை (இந்தியா) லிமிடெட்

தபால் பெட்டி நெ. 1417 பம்பாய்-தபால் பெட்டி நெ 261 கல்கத்தா-தபால் பெட்டி நெ. 1725 மதராஸ்

# 1949-50-ல் என்ன நேர இருக்கிறது



புத்தாண்டாகிய 1949-50க்குள் ஏற்படக்கூடிய நன்மை தீமைகளை முன்கூட்டி அறிய விரும்பினல் ஒரு தபால் கார்டில் ஒரு புஷ்பத்தின் பெயரும், முழு விலாசமும் அனுப்பி வையுங்கள். 12-மாதத்திற்குள் ஏற்படக்கூடிய லாப நஷ்டங்கள், வியாபாரத்தில் வெற்றி, எந்த விதத்தில் பணம் கிடைக்கும், உத்தியோகம் எப்பொழுது கிடைக்கும், வழக்கில் வெற்றி, உத்தியோக மாற்றம், தேகாரோக்கியம், மனைவி, மக்கள் சுகம், தேக அசௌக்கியம், தூரதேசப் பிரயாணங்கள், பரீக்ஷையில் வெற்றி கலியாணம், அதைப்பற்றிய பேச்சுகள் நிலபுலன்களின் மூலம் ஏற்படக்கூடிய லாப நஷ்டங்கள், புதிய நட்பு, அதனல் உண்டாகும் பலன், சூதாட்டத்தின் மூலமாகவும், புலப்படாத இதர வழிகளினல் ஏற்படக்கூடிய லாப நஷ்டங்களையும், ஜோதிட முறைப்படி கணித்து அறிவிக்கப்படும். இதற்கு ரூ. 1—4—0 (வி. பி. மூலம் அனுப்பப்படும்) தபாற் செலவு தனி.

இத்துடன் துரதிருஷ்டத்தை அதிருஷ்ட வழியில் செலுத்தும் உபாயங்களும் அனுப்பப்படும். இதனல் ஏற்படக்கூடிய இன்னல்களில் இருந்து இது தன்னைக் காப்பாற்றிக்கொள்ள உதவும். ஒருமுறை பரீக்ஷித்துப் பார்த்தால் எம்முடைய ஜோதிட அனுபவம் விளங்கும். பொய் என்று நிரூபித்தால் பணம் வாபஸ் செய்யப்படும்.

**Shri**

**Swami Satnarayan Jotish Ashram**

**(C. K.) HOSHIARPUR.**

## மாதவிடாய் :

சகோதரிகளே! எமது "சும்பகிரேசனி" என்ற மருந்தை உபயோகித்தால், மாத வெளியீட்டை ஒழுங்குபடுத்துவதுடன் எவ்வளவு நாட்பட்ட தொந்தரவாக இருப்பினும் நிவர்த்திசெய்யும். நிங்கற்றது. 100 க்கு 100 பலன் நிச்சயம்.

விலை ரூ. 5/- தபாற்செலவு ரூ. 0-14-0

## கர்ப்பத்தடை :

"தம்பதி—சகா" நீங்கள் விரும்புகிறபடி கர்ப்பத்தடைக்கு உதவுகிறது. தீமை கிடையாது. 30 வருடங்களாக எல்லோராலும் உபயோகிக்கப்படுகிறது. பலர் நன்மை அடைந்திருக்கின்றனர்.

பூரண கர்ப்பத் தடைக்கு :: ரூ. 4-4-0

6 மாத காலத் தடைக்கு :: ரூ. 2-0-0

(தபாற் செலவு ரூ. 0-14-0)

## வீரியம், யௌவனம் :

உடல், மனம் இரண்டிற்கும் "மதன விலாஸ் ரஸாயனம்" சிறந்த டானிக். மயக்கம், சோர்வு, நரம்புத் தளர்ச்சி, மறதி, அஜீரணம் முதலியவைகளுக்குக் கைகண்ட மருந்து. சோர்வடைந்த மாணவர்கள், மூளை வேலையில் ஈடுபடும் கவிஞர்கள், மணவாழ்க்கை தொடங்கிய காதலர்கள் இவர்களுக்கு இந்த டானிக் ஓர் வரப் பிரஸாதம்.

விலை ரூ. 2—8—0

## விரைவாதம் :

குடல் இறக்கம், யானைக்கால், கீல் வாதம், வீக்கம் வலியுடன் கூடியதாயினும், எத்தனை நாட்பட்டதாயினும் ஒரு வாரத்தில் நிச்சயம் குணமளிக்கும் எமது ஆயுர்வேத முறைப்படி தயார் செய்த "ஸம்ஸந்தி". ஓர் முறை உபயோகித்துப் பாருங்கள்!

விலை ரூ. 4-8-0 தபாற்செலவு ரூ. 0-14-0

KAVIRAJ M. KAVYATIRTHA (C. M.)

70, Cornwallis Street, CALCUTTA-6.

# ஸ்டர்லிங் ஜெனரல் இன்ஷ்யூரன்ஸ்
## கம்பெனி லிமிடெட்

(தலைமை ஆபீஸ்: நியூ டெல்ஹி)

கண்ட்ரோலிங் ஆபீஸ்: 10, லிங்கசெட்டி தெரு, ஜி. டி. மதராஸ்.

கொடுக்கப்பட்ட மூலதனம் ரூ. 12,50,000
மொத்த ஆஸ்திகள் ரூ. 42,00,000 க்குமேல்

இந்திய ஆயுள் நிதி கம்பெனிகளுள் ஒரு பெரிய மூலதனமுள்ள முன்னேற்ற கம்பெனி

**ஆயுள், தீ, கடல், எதிர்பாரா விபத்து, ஆகாய விமானப் பிரயாணம் முதலான எல்லாவித பிஸினஸ்களும் ஏற்றுக்கொள்ளப்படும்.**

தேவை:-

கவர்ச்சிகரமான சம்பளத்திலோ கமிஷன்களிலோ திருச்சி, தஞ்சாவூர், தென்னூற்காடு ஜில்லாக்களில் வேலை செய்ய ஸ்பெஷல் ஏஜண்ட்கள், இன்ஸ்பெக்டர்கள், ஆர்கனைஸிங் செக்ரட்டரிகள் தேவை. அநுபவம் நிறைந்த பிஸினஸ் காரண்டி கொடுக்கக் கூடியவர்களின் மனுக்கள் முதலில் கவனிக்கப்படும்.

P. S. வெங்கடராமன், B. A.
பிராஞ்சு செக்ரடரி
யூனியன் பாங்கு பில்டிங்
பெரியதெரு, கும்பகோணம்.

தந்தி "ஈஸ்வர்" டெலிபோன். 3711

# மாடர்ன் எலக்டிரிக் கம்பெனி

301, லிங்கசெட்டித் தெரு, மதராஸ்.

மதுரை ஜில்லாவிற்கு

## பெட்டர் ஆயில் இன்ஜின்களை

விநியோகிப்பவர்கள்

எங்களிடம்

எல்லா விதமான எலக்டிரிக் மோட்டார்கள், பம்பிங் செட்டுகள், எலக்டிரிக் சாமான்கள் பல்புகள், பலவித ஆயில் இஞ்ஜின்கள், காபி கிரைண்டர்கள், மாவுமில் சாமான்கள், எப்பொழுதும் தயாரில் கிடைக்கும்.

விவரத்திற்கு எழுதுக.

பிராஞ்சு ஆபீஸ்:— 134, திண்டுக்கல் ரோட், மதுரை.

உங்கள்

அச்சு வேலைகள்

புத்தகப் பதிப்புகள்

கலர் படங்கள்

லேபிள்கள்

முதலியன

நேர்த்தியான முறையில்

தயாரிக்க

## காவேரி கலர் பிரஸ்

கும்பகோணம்

அழகும் ஆரோக்யமும்



பண்டிட் டி. கோபாலாச்சார்லுவின்

அருண

கர்பாசயரோக நிவாரணி

Golden Jubilee
1898 - 1948

அழகுக்கு அவசியம் ஆரோக்யம். ஆரோக்யமும் சௌந்தர்யமும் பெண்ணினத்தின் பிறப்புரிமை அருண கர்ப்பாசய ரோகங்களை நிவர்த்திசெய்து தேகாரோக்யத்தையும் சௌந்தர்யத்தையும் அளிக்கவல்லது.



ஆயுர்வேதாஸ்ரமம் லிட்.
(ஸ்தாபிதம் 1898)
மதராஸ் 17

மைல் கணக்கில்
முன்னேற்றம்

புத்தப்
புதிய

டன்லப்

ஆர்.எச்.எஸ்.
ட்ரக் &
பஸ் டயர்




TRADE MARK

DX 335 TAM






குழந்தைப்பருவத்தில்

முக்கியமான சுகத்தைத் தரும்

வுட்வார்ட் வைத்தியனின்

"கிரைப் வாட்டர்"

என்னும் மருந்துத் திராவகம்

குழந்தைக்கு

ஆரோக்கியத்தைத் தரும்

# WOODWARD'S GRIPE WATER

W. WOODWARD LTD. LONDON. ENGLAND

Agent:—T. T. KRISHNAMACHARI & Co.

12A, Lingha Chetty Street, G. T. MADRAS.

**மாதவிடாய்**
நின்றிருந்தாலும் அல்லது வேறு எவ்வித மோசமான நிலையிலிருந்தாலும் 'ரிதுபர்த்தினி' (கவர்ன்மெண்ட் ரிஜிஸ்டர்ட்) தீமையற்றது. ஒரே நாளில் விடாயாவது நிச்சயம். விலை ரூ. 5-0-0. பார்வதி கர்ப்பத் தடைக்கு அபாயமில்லாத சிறந்த மருந்து. தற்காலிக கர்ப்பத்தடைக்கு ரூ. 3-0-0. நிலையான கர்ப்பத்தடைக்கு ரூ. 4-8-0.
(தபால் செலவு ரூ. 0-14-0)

**விரைவாதம்**
விரைவாதம், குடல்வாயு, பைலேரியா முதலியவற்றிற்கு, பி.எச். தைலம் உபயோகிப்பதால் பூர்ண குணம் கிடைக்கிறது. இவ்வியாதிகளுக்கு உடனடியான குணம் அளிக்கக் கூடிய ஒரே மருந்து. விலை ரூ. 3-0-0. உட்கொள்ளும் மருந்து ரூ. 2-0-0. (தபால் செலவு ரூ. 0-14-0)

**வீரியம்**
தங்கம், வெள்ளி, கஸ்தூரி, பவழம் முதலியவற்ருல் தயார் செய்த விகரின் உபயோகிப்பதால் இழந்த வீரியத்தைத் திரும்பப் பெறலாம். வீரிய மிழந்து, ஞாபக சக்தியின்றி, மனச் சோர்வுள்ள வாலிபர்களுக்குப் புத்துயிரளிக்கிறது. நரம்புகளைப் பலப்படுத்தி, புதிய ரத்தத்தை அபிவிருத்தி செய்கிறது. வேண்டிய அளவு வாழ்விற்குச் சுகமளிக்கிறது. சாதாரணம் விலை ரூ. 3-0-0.
(தபால் செலவு ரூ. 0-13-0)

**கூஞ்சா தைலம்**
வழுக்கை, மயிர் கொட்டுதல், போன்ற வியாதிகளை நிவர்த்திப்பதுடன் மயக்கத்தையும் போக்குகிறது. தலை மயிர் சம்பந்தமான எவ்வித நோயையும் கண்டிக்கவல்ல சிறந்த கேசவிருத்தி டானிக்.
ஒரு பாட்டில் ரூ. 2-0-0
தபாற் செலவு ரூ. 0-14-0 வேறு.



கடிதங்கள் ஆங்கிலத்தில் எழுதவும்.

**KAVIRAJ R. N. CHAKRAVARTHI**
Ayurvedha Sasthri ( K. M. )
24, Debendra Ghose Road, Bhowanipore
CALCUTTA, 25
*Stockists:*
Messrs. APPAH & CO., 286, Netaji Subhas Chandra Bose Road Madras.

# பொருளடக்கம்

விரோதி மலர் 9 — ஐப்பசி இதழ் 3

தீபாவளியும் கண்ட்ரோல்களும் 3
அம்மாஞ்சியின் அபிப்பிராயங்கள் — ராமய்யா 5
மின் எண்ணெய் — வி. வி. ராமகிருஷ்ணன் 13
தூண்டிய திரி! — எம். பி. எஸ். பாரதி 17
காரியவாதி — கோமதி ஸ்வாமிநாதன் 23
பிரிட்டிஷ் செய்திப் பத்திரிகைகள் — கே. கோபாலன் 29
நாணய(ஏ)மாற்றம் — எஸ். என். ராமஸ்வாமி 32
கதா காலக்ஷேபம் — கலாதாஸன் 36
மனக் குரங்கு — ஹரிணி 41
வெண்ணெய் திரளும் சமயம்..? — விசுவம் 48
பெண் ஜன்மம் — சேஷ்டை 56
லக்ஷியக் கனவு (தொடர் கதை) — கே. சுந்தரம்மாள் 60
நாவில் ஒன்று — வாரன் 75
ஒன்பதாவது மணி — ஆர். எஸ். 79
பட்டன் பெருமை (தொடர் கதை) — கே. எம். முன்ஷி 84
தாயுள்ளம் — கி. ஸந்தானம் 99

குறிப்பு:— காவேரியில் வெளியாகும் கட்டுரைகளிலுள்ள பெயர்கள் கற்பனைப் பெயர்கள். அவைகளில் அடங்கிய அபிப்பிராயங்களும் அவற்றை எழுதியவர்களுடையவே, அவைகளுக்குப் பத்திரிகாசிரியர் பொறுப்பாளியல்ல.

# மேன்மையின்

## பெருமை அநேக வருஷ
## உழைப்பிற்குப் பின்னும் விளங்கும்



★

சைக்கிள்கள்

சைக்கிள் சாமான்கள்

பெராம்புலேட்டர்கள்

குழந்தை வண்டிகள்

இவைகளில்

உயரிய ரகத்திற்கு



**நம்பி வாங்க**

# இங்கிலீஷ் சைக்கிள் & மோட்டார்

இம்போர்டிங் கம்பெனி லிமிடெட்

2/9 பிராட்வே :: :: மதராஸ்-1.

தந்தி :—''சைக்கிள்ஸ்'' போன்: 3168

# காவேரி

| விரோதி மலர் 9 | "சென்றிடுவீ ரெட்டுத்திக்கும்—கலைச் செல்வங்கள் யாவும் கொணர்ந்திங்கு சேர்ப்பீர்—" பாரதியார் | ஐப்பசி இதழ் 3 |
|---|---|---|


## தீபாவளியும் கண்ட்ரோல்களும்

மங்கள ஸ்னானம் செய்துவிட்டு, புத்தாடைகள் உடுத்தி, அரும்பாடு பட்டுச் சம்பாதித்த சர்க்கரையினால் செய்த தின்பண்டங்களைச் சுவைத்து, எதிர்காலத்திலாவது இத்தகைய கஷ்டங்களைப் பொதுஜன சர்க்கார் உண்டுபண்ணாமலிருக்க வேண்டுமென்று நீங்கள் இறைவனை வேண்டிக்கொள்வது இயல்பு.

சென்ற பத்து வருஷங்களாகக் 'கண்ட்ரோல்களை' ஏற்படுத்தி மக்களை அவதிக்குள்ளாக்கினது இன்னும் மறைந்தபாடில்லை. காந்தி மஹான் தீர்க்க தரிசனத்துடன் அவைகளை அறவே ஒழிக்க வேண்டுமென்று வற்புறுத்தினார். கண்ட்ரோல்கள் மக்களைத் துன்பத்திற்கு உள்ளாக்கின என்ற காரணத்தினால் மஹாத்மாஜி கண்ட்ரோல்களை அகற்றச் சொல்லவில்லை. மக்களின் மனப் பான்மையை அறவே மாற்றிவிட்டன அவை; கொள்ளை லாபம் அடிப்பதும் பதுக்கல் செய்வதும் வியாபாரிகளுக்குச் சகஜமென ஆக்கிவிட்டதோடு, வியாபார சம்பந்த மற்றவர்களையும் அத் தொழிலில் ஈடுபடச் செய்து தேச ஒழுக்கத்தையே பாழ்படுத்திவிட்டன. எனவே கண்ட்ரோல் முறையை அகற்ற வேண்டும் என்று வாதித்தார் காந்திஜி. கவர்மெண்டார் இதற்கு ஒருவாறு இசைந்தார்கள். காந்தி மறைந்தவுடன் கண்ட்ரோல்கள் மறுபடியும் தலைதூக்கி விட்டன. கண்ட்ரோல்கள் வந்தவுடன் கவர்மெண்டார் சிலரை லைசென்ஸ் பெற்ற வியாபாரிகள் என்ற உரிமையாளர்களாக்கி மக்களுக்குப் பண்டங்களை வினியோகிக்கச் செய்கிறார்கள். சரி நிகர் வினியோகம் என்ற பெயரால் தேவையுள்ளவர்களுக்குப் பற்றாக் குறையாகப் பண்டங்களை வினியோகித்து, கள்ள மார்க்கெட்டுக்கு அடிகோலுகிறார்கள். மார்க்கெட்டில் கொஞ்சநஞ்சமுள்ள பண்டங்கள் தலைமறைவாய் விடுகின்றன. பண்டங்கள் போதவில்லை என்ற கூக்குரல். கவர்மெண்டார் இதை நம்பி இன்னும் அதிகமான கண்ட்ரோல்களை ஏற்படுத்துகிறார்கள். கண்ட்ரோல்கள் அதிகரிக்க அதிகரிக்கப் பண்டங்கள் கள்ளமார்க்கெட்டில் ஓடி ஒளிந்துகொள்கின்றன; விலை ஏறி விடுகிறது. கவர்மெண்டார் விலை நிர்ணயம் செய்யும் முறையில் விலையைப் படிப்படியாகத் தூக்கி நிர்ணயிக்கிறார்கள். பொது மக்களின் அவதி சொல்ல முடியாது. அகவிலைகள் விஷம் போல் ஏறி விடுகின்றன.

கவர்மெண்டார் தலையீடு வியாபாரத்தில் இல்லை என்று ஏற்பட்டாலொழிய, இனி நிலைமையைச் சமாளிக்க முடியாது. கண்ட்ரோல்கள் ஏற்படுவதினால் கவர்ன்மெண்டாரால் வெற்றிகரமாகச் சாமான்களை மக்களுக்கு வினியோகிக்க முடியவில்லை. சாதாரணமாகக் கிடைத்துக் கொண்டிருந்த சர்க்கரை, கண்ட்ரோல் என்று வந்தவுடன் பறந்தோடி விட்டது. பண்ட உற்பத்திக் குறைவு என்றெல்லாம் பேச்சு நடமாட ஆரம்பித்துவிட்டது. கவர்ன்மெண்டார் எந்தப் பண்டத்திற்குக் கண்ட்ரோல் ஏற்படுத்துகிறார்களோ அப் பண்டம் உற்பத்திக்குறைவு என்றும் உடனே பிர

சாரமும் கிளம்பி விடுகிறது. கட்டுப்பாடுகள் வருமுன் அதைப்பற்றிப் பேச்சே கிடையாது. கட்டுப்பாடற்ற வியாபாரம் மறுபடியும் ஏற்பட்டாலன்றி இனி அகவிலை குறைய வழியில்லை. கண்ட்ரோல்கள் வந்தால்தான் அதிகாரிகள் ராஜ்யம் ஓங்குகிறது. எனவே அவர்களும் இதை விரும்புகிறார்கள்; வியாபாரிகளும் இதை விரும்புகிறார்கள்.

தஞ்சை ஜில்லாவில் அரிசிப் பங்கீடு கிடையாது. இங்குள்ள வியாபாரிகள் அனைவரும் எப்பொழுது ரேஷன் வரும் என்று ஆவலுடன் எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறார்கள். கண்ட்ரோல்களை எதிர்ப்பவர் பொது மக்களும் ஏழைகளும் தாம். அதை வரவேற்பவர் அதிகாரிகளும் வியாபாரிகளும். எந்த எண்ணத்தின் கீழ் கண்ட்ரோல்கள் கொண்டு வரப்படினும் இறுதியில் அவை பாதிப்பது பொது மக்களை; கொழிக்கச் செய்வது அதிகாரிகளையும் வியாபாரிகளையும்.

இதனால் என்ன ஏற்படுகிறது? பொது ஜன சர்க்கார் என்று பறை சாற்றிக் கொண்டு பதவியில் இருக்கும் காங்கிரஸுக்கு மதிப்புக் குறைவு. ஐம்பது வருஷ காலத்தில் அரும்பாடுபட்டுச் சேமித்து வைத்த நற்பெயரையும் மக்களின் நன்மதிப்பையும் இரண்டு வருட காலத்திற்குள் கண்ட்ரோல்களின் காரணமாகவும் தாங்கள் தீர்க்க தரிசனமில்லாது அவசர அவசரமாக இயற்றும் சட்ட திட்டங்களினாலும் அழித்துவிட்டதோடு மக்களின் அவமதிப்புக்கும் பாத்திரமாகிவிட்டார்கள்.

இவை போதாவென்று ஸ்ரீ கோபால ரெட்டியார் கட்டாயக் கடன்பத்திரங்கள் வழங்கவும் ஆங்காங்கே போடப்பட்டிருக்கும் கவர்மெண்ட் திட்டங்களுக்குப் பணம் சம்பாதிப்பதின் பொருட்டு அப்பிரதேசத்திலுள்ள மக்களிடம் கட்டாய வசூல் செய்ய உத்தேசித்திருப்பதையும் பார்த்தால் காங்கிரஸின் பெயரை நிலை நாட்ட வந்த மந்திரி சபையா இது என்று நமக்குத் தோன்றுகிறது. யுத்த காலத்தில் கட்டாயமாகப் பிரிட்டிஷார் நிதி திரட்டவில்லையா, அதையொட்டி, பண நெருக்கடியான இந் நிலையில் கவர்மெண்டு திட்டங்களுக்கு ஏன் மக்கள் கட்டாயக் கடன் கொடுக்கவேண்டுமென்று நாங்கள் வற்புறுத்தக்கூடாது? என்று கேட்கிறார் ஸ்ரீ கோபால ரெட்டிகாரு. பிரிட்டிஷ் கவர்மெண்டாருக்கு எவ்வளவு ஆதரவு இந்நாட்டில் கிடைத்ததோ அவ்வளது ஆதரவுதான் உங்கள் காங்கிரஸ் கவர்மெண்டுக்கும் கிடைக்கும் என்று மட்டும் கூறி முடித்துக்கொள்ளுகிறோம். பொதுஜன சர்க்கார் என்று சொல்லிக் கொண்டு, மக்களின் பூரண ஆதரவு காங்கிரஸ் சர்க்காருக்கு உள்ளது என்றும் பறை சாற்றித் திரியும் மந்திரி சபை கட்டாயப்படுத்தி மக்களிடமிருந்து கடன் வாங்க வேண்டுமென்றால் அதனிடம் மக்களுக்கு உள்ள பற்றைக் காட்டவில்லையா என்று கேட்கமாட்டார்களா என்பது கனம் ரெட்டிகாருவுக்கு விளங்கவில்லை போலும்! தானாகக் கனியாததை தடியால் அடித்துக் கனியவைக்கப் பார்க்கும் ஆந்திர ரெட்டிகாருக்கு ஜே!

இத்தகைய மட்டமான யோசனைகளினின்று மக்களைக் காத்தருள வேண்டுமென்று நாம் எல்லோரும் இப்புனித தீபாவளி அன்று இறைவனை வேண்டுவோமாக!




*ராமய்யா*

[அம்மாஞ்சியின் அபிப்பிராயங்கள் ஏன் வெளியிடப்படவில்லை என்று கேட்டு தினந்தோறும் கடிதங்கள் நமது காரியாலயத்தில் வந்து குவிந்து கொண்டிருக்கின்றன. காவேரி தோன்றியது முதல் தவறாது அன்பு கூர்ந்து எழுதிவந்த "ராமய்யா" அவர்கள் "அம்மாஞ்சி இனி தம் அபிப்பிராயங்களைக் கூற மறுக்கிறார்" என்று எழுதி விட்டார்.

அம்மாஞ்சியை உற்சாகமூட்டி எழுப்பமுயற்சித்தோம். இன்றுதான் வெற்றி கண்டோம். தம் சலிப்பை உதறித் தள்ளிவிட்டு வந்த அம்மாஞ்சி வெகு உற்சாகத்துடன் காணப்படுகிறார். இனி அம்மாஞ்சி மாதம் தோறும் தவறாது தம் அபிப்பிராயங்களை வெளியிடுவார் என்று நமக்கு உறுதி கூறுகிறார் "ராமய்யா." ஆனால் ஒரு மாறுதல். அம்மாஞ்சியின் விறுவிறுப்பான 'கிண்டல்கள்' தமிழ் நாட்டிலுள்ள சமூக பழக்க வழக்கங்களையும் சீமான் சீமாட்டிகளையும் குறித்து எழுதப்படும். நல்லெண்ணத்தில் தோய்ந்த அவருடைய அம்புகள் யாரையும் காயப்படுத்தா. வாசகர்கள் இதை மிகவும் ரஸித்து வரவேற்பார்கள் என்பது திண்ணம். —ஆசிரியர்]

---

*(இந்தக் கட்டுரையில் தமிழ் நாட்டில் சிபார்சு செய்யும் விதங்களைப் பற்றியும், அவைகளில் முறையொட்டியவைகளும், முறையற்றவைகளும் எத்தகையன என்பதைப் பற்றியும், அம்மாஞ்சியின் அபிப்பிராயங்களை வெளிப்படுத்துகிறேன்—ராமய்யா.)*

சிபார்சு என்கிற பதம் உர்துவில் SIFARISH என்கிற பதத்திலிருந்து வந்தது. அர்த்தம் என்ன? ஒருவனைப்பற்றி ஆதரித்துப் பேசுவது என்பது. "நம்ம ஆள், ஸார், இவன்; நல்ல கெட்டிக்காரன், யோக்கியன், பழக்கத்துக்குப் பாத்திரமானவன்" என்பது சிபார்சு. "அவன் கிடக்கிறான் ஸார், சுத்த மண்டு—விட்டுத் தள்ளுங்கோ! ஏதோ மடத்தனமா கசாம் பிசாம்னு உளறிப்பிட்டான், அதை மனசிலே வெச்சிண்டு நீங்களும் வருத்தப்படுகிறீரே, மறந்துடுங்கோ" என்பதுவுங்கூட சொல்லுகிற மாதிரியிலிருந்து சிபார்சுதான்.

சிபார்சுகளிலே மூன்று ரகம் உண்டு. (1) காலைப் பிடித்துக்கொண்டு செய்யும் சிபார்சு. (2) கையைப்பிடித்துக்கொண்டு செய்யும் சிபார்சு. (3) கழுத்தைப் பிடித்துக்கொண்டு செய்யும் சிபார்சு. நம்முடைய ஆதீனத்தில் இருக்கிறவர்கள், வேலைக்காரர், ஏழை பந்துக்கள் முதலியவர் சிபார்சுக்கு வரும்போது, காலைப் பிடித்துக்கொண்டும் வாயைக் குழைத்துக்கொண்டும் கேட்பார்கள். நமக்குச் சமானமாக இருப்பவர்கள், அதாவது அடுத்த வீட்டுக்காரர், எதிர் வீட்டுக்காரர், உத்தியோகத்தில் நம்முடன் இருப்பவர்கள், பாலிய நண்பர்கள் இவர்களெல்லோருமோ, கையைப் பிடித்துக்கொண்டும் அசட்டுச் சிரிப்பு சிரித்துக்கொண்டும் கேட்பார்கள். நமக்கு மேலதிகாரிகள், துவந்தார்த்த பந்துக்கள், பண

உதவி செய்தவர்கள், வேறு விதத்தில் மிரட்டில் உருட்டலுடன் பேசக்கூடியவர்கள், இவர்களெல்லோரும் சிபார்சுக்கு வந்தால் கழுத்தைப் பிடித்த சங்கடம் தான். இந்த மூன்று ரகத்திலும், முறையொட்டிய சிபார்சு, முறையற்ற சிபார்சு என்று இருவகையுண்டு. பொது நியாயத்துக்கும் மனச்சாட்சிக்கும், கௌரவத்துக்கும் விரோதமில்லாமல் செய்யக்கூடும் சிபார்சு முறையான சிபார்சு எனலாம். பல்லைக் காட்டிக்கொண்டு, கையைப் பிசைந்துகொண்டு, எண்சாண் உடலை ஒரு சாணில் அடக்கிக்கொண்டு, சிபார்சு செய்யவேண்டி வந்தால் அது முறையில்லாத சிபார்சு என்றே வைத்துக்கொள்ளலாம்.

உங்கள் வீட்டில் வேலை செய்யும் தவசிப்பிள்ளை நமசிவாயன், உங்களுடைய பண்ணையாள் பழனிசாமி, நாசுவ நாகலிங்கம், அல்லது வண்ணார வையாபுரி இவர்களில் ஒருவன் உங்களிடம் வந்து, "எஜமானே, நம்ம மகன் நச்சுப்பையன் மெடிக்லேஷன் பரீக்ஷை தேறிட்டானுங்க—இன்னும் மேலே படிக்கணும்னு ஆசப்படறான்; கொஞ்சம் சிபார்சு பண்ணி, பட்டணத்திலே ஒரு காலேசிலே சேத்துட்டீங்களானா, பெரிய புண்ணியம் பண்ணினாப்பலேங்க. ஏதோ, அரைச்சம்பளம் கால் சம்பளத்துக்குங்கூட சிபார்சு செய்திங்கன்னா, என் குடும்பத்துக்கே கஞ்சி வார்த்தாப்போலேங்க!" என்று சொன்னால் நீங்கள் சும்மா இருப்பீர்களா? சிரமத்தைப் பார்ப்பீர்களா? நச்சுப்பையன் கலக்கஞ்சியை உப்பில்லாமல் குடிப்பான், நல்ல புத்திசாலி, பழக்கமும் ஒழுக்கமும் நிரம்பவும் மெச்சத்தகுந்தது, என்றெல்லாம் சொல்லி அவனுக்குக் காலேஜ் அட்மிஷன் வாங்கிக் கொடுப்பீர்களல்லவா? அவனுடைய ஆசையை நிறைவேற்றினால் பலபேர் மெச்சுவார்கள்; "எவ்வளவு பெருந்தன்மை, ஒரு ஏழைப் பையனுக்காகச் சொந்த வேலையெல்லாம் நிறுத்திவிட்டு, சிரமம் எடுத்துக்கொண்டார்" என்பார்கள்; "தாழ்ந்த வகுப்பினர் முன்னேற்றத்தில் ஈடுபட்ட தயாளகுண சீலன்" என்ற பட்டம் கிடைக்கும்; சிபார்சு செய்யும்போது லஜ்ஜைப்படவேண்டியதில்லை; பையனுடைய தகப்பனும் வருங்காலத்தில் தாசானுதாசனாயிருப்பான்; எவ்வளவு அனுகூலங்கள்! அடுத்தபடியாக, உங்களுடைய மேலதிகாரி ஒருவரோ, அல்லது உங்களுடைய மருமகப்பிள்ளைக்கு வேலைகொடுத்தவர் ஒருவரோ, அல்லது உங்களுடைய சம்பந்தியோ, அல்லது அவருக்குச் சம்பந்தியோ, வீடேறி வந்து, "என்ன சௌக்கியமா? உம்மிடம் தான் வந்தேன். உம்மாலே தான் ஒரு காரியம் ஆகவேண்டும். ஆகும்! ஆகத்தான் போகிறது! அதைப் பற்றிச் சந்தேகமில்லை! சுருக்கமாகச் சொல்லுகிறேன். நம்ம பையல் குண்டப்பன் இருக்கிறானோன்னோ? அவன் ஹானர்ஸ்க்குச் சேரவேண்டும் என்கிறான். ஒரு காலால் நிற்கிறான். எல்லாவற்றிலும் டிஸ்டிங்ஷன் வரும் என்று எதிர்பார்த்தான். அவனுடைய துரதிர்ஷ்டம் பாருங்கோ, அவனுடைய பேபர்கள் எல்லாவற்றையும் எவனோ ஒரு வடக்கத்தியான் திருத்தினாம், குறுக்கிக் குறுக்கி மார்க்கைப் போட்டு காலைவாரி விட்டுட்டான் — பையனோ எக்னாமிக்ஸ் ஹானர்ஸ் ஆவது கிடைத்தால் போதும் என்கிறான். அவனைக் கூட்டிக்கொண்டு மதராஸுக்குப் போய் எதாவது ஒரு காலேஜிலே அடித்துப் பிடித்து ஒரு ஸீட் வாங்கிக் கொடுத்து விடவேண்டும். நீங்கள் மனது வைத்தால் ஆய்விடும். பையன் உங்களுடைய பையன், பொறுப்பு உங்களுடையது" என்று மென்னியைப் பிடித்து விட்டால் நீர் என்ன செய்வீர்? மென்று விழுங்குவீர்! "எனக்குக் காலேஜ்விவகாரங்கள் ஒன்றும் தெரியாதே, ஸார்! பட்டணத்திலே காலேஜ்களிலே சிநேகிதர் ஒருவரும் இல்லையே" என்பீராக்கும்! அதற்குப் பதில், "என்ன ஸார், ஹனுமார் மாதிரி உம்முடைய சக்தி உமக்கே தெரியாமலிருக்கிறது! உம்முடைய தமயன் மதராஸிலே போலீஸ்லேயிருக்கிறார், மைத்துனன் ஸிவில் ஸப்ளைஸ்லேயிருக்கிறார், இவாளெல்லாம் இருக்கும் போது இந்த அல்ப விஷயத்துக்குப் பின் வாங்குகிறீரே" என்பார். போலீஸுக்கும், சிவில் சப்ளைஸ்க்கும் காலேஜ்களுக்கும் என்னையா சம்பந்தம் என்று கேட்டாலோ, "நன்னா சொன்னீரே! போலீஸ் உத்தியோகஸ்தருக்கும் சிவில் சப்ளைஸ் அசாமிக்கும் கட்டுப்படாதவா யாராவது

உண்டா? இந்தக் காலத்திலேயாகட்டும், எந்தக்காலத்திலே யாகட்டும் எல்லாக் காரியமும் தாக்ஷிணியத்திலேதானே ஸார் நடக்கிறது? கேட்கத் தகுந்தவா கேட்டால் கொடுக்கிறவா இல்லையென்பாளா? தமயனையும் மைத்துனனையும் பிடியுங்கோ, ஸார், நம்ம வேலை கை கூடிப் போய்விடும் பாருங்கோ'' என்று பதில்வரும்! தாக்ஷிணியத்துக்குக் கட்டுப்பட்டு நீங்கள் பட்டணம் போய், சொந்தக்காரர் இருவரையும் உபத்திரவப்படுத்தி, ஒருவரை யொருவர் பழித்துக்கொண்டு, ''காலைக்கட்டின சனியன்,'' ''சோழம் பிரும்மஹத்தி,'' ''ஆறுமாசத் துக்கடங்காரன்,'' ''இங்கிதம் தெரியாத பங்காளி'' என்றெல்லாம் பெயர் வாங்கிக்கொண்டு திரும்பிவர வேண்டியது தான்!

நொண்டி நொண்டி பரீக்ஷையில் தேறின பையன்களுக்கு அட்மிஷன் வாங்கிக்கொடுப்பது, தொட்டுக்கொண்டும் துடைத்துக்கொண்டும் மார்க்குகள் வாங்கின பிள்ளைகளுக்கு ஹானர்ஸ் கிளாஸில் ஸீட் வாங்கிக்கொடுப்பது, ஹாஸ்டல்களினுள் நுழையவைப்பது, இப்படிப் பட்ட காரியங்களில் ஈடுபடும் ஜந்துகளுக்கு ஜூன் ஜூலை மாதங்களில் நரக அவஸ்தைதான் என்று வைத்துக்கொள்ளலாம். பட்டங்கள் சரமாரியாகக் கிடைக்கும். விவகாரம் தெரியாத அசட்டு மனிதன் என்பார்கள். அச்சாபிச்சங்களையெல்லாம் இழுத்துக்கொண்டு வந்து சிபார்சு செய்யும் துப்பட்டி என்பார்கள். கம்பளிப் பூச்சி என்பார்கள். கரையான் என்றும் சொல்லுவார்கள். பலபேர் பலவிதமாகத் தூஷிப்பதை வாங்கி முடிந்துகொள்ள வேண்டியதுதான்.

அசட்டுத்தனமான சிபார்சுகளில் அநேகமுண்டு. பரீக்ஷைகள் முடிந்த பிறகு பேபர்கள் திருத்துபவர்களிடம் சென்று பத்து மார்க்குகள் அதிகமாகப் போடச்சொல்லுவது; அருக்கட்டையாயிருக்கும் பையன்களைப் பரீக்ஷைக்குப் போகும்படி ஸெலெக்ஷன் செய்யச் சொல்


தீபாவளி பண்டிகை - ஆனந்தம்!




இந்த ஆனந்தத்தை பெருக்கவும்
பரிமளிக்கும்படி செய்யவும்

பிரஸிடெண்ட் வெஜிடேபிள்
ஹேர் ஆயிலையே வாங்கி
உபயோகியுங்கள்

அழகை வளர்த்து ஆரோக்கியத்தை யளித்து உங்களை மகிழ்விப்பதில் நமது ஹேர் ஆயில் மிகவும் பிரசித்தி பெற்றது. கூந்தலை வளர்த்து அழகைப் பெருக்கிக் கொள்ள விரும்புகின்றவர்களுக்கு இது ஓர் வரப்பிரசாதம். இன்றே வாங்கி உபயோகித்து மகிழுங்கள்.

எல்லா இடங்களிலும் கிடைக்கும்

தயாரிப்பவர்:—
ரதோட் டிரேடிங் கம்பெனி, சௌகார்பேட்டை ; மதராஸ்.

லுவது; காலித்தனமாக நடந்துகொள்ளும் பையன்களுக்குச் சிம்புவைத்துக் கட்டுவது! அந்தச் சந்தர்ப்பத்தில் ஹெட்மாஸ்டரிடம் போய், "பாலிய வயது தானே ஸார், இளம் பிள்ளை விளையாட்டாக ஏதோ செய்துவிட்டான். நீங்களும் நானும் சிறு பிராயத்திலே எவ்வளவோ செய்திருப்போம். அதையெல்லாம் நினைத்துப் பாருங்கோ. இவ்வளவு கடினமாயிருக்கத் தோன்ருது" என்று சொல்லி மாட்டிக்கொள்ளுவது. அதற்கு ஹெட்மாஸ்டர் "ஓய்! உம்மைப்பற்றி வேணுமானல் சொல்லிக்கொள்ளும். ஆக்ஷேபமில்லை. நான் எப்போதும் இவ்வளவு காலித்தனமாக நடந்து கொள்ளவில்லை; அந்தப் பயலோ படு அசத்து. அவனுக்குப் பரிந்து கொண்டு பலே குறும்பாகப் பேசுகிறீரே" என்று சொல்லுவார். அதை வாங்கிக் கட்டிக்கொள்ள வேண்டும்! பெரிய குடும்பத்துப் பையன் என்று சொன்னலோ, "என்ன ஓய், பெரிய குடும்பம்? ஊரார் சொத்தையெல்லாம் வாங்கி வாயிலே போட்டுக்கொண்டு பணக்காரனுய்விட்டால் பெரிய குடும்பமோ" என்று கன்னம் புளிக்கப் பதில் வரும்! "பையனுக்கு அதிர்ஷ்டம் சப்பை, ஸார். பரீக்ஷை நாளிலே உடம்பு அசௌக்கியமா படுத்துக்கொண்டுவிட்டான்; நன்ருயிருந்திருந்தா நல்ல மார்க்கு வாங்கியிருப்பான்" என்று சிபார்சு செய்தாலோ, "போதும் போதும், நிறுத்துங்காணும்! பரீக்ஷைக்கு முதல் நாள் காபி ஓட்டலிலே வயிறு புடைக்கச் சாப்பிட்டுவிட்டு வெற்றிலை பாக்கு புகையிலையைப் போட்டுண்டு மாடினி சினிமாவுக்குப் போயிருக்கான் பயல், நான் பார்த்திருக்கேன், என்னண்டை வந்து அளக்கிறீரே, அதிர்ஷ்டம் சப்பையா, பேஷ்" என்று விழும் மண்டைமேல்.

முறையில்லாமல் சிபார்சு பண்ணினல் விபரீதம்தான். யாருடைய சிபார்சுக்காகப் போகிருேமோ அவனைப் பூஷித்து இந்திரன், சந்திரன், கர்னன், குபேரன், பிருஹஸ்பதி, என்றெல்லாம் வாய் கூசாமல் சொல்ல, பதிலுக்கு அவனைத் தூஷித்தது போதாமல், நம்மையும் கேவலமாகப் பேச, எல்லாவற்றையும் வாங்கிச் சட்டைப் பைக்குள் போட்டுக்கொள்ள வேண்டி வரும்! சின்ன உத்தியோகம் ஒன்றில் இருக்கும் ஒரு ஆளுக்கு, சிறிது அதிகமான பதவி ஒன்று கொடுக்கும்படி அவனுடைய மேலதிகாரியிடம் சிபார்சு செய்ய, அவர், அவன் சுத்த மண்டுகம் என்றும், அவனுக்கு மேல் மணியான பயல்கள் மூன்று பேர் இருப்பதாகவும், அவர்களை ஒதுக்கி வைத்து அவனுக்குப் ப்ரொமோஷன் கொடுக்க முடியாதென்றும் சொல்லவும், சிபார்சு பலிக்காமல், கடைசியாக "என்னமோ, ஸார், உங்களுடைய இஷ்டம்; இந்தப் பையனுடைய தகப்பனர் கீழே என்னுடைய மாப்பிள்ளை வேலை பார்க்கிருர்; அந்த மனுஷனும் என் மாப்பிள்ளையுமா என் மண்டையைப் போட்டு உருட்டுகிற உருட்டலில், உம்மண்டே வந்து கேட்டுக் கொண்டேன்; நான் கொஞ்சம் சுகப்பட வேணும் என்று உங்களுக்கு இருந்தால் உபகாரம் பண்ணுங்கள்", என்று பட்டவர்த்தனமாகச் சொல்லுவதும் உண்டு! டாக்டர்களிடத்திலே சிபார்சு செய்யப் போவதுண்டு சிலர். ஊரைப் பார் என்ருல் சேரியைப் பார்ப்பான் ஒருவன், நல்ல ஒன்றரைக் கண்ணன். அவனுக்கு நேர் பார்வையோடு செய்ய வேண்டிய உத்தியோகத்துக்கு லாயக்காகும்படி சர்டிபிகேட் கொடுக்கச் சொல்லி, சிபார்சு! என்னமாயிருக்கிறது? முழுப் பூசிணிக்காயைச் சோற்றில் மறைக்கச் சொல்லுவது! கோவில் பசு மாதிரி மதமதவென்று உலாவிக் கொண்டிருப்பான் ஒருவன், ஆனல் தகராறில் அகப்பட்டுக் கொண்டிருப்பான்; லீவ் எடுத்துக் கொண்டால் தப்பிக் கொள்ளலாம்; லீவ் எடுக்க டாக்டர் சர்டிபிகேட் வேண்டும், அதற்கு வேண்டி சிபார்சு. டாக்டர் பொய் சொல்ல வேண்டுமென்று சிபார்சு! இவையெல்லாவற்றையும் விட அதிகக் கேவலம் நியாயாதிபதிகளிடத்திலே சிபார்சு செய்யப் போவது. குற்றவாளி யோக்கியன் என்று சிபார்சு செய்வது, அல்லது தண்டனையைக் குறைக்கச் சொல்லுவது, அல்லது நாஜுக்காக, பேச்சுடன் பேச்சாகவும், பட்டும் படாமலும், வாழைப் பழத்தில் ஊசியேற்றுவது போல், நடந்து கொண்டிருக்கும் வாதத்தைப்பற்றி நீதிபதியின் மனப்போக்கை மாற்றுவது, இதெல்லாம் விபரீதமான விஷப் பரீக்ஷையாக முடிவது சகஜம்.

நீதிபதி நல்ல மனிதராயிருந்தால் பல்லைத் தட்டிக் கையில் கொடுத்து, காலை உடைத்துக் கழுத்தில் கட்டியனுப்பி விடுவார். சற்றுக் கடினமானவராயிருந்தால் நீதிபதியை அவமதித்த சட்டத்தின் கீழ், பிராஸிக்யூஷன் பண்ணி விடுவார். அரைப் பணம் கொடுத்து ஆடச் சொன்னதும் ஒரு பணம் கொடுத்து ஓயச் சொன்னதும் போல் தான்.

முறையில்லாமல் சிபார்சு செய்பவர் எல்லோருக்கும் அசட்டுத் தைரியமும் அதிகப் பிரசங்கமும் நிரம்ப இருக்கும். ஏராளமாகப் பணத்தைப்போட்டு புத்தம் புதியதாக ஒரு மோட்டார்கார் வாங்கியிருப்பார் ஒருவர். அவரிடம் போய் "என்னுடைய ஆப்த நண்பர் பெண்ணுக்குக் கலியாணம். மாப்பிள்ளையை அழைக்க உங்களுடைய கார் சித்தே கொடுக்க வேணுமே! பெட்ரோல் போட்டுக் கொள்ளுகிறோம். ட்ரைவருக்குச் சாப்பாடு போட்டு, பக்ஷீஸ் கொடுத்துவிடுகிறோம்" என்று கேட்டால் அதைவிட அசம்பாவித சிபார்சு உண்டா? கலியாண ஊர்வலத்தில் புதிய கார், எண்ணெய் ஆடும் செக்குமாதிரி முதல் கியர்லே போகவேணும்; சந்தனத்தையும் குங்குமத்தையும் பூசுவார்கள்; புஷ்பம் சூட்டுவார்கள்; காருடைய பெய்யிண்ட் முழுதும் தேம்பல் கண்ட உடல் மாதிரி ஆய்விடும்; நண்டுஞ் சிண்டுமாகப் பத்துப் பதினைந்து குழந்தைகள் ஸீட் மேலே ஏறி துகைக்கும்; ஒரே ராத்திரியில் புதிய கார் பழைய கார் ஆகிவிடும். இதைப்பற்றிச் சிந்தையுண்டா?

"ஒருமாதம் லீவ் எடுத்துக்கொண்டிருக்கிறேன். கொடைக்கானலிலே பத்து நாளும், குத்தாலத்திலே பத்துநாளும் இருந்து உடம்பைத் தேற்றிக்கொண்டு வரலாமென்று உத்தேசம். உங்களுக்குத் தெரிந்தவர்கள் யாராவது அந்த இரண்டு இடங்களிலேயும் இருந்தால் கடுதாசி எழுதமுடியுமா" என்று ஒருவர் என்னைக் கேட்டார்.

அதற்குப் பதில் நான் "கடுதாசி எதற்காக? ஜம்ஜம் என்று லீவு எடுத்துக் கொண்டு சுற்றிவிட்டு வருவதற்குச் சிபார்சு என்ன வேண்டியிருக்கிறது?" என்று கேட்க, அவர் சொன்னார்.

"அதான், ஸார்! தங்குவதற்கு இடம் கொடுப்பார்களான்னுட்டுதான், ஹோட்டல்களிலே போய், தங்கினால் உடம்பு கெட்டுப்போய்விடும். பிரண்ட்ஸோடே போய் இருந்துவிட்டால் தண்டா இல்லை பாருங்கள்! பிரத்தியேகமா ஒவ்வொரு ஊரிலேயும் வீட்டை ஏற்பாடு செய்து கொள்ளலாமா என்று யோசித்தால் எல்லாரும் பரிகாசம் பண்ணுகிறார்கள். என்ன ஓய், ஒருநாள் கூத்துக்கு மீசையை எடுத்தது போலே, பத்து நாட்களுக்காக ஒரு பங்களா, பரிசாரகன், பரிவாரம், சிப்பந்திகள், என்ன படாடோபம்! என்கிறார்கள். அத்துடன், பாருங்கள், ரேஷன், கிஷன் உபத்திரவங்களெல்லாம் தலைவேதனையாயிருக்கின்றன. எல்லாவற்றையும் உத்தேசித்து, பிரண்ட்ஸுடன் இருந்துவிடலாமென்று தீர்மானித்துவிட்டேன். அவர்களுக்கும் நான் இருந்தால் ஜாலியாகக் கம்பெனியா யிருக்கும். சீட்டுக் கச்சேரிக்கோ, அல்லது பிக்னிக்பார்ட்டிக்கோ, நானொருத்தன்கூட சேர்ந்தா அவாளுக்கும் சௌகரியம்தானே"— எப்படியிருக்கிறது பார்த்தீர்களா யோசனை? பிள்ளையில்லாத வீட்டில் ஒரு கிழவன் துள்ளி விளையாடினானாம். இவரை வீட்டில் வைத்துக்கொண்டு ஆதரிப்பது யானையைக் கட்டி தீனி போடுவது போலே இருக்கப் போகிறது; பதிலுக்கு இவருடைய "கம்பெனியை" அவர்கள் ரசித்து ஆனந்தப்பட்டுவிடுவார்களாம்!

மரச்சாமான்கள், பிங்கான் சாமான்கள், கண்ணாடிப் பாத்திரங்கள் இவைகளை இரவல் கொடுக்கும்படி கேட்பது, சிபார்சு செய்வது சிலபேருக்கு எண்ணெய் நஸ்யம்! வண்ணானுக்கு வண்ணாத்தி மேலே ஆசை, வண்ணாத்திக்குக் கழுதை மேலே ஆசை என்பது போல, ஒரு அசந்தர்ப்பக் குடுக்கை என்னிடத்திலே வந்து இந்த மாதிரி கேட்டார். "அம்மாஞ்சி ஸார், எங்க ஆபீஸ் மானேஜர் பெண்ணுக்கு கலியாணம். சம்பந்தி வீட்டு மனுஷ்யாள், உங்க மருமான் பங்களாவுக்கு அடுத்த பங்களாவிலே விடுதி இறங்குகிறார்களாம்; அவாளுக்குக் கொஞ்சம் நல்ல பர்னிச்சர் போடவேணும்— உங்க மருமான் வீட்டிலே இருக்கிற டிராயிங்ரூம் சோபா, நாற்காலிகள், ஒரு டீசெட், இரண்டு நாட்களுக்கு இரவல் கொடுக்கும்படியா சிபார்சு செய்யுங்களேன்." நான் என்ன பதில் சொல்லுவது? என் மருமானுக்கும் எனக்கும் பேச்சு வார்த்தையில்லை, இரண்டு மாத

எமது நண்பர்கள் வாடிக்கைக்காரர்கள் அபிமானிகளுக்கு

எங்களது மனமார்ந்த

தீபாவளி வாழ்த்துக்கள்

பலவித நவீன மோஸ்தர்களில் சிறந்த பார்டர்களுடன் இப்பொழுது காஞ்சிபுரம் கொள்ளேகாலம், பங்களூர் முதலிய இடங்களிலிருந்து ஏராளமான பட்டு ஜவுளிகளும் நூல் ஜவுளிகளும் வேஷ்டிகள், துப்பட்டாக்களும் வந்திருக்கின்றன.

R. S. E.

ருக்மணி ஸில்க் எம்போரியம்

பெரியதெரு, கும்பகோணம்.

ராதா ஸில்க் எம்போரியம்

சன்னதித்தெரு

மைலாப்பூர், சென்னை.

மாக அவனை நான் பார்க்கவேயில்லைன்னு பொய் சொல்லி அனுப்பி விட்டேன். டிராயிங் ரூம் சோபாவாம், நாற்காலிகளாம், டீ செட்டாம்! வெற்றிலை போட்டுக் கொண்டு சுண்ணாம்பு தடவுவார்கள், சந்தனத்தைப் பூசிக் கொண்டு புரளுவார்கள், பொடி போட்டுக் கொண்டு சோபா மேலேயே கையைத் துடைப்பார்கள், சோபா மேலே இரண்டு வாழைப் பழம் கிடக்கும், அதின் மேலே ஒரு துண்டைப் போட்டு விரித்து விட்டு ஒருவர் படுத்துக் கொண்டு நசுக்கி விடுவார். வஸ்துக்கள் உருவாயிருக்குமா? இருபதினாயிரம் ரூபாய் செலவழித்துக் கலியாணம் செய்யும் மானேஜருக்கு, ஒரு நூறு ரூபாய் வீசி யெறிந்து பர்னிச்சர் வாடகைக்கு எடுக்கச் சக்தியில்லையா? குட்டியைக் கொண்டு கடல் ஆழம் பார்க்கிறாரே!

ரயில் பிரயாணம் செய்யும் போது வழியில் சாப்பாட்டுக்கு வசதி செய்யும்படி சிபார்சு கேட்பது வெகு பேருக்கு வழக்கம். காலை 6 மணிக்கு ரயில் நிற்குமிடத்தில் இட்லி காபி கொண்டு வரச் சொல்லுவது; சாப்பாடு வேளையில் சாப்பாடு கொண்டுவரச் சொல்லுவது; டிபன் வேளையில் இரண்டு ஜிலேபி, 4 தயிர்வடை, ஒரு சொம்பு காபி கொண்டுவரச் சொல்லுவது; இவைகளுக்காக வேண்டி முன்னதாகவே கடிதம் எழுதச் சொல்லி, அந்தந்த ஸ்டேஷன்களில் கழுத்துச் சுளுக்கும்படியாக எட்டிப் பார்த்துக்கொண்டிருந்து, கொண்டு வந்ததை வாங்கி அதிதீவிரமாக வாயில் முறித்துப் போட்டுக்கொள்ளுவது வெகு பேருக்கு ஆனந்தம். ரயிலில் ஏறிவிட்டால் அவர்களுக்குத் தீராத பசிதான். பண்டங்களைக்கொண்டுவருகிறவர்கள் எவ்வளவு சிரமப்பட்டு எத்தனை தூரத்திலிருந்து வண்டியை வைத்துக்கொண்டு வரவேண்டுமோ, அவ்வளவு சிரமத்தைக் கொடுக்கிறோமே என்கிற யோசனை சிபார்சு கேட்கிறவர்களுக்குத்தான் இல்லை என்றாலும், சிபார்சு செய்கிறவர்களுக்கும் இல்லை என்பதுதான் ஆச்சரியம்.

தாங்கள் அண்டக் கூடாத இடங்களிலும்கூட சிபார்சுமூலம் ஒண்டிக்கொள்ள வேண்டும் என்று ஆசைப்படும் ஜந்துக்கள் அனேகம் உண்டு. சங்கங்கள், கிளப்

புகள் போலுள்ள பிரத்தியேக ஸ்தலங்களில் நிகழ்ச்சிகள் நடக்கும்; அவைகளுக்கு அந்தந்தச் சங்கங்களின் அங்கத்தினர் மாத்திரமே போகலாம் என்று விதித்திருப்பார்கள். அதவா, அங்கத்தினரின் பிள்ளைகளைக் கூட்டிக்கொண்டு போகலாம் என்றும் இருக்கும். இப்படியிருக்க, ஒரு ஜந்து, ஒரு அங்கத்தினரிடம் போய்: "ஸார், என் மச்சினனையும் உங்க கிளப் பங்க்ஷனுக்குக் கூட்டிண்டு போகமுடியுமா என என் மாமனார் கேட்கச்சொன்னார். அவன் ரொம்ப ஆசைப்படுகிறான். முன்னதாகவே பஸ்ஸிலே போய், கேட்கிட்டே காத்துக்கொண்டிருக்கச் சொல்லுகிறேன்" என்பார். "ரொம்ப ஸாரி ஸார், மெம்பர்களும் அவாளுடைய பிள்ளைகளும் மாத்திரம்தான் பங்க்ஷனுக்குப் போகலாம்" என்றாலோ, அதற்குப்பதில் "அதினாலென்ன ஸார், அவன் உங்களுடைய பிள்ளைன்னு சொல்லிவிடுங்களேன்" என்றும் சொல்லுவார். இரகசாரம் தானே! முதலாவது அங்கத்தினருக்குப் பிள்ளையே கிடையாதுன்னு எல்லாருக்கும் தெரியும். அன்றைய தினம் காலையில்தான் தத்து எடுத்துக்கொண்டதாகச் சொல்லுவதா. இரண்டாவது, அந்தப் பையனுடைய உருவத்தைப் பார்த்தால், அவன் மூன்றாவது மனுஷனுடைய பிள்ளையென்று சொன்னாலும்கூட அடிக்கலாமாவென்று கோபம் வரும்; தன் பிள்ளைன்னு மனங்கோணாமல் எப்படிச் சொல்லுவது. எவ்வளவு அல்ப காரியத்துக்கு எப்படிப்பட்ட பொய் சொல்லும்படியாக சிபார்சு?

ஸ்திரீகள் சமூகத்தில் சிபார்சுகள் பிரமாதமாக நடமாடும்; அவைகளெல்லாம் வேறே தினிசாயிருக்கும். மாதர் சங்கம் என்று ஒன்று இருக்கும்; அங்கத்தினர் வெகு பேருக்கு முக்கிய ஜோலி சிபார்சு செய்வதும், சிபார்சு கேட்பதும், சிபார்சு மூலமாகச் சிநேகங்களைப் பெருக்குவதும், குறுக்குவதுங்கூட இருக்கும். சர்க்கார் உத்தியோகத்தில் பெரிய வாகினிகளாயிருப்பவருடைய பாரியைகள் இத்தகைய சங்கங்களில் முக்கிய புள்ளிகளாக இருந்து வருவார்கள்; அவர்களை அணுகி, சிபார்சுகள் செய்வதே முக்கிய கருத்தாயிருக்கும் இதர மாதர்களுக்கு. சிறிய உத்தியோகஸ்தர் வீட்டு ஸ்திரீகள் பெரிய உத்தியோகஸ்தர் வீட்டு ஸ்திரீகளிடம் பவ்வியமாக இருந்து வருவதும், வர்த்தகக் குடும்ப ஸ்திரீகள் அதிகாரிகளுடைய பாரியைகளிடம் வினயமாய் நடந்து கொள்ளுவதும், எல்லாம் எதிர்காலத்தில் என்ன சிபார்சு வேண்டி வருமோ அதற்குப் பீடிகை போட்டுக் கொள்ளுவோம் என்கிற உத்தேசத்துடன்தான். நவீன நாகரிகத்தில் ஈடுபட்ட ஸ்திரீகள் மத்தியில் சிபார்சுகள் தீவிரமாக நடக்கும்; அவர்களுக்கு ஆசை அதிகம், கூச்சம் குறைவு, பொறுப்பு என்பது கிடையாது, ஆதரவு மட்டும் அபரிமிதம்; பின்னே சிபார்சுக்குக் கேட்பானேன்?

ஒரு கலியாணத்தை முடித்து வைக்க ஆயிரம் பொய் வேண்டுமானாலும் சொல்லலாம் என்கிற வசனம் உண்டு. ஆனால் இது பண்டைக் காலத்து பரிஸ்திதியை உத்தேசித்து வழங்கின வசனம். தற்காலத்தில் ஒரு பொய் சொன்னவன் மண்டை ஆயிரம் சுக்கலாக வெடித்து விடுமே! அதிலும் கலியாணம் முடித்து வைக்கும் விஷயத்திலா? அம்மாஞ்சி சொல்லுகிறான்: "கலியாணத்தைக் கூட்டி வைக்கும் விவகாரத்தில் தலையிட்டுக் கொள்ளவே கூடாது. அதோ அந்தப் பிள்ளையிருக்கிறான்; அதோ அந்தப் பெண் இருக்கிறாள்; ஒருவரோடு ஒருவர் கலந்து கொண்டு தீர்மானம் செய்து கொள்ளுங்கள் என்ற பேச்சுடன் விலகிக் கொள்ளவேண்டும். அடுத்தபடியாக ஜாதகங்களைக் கையாலும் தொடலாகாது; தொட்டுவிட்டால் பிடிக்கும் கிரகசாரம். — சம்பந்தம் பொருத்தம் பொருத்தமில்லை என்கிற விஷயத்திலோ, பணம், காசு, நகை, நட்டு, சொத்து, சுதந்திரம், கொடுக்கல் வாங்கல் விஷயங்களிலோ, பெண் வீட்டுக்காரரும் பிள்ளை வீட்டுக் காரரும் நேர் நேராகப் பேசிக்கொள்ள வேண்டுமேயொழிய, நடுவில் மத்தியஸ்தத்துக்கோ, சிபார்சுக்கோ எவனாவது ஒருவன் புகுந்தானோ, தொலைந்தது அவனுடைய கௌரவம், மரியாதையுடன் விலகிக் கொள்ள முடியாது. — எக்கச்சக்கமாக மாட்டிக்கொண்டு ஒரு கலியாணத்தை ஏற்பாடு செய்துவிட்டபின், புத்திசாலியாயிருப்பவன் என்ன செய்ய வேண்டும் தெரியுமா? கலியாணத்துக்கு முதல் நாளே வெளியூருக்குப் போய் விடவேண்டும். சந்தடியில் அகப்பட்டுக் கொள்ளக் கூடாது. கண்மறைவாக இருந்துவிட்டு, கலியாணம் கழித்து ஒரு வாரத்துக்குப் பின் முகூர்த்த வெற்றிலை பாக்குக்கு வரவேண்டும். அவன்தான் சமர்த்தன். என் சொந்த அனுபவம் இதுதான்!"



நாள் முழுதும் புத்துணர்ச்சி...!

புராதனமானதும், பெருமை மிக்கதுமான சந்தன எண்ணெயின் உதவியால் செய்யப்படும் யெஷ்வந்த் ஸாண்டல் ஸோப் சருமஆரோக்யத்திற்கும், நாள் முழுதும் நீடிக்கக் கூடிய புத்துணர்ச்சிக்கும் இன்றியமையாத சாதனம்.

Y

Yeshvant Sandal Soap

மொத்த விற்பனையாளர் :

**A. R. காஸிகார் அண் கோ.,**

39, தம்புசெட்டித் தெரு,
சென்னை-1.

நியூ தரகுபெட்,
பங்களூர்.

# மீன் எண்ணெய்

ஸி. வி. ராமகிருஷ்ணன்

"டேய் அம்பி, பக்கத்து வீட்டு மாமி வந்திருக்காள், உன்னைக் கொஞ்சம் பார்க்கவேணுமாம், இந்த கொஞ்சம் வந்து விட்டுப் போடா," என்று சமையலறையிலிருந்து என்னுடைய அருமை அம்மா அலற ஆரம்பித்தாள். படித்துக்கொண்டிருந்தபத்திரிகையை டேபிளில் விசிறி எறிந்துவிட்டு, சமையலறைக்குச் சென்றேன். பக்கத்து வீட்டு மாமி, அவளுடைய வாண்டுப்பயல் சகிதமாக, உடம்பை வளைந்து கொடுத்துக் கொண்டு, மரியாதைக்காகச் சற்று ஒதுங்கி நின்றாள்.

"அம்பி சின்னபயல் தான். அவனுக்கு என்ன மரியாதை வேண்டியிருக்கு. இந்த பக்கமாக வந்து நீங்களே சமாச்சாரத்தைச் சொல்லுங்கோ"—இது தான் அம்மா என்னை மாமிக்கு அறிமுகப் படுத்திய விதம்.

"ஒன்றுமில்லை, நீங்கள் சிறந்த டாக்டர் என்று உங்கள் அம்மா சொன்னாள். என் பையன் உடம்பைச் சற்று காண்பித்துவிட்டுப் போகலாம் என்று வந்தேன். "டேய் சீமாச்சி, மாமாவுக்கு உடம்பைக் காண்பிடா" என்று கூறிக்கொண்டு அம்மாமி புடவையுடன் அட்டையைப்போல் ஒட்டிக்கொண்டிருந்த வாண்டுப்பயலை இழுத்து என் முன் நிறுத்தினாள். உடல்வற்றி, மார்புக் கூடுதெரிய, ஒடிந்து விழுந்து விடுவதுபோல் இருந்தான் பையன்.

எனக்கு என்ன செய்வதென்று தெரியவில்லை. காரணம் நான் வைத்தியனல்ல. ஆராய்ச்சியில் டாக்டர் பட்டம் பெற்றதை, வைத்தியத்தில் பட்டம் பெற்றதாக அம்மா நினைத்துக்கொண்டு எல்லோரிடமும்புகழ்ந்து கொண்டதின் பயன் பக்கத்தாத்து அம்மாமியை அவளுடைய பயலுடன் வைத்தியத்திற்கு வரும்படி (இனமாக வைத்தியம்செய்து கொள்ளலாம் என்ற எண்ணம் தான் !) செய்துவிட்டது. இந்தச் சமயத்தில் அம்மாவை விட்டுக்கொடுக்க மனமில்லை.

ஆகவே அம்பிப்பயலை அவன் கண்களைக் காண்பிக்கச் சொன்னேன். சற்று இரத்தக் குறைவு தெரிந்தது.

"நன்றாகச் சாப்பிடறான். ஆனா உடம்பு என்னமோ தேறமாட்டேன்கிறது, என்ன செய்யறது" என்று மாமி குறைப்பட்டுக் கொண்டாள்.

"பயலுக்கு வியாதி ஒன்றுமில்லை. கொஞ்சம் பலம் வருவதற்கு 'மீன் எண்ணெய் வாங்கி கொடுங்கள் சரியாப்போயிடும்" என்றேன்.

கோடித் தெருவில் இருக்காரே டாக்டர் கோபாலய்யர், அவர் கூட ஏதோ "காட் லிவர் ஆயில்" என்கிற மீன் எண்ணெய் தான் வாங்கிக் கொடுக்கச் சொன்னார். மீன் எண்ணெயைப் பற்றிப் பாதகமில்லை. அதைக் கொடுத்தால் பலம் வருமா அல்லது அதை விடச் சிறந்த டானிக் ஏதாவது கொடுக்கலாமா என்று கேட்டு விட்டுப் போகலாம் என்று வந்தேன்."

"ஷார்க் லிவர் ஆயில்" என்கிற மீன் எண்ணெய் நம் நாட்டைச் சுற்றி உள்ள கடலிலிருந்து கிடைக்கும் மீனினின்றும் தயார் செய்யப் படுகின்றது. அதில் சத்து உள்ள பொருள்கள் அதிகம் இருக்கின்றன. தவிர ஒரு பாட்டில் இரண்டு ரூபாய் தான் இருக்கும். அதை வாங்கி ஆறு மாதத்திற்குக் கொடுத்திர்களானால் பையன் பருத்து விடுவான்" என்றேன்.

மாமி சற்றுத் தயங்கினாள்.

"என்ன தயங்குகிறீர்கள்?" என்றேன்.

"காட்லிவர் ஆயில் ஒரு பாட்டில் விலை ஐந்து ரூபாய், ஷார்க் லிவர் ஆயில் இரண்டு ரூபாய் தானே? ஆகவே காட் லிவர் ஆயில் தானே நல்லது!" என்று தயங்கிக் கொண்டே கேட்டாள்.

"காட்லிவர் ஆயில் வெளி நாட்டினின்றும் இறக்குமதியாகிறது. அதனால் விலை அதிகம். ஷார்க்லிவர் ஆயில் நம் நாட்டில் தயார்செய்யப்படுவதால் விலை சரஸம். ஷார்க்லிவர் ஆயிலை ஆராய்ந்து அதில் காட்லிவர் ஆயிலில் இருப்பதைவிடச் சத்து அதிகம் இருப்பதாகக் கண்டு பிடித்திருக்கின்றனர்" என்று கூறி விட்டு என் அறைக்குச் சென்று பெட்டியைத் திறந்து ஒரு பத்திரிகையை எடுத்துக் கொண்டு வந்தேன். "இந்தப் பத்திரிகையில் ஷார்க்லிவர் ஆயிலைப் பற்றி ஒருவர் எழுதியிருக்கிறார். அதைப் படித்து விட்டு நீங்களே எது வாங்கலாம் என்று முடிவு செய்யுங்கள்" என்று கூறிப் பத்திரிகையை மாமி கையில் கொடுத்து விட்டு என் அறைக்குச் சென்று விட்டேன். மாமி சமையலறையிலேயே உட்கார்ந்து கொண்டு படிக்க ஆரம்பித்துவிட்டாள்.

* * *

## இந்தியாவில் மீன் எண்ணெய்த் தொழில்

நாளுக்கு நாள் நம் நாட்டில் க்ஷயம், கண் பார்வை இழத்தல் முதலியவைகளினால் பீடிக்கப்படும் மக்களின் எண்ணிக்கை அதிகரித்து வருகின்றன. இதற்கு மூல காரணம் யாது? மக்களுக்கு வேண்டிய சக்தியும், புஷ்டியும் கொடுக்கக் கூடிய உணவுப் பொருள்கள் கிடைக்காததால், அவர்கள் மலிவாக அகப்படும் உணவுப் பொருள்களை வாங்கி உண்டு காலம் கழிக்க முயற்சிக்கின்றனர். அவர்கள் உண்ணும் உணவில் உடலுக்கு அவசியமான விடமின் A என்ற சத்துப் பொருள் குறைவாகவோ அல்லது சில சமயங்களில் கொஞ்சங் கூட இல்லாமலோ இருக்கின்றது. எனவே விடமின் A குறைவு காரணமாக, வியாதியை எதிர்க்கும் சக்தி குறைந்து க்ஷயம் முதலிய வியாதிகளால் பீடிக்கப்பட்டு மக்கள் அவதிப்படுகின்றனர்.

ஒவ்வொருவரும் திடகாத்திரமாக வாழ வேண்டின், தினம் உண்ணும் உணவில் உடல் நலத்திற்கு வேண்டிய சத்துப் பொருள்கள் அனைத்தும் தகுந்த அளவில் இருக்கும்படி கவனித்துக் கொள்ளவேண்டும். முக்கியமாக ஒவ்வொருவரும் தினம் 5000 யூனிட்ஸ் விடமின் A யாவது உட்கொள்ள வேண்டும். எளிய மக்கள் நிறைந்த நம் நாட்டிலே, அனைவரும் விடமின் A யை உபயோகப் படுத்த வேண்டுமாயின், அது அனைவருக்கும் சுலபமாகவும், சரஸமாகவும் கிடைக்கும்படி செய்ய வேண்டும்.

நீண்ட ஆராய்ச்சிக்குப் பின்னர், விடமின் A, மீன் எண்ணெயிலும், கறிகாய்களின் மேல் உள்ள வர்ணப் பொருளிலும் (Caro Tenoids) இருப்பதாகக் கண்டு பிடித்திருக்கின்றனர். நம் மக்களில் பெரும்பாலோர் மீனை உபயோகப்படுத்தத் தயங்குகின்றனர். முக்கியமாக ஜைனர்கள் (Jains) அதைக் கேட்கக்கூடச் சகிக்க மாட்டார்கள்! எனவே தற்சமயம் பெருவாரியான மக்கள் கறிகாய்களை உட்கொள்வதின் மூலம்தான் விடமின் A யை ஒரு அளவிற்குப் பெறுகின்றனர். ஆனால் இந்த அளவு உடலுக்கு வேண்டிய விடமின் அளவைவிட மிகக் குறைவாகும்.

வருங்காலத்தில் அறிவு வளர்ச்சி நம் நாட்டில் பெருக ஆரம்பிக்குமாயின், ஒவ்வொருவரும் அவர்களுடைய உடல் நலத்தின் அவசியத்தை உணர ஆரம்பிப்பார்கள். பின்னர் மூடக்கொள்கைகள் ஒழிந்து மீன் எண்ணெய் சாப்பிடுவதினால் பாவம் இல்லை என்று அறிய ஆரம்பிப்பர். அதன் சின்னங்கள் இப்பொழுதே படித்த கும்பலில் தலை காட்ட ஆரம்பித்துவிட்டன! எனவே மக்களுக்கு வேண்டிய விடமின் A யை அதிக அளவிலே கொண்டுள்ள மீன் எண்ணெயை நம் நாட்டிலே ஏராளமாக உற்பத்தி செய்ய ஆரம்பிக்கவேண்டும்.

இந்த மீன் எண்ணெய்த் தொழில் நம் நாட்டிற்குப் புதியதல்ல. நூறு வருடங்களுக்கு முன்பே மலபார் கரையில், கள்ளிக்கோட்டையில் (Calicut) மீன் எண்ணெய் தயாரிக்கப்பட்டு, சீனா முதலிய இடங்களுக்கு ஏற்றுமதி செய்யப்பட்டது. 1870ம் ஆண்டில் நார்வேயிலிருந்து காட்லிவர் ஆயில் ஏராளமாக இறக்குமதி செய்யப்பட்டு மலிவான விலைக்கு விற்கப்பட்டதால், இந்திய கம்பெனியின் வியாபாரம் நசித்துவிட்டது. மறுபடியும் இரண்டாவது உலக யுத்தத்தின் பொழுது, காட்லிவர் ஆயில் இறக்குமதி நின்று விட்டதின் காரணமாக, பல கம்பெனிகள் நம் நாட்டிலே தோன்றி, நம் நாட்டைச் சுற்றியுள்ள கடலினின்றும் கிடைக்கும் ஷார்க் என்னும் மீனினின்றும் எண்ணெயை எடுத்து, ஷார்க் லிவர் ஆயில் 'தொழிலை ஆரம்பித்தனர். உலகயுத்தம் முடிந்ததும், இந்தத் தொழிலின் ஆயுசின் முடிவும் நெருங்க ஆரம்பித்தது! காரணம் என்ன? அதிக லாபம் அடைய வேண்டி, சில கம்பெனிகள் எண்ணெயைச் சரியான முறையில் தயார் செய்யாது, இதர எண்ணெய்களுடன் கலந்து மக்களை ஏமாற்ற ஆரம்பித்தன. மக்கள் அந்த எண்ணெயை உபயோகிப்பதின் மூலம் (அதில் விடமின் A அளவு 300 யூனிட் கூட இல்லை) ஒரு பலனையும் காணாது

தவித்துக் கொண்டிருக்கும் பொழுது, சண்டை நின்று விடவே, மறுபடியும் காட் லிவர் ஆயிலை வாங்கி உபயோகிக்க ஆரம்பித்து விட்டனர்.

தற்போதைய நிலையிலே, பொருளாதார நெருக்கத்தைச் சமாளிக்க, இறக்குமதியைக் குறைத்து ஏற்றுமதியை அதிகரிக்க நம்நாடு முற்பட வேண்டும். நம்நாட்டில் தயார் செய்து கொள்ளக் கூடிய பொருள்களைத் தயார் செய்து கொண்டு, அந்நிய நாட்டினின்றும் இறக்குமதியைத் தவிர்க்க வேண்டும். நம் நாடு மூன்று பக்கமும் கடலால் சூழப்பட்டிருக்கின்றது. நூதனக் கருவிகளையும், படகுகளையும் கொண்டு மீன் பிடிக்க ஆரம்பிப்போமாயின், வெகு காலத்திற்கு மீன் பஞ்சமே இருக்காது. மீன் உண்போருக்கு ஏராளமான மீனை அளிப்பதின் மூலம் உணவுப் பஞ்சத்தை ஒரு அளவிற்குத் தீர்ப்பதோடல்லாது, ஷார்க்மீன்களை ஏராளமாகப் பிடித்து, மீன் எண்ணெயைத் தயாரித்து மக்களுக்கு அளிப்பதின் மூலம் விடமின். A பஞ்சத்தையும் நீக்கலாம்.

ஒவ்வொருவரும் மீன் எண்ணெய் உட்கொள்ள ஆரம்பித்தால், அநேகமாக ஒரு மில்லியன் காலன் மீன் எண்ணெய் வேண்டியிருக்கும். தவிர தாவர எண்ணெய்களாகிய டால்டா முதலியவைகளில் விடமின் குறைவை நீக்க ஏராளமான மீன் எண்ணெய் அவசியமாயிருக்கும். எனவே அரசாங்கமே பல இடங்களிலும் கம்பெனிகளை ஆரம்பித்து ஏராளமான அளவு ஷார்க்லிவர் ஆயிலைச் சுத்தமான முறையில் தயார்செய்ய ஆரம்பிக்க வேண்டும்.

நூதன கருவிகளைக் கொண்டு கடலினின்றும் ஏராளமான ஷார்க் மீன்களைப் பிடித்து, கடற்கரைக்குக் கொண்டுவர வேண்டும். மீன் பஞ்சம் வராமல் இருக்க, சிறியமீன்களை விட்டு விட்டு, புஷ்டியான, விடமீன் .A. நிறைந்து இருக்கும் மீன்களாகப் பார்த்துப் பிடித்து வரவேண்டும். மீன் எண்ணெய் தயார் செய்யும் தொழிற்சாலைகள் கடல் கரை ஓரங்களில் இருக்க வேண்டும். ஏனெனில் மீனைப் பிடித்தவுடன் வெகு சீக்கிரம் தொழிற்சாலைக்குக் கொண்டு வரவேண்டும். இல்லாவிடில் அவைகள் கெட்டுவிடும். மீனைப் பிடித்தவுடன். அதினின்றும் ஈரலைப் பிரித்து, உப்புடன் பக்குவப்படுத்தி (இல்லாவிடில் ஈரல் கெட்டுவிடும்) உடனே தொழிற் சாலைக்கு அனுப்பி விடுவார்கள். அங்கு ஈரலினின்றும் எண்ணெயைப் பிரித்து எடுத்து விடுவார்கள். ஈரலைத் தொழிற்சாலைக்கு அனுப்புவதில் தாமதம் ஏற்பட்டால், ஈரல் கிருமிகளால் தாக்கப்பட்டு வெகு சீக்கிரத்தில் கெட்டு விடும். தவிர ஈரலிலேயே ஜீரணப் பொருள்கள் (Digestive ferments) இருப்பதால் அவைகள் ஈரலில் உள்ள எண்ணெயைப் பிரிக்க முயலும், ஆகவே ஈரலைத் தொழிற்சாலைகளுக்கு அனுப்புவதில் தாமதம் ஏற்பட்டால், அதனின்றும் கிடைக்கும் எண்ணெயில் அமிலத்தின் அளவு அதிகரித்து (Acidity) நாற்றம் உண்டாகிறது. நாளாக நாளாக எண்ணெய் கெட்டு, அதில் உள்ள விடமின் சத்துக் குறைந்து, சில மாதங்களுக்குப் பிறகு உபயோகமற்றதாகி விடுகிறது. இதுதான் சில ஷார்க் லிவர் ஆயிலில் அதிக நாற்றம் இருப்பதற்கும் சிலவற்றை உட்கொள்வதின் மூலம் பலன் கிட்டாததற்கும் காரணமாகும். எனவே மீன் எண்ணெய்த் தொழிலில் முக்கியமான அம்சம் ஈரலினின்றும் வெகு விரைவில் எண்ணெயை எடுப்பதாகும். மேல் நாடுகளில் ஈரல் கெடாமலிருக்கப் பனிக்கட்டி அறைகளில் வைத்துப் பாதுகாக்கின்றனர். இந்த முறையில் பணம் அதிகம் செலவாகுமாகையால், ஈரலை உப்புடன் பக்குவப் படுத்தி, அருகிலுள்ள தொழிற்சாலைக்குச் சீக்கிரமாக அனுப்புவது தான் சிறந்த முறையாகும்.

மேற்கூறிய முறையில் தயாரிக்கப்படும் எண்ணெயில், விடமின். A யின் அளவு ஒளி, உஷ்ணம், ஈரம் முதலியவைகளால் பாதிக்கப்பட்டு, சிலகாலத்திற்குப் பிறகு மிகவும் குறைந்து விடுகின்றது. தகுந்த எதிர்ப்புப் பொருள்களை (Antioxidants) சேர்ப்பதின் மூலம் இவைகளினால் 5 அல்லது ஆறு வருடத்திற்குக் கெடுதல் விளையாது இருக்கும்படி செய்யலாம். அதற்குள் மீன் எண்ணெய் மக்களால் உபயோகப்படுத்தப் பட்டுவிடும்.

ஷார்க் லிவர் ஆயிலில் மற்றும் ஒரு குறை இருக்கின்றது. 'காட்' என்னும் மீனினின்றும் கிடைக்கும் எண்ணெயில் விடமின். A, விடமின். D இரண்டும் தகுந்த அளவில் இருக்கின்றன. ஆனால் ஷார்க் லிவர் ஆயிலில் விடமின். D அளவு போதிய அளவில் இல்லை. அதிருஷ்ட வசமாக விடமின். D, கால்ஸிபரால் (Calcifrol) என்ற நாமத்தில் வெகு சரஸமாகக் கிடைப்பதால், அதை ஷார்க் லிவர் ஆயிலுடன் கலந்து விடலாம். மற்றுமொரு முக்கியப் பொருளாகிய விடமின். E. தாவர எண்ணெய்களில் இருப்பதால், ஷார்க் லிவர் ஆயிலும், தாவர எண்ணெய் கொண்ட நமது உணவுப் பொருளும் சேர்ந்து நமக்கு வேண்டிய முக்கியமான விடமின்களைத் தர முடியும்.

ஷார்க்லிவர் ஆயிலில், விடமினின் அளவு வெகு அதிகமாயிருப்பதால் (சில சமயங்களில் 30,000 யூனிட்டுகள்), கடலை எண்ணெய் முதலியவைகளைச் சேர்த்து, விடமினின் அளவைக் குறைப்பதாகச் சில கம்பெனிகள் கூறுகின்றன. இதனால் கலப்பு அதிகமாவதோடல்லாது, கடலை எண்ணெய் வாசனை சிலருக்கு ஒத்துக்கொள்ளுவதில்லை. எனவே சுத்தமான எண்ணெய்யை, மற்ற எண்ணெய்களோடு கலக்காது, குறைந்த அளவில் உட்கொள்வது தான் சிறந்ததாகும்.

கடைசியாக, ஷார்க்லிவர் ஆயிலில் உள்ள நாற்றத்தைக் குறைக்க முயற்சிக்க வேண்டும். அமெரிக்காவில் பெரிய இயந்திரங்களைக்கொண்டு (Mobcular Distillations Apparatus) ஷார்க்லிவர் ஆயிலினின்றும் விடமின். A யை மாத்திரம் பிரித்து எடுத்து உபயோகிக்கின்றனர். அதற்கு ஏராளமான பணம் வேண்டியிருக்குமாகையால் நம்மால் அதை உபயோகப் படுத்த முடியாது. தற்சமயம் அநேக பேதி மருந்துகளை, சாக்கலேட் தடவப் பட்ட மாத்திரைகளாக (Pleasantly coated Pills) கடையில் விற்பதை அனைவரும் பார்த்திருக்கலாம். எனவே அதிக விடமின் அளவுகொண்ட ஷார்க் லிவர் ஆயிலை ஒன்று அல்லது இரண்டு துளி எடுத்து, தித்திப்பு எஸ்ஸென்ஸ் தடவிய மாத்திரைகளாகச் செய்து விற்பதின் மூலம், நாற்றத்தை ஒரு அளவிற்கு மாற்றி, மக்கள் விரும்பும்படி செய்யலாம்.

மேற்கூறிய முறைகளை அனுசரித்து அரசாங்கம் அநேக தொழிற்சாலைகளை ஏற்படுத்திச் சரஸமாகவும், சுத்தமாகவும், அதிக அளவிலும் மீன் எண்ணெயைத் தயாரித்து, மக்கள் உபயோகத்திற்கு அளிக்குமாயின், வெளிநாடுகளினின்றும் வரும் எண்ணெயின் அளவு குறைந்து, நம் நாட்டுப் பொருளாதார நிலைமை உயர்வதோடல்லாது, மக்கள் வியாதிகளால் பீடிக்கப்படாது திடகாத்திரர்களாக வாழ உதவமுடியும்———'விஞ்ஞானி'

கட்டுரையைப் படித்து முடித்தவுடன் அம்மாமி என் அறைக்கு வந்து ஒருமுறை கனைத்தாள்.

"என்ன, கட்டுரை நன்றாயிருக்கிறதா" என்றேன்.

"என்ன, அப்படி கேட்கிறீர்கள்? டாக்டர் என்றால் உங்களைப்போல் அல்லவா இருக்க வேண்டும்? கண்ணை மூடிக்கொண்டு டானிக்கை எழுதிக்கொடுத்தால் என்னைப்போல இருக்கிறவர்களுக்கு என்னத் தெரியும்?

"அதில் உள்ள சத்துப் பொருள்களையும், அதன் அவசியத்தையும் சொன்னால் எங்கள் மனதிற்கு ஒரு ஆறுதல் இருக்கும். மருந்து சாப்பிட்டாலும் பயன் ஏற்படும். பாருங்கள், அந்தக்கோடித் தெருவு டாக்டர் காங்கிரஸென்று சொல்லிக் கொண்டு, "காட்லிவர் ஆயிலை" எழுதிக் கொடுக்கிறார். நம் நாட்டுப் பொருளை அல்லவா நாம் உட்கொள்ள முயற்சிக்க வேண்டும். உங்களுக்கு ரொம்ப வந்தனம். இன்றைக்குச் சாயந்திரத்திலிருந்தே ஷார்க்லிவர் ஆயில் வாங்கிக் கொடுக்க ஆரம்பிக்கிறேன். டேய் சீமாச்சு, மாமா வண்டை அடுத்த தரம் வரச்சே குண்டா வரேன்னு சொல்லி விட்டு வாடா" என்று சொல்லிக் கொண்டே என் அறையை விட்டு நகர்ந்தாள்.

அம்மா சாப்பிடக் கூப்பிட்டதையும் கவனிக்காது பெட்டியில் துணிகளை அடுக்கி வைக்க ஆரம்பித்தேன்.

"என்னடா, துணிகளை அடுக்கி வைக்கிறாய். எந்த ஊருக்குடா போகப் போகிறாய்" என்றாள்.

"உன்னுடைய சிநேகிதர்களுக்கு வைத்தியம் செய்யக் கற்றுக் கொண்டுவர, மதராஸ் மெடிகல் காலேஜில் படிக்கப் போகிறேன்" என்றேன்.

"என்னடா உனக்குப் பைத்தியமா"

"பைத்தியமில்லை, பித்து. நான் ஆராய்ச்சியில் டாக்டர் பட்டம் வாங்கினேனே ஒழிய, வைத்தியத்தில் அல்ல. நீ எல்லோர் எதிரிலும் என்னைப் பைத்தியமடித்தால் என்ன செய்வது?" என்றேன்.

இனி என்னை யாரும் தொந்தரவு செய்ய மாட்டார்கள் என்று அம்மா உறுதி மொழி கூறியதின் பேரில் சாப்பிடக் கிளம்பினேன்.

# தூண்டிய திரி!

எம். பி. எஸ். பாரதி

பானுவின் அறையைவிட்டு வெளியே வந்த டாக்டர் வாசற்படியில் கவலையே உருவாக உட்கார்ந்திருந்த கைலாசமய்யரையும் அவர் மனைவியையும் பார்த்தார்.

"கைலாசமய்யர்! உங்கள் பெண்ணுக்கு மேல் உங்களுக்குத் தான் மனோதிடம் வேண்டும்! நான் தான் சொல்லிவிட்டேனே, பித்த சோகை தானென்று! ஏன் கவலைப்படுகிறீர்கள்? இன்றுபோல இன்னும் இரண்டு 'இஞ்செக்ஷன்' கொடுத்தால் நல்ல குணம் காணும். எதற்கும், அவளை மனதை அலட்டிக்கொள்ளாதிருக்கச் செய்ய வேண்டியது உங்கள் கடமையாயிருக்க, நீங்களே மனமுடைந்து போனால் எப்படி?! பானுவுக்கு வியாதி பாதியென்றால், மனோ வியாதி முக்கால் பங்கு!" என்றார் டாக்டர் சமாதானமாக.

"என்னவோ டாக்டர்! நீங்கள் தான் தெய்வம்போல் இருந்து, அவளைப் பிழைக்கச் செய்யவேண்டும். தீபாவளிக்கு இன்னும் இருபது நாள் இருக்கின்றது. அதற்குள் கொஞ்சம் குணமானால் தேவலை. நானும் மனோதிடத்துடன் இருக்க முயற்சிக்கிறேன்" என்றார் ஆழ்ந்த பெருமூச்சுடன் கைலாசம்.

டாக்டர் சென்று விட்டார். அவர் போன திக்கையே பார்த்துக்கொண்டு பிரமை பிடித்தவர்போல நின்றிருந்த கைலாசம் விமலா வருவதைக் கண்டார். அவள் வருகை சமய சஞ்சீவிபோல இருந்தது அவருக்கு!

"வா! அம்மா வா! நல்ல சமயத்தில் வந்தாய். மனம் உடைந்துபோயிருக்கும் பானுவுக்குக் கொஞ்சம் ஆறுதல் கூற நீதான் முயற்சி செய்ய வேண்டும்!" என்று சொல்லிக் கொண்டே உள்ளே சென்றார்.

விமலா ஓர் இளம் விதவை. பானுவின் பள்ளித்தோழி. அத்யந்த சிநேகம். பானு உடல் நலம் குன்றி, பிறந்தகம் வந்திருப்பது அன்று வரை அவளுக்குத் தெரியாது. தெரிந்தவுடன் பார்க்க வேண்டி ஓடிவந்தாள்.

பானுவின் அறைக்குள் நுழைந்ததும் விமலாவுக்குப் 'பகீர்' என்றது. சிவந்த மேனி. அகன்ற கண்கள், மாம்பழக்கதுப்புப் போன்ற கன்னங்கள். சுருண்ட கேசம் கொண்ட அழகுப் பிம்பமான 'பானு' எங்கே, கண்கள் உள்ளடங்கி, கன்னம் ஒட்டி, எலும்புந் தோலுமாயிருக்கும் பானு எங்கே! அவளுக்கு அழுகையே வந்துவிட்டது.

"பானு!" என்று தொண்டையடைக்க அழைத்தாள் விமலா.

பானு கண்களைத் திறந்தாள். விமலாவின் வரவு அவளுக்குச் சிறிது ஆறுதலைக் கொடுத்தது. முகத்தில் புன்சிரிப்பை வருவித்துக் கொண்டு படுக்கையிலிருந்து எழுந்து தலையணைமேல் சாய்ந்துகொண்டாள்.

"வா விமலா! வா! என்ன அப்படிப் பார்க்கிறாய்! அடையாளம் தெரியவில்லையா? எல்லாம் காலத்தின் கோலம் தான்"

விமலா கட்டிலருகில் இருந்த ஸ்டூலில் அமர்ந்து கொண்டாள்.

"புக்ககத்தில் சீரும் சிறப்புமாக வாழ வேண்டிய நீ ஏன் இங்கு வந்தாய்! என்று எண்ணுகிறாயல்லவா? ஆம், புதுமைதான். என் கலியாணத்தின்போது நீ ஊரில் இல்லை. இருந்திருந்தால் தெரிந்திருக்கும்."

"சொல் பானு! உன் கதையை நான் அறிய வேண்டாமா? என் தலைவிதி தான் சதி செய்து விட்டதென்றால் உன் நிலையும் இவ்வளவு மோசமாகவா இருக்க வேண்டும்? நீ செய்த தவறு தான் என்ன?" என்று மிகுந்த ஆதுரத்துடன் வினவினாள் விமலா.

"ஆம், உன்னிடம் என் கதையைச் சொன்னாலாவது மனம் கொஞ்சம் ஆறுதலடையாதா?"

நன்றாக எழுந்து உட்கார்ந்து கலைந்து கிடந்த தன் தலைமயிரை ஒதுக்கிவிட்டுக் கொண்டாள் பானு.

"நன்றாக நினைவிருக்கிறது; கலியாண நிச்சயதார்த்தத்தின் போது நடந்த ஒரு சிறிய சம்பவம்தான் இவ்வளவு ரகளைக்கும் காரணம், என்று சொன்னால் நீ நம்பமாட்டாய்!

1

கல்யாண நிச்சயதார்த்தம் செய்யும் வேளை நெருங்கிக் கொண்டிருந்தது. சாயந்திரம் மணி ஆறு இருக்கும். வாசலில் கெட்டி மேளம் முழங்கிக்கொண்டிருந்தது.

இந்த வீட்டுக் கூடத்திலே பெரிய ஜமக்காளம், பாய்கள் விரிக்கப்பட்டு நடுவில் மணைகள் போடப்பட்டு இருந்தன. நடு நாயகமாகக் கோலம் போட்ட இடத்தில் குத்துவிளக்கு ஒன்று சுடர்விட்டுப் பிரகாசமாக எரிந்து கொண்டிருந்தது. இன்னும் ஒருவரும் வந்த பாடில்லை. குழந்தைகள் இங்குமங்கும் ஓடி விஷமம் செய்தவண்ணமாக இருந்தன, அந்த காஸ் விளக்கைச் சுற்றி. என் தந்தை அவரையும் சம்பந்தி வீட்டாரையும் அழைத்து வர ஸ்டேஷனுக்கு வண்டியனுப்பியிருந்தார்.

மணி ஏழு அடித்ததும் வாசலில் வண்டி வந்ததும் சரியாக இருந்தது. சம்பந்தி வீட்டார் வந்து விட்டனர். வெறிச் சென்றிருந்த கூடம் கல கலப்பாக மாறியது. ஊர்ப் பிரமுகர்களும், சம்பந்தி வீட்டாரும் அங்கே நிறைந்திருந்தனர். எனக்கு நாளை மாலையிடப் போகும் அவரைப் பார்த்து மகிழ்ந்தவாறே 'மாடி' ஜன்னல் ஓரத்தில் நான் ஒருவரும் அறியா வண்ணம் உட்கார்ந்து கொண்டிருந்தேன். என் தந்தை, இராப்பகலாகக் கண் விழித்துச் சேர்த்த அந்த, தனத்தை 'வரதட்சிணை' என்னும் ரூபத்தில் வெள்ளித் தட்டில் புரோகிதரிடம் கொடுத்தார்.

'அவர்' தமது மூக்குக் கண்ணாடியைத் துடைத்தவாறே தம் முகத்தில் விழுந்து புரளும் தலை மயிரைத் தள்ளி விட்டுக் கொண்டார். இளம் வயதிலேயே தந்தையை இழந்து விட்டவரதலால் அந்த ஸ்தானத்தை வகிக்க அவருடைய தாய் மாமன் வந்து அருகிலேயே உட்கார்ந்து கொண்டிருந்தார்.

புரோகிதர் முறைப்படி மந்திரங்களை உச்சரித்த வாறே வெள்ளித்தட்டை எதிரில் இருந்த அவருடைய மாமாவிடம் நீட்டினார். அவரும் அதைக் கையில் வாங்கப் போகும் சமயம் 'பட்' டென்று சப்தம் கேட்டது. வீரென்று வாசல் வழியாக அடித்த அந்தக் காற்று, குத்து விளக்கின் இருபக்கங்களையும் அணைத்து விட்டுச் சென்றது. நான் துணுக்குற்றேன், "என்ன இது, அபசகுனம்போல்" என்றெண்ணியது! என் உள்ளம். ஆனால் கூடத்திலிருந்த பெரியவர்கள் வாய் விட்டே சொல்லி விட்டனர். புரோகிதர் முதல் யாவரும் ஸ்தம்பித்து விட்டனர். என் தந்தையின் முகத்தில் ஈயாடவில்லை. உடனே சமாளித்துக் கொண்டு,

"டேய் பாலு! போய் வாசல் கதவை மூடிக் கொண்டுவா! பாழும் காற்று!......ம்... சாஸ்திரிகளே, ஒன்றும் தயக்கம் வேண்டாம்! இதோ வேறு விளக்கு வந்து விட்டது! உங்கள் காரியம் நடக்கட்டும்..." என்றார். உள்ளேயிருந்து வேறு குத்து விளக்கும் உடனேவந்து விட்டது.

"அப்பா சாம்பு! 'சிந்தெ' நில்லுடாப்பா! அவசரப்பட்டுத் தட்டைக் கையில் வாங்கிக் கொண்டு விடாதே!..." என்று சொல்லியவாறே பெண்களினிடையிருந்து எனக்கு மாமியாராகப் போகும் அம்மாள் ஓடிவந்தாள். வெள்ளித்தட்டை வாங்க ஆயத்தமான அவர் தம்பி சாம்புவும் தம் கைகளைப் பின்னுக் கிழுத்துக் கொண்டு திரும்பினர்.

"சாம்பு! இதோபார்! நிச்சயதார்த்தம் செய்யும் வேளையிலே அபசகுனம் போல விளக்கணைஞ்சு போச்சு!...ஹூம்... தெய்வ சம்மதம்னு ஒண்ணு இருக்கொல்லியோ?...... நாம் என்னப்பா செய்வது? இந்தக் கல்யாணம் நடக்க முடியாதுன்னு சொல்லி விடுடாப்பா!..."

எனக்கு உலகமே சுழன்றது. "என்ன கலியாணம் நின்று விடுவதா?" எனக்காக அலையாத இடமெல்லாம் அலைந்து, தம் சக்திக்கும் மீறிப் பெரிய இடத்தில் சம்பந்தம் செய்ய எண்ணி, என் தந்தை எல்லா ஏற்பாடுகளையும் முடித்திருந்த சமயம் கலியாணம் நின்று விட்ட தென்றால் என்ன பண்ணுவார்? அவர் முகம் பேயறைந்தது போல் காணப்பட்டது. கூடத்தில் உட்கார்ந்திருந்த ஊர்ப் பிரமுகர்கள் எல்லாம் ஆளுக்கொரு சமாதானம் சொன்னார்கள். ஒன்றும் அந்த அம்மாள் காதில் ஏறவில்லை.

"யார் என்னதான் சொல்லுங்கோ! என் மனசு சமாதானப் படவில்லை. எனக்கிருப்பது அவன் ஒரேபிள்ளை; அவன் நன்றாக வாழ நாங்கள் விரும்ப மாட்டோமா?......"

"என்ன இவ்வளவு அச்சான்யமாகப் பேசுகிறார் இந்த அம்மாள்? என்னைக் கலியாணம் செய்து கொண்டால் இவர் பிள்ளையின் வாழ்வே பாழாகி விடுமோ? எவ்வளவு குறுகிய மனப் பான்மை இவருக்கு! அந்த மாதம் வேறு முகூர்த்தமே கிடையாதாகையால் நிச்சயதார்த்தம் செய்த மூன்றாம் நாளே கல்யாணத்திற்கு ஏற்பாடு செய்திருந்தார் என் தந்தை. இவர்கள் இவ்விதம் கைவிடுவார்கள் என்று எண்ணியிருந்தால்!......" என் உள்ளம் அலைபாய்ந்து தவித்தது. எனக்கு அழுகை அழுகையாக வந்தது.

"மாமா! எனக்கு இந்தச் சகுனத்தில் எல்லாம் நம்பிக்கை கிடையாது! உங்களுக்கெல்லாம்சம்மதம்இல்லையானல் விலகுங்கள்;நான் இந்தப் பெண்ணைத்தான் கலியாணம் செய்து கொள்ளுவேன். நாளைக் கலியாணம் நிற்கக் கூடாது!..." என்று அவர்கள் வாயடைக்

கும் படியாக ஒரு பெரிய வெடி குண்டைத் தூக்கிப்போட்டார்? என் "அவர்"! ஒருவருக்காவது மேலே பேச வழியில்லாமல் செய்து விட்டார். என் உள்ளம் பூரித்தது. எங்கள் குடும்பத்தாருக்கு மட்டும் அப்போது "அவர்" தெய்வமாகத்தான் காட்சியளித்தார்.

## 2

புக்ககத்தில் என் மாமியாரிடம் எவ்விதம் நான் அன்பை எதிர்பார்க்க முடியும்? நான் தான் வேண்டாத மாட்டுப் பெண் ஆயிற்றே? என் கணவருடைய அன்பு பூரணமாக இருக்கும் போது யாரைப் பற்றி எனக்குக் கவலை?

என்னுடைய நாத்தனார் சீதா பிரசவத்திற்காக அங்கு வந்திருந்தாள். தாயைப் போலல்லாமல் என் மீது மிகுந்த அன்பு கொண்டவள் அவள். அவளுக்கெதிரில் என் மாமியார் என்னை வைவது இல்லை! என் கணவரும் தம் ஒரே சகோதரிபால் அதிக அன்பு வைத்திருந்தார்.

சீதாவுக்கு இது இரண்டாவது பிரசவம். முதல் பிரசவத்தின் போது 'ஜன்னி' கண்டு அவள் பிழைப்பதே துர்லபம் என்றாகி விட்டதாம். குழந்தையும் அறையிலேயே இறந்து விட்டதாம். "இப்போதாவது சுகப் பிரசவம் ஆக வேண்டுமே!" என்று நாங்கள் யாவரும் கவலையாக இருந்தோம். எனக்குத்தான் மிகுந்த கவலை. காரணம் என்னவென்று சொல்ல வேண்டாம்!

ஆனால்...! நாங்கள் பயந்தபடியே ஆயிற்று. ஆம், ஆண் மகவை ஈன்ற அடுத்த நாளே சீதா கண்ணை மூடி விட்டாள். நாங்கள் அடைந்த வருத்தம் கொஞ்சநஞ்சமல்ல. ஒரு மாதம் வீடே துக்கத்தில் ஆழ்ந்து கிடந்தது. நல்ல வேளை! குழந்தை உயிருடன் இருந்ததே! அந்த ஆறுதல் தான் எங்களுக்கு!

பால்மணம் மாறாத குழந்தை மாதுவின் வளர்ப்பைத் தானே கவனித்தாள் என் மாமியார். சீதா இறந்ததிலிருந்து என் மீது அவள் அடைந்த, காட்டிய, வெறுப்பு அளவற்றது. குழந்தையை நான் தொடக்கூட அனுமதிக்கமாட்டாள். ஆதலால் பிள்ளைக்கும், பெண்ணுக்கும் பயந்து வாய்திறவாமல் இருந்தாள். இப்போது அதற்கும் துணிவு பிறந்து விட்டது!

ஒருநாள் காலைமணி 10 இருக்கும். ஆபீஸுக்குக் கிளம்பிக் கொண்டிருந்தார் என் கணவர். தொட்டிலில் சீதாவின் செல்லம் வீரிட்டு அழுதான். நான் ஓடிப்போய் எடுத்துக் கொண்டேன். அழுகுரல் கேட்டுக் கொல்லைப் புறத்திலிருந்து வந்த மாமியார்,

"அடியம்மா, போதும்: நீ குழந்தையைக் கொஞ்சியது. எந்த வேளையில் வீட்டுக்குள் காலடி எடுத்து வைத்தயோ, சீதா கண்ணை மூடி விட்டாள். அந்தக் குழந்தை ஒண்ணாவது உயிருடன் இருக்க உனக்குப் பிடிக்கவில்லையா?" என்றாள் குரோதத்துடன்.

எனக்கு அவள் வார்த்தைகள் சுருக்கென்று பட்டன. என் கண்களிலிருந்து பொலபொலவென்று கண்ணீர் சிந்தியது. யாவற்றையும் கவனித்துக் கொண்டிருந்த என் கணவரின் முகம் ஒரு நிமிஷம் கடுத்தது. விர்ரென்று ஒன்றும் பேசாமல் வெளியே சென்று விட்டார். நான் என் அறைத்தலையணையில் முகத்தைப் புதைத்துக் கொண்டு உள்ளம் ஆறுமட்டும் அழுது தீர்த்தேன்.

அன்று சாயந்திரம் ஆறு மணி சுமாருக்கு நான் கொல்லைப் புறத்திலிருந்து உள்ளே வந்தேன், பாத்திரங்களை அலம்பிக் கொண்டு. அழுதழுது என் கண்கள் வீங்கிப் போய் இருந்தன. தலையெல்லாம் ஒரே வலி, கனம்.

உள்ளே அம்மாவும் பிள்ளையும் பேசுவது காதில் விழுந்தது, என் கணவர் அன்று சீக்கிரமே ஆபீஸிலிருந்து வந்த காரணம் எனக்கு விளங்கவில்லை. தினம் மணி ஏழுக்குக் குறைந்து வீடு திரும்பினவரில்லை. அவர்கள் பேசுவது கணீரென்று கேட்டது.

"இப்போது வருத்தப்பட்டு என்னடாப்பா பண்ணுவது? நான் அப்போதே முட்டிக் கொண்டேன்; தெய்வத்துக்கே சம்மதமில்லை இந்தக் கலியாணத்தில் என்று. குத்துவிளக்கு அணைந்து விட்டது. நீ தான் என் பேச்சைக் கேட்காமல் கலியாணம் செய்து கொண்டாய். வருகிற கஷ்டமெல்லாம் அனுபவித்துத்தான் தீரவேண்டும்! ......ஹூம்! அவள் வந்தாலும் வந்தாள்; நம் கண்மணி சீதா கண்ணை மூடி விட்டாள். இந்த மாதம் நிச்சயம் கிடைக்குமென்று உறுதி கூறியிருந்த மானேஜரும், 'ஹெட் கிளார்க்' வேலையை உனக்குக் கொடுக்காமல் வேறு ஒருவனுக்குக் கொடுத்துவிட்டதாகச் சொல்கிறாய்! இன்னும் என்னென்ன கஷ்டமெல்லாம் வரக் காத்துக் கொண்டிருக்கோ, இவளால்!.........பகவானே!..."

மாமியாரின் சொற்கள் பேரிடிகளாக என்னைத் தாக்கின. மூளை குழம்ப, கல்லாக நின்றுவிட்டேன் வாயிற்படியிலேயே!

ஒருவாறு என்னைச் சமாளித்துக் கொண்டு 'காபி' எடுத்துக்கொண்டு என் கணவரின் அறைக்குச் சென்றேன். கூடத்தில் ஸ்வாமி அலமாரியில் குத்துவிளக்கு 'மினுக்-மினுக்' கென்று எரிந்து கொண்டிருந்தது. என் னுள்ளமும் கூடவே எரிந்து கொண்டிருந் தது. அது குத்துவிளக்காகவே தோன்ற வில்லை, எனக்கு. குலத்தை எரிக்க வந்த கொள்ளி போலத்தான் தோன்றியது. நெஞ் சம் படபடக்க அவர் முன் காபியை ஆற்றி வைத்தேன். என் கணவர் மௌனமாக என்னை ஏறிட்டுப் பார்த்தார். என் கண் களில் என்னையுமறியாமல் நீர் முட்டி நின்றது.

"இப்போது நீ எதற்காக அழுகிறாய்? உன்னை யார் என்ன சொல்லிவிட்டார்கள்? நீ வீடு வந்தது முதல் தான் வீடே அழுது வழியறதே......! சனியன்!... போ அப் பால்!" என்று இரைந்துவிட்டு வெளியே சென்று விட்டார்.

இந்தத் தாக்குதலை நான் எதிர்பார்க்கவே யில்லை. இது நாள் வரையில் 'அவர்' ஒருவ ரின் அன்பினால் எத்தகைய கஷ்டத்தையும் பொறுத்துக் கொள்ளலாம் என்று எண்ணி னேன். இப்போது என் கணவரும் வெறுக்க ஆரம்பித்து விட்டார் என்னை! இனி என் கதி? என் துக்கம் என் நெஞ்சத்திலேயே அழுந்தி என்னைக் குற்றுயிராய் அடித்தது.

3

அடுத்த மாதம் என்னைக் காணவந்த என் தந்தையால் என்னை அடையாளம் கண்டுகொள்ள முடியவில்லை. என் உடம்பு அவ்வளவு திடகாத்திரமாக இருந்தது!

"என்ன பானு! உடம்புக்கு என்ன? எலும்பாய் இளைச்சிருக்காயே? எங்களுக் கெல்லாம் ஒரு கடுதாசி போடக்கூடாதோ?" என்று அங்கலாய்த்தார். திரும்பும்போது என்னை ஒருமாதம் ஊரில் வைத்திருந்து விட் டுக் கொண்டுவிடுவதாக மாப்பிள்ளையிடம் சொல்லிவிட்டு, என்னைக் கூட்டிக்கொண்டு புறப்பட்டு விட்டார். சிறிது காலம் பிறந் தகத்திலிருந்தாலாவது என் மனம் ஆறுத லடையாதா? என்று ஏங்கியது என் நெஞ்சம்?

ஆனால் நடந்தது வேறு. இங்கு வந்தது முதல் நான் படுத்த படுக்கையாகிவிட்டேன். 'பித்த சோகை' என்கிறார் டாக்டர். என் மனத்துயரை உன்னிடம் இப்போது வெளி யிட்டேனேயன்றி வீட்டில் எவரிடமும் சொன்னதில்லை விமலா! ஆனால் அவர்களே ஊகித்துக்கொண்டு விட்டனர்."

பானுவுக்கு நெஞ்சு படபடவென்று அடித் துக்கொண்டது. மூச்சுவிடாமல் சொல்லி வந்ததால் ஏற்பட்ட படபடப்பு அது. அவ் வளவு பலஹீனமாயிருந்தது, அவள் உடல் நிலை. ஆயாசத்துடன் கண்களை மூடியவாறே படுத்துக்கொண்டாள்.

தன் கன்னங்களில் வழிந்த கண்ணீரைத் துடைத்துவிட்டுக்கொண்டு விமலா சப்தம் செய்யாமல் வெளியே வந்தாள். பானுவின் கதை கேட்டு அவள் உள்ளம் நெகிழ்ந்துருகியது. ஏதோ யோசனை செய்தவளாகத் தன் வீடு நோக்கி நடந்தாள்.

4

அன்று தீபாவளி சுதினம். விடியற்காலை வேளை. வாசலில் பானுவின் தம்பி பாலு பட்டாசு சுடும் சப்தம் காதுகளைத் துளைத்துக் கொண்டிருந்தது. நாதஸ்வரக் காரன் எங்கோ ஒரு வீட்டு வாசலில் பூபாள ராகம் வாசித்துக்கொண்டிருந்தான். மணி ஐந்தடித்தது. இன்னும் நன்றாக விடிய வில்லை. படுக்கையில் சாய்ந்தவாறே கொஞ் சம் எழுந்து உட்கார்ந்தாள் பானு. அவள் உடம்பு கொஞ்சம் குணப்பட்டிருந்தது. அவ ளைத்தவிர வீட்டில் யாவரும் மங்கள ஸ்நா னம் செய்து புத்தாடை உடுத்துக் கொண்டு தத்தம்வேலைகளில் ஈடுபட்டிருந்தனர். அவள் உள்ளத்தின் வலியைப் போலவே உடம்பெல் லாம் அணுவணுவாக வலித்துக் கொண்டி ருந்தது. அறையில் தலைக்கு மேல் மின்சார விளக்கு, காற்றினால் இங்கு மங்கும் ஆடிய வாறே எரிந்து கொண்டிருந்தது. ஓர் ஓரத் தில் அம்மன் படத்திற்கு முன்னால் "பட்ச ணம்" முதலிய வகைகள் ஒரு தாம்பாளத்தில் நிவேதனத்திற்காக வைக்கப்பட்டிருந்தன. சிறிய குத்து விளக்கு எரிந்து கொண்டிருந் தது. பலபலவென்று விடிய ஆரம்பித்தது.

வாசலில் வண்டி வந்த சப்தம் கேட்டுத் திடுக்கிட்டாள் பானு. "இந்நேரத்தில் யார் வருகிறார்கள் ஊரிலிருந்து? அப்பாவும் வீட் டில் இல்லை. அம்மாவும் சமையல் கட்டில் வேலையாயிருக்கிறாள்" பானுவின் மனம் தவித்தது.

அவள் கண்களையே நம்ப முடியவில்லை. அவள் கணவன் தான் வந்து கொண்டிருந் தார் உள்ளே. கைப் பெட்டியை மேஜை மேல் வைத்து விட்டு நேரே அவள் கட்டிலை நோக்கி வந்தார். அவள் உள்ளம் 'திக் திக்' கென்று அடித்துக் கொண்டது. பேச நா எழவில்லை.

"பானு!" என்று அன்பாக அழைத்தவாறே கட்டிலினருகில் உட்கார்ந்து கொண்டு அவள்



தலையை அன்புடன் வருடினார். அவள் கணவன்.

"ஹூம்..."

"என்னுடன் பேசமாட்டாயா? என்னை மன்னித்து விடு பானு! போனதெல்லாம் மறந்து விடு!"

"என்ன...?"

"ஆம், பானு. உன் சிநேகிதை விமலாவின் கடிதம் தான் என் கண்களைத் திறந்தது. அவள் கூறியிருப்பது எவ்வளவு உண்மை தெரியுமா? இதோ பார்!..."

நடுங்கும் கரங்களுடன் கடிதத்தை வாங்கிப் படித்தாள் பானு. அவள் உள்ளம் உவகையால் பொங்கி வழிந்தது. முத்து முத்தான எழுத்துக்கள். ஆம், விமலாவே தான். சந்தேகமேயில்லை.

"அன்புள்ள பானு!

உன் கதை கேட்க எனக்கு வருத்தம் ஒரு புறம், ஆச்சரியம் ஒரு புறம். கடைசியில் படித்த உன் கணவரும் சகுனம் முதலிய பழக்கங்களில் நம்பிக்கை கொண்டு உன்னை வெறுத்தது தான் ஆச்சரியம்!

உனக்குத் தெரியும், என் தந்தை எவ்வளவு ஆசார சீலர் என்று! எனக்குப் பத்து விதப் பொருத்தத்தில் ஒன்று கூடக் குறையாது ஜாதகம் பார்த்துத் தான் கலியாணம் செய்து வைத்தார். தெய்வ சம்மதமும் பரிபூரணமாக இருந்ததென்று தான் நம்பினார். நல்ல சகுனங்கள் தான் கலியாணத்தின் போது. ஆனால் நான் இப்போது எப்படியிருக்கிறேன்? உலகறியக் கணவனையிழந்த கைம்பெண்! இந்த நிலை ஏன்! மணம் நிறைவேறிய இரண்டாம் மாதமே என் கணவரை இழந்ததேன்?..."

"ஆம், அவள் சொல்வது எவ்வளவு உண்மை! ஏன் அவள் விதவையானாள்?" இந்தக் கேள்வி அவள் உள்ளத்தில் சுற்றிச் சுற்றி விடை காணாமல் திரிந்தது. தான் பிறந்தகத்திலேயே இருந்தும், புக்ககத்திற்குத் தன் கணவர் கையில் கடிதம் கிடைக்கும்படி செய்த விமலாவின் சாமர்த்தியத்தை எண்ணி வியந்தாள். "தன் குல விளக்கு அணைந்தாலும் என் குல விளக்கைத் தூண்டி விட்டாளே!" என்று பானுவின் மனம் விமலாவை மனமார வாழ்த்தியது.

அப்போது அறையின் கதவு க்றீச்சிட்டு, பானுவும் அவள் கணவனும் திரும்பினார்கள். விமலா தான் கதவருகில் வெளியே நின்று கொண்டிருந்தாள். விஷமப் புன்னகை அவள் வதனத்தில் கோடிட்டு மறைந்தது. உடனே உள்ளே சென்று விட்டாள்.

"பானு! சீக்கிரம் ஊருக்குக் கிளம்பணும், உடம்பு குணமானதும். குழந்தை மாதுவை அம்மாவால் சரியாகக் கவனித்துக் கொள்ள முடியவில்லை. மேலும் நான் இப்போது என் ஆபீஸில் உதவி மானேஜராகி விட்டதால் என்னைச் சரியாகக் கவனித்துக் கொள்ள உன்னைத் தவிர யார் இருக்கிறார்கள்?" என்றார் சிரித்துக் கொண்டே அவள் கணவன்.

அம்மன் படத்தருகில் இருந்த குத்து விளக்கில் எண்ணெய் ஆகி, மங்கலாகிக் கொண்டிருந்தது.

"அதோ! அந்தக் குத்து விளக்கில் அருகில் கிண்ணத்தில் இருக்கும் எண்ணெயை ஊற்றித்திரியைத் தூண்டி விட்டு வருகிறீர்களா?" என்றாள் பானு.

அவள் கணவன் உடனே செய்து விட்டு வந்தார். அவர் கரத்தைத் தன் கைகளில் கோத்தவாறே,

"தூண்டிய திரி எவ்வளவு பிரகாசமாக எரிகின்றது. பார்த்தீர்களா" என்றாள் குறும்புச் சிரிப்புடன் அவள்.

"சீ! போக்கிரி!" என்று பானுவின் கன்னத்தைச் செல்லமாகக் கிள்ளினார் அவள் கணவன்!





லிவர்க்யூர் பிராஞ்ச் ஆபீஸ்,

பெரியதெரு, கும்பகோணம்.

**LIVER CURE** Branch Office,

Parekh Mansion, Sandhurst Road (West),

BOMBAY 4.

# காரியவாதி

கோமதிஸ்வாமிநாதன்

[கலாசாலை கணித புரொபசர் குப்பண்ணா ஊஞ்சலில் உட்கார்ந்தவாறு ஏதோ புஸ்தகத்தைப் பார்த்துக் கொண்டிருக்கிறார். வாய் தன்னையறியாமலேயே ஏதோ பாட்டை முணுமுணுத்துக் கொண்டிருக்கிறது. விவாகத்திற்காகக் காத்திருக்கும் அவர் குமாரி அகிலா கீழே உட்கார்ந்து ஏதோ பின்னல் வேலையில் ஈடுபட்டிருக்கிறாள். வாயிற் கதவு சாத்தப்பட்டிருக்கிறது. அவர் மனைவி விசாலம் அடுக்களையிலிருந்து வருகிறாள்.]

குப்பண்ணா: (பாடுகிறார்)

**மனமே நீ ஈசன் நாமத்தை வாழ்த்துவாய்**
**தினம் போற்றுவாய்.**

விசாலம்: *இன்றைக்கென்ன திடீர் என்று மனம் பக்திப் பிரவாகத்திலே திரும்பி விட்டாப் போலிருக்கிறது! முதலில் அந்தப் பாட்டைக் கொஞ்சம் மாற்றி (பாடுகிறாள்)*

**மனமே நீ மாப்பிள்ளையாரையும் நாடுவாய்**
**தினம் தேடுவாய்**

*என்று பாடினாலாவது ஒரு ஜகதீசனோ, வேங்கடேசனோ, சபேசனோ, மாப்பிள்ளையாக வந்து சேருவான். அப்புறம் ஈசன் நாமத்தை லீவு எடுத்துக் கொண்டாவது வாழ்த்தலாம்!*

குப்பண்ணா: *உனக்கு அறிவு விசாலம் இல்லையென்று தான் பெயராவது விசாலமென்று இருந்து விட்டுப் போகட்டுமென்று வைத்திருக்கிறார்கள்! இப்போதாவது தெரிந்து கொள். எல்லாம் அந்த ஈசன் நாமத்தில் தான் இருக்கிறது. அதை ஜபித்தால் நம்முடைய குறைகள் தன்னால் தீர்ந்து விடாதா! மாப்பிள்ளை நம்மைத் தேடி வர மாட்டானா?*

*(பாடுகிறார்)*

**எல்லாம் அவன் செயலே-இவ்வுலகில்**
**எல்லாம் அவன் அருளே.**

விசாலம்: *நான் ஏதும் சொல்லப் போனால் வம்புக்காரி என்பீர்கள். உங்கள் மாணவர்கள் தான் 'அவர் சொல்லிக் கொடுப்பதெல்லாம் அவ்வளவும் குப்பை! அதனால் தான் அவருக்கு அந்தப் பேரு' என்று சொல்லுகிறார்களாம்! —எனக்கென்ன உங்களுக்கில்லாத அக்கரையா?—கலாசாலை ரிசல்ட் எல்லாம் வந்தாய் விட்டதே! நன்றாகப் பாஸ் பண்ணின பையனாகப் பார்த்து அதிக கிராக்கி ஏற்படுவதற்கு முன் பிடித்தால் தேவலையே என்று சொன்னேன்!*

அகிலா: *அப்பா கிட்டே படித்தவர்கள் எல்லோருமே இந்த வருஷம் யூனிவர்சிடி பரீட்சையில் ஒரே கோட்! அதனால் பாஸ் பண்ணினவர்களைக் கண்டால் அப்பாவிற்குப் பிடிக்கிறதோ என்னவோ?*

குப்பண்ணா: *அந்த பசங்களெல்லாம் வகுப்பில் கோட் (Goat)......அதுதான் ஆடுபோல, திருதிருவென்று முழித்துக் கொண்டிருந்தபோதே அவர்கள் நிச்சயம் கோட் அடிப்பார்கள் என்று எனக்குத் தெரியும்!*

விசாலம்: *உங்களிடம் படிக்கிறவர்கள் உருப்படவா போகிறார்கள்?......இந்தப் பிரதாபங்களையெல்லாம் கட்டி வைத்துவிட்டு சுறுசுறுப்பாய் வெளியிலேயே போய் நாலு ஜாதகங்களை வாங்கிப் பார்க்க முயற்சி பண்ணுங்கள். நீங்கள் இருக்கிற தினுசைப் பார்த்தால் அகிலாவிற்கு அறுபதுவயதில் கூட கல்யாணம் நடக்காது போலிருக்கிறது.*

குப்பண்ணா: *சரிதான்! இன்னும் ஒருவாரத்திற்கு வெளியிலேயே தலைகாட்டக் கூடாதென்றுதானே வீட்டிற்குள்ளேயே பதுங்கியிருக்கிறேன். காலேஜிலே 'ஸீட்' வாங்கித்தர ஒவ்வொருத்தனும் காலிலே விழுந்து கழுத்தை அறுக்கிறான்கள்! எல்லோரும் எப்படியோ, நான் சிபாரிசு செய்தால் பிரின்சிபால் கண்டிப்பாய் ஏற்றுக்கொள்வார் என்று தெரிந்து வைத்திருக்கிறான்கள்! ஜில்லா ஜட்ஜிலிருந்து சீயக்காய் பொடி வியாபாரி வரை என்னைச் சுற்றிச் சுற்றி வருகிறார்கள்! அதனால்தான் கதவையடைத்துக் கொண்டு இங்கே கீதை பாராயணம் பண்ணுகிறேன்.*
[வாசற்கதவு தட்டப்படும் சப்தம்கேட்கிறது]

விசாலம்: அகிலா! யாரென்று பார். காலவேளையிலே கதவைத்தாப்பாள்போட்டு வைத்தால் என்ன காரியம் செய்ய முடியும்? வரும்போது கதவைத் திறந்து வைத்துவிட்டு வாடி அகிலா!

குப்பண்ணு: ஐயய்யோ! குடியைக் கெடுத்தாயே! அகிலா! கொஞ்சம் பொறு. நான் சமையலறையில் போய் ஒளிந்து கொள்கிறேன். அப்புறம் கதவைத் திறக்கலாம்!...... ஏய் விசாலம்! உனக்குத் தெரியுமோல்லியோ அந்த மருதாசலத்தை? நாம் மூன்ரும் வருஷம் பிள்ளையார் கோவில் தெருவில் குடியிருந்த வீட்டின் சொந்தக்காரன், நோட்டீஸ்விட்டு, கலாட்டா பண்ணி நம்மைக் காலி கூட பண்ணவச்சானே? அந்த மகானுபாவன் இப்போ என் காலிலே வந்துவிழுகிருன். முன்பு கொடுத்த வாடகையில் கால்வாசி கொடுத்தால் போதுமாம்! எப்படியும் தன் வீட்டிற்கே மறுபடியும் வந்திருக்கக் கெஞ்சிருன். இந்த கூழைக் கும்பிடுஎல்லாம் எதற்கு என்று ஆராய்ந்து பார்த்தால், அவன் புத்திர சிகாமணியைக் காலேஜில் சேர்ப்பதற்குத் தான் இவ்வளவு கால் பிடிப்பும்! அவன் தான் இன்றைக்கு வருகிறேனென்று சொன்னுன். நான் ஒளிந்து கொள்ளுகிறேன். அவன் வந்தால் நான் வெளியே போயிருப்பதாகச் சொல்லி அனுப்பிவிடு. எவ்வளவு தான் வேண்டியவனுக இருந்தாலும் இந்தத்தடவை ஒருவனுக்கும் சிபாரிசு செய்வதாக இல்லை!... அகிலா! அவனே அனுப்பி விட்டு மறுபடியும் கதவைச் சாத்தி விடு.

[எழுந்திருந்து சமையலறைக்குப்போகிருர். அகிலா வாசற் கதவைத் திறந்து பார்த்து விட்டு, மறுபடியும் தாழ் போட்டுக் கொண்டு வருகிருள்]

அகிலா: அப்பா! அப்பா! அபாய அறிவிப்பிலிருந்து வெளியே வரலாம். வந்தது மருதாசலமில்லை. அடுத்த வீட்டு காமாட்சிப் பாட்டி ஒரு கரண்டி காப்பிப் பொடி யாசகத்திற்கு வந்தாள். இனிமேல் தான் வாங்கி வரவேண்டுமென்று சொல்லி அனுப்பி விட்டேன்.

[குப்பண்ணு உள்ளேயிருந்து ஊஞ்சலுக்கு வருகிருர்]

விசாலம்: நல்ல சூரப்புலி தான் நீங்கள்! என்னுல் முடியாது, என்று ஓங்கிப் பேசத் தைரியமில்லை! காமாட்சிப் பாட்டியையும் மீனுட்சிப் பாட்டியையும் கண்டு ஒளிவது தான் மிச்சமாக இருக்கிறது.

குப்பண்ணு: நான் என்ன செய்வது? எழவு தாட்சிண்யம் குறுக்கே நிற்கிறது! காலேஜிக்குப் போகும் வழியில் கடலைப் பிண்ணுக்கு மண்டி வைத்திருக்கும் பேச்சிமுத்து பத்து நாளாய் நான் அந்தப் பக்கம் போகும் போதெல்லாம் பல்லைக் காண்பித்தான். கிட்ட நெருங்கி விசாரித்த போது தான் அந்த கடலைப் பிண்ணுக்கோட புத்திரகாமேஷ்டிக்கு காலேஜிலே அட்மிஷன் வாங்கித்தர வேணுமாம்! அதைத் தவிர்ப்பதற்காக நான் இப்போது அந்தப் பாதையை விட்டுவிட்டு, கூட ஒரு மைல் நடந்தாலும் சரி என்று வேறு பாதையாகக் காலேஜிக்குப் போகிறேன். இந்த நிலையில் 'முடியாது' என்று சொல்ல எனக்குத் தைரியம் ஏது?

(மறுபடியும் கதவு தட்டப்படும் சப்தம் கேட்கிறது)

விசாலம்: யாரது?

குப்பண்ணு: ஒருவேளை பேச்சி முத்துவாக வேயிருக்கலாம்! இரு, இரு. நான், பாத்ரூமிலே, போய் ஒளிந்து கொள்கிறேன்.

அகிலா: கண்ணுமூச்சி விளையாடினுல் அப்பாவிற்குத் தான் முதல் பிரைஸ்!

[குப்பண்ணு உள்ளே ஓடுகிருர். விசாலம் போய், கதவைத் திறந்து பார்த்து விட்டு அதை நன்ருய்த் திறந்து வைத்துவிட்டு வருகிருள்]

விசாலம்: உங்களைத் தானே! வெளியிலே வந்து தொலையுங்கோ. இந்தக் காலத்திலே கடன் வாங்கினவாகூட இந்த மாதிரி ஒளிவதில்லை! வந்தவர் முனிசிபல் ஆபீஸ் பில் கலெக்டர்.

[குப்பண்ணு வருகிருர்]

குப்பண்ணு: சிவசிவா! இன்னும் எத்தனை தடவை ஓடி ஒளிய வேண்டுமோ?...ஐய்யய்யோ! எதற்குக் கதவைத் திறந்து வைத்து விட்டாய்?

விசாலம்: இதோ பாருங்கள். நீங்கள் செய்வது எனக்குத் தான் வெட்கமாக இருக்கிறது! யார் வந்தாலும் நான் பதில் சொல்லி அனுப்பி விடுகிறேன். நீங்கள் தைரியமாக இருங்கள்.

[விசாலம் சமையலறைக்குள் போகிருள்]

குப்பண்ணு: எனக்கென்னவோ ரொம்ப டெலிகேட்டாகத் தானிருக்கிறது. இருந்தாலும் உன்னைப் பார்த்தாவது எனக்குத் தைரியம் வராதா?

[நவநாகரிக உடையணிந்த வாலிபன் ஒருவன் உள்ளே வருகிருன். ஊஞ்சலுக்கு

எதிர்த்தாற்போலுள்ள நாற்காலியில் அமருகிருன் ]

வாலிபன் : நமஸ்காரம்! தாங்கள் தானே மிஸ்டர் குப்பண்ணு? என் பெயர் ஸ்ரீதர். உங்களை ஒரு முக்ய காரியமாய்ப் பார்த்து விட்டுப் போகலாமென்று வந்தேன்.

குப்பண்ணு : நான் தான் குப்பண்ணு? ஆனல் நான் ஒரு விதமான முக்ய விஷயத்திற்கும் தயாரிலில்லை.

ஸ்ரீதரன் : அடடா! நீங்கள் ஏதோ தவறுதலாக நினைத்துக் கொண்டு விட்டீர்கள்

குப்பண்ணு : (பலத்த குரலில்) பேஷாய்த் தெரியும்! நீர் வந்த விஷயத்தையும் உம் பிடிகையிலிருந்து தெரிந்து கொண்டேன். சப் ஜட்ஜ் குமாரசாமியோட பையனுக்குக் காலேஜிலே அட்மிஷன் வாங்கித் தரணும். அதற்காகத் தூது வந்திருக்கிறீர்! அந்த ஒரு விஷயத்திற்கு மாத்திரம் குப்பண்ணு தயாரில்லை.

(அகிலா வருகிருள்)

அகிலா : அப்பா! பத்து மணிக்கு யாரோ ஒரு நண்பரைப் பார்க்கப் போகவேண்டு



போலிருக்கிறது..........சப் ஜட்ஜ் குமாரசாமியைத் தெரியுமோல்லியோ?

மென்று சொல்லிக்கொண்டிருந்தீர்களே! நேரமாகவில்லையா?

ஸ்ரீதர்: சார்! உங்கள் வேலைக்கு குறுக்கே நிற்க நான் தயாரில்லை! ஆனால் நான் நீங்கள் நினைத்த விஷயத்திற்காக வரவில்லை...... இந்தப் பெண்தானே உங்கள் ஸீமந்த புத்திரி...... இவள் வரன் விஷயமாகத்தான் வந்தேன்.

குப்பண்ணு: அப்படியா சமாச்சாரம்? இதை முதலிலேயே சொல்லக்கூடாதா? அகிலா! உள்ளே போய், காப்பி கொண்டுவா!

[அகிலா போகிருள்]

ஸ்ரீதர்: நான் சொன்ன குமாரசாமி ரிடயர்ட் ஜட்ஜ் குமாரசாமி! அனேகமாய் அவரை உங்களுக்குத் தெரிந்துகூட இருக்காது. ஒரிஸ்ஸா மாகாணத்திலே உத்தியோகம் பார்த்து ஓய்வெடுத்துக் கொண்டவர்! அவர் மைத்துனருக்கு மருமான் பிள்ளை சந்துரு இந்த ஊருக்கு வந்திருக்கிருர். அவரோட பையன் பிரபாகரனுக்கு.........

[விசாலம் காப்பியுடன் வருகிருள். ஸ்ரீதர் காப்பியை எடுத்துக் குடிக்கிருன்]

குப்பண்ணு: விசாலம்! கேட்டுக்கோ. நான் ஈசன் நாமத்தைச் சொன்னபோது அலக்ஷியம் பண்ணிணுயே! இப்போது அந்த ஈசனே ஒரு வரனை நமக்காக ஸெலக்ட் பண்ணியிருக்கிருர் பாரு!

விசாலம்; சந்துருவா?......அவர் யாரு?

ஸ்ரீதர்: சந்துருவைத் தெரியாதா?....... அவர் தான் உங்கள் ஊர் மாப்பிள்ளை ஆச்சே!...... உங்கள் ஊர்.........

விசாலம்: எங்கள் ஊர் ஆந்தையூர்.

ஸ்ரீதர்: எஸ்! எஸ்! மறந்தே போச்சு! ஆந்தையூர் குப்பா சாஸ்திரிகள் என்று ஒரு மகா ஜோஸ்யர் ஒருவர் இருந்தார். அதெல்லாம் உங்க கொள்ளுப்பாட்டி காலம்! அவர் தொழில் முறையை அனுசரித்துக் காசிக்குப் போனவர் குடும்ப சமேதராக அங்கேயே உட்கார்ந்து விட்டார்! அவர் பரம்பரை தான் ரிடயர்ட் சப் ஜட்ஜ் குமாரசாமி! அவருக்கு உறவு தான் சந்துரு. நான் சந்துருவோட ஷட்டகர் பிள்ளை! கிட்ட நெருங்கிப் பார்க்கிறபோது நாம் எல்லோரும் ஒரே மனுஷ்யா தான்! இதெல்லாம் ஞாபகம் வச்சுண்டு தான் சந்துரு என்னை இங்கே அனுப்பி வைத்தார்! அவர் பையன் பிராபகரன் 'இந்தியா தவிடு கம்பெனியின்' ஜெனரல் மானேஜர். ஐந்நூறு ரூபாய் சம்பளம் வாங்குருன். அவனுக்கு உங்கள் அகிலாவை முடிந்து போட்டுவிடவேண்டுமென்று சந்துரு தீர்மானித்து விட்டார்.

குப்பண்ணு: ரொம்ப சந்தோஷம்! நான் தான் இந்தக் காலேஜைக் கட்டியழுது கொண்டு உறவினர்களை யெல்லாம் மறந்து விட்டேன்! சந்துருவாவது நினைவு வைத்துக் கொண்டிருக்கிருரே!

விசாலம்: எனக்குக்கூட லேசாய் ஞாபகம் வராப் போலிவிருக்கிறது. குப்பா சாஸ்திரியைப் பற்றி எங்கள் பாட்டி கதை சொல்லியிருக்கிருள்.

குப்பண்ணு; அதெல்லாம் சரி!" .சந்துரு இங்கே எப்போ வந்தார்? என்ன செய்து கொண்டிருக்கிருர்? அதெல்லாம் சொல்லவில்லையே!

ஸ்ரீதர்: சந்துரு பீஹார் சர்க்கார் உத்தியோகத்திலிருந்து ரிடயர் ஆகி இங்கிருந்து நாலாவது மைலிலுள்ள அல்லிக் குளம் கிராமத்தில் செட்டில் பண்ணியிருக்கிருர். அவர் பெரிய பையன் பிரபாகரன் பட்டணத்தில் இருக்கிருன். சின்னப்பையன் கணேசனை இந்த ஊர் காலேஜிலே சேர்க்க, புரொபசர் முத்துச் சாமியிடம் அவர் சிபார்சுக்காக நடையா நடை போடுகிருர்! அந்த மனிதர் முத்துச்சாமியும் ரொம்ப பிகு பண்ணிக் கொள்கிருர் போலிருக்கிறது! கணேசனைக் காலேஜில் சேர்த்தபிறகு அடுத்த அயிட்டம் அகிலாவின் கல்யாணம் தானும்! ஒரு பைசாக் கூட உங்களிடமிருந்து வரதக்ஷிணை வாங்கப் போவதில்லையாம்! உங்களை யெல்லாம் அடுத்தவாரம் அல்லிக் குளத்திற்கு அழைத்து வரும்படி என்னிடம் சொல்லியிருக்கிருர். கல்யாணத்திற்கு முன்பே சம்பந்தியின் குணத்தைத் தெரிந்துகொள்ளுங்கள்.

குப்பண்ணு: முத்துச்சாமி என்ன சாதித்துவிடுவானென்று அவனைச் சுற்றியலைகிருராம் சந்துரு? என்னிடம் ஒரு வார்த்தை சொல்லியிருந்தால் தான் அப்போதே ஏற்பாடு செய்திருப்பேனே? பிரின்சிபால் நான் கிறிய கோட்டைத் தாண்டுவாரா?

ஸ்ரீதர்: சந்துருவிற்கு விஷயம்தெரியாதோ என்னவோ? இப்போது தான் என்ன? நீங்களாகவேஅந்த உதவியைச்செய்து பெருமையடைந்தால் போகிறது! நீங்கள் செய்த உபகாரத்தைக் கேட்டால் உங்களை அப்படியே தலையில் தூக்கி வைத்துக் கொண்டாட மாட்டாரா?

குப்பண்ணு: வாஸ்தவம்! வாஸ்தவம்! நம் உறவை ஞாபகப் படுத்திக் கொண்டு நம் சம்பந்தத்தை விரும்பி வந்திருப்பவருக்கு இந்த உதவி செய்யக் கொடுத்து வைத்திருக்க

வேண்டுமே: விசாலம்! என் லெட்டர் பேப்பரை எடு!...இந்த அட்மிஷன் டயத்திலே சிபாரிசு தொந்தரவுகளுக்குத் தப்புவதற்காகத்தான் ஒரு வாரம் லீவு போட்டு விட்டு வீட்டில் உட்கார்ந்திருக்கிறேன்...பையன் பேர் கணேசனா?...இதோ ஸ்டிராங்காக எழுதி, பிரின்சிபாலுக்கு ஒரு லெட்டர் தருகிறேன். 'இந்த லெட்டர் கொண்டு வரும் கணேசன் எனக்கு மிகவும் வேண்டியவன்' என்று எழுதுகிறேன். இன்றைக்கே போய் பையனைச் சேர்த்து, சம்பளமும் கட்டி விடச் சொல்லுங்கள். நாளைக்கே, சேர்க்கப்பட்ட தகவலை வந்து தெரிவியுங்கள். உங்கள் கூடவே சந்துருவை அவசியம் அழைத்து வர வேண்டும். நாளை இரவு டின்னர் நம்ப வீட்டிலே தான்!

[காகிதத்தை ஸ்ரீதரனிடம் கொடுக்கிறார்]

விசாலம்: ஆமாம்! மறந்து விடாமல் அவரை அழைத்து வாருங்கள்; கல்யாணத்தை எல்லாம் நீங்கள் இருந்து எங்கள் வீட்டுப் பையன் போல் நடத்திக் கொடுக்க வேண்டும்!

ஸ்ரீதர்: பேஷாய்! நான் வருகிறேன். ரொம்ப தாங்க்ஸ்.

(போகிறான்)

குப்பண்ணா: பார்த்தாயா? ஒரு வழியாய் கல்யாணக் கவலை விட்டது!

விசாலம்: நமக்கு வேண்டியவர்கள் வந்தவுடன் தான் அது முடியாது, இது முடியாது என்று தைரியமாய்க் குதிக்கிறீர்கள். மருதாசலமோ பேச்சிமுத்தோ வந்தால் பேச்சு மூச்சு இல்லாமல் ஒளிந்து கொள்வீர்கள்.

குப்பண்ணா: சந்துரு நம்மைப் பற்றி நல்ல அபிப்பிராயம் வைத்துக் கொள்வார்! அவர் கேட்காமலேயே அவர் பையனுக்கு அட்மிஷன் வாங்கிக் கொடுத்தாயிற்று!

## 2

[மறு நாள் மாலை. குப்பண்ணா, அகிலா, விசாலம் எல்லோரும் உட்கார்ந்திருக்கிறார்கள். ஸ்ரீதரனை எதிர்பார்க்கிறார்கள்]

விசாலம்: காலேஜ் பியூன் கண்ணுசாமி எங்கே வந்தான்?

குப்பண்ணா: நான் எழுதிய லெட்டர் பிரகாரம் கணேசன் என்கிற பையனை 'அட்மிட்' பண்ணியாய் விட்டதாம்! சம்பளமெல்லாம் கூடக் கட்டியாய் விட்டதாம்! பிரின்சிபாலின் அந்தரங்கக் காரியதரிசி சொல்லியனுப்பியிருக்கிறார்.

விசாலம்: சரி தான்!

[மருதாசலம், பின்னால் பழக்கூடைகள் பூமாலைகள் தாங்கி வரும் ஒரு வேலையாள் தொடர உள்ளே வருகிறார்.]

மருதாசலம்: புரொபசர் சார்! நமஸ்காரம்.

[வேலைக்காரன் பழக்கூடைகளையும் பூமாலைகளையும் ஒரு பக்கமாக வைக்கிறான். விசாலமும் அகிலாவும் ஒரு பக்கமாக எழுந்து நிற்கிறார்கள்.]

குப்பண்ணா: (கோபத்துடன்) என்ன மருதாசலம்! இதெல்லாம் என்ன? நான்தான் உமக்கு உதவி செய்யச் சக்தியில்லாதவன் என்று அன்றைக்கே சொல்லிவிட்டேனே! இதெல்லாம் கொண்டு போய் விடுங்கள். எனக்குக் கோபம் வருகிறது.

மருதாசலம்: (சிரித்துக் கொண்டே) நீங்கள் செய்திருக்கும் உதவிக்கு என்ன செய்தாலும் தகும். உங்கள் கடிதம் தான் என் பையனுக்கு இடம் வாங்கிக் கொடுத்தது.

குப்பண்ணா: (பிரமிப்புடன்) கடிதமா? யாரையா, உம் பிள்ளைக்குக் கடிதம் கொடுத்தார்கள்? உளறுகிறீரே?

மருதாசலம்: நேற்று ஸ்ரீதர் கிட்டே கணேசனைச் சேர்த்துக் கொள்ளும்படி எழுதிக் கொடுத்தீர்களே! அந்தக் கடிதம் தான்! என்பையன் பெயர்தான் கணேசன்!

குப்பண்ணா: (கோபத்துடன்) என்ன அக்ரமம்! பெரிய மோசடியல்லவா செய்து விட்டீர்போலிருக்கிறது? அது என் சம்பந்திப் பையனுக்கு எழுதிக்கொடுத்ததல்லவா?

மருதாசலம்: கல்யாணம் ஆவதற்கு முன் சம்பந்தி எப்படி சார் வருவார்? அதெல்லாம் எனக்குத் தெரியாது. என் கடை கணக்குப் பிள்ளை ஐயரோட பையன் ஸ்ரீதர் பட்டணத்திலிருந்து வந்திருக்கிறார். அவரு ஏதோ பத்திரிகைக் காரியாலத்திலே வேலை பார்க்கிறாராம்! அவர் தான் எப்படியும் உங்ககிட்டே சிபாரிசுக்கடிதம் வாங்கித் தாரேன்னுசொன்னார்! அப்படியே வாங்கியும் கொடுத்தார்... இதோ அவரே வந்து விட்டார்! நீங்கள் நேரிலேயே கேட்டுக் கொள்ளுங்கள்.

(ஸ்ரீதர் வருகிறான்)

ஸ்ரீதர்: புரொபசர்! சார்! மன்னிக்கணும்! புத்தியினால் பலிக்காததை யுக்தியால் பலிக்கச் செய்தேன். உங்க கிட்டே ஒரு பெரிய மனிதன் பெயரைச் சொல்லி விஷயத்தை ஆரம்பிக்கலாமென்று நினைத்தேன்! நீங்களோ பிரமாதமான கோபத்துடன் சிபாரிசு செய்ய மாட்டேனென்றீர்கள். உங்கள்

பெண்ணைப் பார்த்தவுடன் எனக்குப் பளிச் சென்று ஒருயோசனை தோன்றியது. உங்கள் பெண் வரன் விஷயமாய்ப் பேச்சை எடுத்து உங்களை வசியம் செய்ய என் கற்பனைத் திறனால் ஒரு நாடகம் ஆடினேன்! நீங்கள் சிபாரிசுக்கடிதம் கொடுத்தீர்கள். அவ்வளவு தான்! நீங்கள்என் மூலமாகமருதாசலத்திற்கு பெரும் உபகாரம்செய்தீர்கள். குமாரசாமி, குப்பா சாஸ்திரிகள் எல்லாம் ஒரே கற்பனை, சிருஷ்டி! உங்கள் சம்சாரத்தின் ஊர் பெயர் கூட அந்தஅம்மாள் மூல மாகத்தான் தெரிந்து கொண்டேன். முத்துச்சாமி உத வியை நாடியதாகச் சொன்னால் உங்களுக்கு ரோசம் உண்டாகும் என்று எதிர்பார்த் தேன். அப்படியே நீங்கள் உதவி செய்தீர் கள்!

விசாலம்: நான் அப்போதே நினைச்சேன்! இந்தப் பிள்ளையின் வாய் வீச்சையும் சவுடா லையும் கண்டல்லவா ஏமாந்தோம்.

அகிலா: அப்படின்னா அந்தச் சந்துருமாமா வெல்லாம் சந்திரமண்டலத்தில் தான் இருக்கி றாரோ?

குப்பண்ணா: ஸ்ரீதர்! நீதான் காரியவாதி! பேஷ்! உன் ஜாதகத்தைக் கொடுத்தனுப்பு! மருதாசலம்! ரொம்ப சந்தோஷம்.

[மருதாசலமும் ஸ்ரீதரும் போகிறார்கள்]

(பாடுகிறார்) எல்லாம் அவன் செயலே
ஈசன் அருளே [போகிறார்கள்]



குழந்தைகளுக்கு
இன்றியமையாத
டானிக்

டோங்கரேயின் பாலாம்ருதம்



K.T. டோங்கரே அண் கோ., பம்பாய்-4.

# பிரிட்டிஷ் செய்திப் பத்திரிகைகள்

கே. கோபாலன்

உலகெங்கும் செய்திப் பத்திரிகைகள் தொழிலில் ஈடுபட்டிருப்பவர்களுக்கும், பத்திரிகைகள் படிப்பவர்களுக்கும் லண்டன் நகரத்திலுள்ள ப்ளீட் ஸ்டிரீட் என்ற தெருப்பெயர் நன்கு தெரிந்திருக்கும். ஏனெனின் பெரும்பாலான லண்டன் பத்திரிகைகளும் செய்திக்காரியாலயங்களும் இங்கு இருப்பதுடன் வெளிநாட்டுப் பத்திரிகைகளின் கிளை ஸ்தாபனங்களும் இவ்வீதியிலோ, இதற்கு அருகாமையிலோ குழுமி இருக்கின்றன.

பிரிட்டிஷ் பத்திரிகை உலகம் என்றால் ப்ளீட்தெருவில் அடங்கி உள்ளதென்றே கருதப்படுகிறது. முகம்மதியர்களுக்கு மெக்கா எப்படியோ, கிறிஸ்தவர்களுக்கு ஜெருசெலம் எப்படியோ அப்படியே தான் பத்திரிகைத் தொழிலாளிகளுக்கு ப்ளீட்தெரு. ஆசிரியர்களுக்கும் நிருபர்களுக்கும் இவ்வீதியில் வேலைசெய்ய அரிய சந்தர்ப்பம் ஏற்பட்டு விட்டால் ஜன்மசாபல்யம் ஏற்பட்டு விட்டதாகக் கருதுகிறவர்களும் பலருண்டு.

லண்டன் நகரில் நடமாடும் பத்திரிகைகளைப் பற்றியும் அவைகளின் லக்ஷக் கணக்கான விற்பனைகளையும் பற்றியும் முன்பொரு சந்தர்ப்பத்தில் சொல்லி இருக்கிறேன். இப்பொழுது ப்ளீட் வீதியில் சென்று பத்திரிகைக் காரியாலயங்களில் பத்திரிகைகள் எப்படிப் பிரசுரிக்கப்படுகின்றன என்று சற்றே கவனிப்போம்.

இப்பொழுது உலகெங்கும் எழுதப் படிக்கத் தெரிந்த நீங்கள் ஒவ்வொருவரும் காலையில் எழுந்தவுடன் காபியோ தேநீரோ அருந்தும் போது காலைப் பத்திரிகையைப் புரட்டுவது ஒரு சாதாரணப் பழக்கமாகி விட்டதென்று நினைக்கிறேன். பர்மாவில் படுகொலை, கொலம்பியாவில் அகோர பூகம்பம், பிரிட்டனில் பொருளாதார நெருக்கடி, கேப்டவுனில் நிறக் கலகம், நியூயார்க்கில் நூதன நடனம், ஜாவிக்கென்ற இடத்தில் மோட்டார் போட்டி, டர்பி பந்தயத்தில் அகமத் கான் குதிரைக்கு வெற்றி என்றெல்லாம் படித்துக்கொண்டே போகிறீர்கள். பல இடங்கள் எங்கே இருக்கின்றன என்று தெரிந்து கொள்வதற்குப் பூகோளப்படப் புஸ்தகங்களையும் சில சமயம் புரட்ட வேண்டியிருக்கிறது.

ஆனால் இப்படிப் பூப்பிரதக்ஷணம் செய்து இரவு முழுவதும் கண் விழித்து ஆயிரக்கணக்கான நிருபர்களும் ஆசிரியர்களும் உழைத்து, காலையில் நீங்கள் வாசிக்க வசதியாய்ச் செய்தியைப் பிரசுரிக்கப் பாடுபடுகிறார்கள் என்று ஒரு பொழுதாவது நினைக்கிறீர்களா?

இப்பொழுது ப்ளீட் வீதியிலுள்ள ஒரு காலைப் பத்திரிகைக் காரியாலயத்திற்குள் போய்ப் பார்ப்போம். அநேகமாக உலகெங்கும் ஒரு பத்திரிகைக் காரியாலயம் இவ்வாறுதான் பொதுவாக இருக்கும்.

ஒரு தனி அறையில் பிரத்யேகம் என்று போட்டுக்கொண்டு ஒருபெரியவர் உட்கார்ந்து இருக்கிறார். அவர்முன் ஒரு பெரிய மேஜை மீது காகிதங்களும் புஸ்தகங்களும் ஒழுங்காகவோ கும்பலாகவோ கிடக்கின்றன. 5, 6 டெலிபோன்கள் அவரைச் சுற்றி இருக்கின்றன. இவற்றின் மூலமாக, தம் நிலையத்திலேயே உதவியாளர் ஒவ்வொருவருடன் பேசுவதுடன் உள்ளூர், வெளியூரில் எவருடனும் நொடிப் பொழுதில் பேச வசதி உண்டு. இவர் தான் முதன்மை ஆசிரியர். இவர், நிர்வாக விஷயங்களைக் கவனிப்பதுடன் பொதுவாக ஒவ்வொரு நாளும் முக்கிய விஷயங்களைப்பற்றித் தலையங்

கத்தில் பத்திரிகையின் கொள்கைப்படி அபிப்ராயங்களைப் பொது மக்களுக்கு எடுத்துரைப்பார்.

இவ்வறைக்கு வெளியே 15, 20 உதவி யாசிரியர்கள் உள்நாட்டு நிருபர்கள், வெளிநகர நிருபர்கள், உலகச்செய்தி ஸ்தாபனங்கள் இவைகள் அனுப்பும் செய்திகளை அவைகள் முக்யத்துவத்திற்கு ஏற்றவாறு பிரசுரிக்கும் வகையில் தயாரிப்பவர்கள்.

ஒவ்வொரு பெரிய பத்திரிகையும் லண்டன் நகரத்தில் நடக்கும் விஷயங்களை எல்லாம் சேகரிக்க அநேக நிருபர்களை நியமித்திருக்கின்றன. ஒருவர் போலீசு சம்பந்தமான கொலை களவு செய்திகளில் கவனம் செலுத்துவார். ஒருவர் நியாய ஸ்தலங்களில் நடக்கும் வழக்குகளைக் கவனிப்பார். ஒருவர் ராஜாங்க விஷயங்களை விளக்கி எழுதுவார். ஒருவர் பொருளாதார நிபுணர். சிலர் வேடிக்கை விளையாட்டுகளைப்பற்றிச் செய்தி அளிப்பார்.

இதன்றி, பிரிட்டனில் ஒவ்வொரு சிறிய ஊரிலும் பிரபல பத்திரிகைகளுக்கு ஆங்காங்கு நடக்கும் செய்திகளைத் திரட்டியனுப்பச் சொந்த நிருபர் இருப்பதுடன் உலகதேசங்களின் முக்கிய தலைநகரங்களில் ஒவ்வொரு நிருபராவது பிரத்யேகச் செய்திகளை யனுப்ப நியமிக்கப்படுவார்,

ஒவ்வொரு பத்திரிகையும் தங்கள் பிரத்யேக நிருபர்களுக்கு ஆயிரக்கணக்கான பவுன்களைச் செலவழித்தும் சில பெரிய செய்தி ஸ்தாபனங்களின் உதவி வேண்டி இருக்கிறது. இந்த ஸ்தாபனங்கள் தாங்களே செய்திகளைப் பிரசுரிப்பதில்லை. செய்திகளைப் பல்வேறு இடங்களிலிருந்தும் தந்தி மூலமாகவோ பிரத்யேகமான வயர்லெஸ் அல்லது டெலி பிரிண்டர் சாதனங்கள் மூலமாகவோ திரட்டி, பத்திரிகைகளுக்கு விலைக்கு அளிக்கின்றன.

இத்தகைய செய்தி ஸ்தாபனங்கள் இங்கே பலவிருக்கின்றன.

முதலில் லண்டனிலும் பிரிட்டனிலும் உள்ள செய்திகளைமட்டும் திரட்டுவதற்கென்று பிரஸ் அஸோஸியேஷன் என்ற ஸ்தாபனம். இந்த ஸ்தாபனம் லண்டனுக்கு வெளியே உள்ள செய்திப் பத்திரிகைகளுக்கே சொந்தமானது. இது லண்டன் பத்திரிகைகளுக்கும் செய்தி கொடுக்கிறது.

உலகச் செய்திகளுக்கு மிகப் பிரபல ஸ்தாபனம் ராய்ட்டர். இந்த ஸ்தாபனம் இதுவரை பிரிட்டிஷ் பத்திரிகைகளுக்குச் சொந்தமாயிருந்தது. அதாவது பிரஸ் அஸோஸியேஷன் என்ற ஸ்தாபனமும் லண்டன் பத்திரிகைச் சொந்தக்காரர்கள் சங்கமும் கூட்டுறவு முறையில் நடத்தப்பட்டது. சமீபகாலத்தில் இதில் ஆஸ்திரேலியா, நியூஜீலந்து பத்திரிகைச் சங்கமும், இந்தியப் பத்திரிகைகளின் சங்கமாகிய பிரஸ் டிரெஸ்ட் ஆப் இந்தியாவும் பங்கெடுத்துக் கொண்டிருக்கின்றன.

இதைத் தவிர இங்கு எக்சேஞ்சு டெலிகிராப் என்ற மற்ருெரு தனிச் செய்திஸ்தாபனமும் இருக்கிறது. அமெரிக்கச் செய்தி ஸ்தாபனங்களான யுனைடெட் பிரஸ் என்ற செய்தி நிலையமும் அஸோஸியேடட் பிரஸ் என்ற நிலையமும் இருக்கின்றன.

நான் முன்பு சொன்னது போல் சிற்சில காலைப்பத்திரிகைகளுக்குத் தினசரி 35, 40 லக்ஷம் பிரதிகள் விற்பனை ஆகின்றன. இவ்வளவு பத்திரிகைகள் இருப்பதால் செய்தி விஷயங்களில் ஒவ்வொன்றிற்கும் பெரிய போட்டி உண்டு. நிமிடக்கணக்கில் ஒன்றை யொன்று முந்திக்கொள்ளப் படும் பாட்டை இங்கிருந்தால்தான் தெரிந்து கொள்ள முடியும். ஆகையால் இப் பத்திரிகைகளுக்குச் செய்தி அளிக்கும் செய்தி ஸ்தாபனங்களின் பரபரப்பைப் பற்றிச் சொல்ல வேண்டுமா? மற்ருெரு செய்தி ஸ்தாபனத்தைவிட உலகில் நடக்கும் ஒரு சம்பவத்தைப்பற்றி 5 நிமிடம் முன்னதாகக் கொடுத்து விட்டால் ஒரு செய்தி ஸ்தாபனம் மிகவும் குதூகலத்துடன் மார்தட்டிக் கொள்ளும்.

இங்கிருந்து 500 மைல்களுக்கு அப்பாலுள்ள கொலம்பியா என்ற தேசத்தில் ஒரு பூகம்பம் ஏற்பட்டதென்று சொன்

ளுல் (அதிலும் அங்கே சில பிரிட்டிஷார் மாட்டிக் கொண்டார் என்று தெரிந்து விட்டால்) அங்கேகூட அவ்வளவு பரபரப்பு இருக்காது, லண்டன் செய்திக் காரியாலயங்களிலும் பத்திரிகைநிலையங்களிலும் அவ்வளவு பரபரப்பு ஏற்படும்.

மாலைப் பத்திரிகைகள் பிற்பகல் 1மணி முதல் 6மணி வரை 3, 4 பதிப்புகள் பிரசுரிக்கின்றன. ஆனால் முதல் பதிப்புக்கும் இரண்டாவது பதிப்புக்கும் அடையாளமே தெரியாது. முதல் பதிப்பில் முதற்பக்கத்திலுள்ள ஒரு பெரிய செய்தி இரண்டாவது பதிப்பில் பிற்பக்கங்களுக்குச் சென்று விடும். வேறு ஒரு பெரிய சம்பவம் முதற்பக்கத்தில் கொட்டையெழுத்தில் பிரசுரித்திருக்கும்.

ஆனால் இந்தியா, இலங்கை முதலான இடங்களிலுள்ள பத்திரிகைகளுக்கும் இவ்வளவு பரபரப்புடனும் பணச் செலவுடனும் பிரசுரிக்கப்படும் இப்பிரிட்டிஷ் பத்திரிகைகளுக்கும் ஒரு பெரிய வித்யாசம் எனக்குத் தென்படுகிறது. நான் இதைப் பிரிட்டிஷ் பத்திரிகைகளின் குறை என்றுதான் சொல்வேன்.

நம் கீழ்நாட்டுப் பத்திரிகைகளில்பொதுவாக உலக விஷயங்கள் அதிகம் கொடுக்கப்படுகின்றன. உள் நாட்டுச் செய்திகளுக்குப் பிராதான்யம் அளித்தாலும் மற்றநாடுகளில் நடக்கும் சம்பவங்களுக்குப்போதிய இடம் அளிக்கப்படுகிறது.

ஆனால் பொதுவாகப் பிரிட்டிஷ் பத்திரிகைகள் பிற நாடுகளில் நடக்கும் சம்பவங்களுக்கு அவ்வளவு இடம் கொடுப்பதில்லை. அதிலும் ஐரோப்பாவில் நடக்கும் விஷயங்களைத் தவிர வேறு எந்த நாட்டுச் செய்திகளும் விரிவாகப் போடுவதில்லை. தேடிப்பார்த்தால் இந்தியாவைப் பற்றியோ, லங்கை, மலேயா, பர்மா முதலிய கீழ்நாடுகளைப் பற்றியோ ஒரு 4, 5 வரி இருக்கலாம்.

பிரிட்டிஷாருக்குச் சம்பந்தம் இல்லாத நாடாக இருந்தால் அதுவும் பார்ப்பது துர்லபம். சைனுவில் வெள்ளத்தால் 10000 ஜனங்கள் மாண்டார்கள் என்ருல் மறுநாள் லண்டன் டைம்ஸ் பத்திரிகையில் 10 வரிகள் இருக்கலாம். மாலைப் பத்திரிகைகளில் முதற்பக்கங்களில் உள்ளூரில் நடந்த ஒரு கொலையைப் பற்றியோ, அல்லது பிரிட்டிஷ் பெண்மணி ஒருத்தி அழகுப் போட்டியில் பரிசு பெற்றதையோ கொட்டை எழுத்துக்களில் பெரிய படங்களுடன் பிரசுரித்திருப்பார்கள்.

இது காரணமாக, இங்குள்ள பொது ஜனங்களுக்கு உலகவிஷயங்களில் நாளுக்குநாள் அவ்வளவு பரிச்சயம் கிடையாதென்றே சொல்வேன். படித்தறிந்த சில மேதாவிகளுக்கே பலவித வாரப்பத்திரிகைகளையும் மாதாந்தர பத்திரிகைகளையும் படித்துச் சிறிது உலகஉணர்ச்சி உண்டு.

உதாரணமாக, கீழ்நாடுகளில் நடக்கும் கொந்தளிப்பைப் பற்றி மிகவும் சொல்பமே இங்கே பத்திரிகைகளில் கண்டறிய முடியும். 40 கோடி மக்கள் கொண்ட சைனுவில் நடக்கும் போரைப்பற்றித் தினம் 10 வரிக்கு மேல் பார்ப்பதரிது. இந்தோ சைனுவில் நடக்கும் போரைப் பற்றி அதுவும் கிடையாது. மலேயாவைப்பற்றி 3 வரியிருக்கும். பர்மாவில் நடக்கும் சம்பவம் இங்கு யாராவது வந்து போனுல்தான் தெரிந்து கொள்ள முடியும்.

தற்காலத்தில் முற்போக்கான போக்குவரவு சாதனங்களாலும் பொருளாதார உணர்ச்சிகளாலும் மிகவும் சுருங்கி விட்ட தென்று கருதப்படும் இவ்வுலகில் பெரும்பாலான பகுதியில் நடக்கும் விஷயங்களை இங்குள்ள பொது ஜனங்கள் அறியாதிருப்பது பெருந் தவறு என்றே நினைக்கிறேன்.

பிரிட்டிஷ் பத்திரிகைகளுக்கு உலகம் என்பது அநேகமாகப் பிரிட்டன், ஐரோப்பா, ஒருவாறு வட அமெரிக்கா இவற்றுடன் முடிந்து விடுகிறது. பிரிட்டிஷ் காரர்களைப்பற்றிப் பாதித்தால்தான் மற்றத் தேசங்கள் எங்கிருக்கின்றன என்று ஆராய்ச்சி செய்யப்படும்.

இவ்விஷயங்களில் நம் கீழ்நாட்டுப் பத்திரிகைகள் மிகவும் முற்போக்கானவையென்றே சொல்ல வேண்டும்.

# நாணய(ஏ) மாற்றம்

எஸ்.என்.ராமஸ்வாமி

வீட்டில் திரவியக் கோளாறு? நாட்டிலும், உலகிலும் அதுவே. செலவு, வருவாய்க்கு மேலாயிற்று. இறக்குமதிக்கு வேண்டிய ஏற்றுமதி வியாபாரமில்லை. ஊதியம் ரூபாயளவில் உயர்ந்தும், அதே "சகட்டு மேனிக்கு", விலைவாசி உயர்ந்து, கஷ்டம் நீடிக்கிறது. இதிலிருந்து மீள வழி காணப் பலர், பலத்த (வேறுபட்ட!) அபிப்ராயங்களை வெளியிடுகிறார்கள். எதிர் பார்த்த சுகம் காணாததால், மிஞ்சுவது குழப்பம். காரணம் —ஒரு சாரார் நன்மையை மட்டும் தேடுவது தான். சர்க்கரைக்கு நாம் நம் நாட்டில் பாதுகாப்பு அளித்து, உலக விலையின் மூன்று அதிக மடங்கு விலை கொடுக்கிறோம். சர்க்கரை உற்பத்தியாளருக்கும், கரும்புச் சாகுபடி கிருஷிக்கும், இது போதாதாம்!! துணி நிலையும் ததாஸ்து... விற்காமல் துணி மலையாய்க் குவிந்துவிட்டது என்று மில்காரர்கள் கூச்சல்: உயர்ந்த விலைக்கு உகந்த பணம், "கிழிச" வேஷ்டிக்காரனிடம் இல்லை. "போக்குத் துணி" என்ற "காடா" வின் விலை ஆறு மடங்கு ஏறி விட்டது. விலை உயர்வுக்கு எதிரிடையாகச் சரக்கு நயம், தரம் கீழ் நோக்கி விட்டது!! இந்தச் சர்ச்சைகளில் ஸ்ரீமான் பொதுஜனத்தின் நலனைக் கவனிப்பவர், யாருமில்லாமல், அவருக்குக் கிலி பிடித்து விட்டது.

எல்லாமறிந்த பணக் கும்பல், "ஏனப்பா, ரூபாயில் 2½ அணா வெள்ளி தானே இப்போ உண்டு...விலை ஆறு மடங்கு உயர்வது சகஜம் தானே" என்கிறது. "எல்லாம் இந்தச் சுதந்திரத்தால் தான்" என்கிறார் அடிமையில் மோகம் கொண்ட அயல் நாட்டுச் சாமான் தரகர். "எல்லாம் காங்கிரஸ் முதலாளிக் கும்பல் கூட்டுச் சூழ்ச்சி" என்று மூட்டுகிறார், ஸ்டாலின் தாஸர்...

காரணம் ஏதாகிலும், புலப்படவில்லை. பிழைப்பு மட்டும் நாளுக்கு நாள் கடினமாகி வருகிறது. ரூபாய் மதிப்புக் குறைந்ததால், ஏற்றுமதி அதிகமாக வேண்டும். அதற்கு முன்னால், உள் நாட்டுக் கடைக்காரன் விலையைப் பாதியாகிலும் உயர்த்தி விட்டான்.

இச்சூழ் நிலைக்குக் காரணம், பேராசை தான்...நாடு சுபிக்ஷப் பட்டாலொழிய, தனி நபர் சுகப்பட முடியாது. இரண்டாவது, நாட்டின் செல்வம், ரூபாய் கணக்கிலில்லை. ஆனால் மக்களின் சோர்விலா உழைப்பால் உண்டான தொழில் இயல், மூல, மாசூல் பொருட்கள் தான்.

இவைகளை வெளி நாட்டிற்கு ஏற்றுமதி செய்து நமக்கு வேண்டிய மற்ற நாட்டின் பொருட்களைப் பெற வேண்டும். இந்த இருதரப்பு வியாபாரத்தை ஒழுங்குபடுத்தி, நிர்ணயிக்க, நாணயமாற்ற விகிதம் உதவுகிறது. நாம் தற்போது அமெரிக்காவிலிருந்து தான், தொழில் இயல் இயந்திரங்களை அடைய முடியும். அதே "கதி" தான் மற்ற நாடுகளுக்கும். ஆகையால் அமெரிக்காவிற்கு ஏற்றுமதி செய்து, டாலர் சம்பாதிப்பதிலேயே எல்லா நாடுகளும் குறியாயிருக்கின்றன. பண்டம் ஏற்றுமதிக்கு இல்லையேல், தங்கத்தை அனுப்பலாம். உலகின் முக்கால் "வாசி" தங்கம் அமெரிக்காவில் ஏற்கனவே குவிந்துவிட்டதால், மற்ற நாடுகள் இருப்பதை "கெட்டியாய்ப் பிடித்துக்" கொண்டிருக்கின்றன!! நாம், காகிதப் பணத்தை மோகித்து, விலை உயர்ந்தது என்று ஏமாந்து, தங்கத்தை ஏற்றி விட்டோம்.

இதுகாறும், ஏகாதிபத்தியச் சலுகைகளால் லண்டன் உலக வியாபார கேந்திர ஸ்தானமாகி, ஸ்டர்லிங் நாணயம் உலக நாணயமாயிற்று. ஒவ்வொரு நாடும், ஸ்டர்லிங் நாணய மாற்ற விகிதத்தை மட்டும் கண்காணித்தது. அந்த விகிதத்திற்குப்பங்கம் ஏற்பட்டால்,வியாபாரமே மூழ்கிவிடும்!! "ரொம்ப நாளா" இந்த "நாணய ஏகாதிபத்தியம்" அமெரிக்காவிற்குப் "பிடிக்கவில்லை"- எரிச்சலை உண்டு பண்ணியது.

ஹிட்லரால், இங்கிலாந்தின் பொருளாதாரம் சீர்கேடாயிற்று. நேர்முக யுத்தச் சேதமில்லாததால் [பணத்தையும், ஆட்களையும் பல ஆயிரம் பலி கொடுத்தது] அமெரிக்கா உற்பத்தி ஸ்தானங்கள் அழியாமல், வியாபாரப் பொருளாதாரம் சிதருமல், 1945-ல் யுத்தம் முடிந்ததும், அதுவே உலக "சப்ளேயராக" விளங்கிற்று. மற்றத் தேசங்கள் "இடிந்த மனை"கள் ஆயின. ஆகையினாலே, தேவை அதிகரித்தது; ஆனால் தேவையைப் பூர்த்தி செய்து சொள்ளக்கூடிய உள் நாட்டுப் பொருளாதாரம் காணப்படவில்லை.அமெரிக்க உற்பத்தியோ—விவசாயம், தொழில் இயல், இயந்திரம், ஆராய்ச்சி—வானளாவி ஓங்கியது. பண்டங்களை "அழிக்க" ஏற்றுமதி தான் சிறந்த முறை. ஆனால் அந்நிய நாடுகளிலிருந்து சாமான் வாங்கினால் தான், அவர்கள் அமெரிக்கா பண்டம் வாங்குவார்கள். நாமும் தேயிலை, எண்ணெய்வித்து, Manganese., விற்ரும்!!

முன் கூட்டியே திட்டம் வகுத்த அமெரிக்கா ஏற்றுமதி பெருக்குவதில் சுலபவழி கண்டது. தன் பொருட்களின் விலையைக் குறைத்தது. கடன் "பாபத்து" வியாபாரமும் ஆரம்பித்தது. இப் பொருளாதார முன்னேற்றம், ராஜீயத் தகராறுகளால், மேலும் "வேகம்" கொண்டது!!

யுத்தம் 1945-ல் முடிந்ததும், கிழக்கு மேற்கு "மூடுமந்திர" யுத்தம் தலையெடுத்தது!! ருஷ்யா, ருஷ்யரல்லாதார் என்று இரு கட்சிகள். கிழக்கு ஐரோப்பாவில், தனக்குப்பணிந்த நாடுகளை,ருஷ்யா "இரும்புத் திரை"க்குள் புகுத்தியது. இன்னும் பல ஐரோப்பியநாடுகள் "அந்தப் பக்கம்" சேர்ந்து விடுமோ என்ற பீதியில், அமெரிக்கா "மார்ஷல் போர்வை"போட்டது—மேற்கு ஐரோப்பிய நாடுகள்மேல்!! காரணம் என்ன? ருஷ்ய சமதர்ம சமுதாயக் கொள்கை பரவினால், அமெரிக்க முதலாளி தத்துவம் ஒழிந்து, அமெரிக்காவே "கயா" ஆகி விடும்.

"மார்ஷல்" உதவி மூலம், அமெரிக்கப் பொருட்கள், பல நாடுகளுக்குக் கடன் முறையில் அனுப்பப்பெற்று வருகிறது. 1951 வரையிலும் இவ்வுபகாரம் நீடிக்கும். இங்கிலாந்தே கோடிக் கணக்கு! டாலர் இந்தத் "த்வாரா"வில் வாங்கியது! மார்ஷல் திட்டத்தின் உதவிபெற்ற நாடு, உள்நாட்டு உற்பத்தி சரி (மதிப்பில்) மடங்கு பெருக்கி ஏற்றுமதி செய்யவேண்டும். என்ற கட்டுப்பாடு உண்டு. ஆசை இயல்பு தானே! ஒவ்வொரு நாடும், தன் பொருளின் விலையை உயர்த்த ஆரம்பித்தது. வியாபார "ஆசார"ப்படி அமெரிக்கா வாங்கவேண்டியதாயிற்று.

இந்த விலை உயர்வைக் கண்டிக்கச் சமயம் பார்த்து, அமெரிக்கா நாணயமாற்ற விகிதமுறையைக் கையாண்டு வெற்றிகண்டது. பெரிய பெரிய அணை, கால்வாய், உணவுப் பொருட்கள் திட்டங்களுக்கு அமெரிக்காவிலிருந்து தான் இயந்திரம் வரவேண்டும். ஆகையால் எல்லா நாடுகளும் [நமது "அண்டை" வீட்டுக்காரர் தவிர!—இதிலும் ஜின்னு பின்னம்] தாங்களே "அக்ஷதை" போட்டுக்கொண்டு, தங்கள் உள்நாட்டு நாணய—டாலர் மாற்று விகிதத்தை 30 சத விகிதம் குறைத்துக் கொண்டார்கள். உதாரணமாக, இங்கிலாந்து முன்பு ஒரு ஸ்டர்லிங்க் பதிலாக 4. 3 டாலர் அடைந்தது: தற்போது 2. 8 டாலர் தான் கிடைக்கும். நம்மைப் பொறுத்த வரையில் ரூ. 3-5-4 க்குப் பதிலாக ரூ. 4–12–0 கொடுத்து ஒரு டாலர் வாங்க வேண்டும். நாணய மதிப்புக் குறைவால், ஏற்றுமதி சாமான் விலை குறைந்து, ஏற்றுமதி ஓங்கும். விளக்குங்கால்—முன்பு அரிசி படி ரூ. 3-5-4 எனலாம்; அதாவது ஒருடாலர். அதே டாலருக்கு இப்போது $4\frac{3}{4}$ ரூபாய் கிடைப்பதால், $1\frac{1}{4}$ படி அரிசி ($\frac{1}{4}$ படி சுமார் ஜாஸ்தி) அமெரிக்கருக்குக் கிடைக்கிறது. இறக்குமதிச் சாமான்கள் விலை உயர்ந்து, இறக்குமதி குறையும். இவை

எல்லாம் "வியாக்யான கர்த்தாவின்" தீவிரங்கள்; இது நடக்கப் போவதா என்பது—ஏற்றுமதி உயர்வு, இறக்குமதிக் குறைவு—வருங்காலம் தான் நிரூபிக்கும்!!

தற்போது நிதர்சனம், நீடித்த டாலர் ராஜ்யம். ஓங்குவது அமெரிக்கக் கொள்கை. இரண்டும் உலகிற்குப் பயனளிக்கும். மற்ற நாடுகள் தங்கள் தங்கள் பிராந்தியங்களில் உற்பத்திப் பெருக்கத்தில் ஈடுபட வேண்டும்: அரசாங்கப் பொறுப்பிலிருந்து "கோஷ வீரர்களை" அகற்ற வேண்டும்.

ஏன் இந்த நம்பிக்கை? ஏன் இந்த நிபந்தனை? அமெரிக்கத் தொழில் முன்னேற்றச் சரித்திரம் தான் எடுத்துக் காட்டு.

150 வருடங்களில் அமெரிக்கா உலக வணிக வல்லரசாக விளங்குகிறது? ஏன்? ஜனத்தொகை 15 கோடியானாலும், தொழில் இயல் உற்பத்தி பெருகி, செல்வந்தர் நாடாயிற்று. ஏன்? ஒரே "தலைமுறையில்" இரண்டு மஹா யுத்தங்களைச் சமாளித்தும், முன்னேறுகிறது. ஏன்? நாட்டில் சுபிக்ஷம்—தனி நபர் சராசரி வருட வருமானம் 5000 டாலர். நாட்டின் ஏற்றுமதி மதிப்பு வருடம் 1300 கோடி டாலர்: இறக்குமதி 630 கோடி டாலர் தான்—ஆகையால் வியாபார "மிச்சம்" சுமார் 700 கோடி டாலர். ஏன்?

இச் செல்வத்திற்கு அடிப்படை, அமெரிக்கர்கள் தான்—அவர்கள் நாணய வியாபாரம், அரசாங்க முறை, மற்றும் பல உள. அரசாங்கம் தொழில் இயல் முயற்சிகளில் தலையிடுவதில்லை. லாபத்தைக் கண்டு பீதியடைவதில்லை. சுயேச்சை முயற்சி, ஆர்வம், உழைப்பு, முதல் பணம் பணயம் வைப்பது, மற்றும் எல்லா முன்னேற்றத் திட்டங்களுக்கும் ஆதரவளித்து ஊக்க மூட்டியது, அந்த அரசாங்கம். நாடு செழிக்க வேண்டுமென்ற ஒரே திட்டத்திற்கு, மற்ற வசதிகளைத் தியாகம் செய்து உழைத்தார்கள். சிக்கலைக் களைந்து, எதிர்ப்பு இடையூறுகளைத் தகர்த்தெறிந்தார்கள். வியாபார (உள்நாட்டிலேயே) போட்டி அதிகரிப்பில் சலிப்பிலா உழைப்பு, தளரா ஊக்கமுள்ளவர்களே மிஞ்சி, முன்னேறினார்கள். லாபம் சம்பாதிப்பதில் ஊக்கமிருந்தும் லாபத்தை மூட்டைகட்டாமல், மீண்டும் மீண்டும், நூதன ஆராய்ச்சி இயந்திரங்களில் முதலிட்டு, உற்பத்தி முறையைச் சீர்படுத்தி, விலையைக் குறைக்கும் பணியில் ஈடுபட்டார்கள். ரஸாயன, விஞ்ஞான ஆராய்ச்சி முறைகளைக் கையாண்டார்கள். "போதுமென்ற" மனதே அவர்களுக்கில்லை.

உதாரணமாக, மோட்டார் கார் உற்பத்தி. முதலிலிருந்தே (1893முதல்) பாமர ஜனங்களுக்கு "கட்டக்" கூடிய விலையிலேயே கார் உண்டாக்க முற்பட்டார்கள். வெற்றி கண்டார்கள். 1912–ல் செவர்லே கார் விலை 2150 டாலர்: 1942-ல், 907 டாலருக்கு மலிந்தது. ஆனால் தரம் (கார்) குறையவில்லை: தொழிலாளி கூலி ஏறிற்று!! "குறைந்த லாபம், பெருத்த வியாபாரம்" என்ற நியதியை நாட்டினார்கள். மற்றவர் 2 கோடி கார் செய்வதற்குள், அமெரிக்கர் 10 கோடி விநியோகித்தார்கள்!!

இப்படியே அடுக்கிக் கொண்டுபோக இடமில்லை.

நம்நாட்டில் தொழில் இயல் பிரச்னை, பிரச்னையாகவே தேங்கி வருகிறது! தரகர்களாக இருப்பதிலேயே மோகம். 1200 கோடி ரூபாய் மதிப்புள்ள ஸ்டர்லிங் சொத்தில், பாதியை, "பவுடர், க்ஷவர பிளேட்" வாங்கியே தீர்த்து விட்டோம். கேந்திர இயந்திர ஜாபிதாவே, நாம் போடவில்லை!! இருக்கும் தொழில், நாணயம், சரக்கு நயம் "அன்றொரு நிமிஷமாக" குறைவதால், கட்டுப்பாடு அதிகாரிக்கும்பல் அதிகரித்துக்கொண்டே வரவேண்டியதாயிற்று. அந்த உத்தியோகச் செலவில், 1947 ஆகஸ்ட் 300 கோடி ரொக்கத்தை, 100 கோடிக்குக் "கரைத்து" விட்டோம். இதே போல் "ஓடினால்" இன்னும் அரைவருடம் கூட நம்நாடு நிலைக்காது. இதை உணராமல், தத்துவ நிபுணர்கள், சட்டம் இயற்றும் பிரியர்கள், "வாய்ச்சொல் வீரர்கள்", மற்றும் பலர் "குட்டை குழப்புவது" நம் நாட்டின் தலைவிதியோ? எல்லாவற்றை

யும் மேலிட்ட கேலிக்கூத்து, பரந்த உலக சமுதாய நோக்கத்தை நிலைநாட்டும் நேருஜியைத்திட்டுபவர்கள். இவர்களுக்கு இந்தியா பண்டைக் காலத்து மாட்டு வண்டி மனப்பான்மை. பிற நாட்டு ஒத்துழைப்பு வேண்டாம். தையல்காரன் தனக்கு வேண்டிய செருப்பைக்கூட தானே தைத்துக்கொள்வதில்லையே—அவரவர், அவரவர் "வித்தை"யைக் கையாள வேண்டும் என்றால் "இந்தியாவே 100,000 ரூபாயில் கார் செய்யட்டுமே" என்கிறார்கள். தன்னம்பிக்கைக்கு ஒரு அளவு உண்டு: மீறினால், பைத்தியம்.

ஏட்டுச்சுரைக் காய்கள் ஒழிந்து, சேமிப்புத்திட்டம் கையாண்டு, மூலதனம் தாராளமாக முன்வந்து, தொழில் இயல் ஓங்கினால் தான், நம்நாடு, அடுத்த தலைமுறையிலாகிலும் உருப்படியாகலாம். செல்வம் செழித்தோங்க இன்றேவித்துப் போடவேண்டும். நாளடைவில், டாலர் ஸ்டர்லிங் ஆதிக்யத்தை எதிர்த்து நிற்கலாம், வெற்றியும் காணலாம். "திண்ணை" வேதாந்தத்தில் மூழ்கி, வசைப் புராணத்தைக் கையாண்டால், நாமாகவே செங்கொடிக்குப்பணிசெய்தவர் ஆவோம். அந்தத் தலைவிதி நம்மை அண்ட வேண்டாமென்று உண்மையில் ஆர்வமுள்ளவர்கள், தங்கள் தங்கள் கடமையை உணர்ந்து, பணிசெய்ய வேண்டும். கடமை வழியைக்கைப்பிடித்தால், உரிமைகள் தாமாகவே ஓடிவரும்.


# DON'T WORRY !!

Try "**KUMARI**" (Tablets) to remove your anxieties over difficult days and fear of periodical delays at any stage, under any circumstance and prevent future troubles! Speedy and harmless!! Thousands satisfied!!! Normal potency Rs. 3. Special Rs. 5. Extra Special Rs. 8. (V. P. Extra)



"**RASAYAN**" (Tabs.) Gives youthful vigour, increases energy, purifies the blood and valuable in nervous debility and premature old-age. On the whole, it is a BOON to married couples. Each tube Rs. 4/-. 3 tubes Rs. 10-8. (V. P. Extra)

**Mrs. P. DEVEE, F. D. S. (C. M.)**

TOLLYGUNGE, CALCUTTA - 33.

கீழ்க்கண்டவர்களிடமும் கிடைக்கும்:—

1. ராகவன் & கோ., ஸ்ரீ நரஸிம்ஹராஜா ரோட், பங்களூர் ஸிடி.
2. ஸிந்தி, 172—A, பிரின்ஸெஸ் தெரு, (ஹனுமான் மந்திர் மேல்புறம்) பம்பாய்—2.
3. எல். எம். முகர்ஜி & ஸன்ஸ் லிமிடெட், 167, தரம்தாலா தெரு, கல்கத்தா.
4. இங்லீஷ் கம்பெனி, ஆலப்புழை. (திருவாங்கூர்)
5. பயனீர் பார்மஸி, 183, மெயின் தெரு, பேட்டை, கொழும்பு (ஸிலோன்)

# கதா காலக்ஷேபம்

**கலாதாஸன்**

ஸங்கீதம், ஓவியம், கவிதை, சிற்பம் முதலிய லலித கலைகளில் ஒன்றாகக் கூறப்படாமலிருந்தாலும் கதா காலக்ஷேபம் ஒரு உயர்ந்த கலையென்றே கருதலாம். மேற்கூறிய பல கலைகள் அதில் சேர்ந்திருப்பதால் அதைத் தனியாக ஒரு கலையாகச் சொல்ல வில்லை போலும். முக்கியமாக ஸங்கீதம், நடனம், கவிதை இந்த மூன்று கலைகளும் இதில் பிரதானமடைந்திருக்கின்றன. முற் காலங்களில் ஜனங்களுக்குப் பக்தியையும் தர்மத்தையும் எடுத்துக் காட்டும் பொருட்டு, புராணங்களையும், இதிஹாஸங்களையும் ஸங்கீதத்தோடு கலந்து பிரவசனம் செய்யும் புராண படனம் என்னும் முறை, வடக்கிந்தியாவில் பழக்கத்திலிருந்த ஸங்கீர்த்தனம் எனும் பந்தாவோடு கலந்து, ஒரு தனிக் கலையாகச் சோபிக்க ஆரம்பித்தது. அதைத் தென் இந்தியாவில் நிலை நாட்டியவர் தஞ்சாவூர்கிருஷ்ண பாகவதர் தான். அதைப் பின்பற்றி அநேக பண்டிதர்களும், வித்துவான்களும் அந்த முறையைக் கையாண்டு வந்தார்கள். திருப்பழனம் பஞ்சாபகேச சாஸ்திரியாரவர்கள் அதற்கு ஒரு தனி மெருகு கொடுத்து அதை நிகரற்ற கலையாகக் கையாண்டு வந்தார்.

பொது மக்களுக்குப் பக்தி, தர்மம், ஸதாசாரம் முதலிய நல்ல விஷயங்களை, பல உதாரணங்களோடு ஒரு கதை மூலமாகப் போதிப்பது தான் கதாகாலக்ஷேபத்தின் பொதுவான உத்தேசம். ஆனால் காலக்ஷேபத்தில் வேறு சில அம்சங்களுமுண்டு. ஸாதாரண தர்ம சாஸ்திரப் பிரவசனம் கதையாகாது. ஜனங்களுக்கு ஸத்போதமளிக்கும் உத்தேசமிருந்தாலும் அதில் கையாளப் படும் முறை கலையைச் சார்ந்ததே. நாடகமெனும் கலையின் உத்தேசமென்ன? ஜனங்களுக்கு நற்புத்தி புகட்டுவது தான். அது போலவே காலக்ஷேபத்தை ஒரு கலையாகக் கையாண்டாலும் அதன் நோக்கம் ஸத்போதம் தான். நாடகத்தில் நடிக்கப்படும் சம்பவங்களிலிருந்து எப்படி ஸத்குணத்தின் மேன்மையும் கெட்ட குணத்தினால் உண்டாகும் தீமைகளும் தெளிவாகின்றனவோ அதே மாதிரி கதாகாலக்ஷேபத்திலும் ஸதுபதேசம் கொடுக்கப் படுகிறது. இந்த உபதேசம் நன்றாக இதயத்தில் ஊன்றுவதற்கு ஸங்கீதம் முதலிய கலைகள் உபயோகப்படுத்தப் படுகின்றன. பார்க்கப் போனால் கதாகாலக்ஷேபத்தில் அநேகமாக நாடகத்தின் முறை தான் அனுஷ்டிக்கப்படுகிறது. நாடகத்தில் பல நாடக பாத்திரங்களை வெவ்வேறு நடிகர்கள் நடிக்கிறார்கள். காலக்ஷேபத்தில் ஒருவரே எல்லாவற்றையும் நடிக்க வேண்டியிருக்கிறது. கதையை "ஒரு ஆள் நாடகம்" எனக் கூறலாம். நாடகத்திலுள்ள செளகரியங்கள், உபகரணங்கள் ஒன்றும் கதைக்குக் கிடையாது. காட்சித் திரைகள், வேஷம் போடுதல், தீப ஏற்பாடுகள் முதலியவைகளைக் கொண்டு ஜனங்களுடைய இதயங்களில் ஒரு வித மயக்கத்தை ஏற்படுத்தி, அவர்களுடைய உள்ளங்களில் இஷ்டப்படி உணர்ச்சிகளை எழுப்ப நாடகத்தில் இடம் உண்டு. காலக்ஷேபத்தில் இத்தகைய ஸாதன செளகரியங்களொன்று மில்லாமல் அதே உத்தேசத்தை நிறைவேற்ற வேண்டியிருக்கிறது. ஆகையால் ஒருவர் காலக்ஷேபம் சரிவர நடத்த வேண்டுமானால் அதற்குத் தக்க திறம் வேண்டும். பல வித பாவங்களை நடிக்கத் தெரிய வேண்டும். வாக்சாதுர்யம் வேண்டும். ஜனங்களை ஆகர்ஷிக்கத் தக்க முகக் களை வேண்டும். பாஷா பாண்டித்தியம் வேண்டும். நல்ல பொது அறிவு வேண்டும். ஸங்கீதத்தில் கட்டாயம் நல்ல பரிச்சயம் வேண்டும். இந்த அம்சங்க

ளெல்லாம் சேர்ந்திருந்தால் தான் காலக்ஷேபம் உயர்தரமாக இருக்கும். அப்படி உயர்தர வகுப்பில் சேர்ந்தவர்கள் சிலரே. சில ஸங்கீத வித்துவான்கள் கதாகாலக்ஷேபம் பண்ணினார்கள் என்பது நாம் அறிந்த விஷயம் தான். உட்கார்ந்து பண்ணும் கச்சேரியை ஜனங்கள் அவ்வளவாக ரசிப்பதில்லையென்று தோன்றினால் நின்று கொண்டு கச்சேரி பண்ணுவது என்று ஏற்பட்டது போலும். அத்தகையவர்களில் பெரும்பாலாருக்கு நல்ல வித்தையோ, பாஷா பாண்டித்தியமோ அவ்வளவு இருந்ததாகச் சொல்ல முடியாது. கதை என்ற பெயரில் ஒரு ஸங்கீதக் கச்சேரி நடத்தினார்கள். அவ்வளவே. அது போலவே சில பண்டித சிகாமணிகள் ஸங்கீதம் தெரியாமலே கதை பண்ணினார்கள். இவர்களுள் ஒரு சிலர் தங்கள் அறிவினாலும் சாமர்த்தியத்தினாலும் கேட்போரைத் திருப்தியும் படுத்தினார்கள். ஆனால் இது புராண படனமாகும், கதையாகாது.

காலக்ஷேபம் ஒரு சிறந்த கலையாக விளங்குவதற்குச் சில கார்யங்களைக் கவனிக்க வேண்டியது அவசியம், அவைகளைக் குறித்துஆலோசிப்போம்.

(1) கதா காலக்ஷேபத்திற்கு எடுத்துக் கொள்ளும் கதை அநேகமாக, பௌராணிகமாகத் தானிருந்தாலும் அப்படித் தான் இருக்க வேண்டும் என்கிற கட்டாயம் இல்லை. நல்ல விஷயங்களை எடுத்துக் கூற இடம் கொடுக்கும் கதையாக இருக்க வேண்டும். விளையாட்டாக வீண் பொழுது போக்கும் உத்தேசமில்லை யல்லவா? (நான் பௌராணிகமில்லாத சில கதைகளைக் கொண்டு காலக்ஷேபம் நடத்தி யிருக்கிறேன். ஸபாபதி என்று உண்மையின் பெருமையை எடுத்துக் காட்டும் ஒரு கதை, சமீப காலத்தில் ஒரு நூறு வருஷங்களுக்கு முன்னால் செங்கற்பட்டு ஜில்லா கலெக்டராயிருந்த லியனல் பிரைஸ் (Lionel Price) என்ற ஆங்கிலேயனுக்கு ஸ்ரீராமச் சந்திரமூர்த்தி தரிசனம் கொடுத்த ஒரு ஸம்பவம், இதனைக் கதாகாலக்ஷேபமாகச் செய்திருக்கிறேன். ரசகரமாகவும் இருக்கின்றது.) எந்தக் கதையாயிருந்தாலும் அதைப் பல கட்டங்களாக நாடகத்தில் காட்சிகளைப் போல் பிரித்தெடுத்து, அதில் முக்கியமான கட்டத்திற்குப் பிராதான்யம் கொடுத்து, மற்றக் கட்டங்களெல்லாம் அந்தப் பிரதான கட்டத்தைச்சோபிக்கும் படியாக அதற்கு அனுகுணமாக அமைத்தல் வேண்டும். இப்படிச் செய்வதில் பல சௌகரியங்களுண்டு. நமது இஷ்டம்போல் சாவகாசத்தைக் கூட்டவும் குறைக்கவும் செய்யலாம். பிரதான பாகத்திற்குப் பாதக மேற்படாமல் மற்றக் கட்டங்களைச் சுருக்கலாம், நீட்டலாம். அதனால் கதைக்குக் குறை வராமல் கால அளவை நமது சௌகரியம்போல் மாற்றலாம். சாதாரணமாக ஒன்றரை மணி நேரத்தில் எந்தக் கதையையும் செய்து முடிக்கும்படி தயார் செய்யலாம். பிறகு சௌகரியம்போல் பல பாகங்களைச் சுருக்கவும் விஸ்தாரப் படுத்தவும் செய்யலாம். பல உபகதைகள். தயாராயிருந்தால் சமயோசிதம் போல் அவைகளை உபயோகப்படுத்தி, கதையை விஸ்தாரப்படுத்தலாம்.

கதையின் பல பாகங்களைக் கண்முன் நடக்கும் காட்சிகள் போலக்கூறுவது முக்கியம். வார்த்தைகளைக் கொண்டு ஜோடனை பண்ணி, கேட்போர்கள் மனதில் அந்தந்த நிகழ்ச்சிகளை நாடக மேடையில் போய்ப் பார்ப்பதாகத் தோன்றும்படி செய்வது ஒரு அத்யாவசியமான அம்சம்.

(2) ஏதோ இடத்தையோ, காட்சியையோ, மனிதனையோ வர்ணிக்கவேண்டிய இடத்தைத் தவிர மற்றெல்லாப் பாகங்களிலும் அந்தந்தப் பாத்திரங்கள் பேசுவது போலவே பேசுவது நலம். நாம் அவர்கள் பேசுவதை எடுத்துச் சொல்லுகிற மாதிரி பேசுவது அவ்வளவு சோபிக்காது. நாடகம் மாதிரியே நேராக அந்தந்தப் பாத்திரங்கள் பேசுவதுபோலப்பேசி நடிப்பது போல நடித்தால் நமது உத்தேசம் நன்கு நிறைவேறும் என்பதிற் சந்தேகமில்லை.

(3) கதைக்குப் பாட்டுகள் அமைப்பது நன்றாக ஆலோசித்துச் செய்ய வேண்டிய காரியம். நாடகத்திலுள்ள நிர்ப்பந்தம் அவ்வளவு இல்லாமற்போனாலும் கண்டபடி கண்டகட்டங்களில் எல்லாம் பாடுவது ருசிகரமாயிராது. மேலும் ஒவ்வொரு

பாட்டையும் (பாட்டானாலும், விருத்தமானாலும், சுலோகமானாலும் சரி) சாமர்த்தியமாகப் பொருத்தவேண்டும். தனியாகப் பாடுகிறோம் என்பதைக் கேட்போர் உணரா வண்ணம் சாதுர்யமாகப் பாடவேண்டும். எங்கே பிரவசனம் நின்றது எங்கே பாட்டுத்தொடங்கிற்று என்பது கூடத் தெரியாமல்பாட்டுகளைக் கதையில் இசைக்க வேண்டும். காலக்ஷேபம் பாட்டுக் கச்சேரி அல்ல என்பதை மறக்கவே கூடாது. பொருத்தமில்லாத பாட்டுகளைக் கொண்டு வந்து நுழைப்பது அனாவசியம். உபயோகிக்கப்படும் பாட்டுகளின் மெட்டு, ராகம், தாளம், ஸாஹித்தியம் எல்லாம் அந்தக் கட்டத்திற்கு இசைந்த வாறு இருக்கவேண்டும். அந்த ஸந்தர்ப்பத்தின் பாவம், ரசம் முதலியவைகளைச் சார்ந்து தான் பாட்டுகள் சேர்க்கப்படவேண்டும். பெரிய ராகாலாபனைகள் அனாவசியம், அடிக்கடி மிருதங்க ஆவர்த்தனம் வாசிப்பது அனுசிதம். கதையில் கீர்த்தனங்களுக்கு ஸ்வரம் பாடவேண்டிய அவசியமே கிடையாது. மேலும் உபயோகப் படுத்தும் கீர்த்தனங்களையும் சுலோகங்களையும் அடியோடு நுனிவரை பாடவேண்டிய அவசியம் அநேகமாக இருக்காது. ஸ்தோத்திரங்களாகப் பாடப்படும் சுலோகங்களையோ கீர்த்தனங்களையோ தவிர, மற்றப்பாட்டுகளில்சிலபாகம் தான் அந்தக் கட்டத்திற்கு வேண்டியதாயிருக்கும். சில கீர்த்தனைகளில் அனுபல்லவி மட்டும் தான் வேண்டி வரலாம். சில சுலோகங்களில் ஒன்றோ இரண்டோ பாதங்கள் தான் அந்த இடத்திற்கு அவசியப்படலாம். அப்படியானால் அந்தந்தப் பாகங்களை மட்டும் உபயோகப்படுத்தினால் போதுமானது.

மேலும் பாடப்படும் பாட்டுகளுக்கு எப்போதும் அர்த்தம் சொல்ல வேண்டுமென்பதில்லை. கேட்போரில் பெரும்பாலருக்குத் தெரியாத பாஷையாயிருந்தால் அர்த்தமெடுத்துக் கூற வேண்டி வரலாம். எல்லாவற்றிற்கும் வியாக்கியானம் செய்ய வேண்டி வராது. இந்தச் சந்தர்ப்பங்களில் வீணாக அர்த்தம் சொல்லி நேரத்தைப் போக்குவது கேட்போருடைய கவனத்தைக் குறைப்பதே ஆகும். தெரியாத பாஷையாயிருந்தாலும்கூடக் கதை செய்கிறவர் தமது சாமர்த்தியத்தால், முக பாவத்தால், அபிநயத்தால் கேட்போருக்கு அதன் பொருள் விளங்கும்படி செய்யலாம். ஒரு தெலுங்கு தேசத்துப் பக்தர் எங்கள் ஊருக்கு வந்திருந்தார். அவருக்குத் தெலுங்கு தான் தெரியும், தமிழ் தெரியாது. ஸங்கீதத்தில் சுமாரான பரிசயமுண்டு. அவர் ஒரு கதைத் தொடர்ச்சி நடத்தினார். தினம் ராத்திரி 9 மணிக்குத் தொடங்கி 5 மணி, 6 மணி நேரம் கதை சொல்லுவார். அவர் பேசுவது தெலுங்கு, பாடுவது தெலுங்கு, கேட்பவர்கள் பச்சைத்தமிழர்கள். ஆனால் ஆயிரக்கணக்கான ஜனங்கள், சிறுவர்கள், வயோதிகர்கள், ஆண்கள் பெண்கள் உள்பட கூடுவார்கள். மெய் மறந்து கதையைக் கேட்பார்கள். உள்ளம் கசிந்து கண்ணில் தாரை தாரையாகக் கண்ணீர் விட்டதை நான் கண்டிருக்கிறேன். அதெப்படி! அது தான் சரியான காலக்ஷேபம். அவருடைய முக பாவத்தாலும் ஜாடையாலும் தமது அபிப்பிராயங்களை அப்படியே கேட்போர் மனதில் அமைத்து விட்டார்.

மேற்கூறியதிலிருந்து அபிநயம் கதையில் எவ்வளவு முக்கியம் என்பது நன்கு விளங்கும். நான் முன்னமேயே கூறின மாதிரி கதை ஒரு தனியாள் நாடகம் தான். நடிப்புத் திறமை பாகவதர்களுக்கு முக்கிய அம்சம். சில சந்தர்ப்பங்களில் அதிகமாக வார்த்தைகளில்லாமல் பாகவதருடைய ஆங்கியங்களைக் கொண்டே விஷயத்தை விளக்கலாம். ஒரு லேசான தலையசைப்பினாலோ, கை உயர்த்துவதாலோ, இமையைச் சுளுக்குவதாலோ பிரமாதமான உணர்ச்சிகளை எழுப்பலாம். திருப்பழனம். பஞ்சாபகேச சாஸ்திரியாரின் கதையில் இந்த அம்சத்தை நான் அடிக்கடி அனுபவித்திருக்கிறேன்.

(5) காலக்ஷேபத்தில் பக்க மேளங்களுக்குள்ள ஸ்தானம் ஒரு விசேஷமானது. பிடில் வேண்டுமென்பது கிடையாது. ஸங்கீதமே ஒரு உபகரணமாயிருக்கும் போது பக்க மேளத்திற்கு என்ன ஸ்தானம் உண்டு? ஸங்கீதமே பிரதானமாயிருக்கும் கச்சேரிகளிலேயே சில சமயம் பக்க மேளத்தின் அட்ட

ரிஜிஸ்டர்டு

# கோத்ரெஜ் ந.1 ந.2

No.1 No.2

## டாய்லெட் (ஸ்நான) சோப்புகள்

பொறுக்கி எடுக்கப்பட்ட புஷ்டி யளிக்கும் தாவர எண்ணெய் களையும் இதர மூலங்களையும் சேர்த்து, புகழ் வாய்ந்த சிறந்த முறையில் பிரத்யேகமாய் திறம் படத் தயாரிக்கப்படுகின்றன. அவைகளின் பரிமளங்கமழும் சிறந்த நுரையே அழகை யூட்டி, கிருமிகளையும் கொல்லுகிறது.



### கவனியுங்கள்

இந்தச் சௌந்தரிய சோப்புக்கள் சாஸ்த்ரீய முறைப்படி பரிசுத்த மானவை என்றும் நன்மை பயக்கு பன என்றும் நிரூபிக்கப்பட்டிருக் கின்றன. சில சோப்புகள் தவறுத லாக, பரிசுத்தமானவைகளாகக் கருதப்படுகின்றன. ஏனெனில் உதாரணமாய்ப்பார்ப்பதற்கு, பளிங்குபோல் தென்படுவதினால், இது அவைகளின் பரிசுத்தத் திற்கோ அல்லது தரத்திற்கோ எவ்வித அறிகுறியுமாகாது.

நெ. 1 — இப் பெரிய கட்டி பணத்திற்கேற்ப உத்தமமான மதிப்பு வாய்ந்தது. உங்களுடைய ஸ்நானங்களில் நீங்கள் திருப்தியைக் காண்பீர்கள்.

## ஆராய்ந்தறிந்தோர் உபயோகிக்கும் சோப்புகள்




கோத்ரெஜின் இதர உயர்ரக தயாரிப்புகள்

ஷேவிங் ஸ்டிக் — ஷேவிங் 'ரவுண்டு'

கிளிசரின் — கூந்தல் தைலம்

**100 சதம் தூய்மைக்கும் மிருகக் கொழுப்பற்ற தென்பதற்கும் உத்தர வாதமானது.**

**கோத்ரெஜ் சோப்ஸ், லிட். மதராஸ்: 164, பிராட்வே; கொச்சின்: 6/36, கல்வத்தி**

ஹாசத்தைப் பொறுக்கச் சிரமமாயிருக்கிறதே, கதையில் கேட்பானேன்? ஆனால் நல்ல பக்கப் பாட்டும், நாசூக்காக வாசிக்கும் மிருதங்க வித்துவானும், நல்ல நாதமுள்ள தாளம், ஜாலர், சப்ளா முதலியவும் இருந்தால் மிகவும் நல்லது. கதையின் அழகை எடுத்துக் காட்டத் தகுந்த மட்டிலும் தான் அவைகளை உபயோகப் படுத்த வேண்டும். கதையில் ஆதி தாளத்தை உசிதாளமாகவோ ஏமுடி தாளமாகவோ போடுவது அழகாயிருக்கும். தாளம் ஏமுடியாகவும் சப்ளா உசியாகவும் இடுவது ருசிகரமான வழக்கம். ஸாகி, பதம் முதலிய வடக்கு இந்திய ஸங்கீர்த்தன மெட்டுகள். இந்த விதம் தாளமிடுவதற்கேற்றவைகள். நமது கிருதிகளுக்குக்கூடச் சில சமயங்களில் உசி தாளம் போடுவது காதுக்கு இனிமையாயிருக்கும்.

(6) காலக்ஷேபம் ஒரு சிறந்த கலையாக விளங்கவேண்டுமானால் அடிக்கடி பெரிய நீண்ட பிரசங்கம் வராமலிருப்பது நலம். ஸதாசாரம் தர்மம் இவைகளைப்போதிக்க வேண்டியது அவசியம். அதுதான் காலக்ஷேபத்தின் உத்தேசமும். ஆனால் சமயோசிதம்போல் சமத்காரமாய் அந்த உபதேசங்களைக் கொடுக்க வேண்டும். எடுத்ததற்கெல்லாம் ஒரு தர்ம சாஸ்திரப் பிரகடனம் செய்ய ஆரம்பித்தால் கேட்போர்களுக்கு அலுப்புத் தட்டும். கதையிலேயே பாத்திரங்கள் மூலமாக அந்த விஷயங்களைப் போதிப்பது நலம். சில சமயங்களில் அத்தகைய விஷயங்களைத் தனியாக எடுத்துக் கூருமல் கதையின் போக்கிலிருந்தே அவைகளைக் கேட்போர் கிரஹிக்கும்படி செய்வது தான் உத்தமமானது. கதையைக் கலை யென்று கொள்ளாமல் ஒரு படனமாக்குவதாயிருந்தால் இப்படிப்பட்ட பிரசங்கங்களுக்கு இடமிருக்கலாம். கலையாகக் கையாளுவதானால் இந்தப் பாகத்தைக் குறைப்பது நல்லது. மொத்தத்தில் கதையை ஒரு பெரிய பிரசங்கமாக்காமல் கலையாகப் பிரயோகிப்பதால் கேட்போர்களுக்கு உற்சாகமும் திருப்தியும் அறிவும் உள்ளுணர்ச்சியும் அதன் மூலம் ஆத்ம ஸம்ஸ்காரமும் ஏற்படும்.

என்னுடைய அனுபவத்தில் காலக்ஷேபம் ருசிகரமாயிருந்து அதன் உத்தேசத்தை நிறைவேற்ற வேண்டுமானால் அதை நான் மேற்கூறிய விஷயங்களைக் கவனித்துக் கையாளுவது நல்ல முறை என்று கண்டிருக்கிறேன். நல்ல பாகவதர்கள் என்று ஜனங்கள் போற்றுகிறவர்களிடம் இப்படிப்பட்ட முறை பழக்கத்திலிருப்பதைப் பார்க்கலாம். பக்திக்கு ஸங்கீதம் மிகவும் அனுஸரணையானது. ஜனங்களுடைய இதயத்தைத் தாக்கி நல்ல புத்தியைப் புகட்டுவதற்கு ஸங்கீதம் நிகரற்ற ஸாதனம். ஸங்கீதத்துடன் வாக்சாதுர்யத்தையும், பாஷா பாண்டித்தியத்தையும் சேர்த்து, கதா காலக்ஷேபத்தை ஒரு கலையாகக் கையாளுவது ஒரு உயர்தரமான லோகோபகாரமான வழி என்பதிற் சந்தேகத்திற்கிடமில்லை.

தென்னிந்திய பத்திரிகையாளர் சம்மேளனத்தின் கட்டிட நிதிக்கு

'கோகிலகான இசைவாணி'

ஸ்ரீமதி M. S. சுப்புலக்ஷ்மி

அவர்களின் உதவிக் கச்சேரி

"ராஜாஜி ஹாலில்"

6—11—49 மாலை 6. மணிக்கு நடைபெறும்.

எல்லா ஸீட்களும் ரிஸர்வ் செய்யலாம்

டிக்கட்: ரூ. 100/-, 50/-, 25/-, 15/-, & 5/-.

'ஹிந்து' காரியாலயம், சென்னை—2

வி. கே. நரசிம்ஹன்
காரியதரிசி

# மனக் குரங்கு

ஹரிணி

"ஸ்வாமீஜீ! தாங்கள்தான் காப்பாற்ற வேண்டும். என் குழந்தை சுசீலா அனாதையாக இருக்கிறாள். அவளுடைய வாழ்க்கைப்படகை, சாந்திமயமான வழியில் செலுத்துவதற்கு உங்களாலேதான் முடியும். இந்த நீச உலகத்தில்—கபட உலகத்தில்—இந்தப் பேதைக்குச் சாந்தியளிக்கக் கூடிய இடம் தங்கள் ஆச்ரமம் தான்" என்று வேண்டினான் ரவிகுமாரன்.

"என்ன இது? ரவி! நீயா இப்படிப் பேசுகிறாய்? உன்னுடைய ஒரே குழந்தை, சீரும் சிறப்புமாக வளர்ந்த குழந்தை சுசீலாவை எப்படிப் பிரிந்திருப்பாய்? இது உண்மைதானா? இதென்ன விளையாட்டப்பா?" என்றார் ஸ்வாமிஜீ.

"இல்லை. விளையாட்டில்லை. மகாத்மாஜீ! இது உண்மை. தங்களுக்குத்தெரியாத விஷயமா? தாங்கள் என்னுடைய பால்யகால நண்பரல்லவா? தாங்கள்தான் கடினமான தவத்திலிறங்கி, அதிசயமான மாறுதலை அடைந்து விட்டீர்கள். புண்ணியமூர்த்தியே! என் குணம் உங்களுக்குத்தெரியாதா? இருபது வருஷங்களுக்கு முன் எந்த நிலையில் இருந்தேனோ அதே நிலையில்தான் நான் இன்னமும் இருக்கிறேன்", என்றுநிறுத்திப் பெருமூச்சு விட்டான் ரவி.

ஸ்வாமிஜி அவனைத் தட்டிக்கொடுத்து, "ரவி பதறாதே. சாந்தமாயிரு. ஏன் இப்படி மனதை அலட்டிக் கொள்ளுகிறாய்?" என்றார்.

"இல்லை, ஸ்வாமீ! நான் நீசன். மகாபாபி. என்னுடைய துர்க்குணங்களுக்கு முடிவே கிடையாது. என் குழந்தை தேவி; அவள் லக்ஷ்மிதேவி; பரிசுத்தத்தின் உருவம். குருதேவா! அவளிடம் தயவு காட்டுங்கள். அவள் விதவை. அனாதை. தாயற்ற குழந்தை. எனக்குப் பயமாயிருக்கிறது. என் கெட்ட குணங்களின் காற்று, அவளுடைய பரிசுத்த எண்ணங்களின் மேல் பட்டுவிடக்கூடாது. அவள் உலகத்தின் மாயவலையில் விழக்கூடாது. அவள் இது வரை உலகத்தை அறியவில்லை. அவள் ஒரு கவி. கற்பனை உலகம்தான் அவளுக்கு இன்பம் தரும் இடம். ஆனால்—ஆனால் அவளுடைய வளரும் அந்த யௌவனம் அவளை என்றைக்காவது ஒரு நாள் இந்தப் பாப உலகத்தில் இழுத்து விட்டு விடும்.

'தேவா! அவளுடைய பரிசுத்தத்தைக் காப்பது உங்கள் பொறுப்பு. அவள் விதவை. நானோ அவளுடைய பாபியான பிதா. அவளுடைய ஆத்மாவின் உயர்வைக் காண விரும்புகிறேன். என் குழந்தை தேவதை. அவளைத் தேவியாகவே காண விரும்புகிறேன்" என்று சொல்லிக் கொண்டே போனான் ரவிகுமாரன்.

மகாத்மா சுசீலாவைத் தம்முடைய ஆச்ரமத்திலேயே தங்க அனுமதியளித்துவிட்டார்.

* * *

பாரிஸ்டர் தீக்ஷித் குமார் மனைவியின் அருகிலேயே உட்கார்ந்துவிட்டார். அவருடைய மனைவி லக்ஷ்மி இனி பிழைப்பது கடினம் என்று 'டாக்டர்'கள் கூறிவிட்டனர். அவருடைய மனம் நிலைகொள்ளாமல் தவித்தது. கடைசியாக லக்ஷ்மி கூறிய அந்த வாக்யங்கள் அவர் மனதில் அழியாதபடி பதிந்துவிட்டன. "நீங்கள் மறு விவாகம் செய்து கொள்ள வேண்டாம், குழந்தை சுசீலாவைக் கவனித்துக்கொள்ளுங்கள். மறு விவாகம் ஒரு......" வார்த்தை முடியவில்லை. அவளுக்கு, நினைவு போய்விட்டது. கண்களில் கண்ணீர் பொங்கி வழிந்தது. வாய் திறக்கவில்லை. உதடுகள் துடித்தன.

காலம் ஓடிக்கொண்டிருந்தது. மனைவியின் மரணத்திற்குப் பிறகு பாரிஸ்டர் மறு விவாகம் செய்து கொள்வதில்லை என்று உறுதி செய்துகொண்டார். ஆனால் சிறு வயது. புது நாகரிகப் பழக்கங்கள். உல்லாச குணமுள்ள நண்பர்கள். இதனிடையே அவருடைய மனதில் அடிக்கடி தேவாசுர யுத்தம் எழும்பிவிடும். எத்தனையோ முறை அசுர எண்ணங்கள் அவரை ஜயிக்க முயலும். ஆனால் அவர் அச்சமயம் லக்ஷ்மியின் அந்த வாக்யங்களை நினைத்துக்கொண்டு மனதைத் திடப்படுத்த முயலுவார்.

கடைசியாக, தீக்ஷித் குமார் பெண்களுடன் பழகுவதையே குறைத்துக்கொள்ள ஆரம்பித்தார். வீட்டில் உள்ள ஸ்திரீ வேலைக்காரர்களைக்கூட விலக்கிவிட்டார். குழந்தையின் தாதியைக்கூட வீட்டைவிட்டு வெகு

தூரத்தில் குடிவைத்துவிட்டார். குழந்தை காலையிலும், மாலையிலும் அங்கேயேபோய் வரவேண்டுமென ஏற்பாடு செய்தார். அவள் வீட்டிற்கு வருவதுகூட அவருக்குச் சம்மத மில்லை. இம்மாதிரியான கடினமான நியமங்களை ஏற்படுத்திக்கொண்டு தம்மைக் காத்துக் கொள்ள முயன்முர்.

இவ்வளவு கடினமான ஏற்பாடுகளைச் செய்து கொண்ட பிறகும்கூட அவருடைய மனதைக் கட்டுப்படுத்த அவரால் முடிய வில்லை. ஒவ்வொரு நிமிஷமும் மன உணர்ச்சிகளுடன் போராட வேண்டியதாகவே நேரிட்டது. பகல் முழுவதும் வேலையில் ஈடுபட்டுக் கிடப்பது. இரவில் கீதாபாராயணம் செய்வது, என்றெல்லாம் நியதிகள் ஏற்படுத்திக் கொண்டாலும்கூட, பழைய உல்லாச மயமான, இன்ப மயமான தினங்களின் நிழல் அவருடைய மனதை, திட மனதைக் கலக்கி விடும்.

"பகவானே! கெட்ட எண்ணங்களை ஜயிக்க முயலுகிறேன். ஆனல் அந்த நீச எண்ணங்கள் என்னை ஜயித்துவிடும் போலிருக்கிறதே? என் மனம் உயர்வடைய ஒருவழி காட்ட மாட்டாயா? நான் சீக்கிரமே வீழ்ச்சியடைந்து விடுவேன்போலிருக்கிறதே!" என்று கலங்கினர் தீக்ஷித்.

* * *

யோகி ராஜர் ஒரு பெரிய மகான். உலக போகங்களில் வெறுப்புற்று அநேக வருஷங்கள் கடினமான சாதனைகளில் ஈடுபட்டு மனதை ஜயித்தவர். பல வருஷங்கள் காடுகளிலும், ஹிமாலய பர்வதத்தின் தாழ்வரைகளிலும், சுற்றித் திரிந்து சரீரத்தையும், மனதையும் கடினமாக்கிக் கொண்டிருந்தார். அந்த மகான் இப்பொழுது மனித சமூகத்திற்கு உதவி செய்ய வேண்டுமென்ற எண்ணத்துடன் பல ஊர்களுக்கு விஜயம் செய்தார்.

பாரிஸ்டர் தீக்ஷித் குமார் ஒரு நாள் அவரைச் சந்திக்க நேரிட்டது. அவரைக் கண்டதும் பாரிஸ்டரின் மனது கனிந்து, அவரிடம் சரணமடைந்து விட்டது. இப்பொழுது தீக்ஷித் குமார், அவருடைய சிஷ்யர், சந்நியாசி.

யோகி ராஜர் ஒரு ஆச்ரமம் ஏற்படுத்த விரும்பினர். சாந்தி நிறைந்த மனதுடன் ஆத்மதரிசனம் செய்ய விரும்பும் மக்களுக்குத் தங்க வசதியளிக்க நினைத்தார். ஏழை மக்களுக்கு இலவசமாக வைத்திய உதவி செய்ய வேண்டுமென்றும் எண்ணினர். பாரிஸ்டர் தம்முடைய சொத்தில் பாதிப் பாகத்தை அளித்து அவருடைய எண்ணத்தைப் பூர்த்தி செய்தார்.

யோகி ராஜருடைய அனுக்ரஹத்தினுலும் உபதேசங்களினுலும் தீக்ஷித் குமார் சாந்தி நிறைந்த மனதுடன் வாழ்க்கை நடத்தினர். கடினமான தவத்தினுலும், சாதனையினுலும் அவர் ஒரு மகானுக விளங்கினர். யோகி ராஜருடைய சிஷ்யர்களில் பாரிஸ்டர் தீக்ஷித் அவர்கள்தான் முதன்மையாக விளங்கினர். அவருடைய கீர்த்தி எங்கும் பரவியது. ஜனங்கள் அவரிடம் மிக்க பக்தி விசுவாசத்துடன் இருந்தனர்.

யோகி ராஜர் காலமாகி விட்டார். அவருக்குப் பிறகு ஆச்ரமத்திற்குத் தலைவர், குருதேவர் தீக்ஷித் அவர்கள்தான். அன்றுமுதல் அவர் 'மகாத்மா' என்னும் பட்டத்தை அடைந்தார்.

* * *

விடியற்காலம். குளிர்ந்த காற்று மெல்லென வீசிக்கொண்டிருந்தது. சுசீலா ஆச்ரம வாசலில் அசையாமல் உட்கார்ந்து கொண்டிருந்தாள். அவள் மனம் சிந்தனையில் சுழன்றுகொண்டிருந்தது. "அப்பா ஏன் என்னை இங்கே கொண்டு வந்து விட்டார். அவரை விட்டு நான் எப்படியிருப்பேன். என்னையும் சன்யாசினியாக்க விரும்புகிருரா? ஏன்? இங்கேயிருந்தால் எனக்கு ஸ்ரீ கிருஷ்ண பகவானின் தரிசனம் கிடைக்கும் என்று கூறினரே? உண்மையாக இருக்குமா? நான் கற்பனையில், கவிதையில் காணும் அந்த அழகனை நேரில் காணப் பாக்யம் செய்திருக்கிறேனு?.........ஆனல் அப்பா-அப்பாவை யார் கவனித்துக் கொள்ளுவார்கள்? விடியற்காலம் வெகு சீக்கிரமாகவே அப்பாவுக்கு 'டீ' குடிக்கும் வழக்கமாயிற்றே, யார் போட்டுக் கொடுப்பார்கள்? வேலைக்காரர்கள் சோம்பேறிகளாயிற்றே. சீக்கிரம் கொடுக்கமாட்டார்களே. ஐயோ! பாவம். அப்பா! நான் இல்லாமல் எப்படித் தனியாக இருப்பார்? அவருடன் சீட்டு விளையாட யாருமில்லையே. நானில்லாவிட்டால், பேச்சுக்கொடுக்க யாருமில்லாவிட்டால், அவர் அதிகமாகக் குடித்து விடுவாரே! ஐயோ அவருக்கு ரத்த வாந்தி வந்துவிட்டால்?...... யார் அவரைக் கவனிப்பார்கள்? என் மைனு.........என் தோட்டம் எல்லாம் என்னவாகும்? இல்லை, நான் இங்கே தங்க மாட்டேன்." என்றெல்லாம் அவள் மனம் எண்ணமிட்டது. கண்களில் கண்ணீர் பெருக்கெடுத்து ஓடியது.

அப்பொழுதுதான் கங்கையில் நீராடி விட்டு அங்கே வந்த சேகர்—மகாத்மாவின்

சிஷ்யன் சேகர், சுசீலாவைக் கண்டதும் பிரமித்து நின்றான். "இவள் யார்? ஏன் அழவேண்டும்? பாவம். யாரோ கஷ்டப் பட்டவள்போலிருக்கிறது." என்று நினைத்து அருகில் சென்று, "யாரம்மா நீ? ஏன் அழுகிறாய்? நான் ஏதாவது உனக்கு உதவி செய்யலாமா?" என்று அன்புடன் வினவினான்.

சுசீலா கபடமற்ற குணமுள்ளவள். அவள் குழந்தையைப் போல விம்மிக் கொண்டே "நீங்கள் யார்? குருதேவருடைய குமாரரா?" என்றாள்.

"இல்லை. நான் அவருடைய சிஷ்யன். என்னிடமே அவருக்குப் பிள்ளையைப் போன்ற அன்பு உண்டு."

"அப்படியானால் நீங்கள் எனக்கு ஒரு உதவி செய்ய முடியுமா?"

"அதற்கென்னம்மா, பரோபகாரம் தானே எங்கள் லட்சியம். என்னால் முடியுமானால் உதவி செய்யத் தயங்கமாட்டேன்."

சுசீலா சற்றுநேரம் பேசவில்லை. பிறகு தன் மனதிலுள்ள எண்ணங்களை அவனிடம் கூறி, "நீங்கள் எப்படியாவது என்னை எங்கள் வீட்டிற்கு அனுப்ப முயலவேண்டும். என் என் தகப்பனாருக்கும், குரு தேவருக்கும் சொல்லி என்னை அனுப்பிவிடுகிறீர்களா? இந்த உதவி செய்ய முடியுமா?" என்று குழந்தையைப்போலக் கேட்டாள்.

"அதற்கென்ன! அப்படியே செய்யலாம். உன் தந்தை உனக்கு நன்மையைத்தான் செய்வார். நீ ஏன் கவலைப்படுகிறாய்? உன் பிதாவின் கட்டளைப்படி சிலகாலம் இங்கே தங்கியிரு. பிறகு இங்கே இருக்கப் பிடிக்கா



விட்டால் போய்விடலாம். இங்கே உனக்கு ஒருவிதமான கஷ்டமும் நேரிடாது. உன் இஷ்டப்படி படிக்கலாம், எழுதலாம், தோட்டத்தில் விளையாடலாம். இங்கே நீ சித்ரகலை, சங்கீதக்கலை இவைகளையும் கற்கலாம். இங்கேயுள்ள புத்தகாலயத்தில் வேண்டிய புத்தகங்கள் படிக்கலாம். சிறிது காலம் தங்கியிரு. பிறகு நீ போகவேண்டுமானால் குருதேவரிடம் நான் சொல்லி உதவி செய்கிறேன்.'' என்று வெகு இனிமையாகக் கூறினான்.

சேகர் சொன்னபடி சுசீலா அங்கே சில தினங்கள் தங்க ஒப்புக்கொண்டாள். அவனுடைய இனிய சுபாவம் அவளை வசீகரித்தது. கலங்கிய அவளுடைய மனது சிறிது சாந்தியடைந்தது.

* * *

சுசீலாவும், சேகரனும் இப்பொழுது இணைபிரியாத தோழர்கள். ஸ்திரீகளும், புருஷர்களும் சேர்ந்து பழகுவதைப்பற்றி ஒருவிதமானக் கட்டுப்பாடும் அந்த ஆச்ரமத்தில் கிடையாது. எல்லாரும் சம்பூர்ண சுதந்திரத்துடன், நிர்மலமான உள்ளத்துடன் பழகி வந்தனர். இரு பாலாரும் ஆச்ரம காரியங்களில் ஈடுபட்டு உழைத்தனர். பூஜை உபாசனை முதலியவைகள் முடிந்த பிறகு, அவரவர்கள் இஷ்டப்படி படிக்கவோ, பாராயணம் செய்யவோ, ஆத்ம விசாரம் செய்யவோ, கவிதை எழுதவோ கங்கைக் கரையில் கூடுவார்கள். அவர்கள் குருதேவரின் கட்டளைப்படியே நடந்து வந்தனர். ஆனாலும் சுசீலாவும், சேகரனும் நெருங்கிப் பழகுவதை மட்டும் குருதேவர் விரும்பவில்லை. ஒரு யுவதியும், வாலிப வயதுடைய ஒருவனும் இப்படி நெருங்கிப் பழகுவது அவருக்குப் பிடிக்கவில்லை. அவர்களுடைய இணைபிரியாத நிலை, அன்பு நிறைந்த பேச்சு, பரஸ்பர அனுராகம் இவைகள் அவருடைய மனதில் உறுத்தின. ''சேகர் இன்னமும் பக்குவமடையவில்லை. சுசீலாவோ இன்னும் குழந்தை. ஆச்ரமத்திற்கு வந்து சில தினங்கள்தான் ஆகின்றன. இந்த நிலையில் அவர்களை நெருங்கிப் பழகவிடக் கூடாது.'' என்றெல்லாம் தீர்மானித்தார் குரு தேவர். அவர் இந்த விஷயத்தை ஒருவரிடமும் வெளியிடவில்லை. ஆனால் அவர்களிருவரையும் கண் நோக்கமாகக் கவனித்துக் கொண்டிருந்தார்.

ஒருநாள் பூஜை முடிந்து குரு தேவரை வணங்கச் சென்றான் சேகர். அப்பொழுது குரு தேவர், ''சேகரா! உனக்குப் பகவான் சீக்கிரமாகவே அருள் செய்வார். அதற்குச் சமயம் நெருங்கி விட்டது. ஆகவே நீ சில தினங்கள் ஏகாந்தமாகத் தியானம் செய்ய வேண்டும். இன்னும் ஒரு வாரத்தில் நீ ஹிமாலய பர்வதத்திலுள்ள குகைக்குச் செல்லவேண்டும்.'' என்றார்.

சேகரன் தலைவணங்கி அவருடைய கட்டளையை அங்கீகரித்தான். பிறகு சுசீலாவினுடைய வாசஸ்தலம் மாற்றப்பட்டது. அவள் இப்பொழுது குரு தேவருடைய அறைக்கு அருகிலுள்ள ஒரு அறையில் தங்கியிருந்தாள். இதைக் கண்ட சுசீலாவின் மனதில் சிறிதளவு சந்தேகம் தோன்றியது. ''ஏன்? குருதேவர் என்னை நம்பவில்லையா?'' என்று ஒருவினாடி அவள் மனம் கலங்கியது. உடனே ''சீ! அப்படியிருக்காது!'' என்று தன் மனதைச் சமாதானப் படுத்திக்கொண்டாள்.

அன்றிரவு. பூர்ணசந்திரன் பூரண கலையுடன் பவனி வந்துகொண்டிருந்தான். எங்கும் ஒரே வெள்ளிய பால்போன்ற பரிசுத்தமான வெண்ணிலவில் உட்கார்ந்து வார்த்தையாடிக்கொண்டிருந்தார்கள் சுசீலாவும், சேகரனும்.

''சுசீலா! குருதேவருடைய கட்டளைப்படி நான் ஒரு மாதம் ஏகாந்த வாசத்திற்காக மலைக்குப் போகிறேன்.'' என்றான் சேகர்.

''என்ன! சேகர்! உண்மையாகவா?'' என்று கேட்கும்போதே அவள் மனம் வேதனையில் ஆழ்ந்தது. கண்ணீர் ததும்ப அவனை ஏறிட்டுப் பார்த்தாள்.

இதைக்கண்ட சேகரனுடைய மனமும் சற்றே கலங்கிவிட்டது. ''சுசீ! ஏன் பயப்படுகிறாய்? மனதைச் சாந்த நிலையில் வைத்துக் கொள்ளவேண்டும். குரு தேவருடைய உபதேசங்கள் உனக்கு நிம்மதியைத் தரலாம். பயப்படாதே.''

''சேகர்! நீ சென்ற பிறகு என்னால் இங்கே தனியாக இருக்கமுடியாது. என்னை என் தந்தையிடம் கொண்டு விட்டுவிடு.''

''இல்லை. நீ போகக்கூடாது. இவ்வளவு நாட்கள் செய்த சாதனைகள் வீணாகிவிடும். வேண்டாம். அவசரப்படாதே. குருதேவர் உனக்கு இன்னும் அதிகமாக உபதேசங்கள் தரக்கூடும். அதனால் உனக்கு மனச் சாந்தி ஏற்படும்.''

''இல்லை, முடியாது. குருதேவரிடம் எனக்கு நம்பிக்கை யில்லை; பயமாக விருக்கிறது. என்னைத் தனியாக.........''

''என்ன சொல்லுகிறாய் சுசீலா! அபசாரம். குருதேவரை நம்பு. அவரிடம் பக்தி செலுத்து. அது உன் கடமை.'' என்று அதட்டினான். அவன் குரலில் தோன்றிய கடினம் அவளை நடுங்கச் செய்தது.

அவள் நடுங்கிய வண்ணம். "சேகர்! என்னை மன்னித்துக் கொள். என்னால் முடியாது. குருதேவர் அடிக்கடி ஒளிந்து ஒளிந்து நம்மிருவரையும் கவனிக்கிறார். அதை நீ கவனித்தாயா?" என்றாள்.

"ஆம். அதனாலென்ன? நம்மைக் கவனிக்க வேண்டியது அவருடைய கடமைதானே?"

"இல்லை, சேகர்! இரவில்கூடச் சிலநாள் யாரோ ஜன்னலின் வழியாக என் அறையில் எட்டிப் பார்ப்பது போலிருக்கிறது. நீ எனக்குக் கொடுத்த அந்தச் சித்திரப் படம்—உன்னுடைய படம்—காணாமல் போய்விட்டது. அதைக்கூடக் குருதேவர்தான் எடுத்திருக்க வேண்டும். என்னால் முடியாது. நான் இங்கேயிருக்க முடியாது." என்று கூறியதும் சுசீலா துக்கம் தாங்காமல் விம்மி விம்மி அழத் தொடங்கினாள். சிறிது நேரம் இருவரும் பேசவில்லை.

பிறகு சுசீலா, "சேகர்! உன்னைக் கண்டால் எனக்குப் பயம் ஏற்படவில்லையே; ஏன்?" என்று குழந்தைபோலக் கேட்டாள். அவளுடைய குழந்தை மனப்பான்மையைக் கண்டு சேகர் நகைத்தான்.

"அதிருக்கட்டும். சற்றே ராமாயணம் படிக்கலாம் வா." என்று சொல்லிக்கொண்டே எழுந்தான்.

* * *

சுசீலா ராமாயணத்தை இனிமையான குரலில் பாடிக் கொண்டிருந்தாள். சேகர் சாய்ந்தபடியே கேட்டுக்கொண்டிருந்தான். பூந்தோட்டத்தின் அழகான வர்ணனை. இருவரும் துளசி ராமாயணத்தின் கவிநயத்தில் ஆழ்ந்து தம்மை மறந்திருந்தனர்.

குருதேவர்? குரு தம் அறையின் ஜன்னலில் உட்கார்ந்து அவர்களையே கவனித்துக் கொண்டிருந்தார். அவர் விழித்துக்கொண்டுதானிருந்தார். ஆனால் அவர் மனம் கனவு கண்டு கொண்டிருந்தது.—"இந்தப் பெண் எவ்வளவு அழகாயிருக்கிறாள்? அழகின் தேவதைதானோ?" சீ! இதென்ன எண்ணம்? இவ்வளவு வருஷங்களுக்குப் பிறகு?.........'ஹரி ஓம்' என்று கூறியபடி ஆகாயத்தைப் பார்த்துக் கைகூப்பினார்.

பிறகு மறுபடியும் சுசீலாவைக் கவனித்தார். "இவள் சீதா தேவிதான். அல்லது லக்ஷ்மியோ? கிருஷ்ணருடைய ராதையோ?" என்றெல்லாம் சிந்தித்தார். குருதேவருடைய மனம் பக்தியில் ஆழ்ந்தது. சீதா, ராதா, லக்ஷ்மி என்று தியானம் செய்வதில் ஈடுபட்டார்.

எவ்வளவு நேரம் தியானத்தில் ஆழ்ந்திருந்தாரோ தெரியாது. விடியற்காலம் சேவலின் குரல் எழுந்தது. சேகர் திடுக்கிட்டு,


பாத்ருடுவின்

# பால சஞ்சீவினி (Regd.)

(இது ஒன்றுதான் அசல் விஜயநகர மருந்து)

குழந்தைகளின் ஈரல்குலைக்கட்டி வியாதிகளுக்குச் சிறந்த மருந்து

சொற்ப காலத்திலேயே நிச்சய குணமளிக்கும்

58 வருஷகாலமாகப் பல்லாயிரக் கணக்கான குழந்தைகளை இக்கொடிய குலைக்கட்டி வியாதியினின்று காப்பாற்றியிருப்பதனால் பல பிரக்யாதி பெற்ற டாக்டர்கள் இச்சஞ்சீவினியை உபயோகித்துக் கொண்டிருக்கிறார்கள்.

எல்லா மருந்து ஷாப்புகளிலும் கிடைக்கும்.

போலி மருந்துகளைக்கண்டு ஏமாறாதீர்கள்

டாக்டர் பிள்ளா பாபய்ய பாத்ருடு & பிரதர்,

11, தெற்கு மாடவீதி, மயிலாப்பூர், மதராஸ்.

கும்பகோணம் கிளை :—
7, சாரங்கபாணி கோவில்
கீழவீதி.

திருச்சி கிளை :—
15, புகழியபிள்ளைதெரு,
தெப்பக்குளம் போஸ்ட்.

"சுசீலா! எழுந்திரு, இன்று ஆச்ரமத்தைச்சுத்தம் செய்யவேண்டிய முறை நம்முடையதல்லவா? நான் தண்ணீர் கொண்டுவருகிறேன். நீ முன்னால் சென்று குருதேவருடைய அறையைப் பெருக்கி வை." என்று கூறி எழுந்து சென்றான்.

குருஜீ ஜன்னலின் சட்டத்தில் சாய்ந்தபடியே தூங்கிக்கொண்டிருந்தார். அவர் அதிகாலையிலேயே எழுந்து உலாவச் சென்றுவிடுவது வழக்கம். சுசீலா குருதேவர் விழித்துக்கொள்ளட்டும் என்று அங்கேயே காத்திருந்தாள். குருஜீ மனோரஞ்சகமான கனவு கண்டுகொண்டிருந்தார்.

'ப்ருந்தாவனம். எங்கும் பால் போன்ற வெண்ணிலா. ஸ்ரீ கிருஷ்ணனும் ராதையும் உல்லாச மண்டபத்தில் வீற்றிருக்கின்றனர். பகவான் முரளீதரன் கூறுகிறார்: "ப்ரியே! ராதிகா! பூவுலகத்தில் நீ சுசீலாவாகவும், நான் மகாத்மாவாகவும் இருந்தோம். இப்பொழுது மறுபடியும் மண்ணுலகத்திற்குச் சென்று ஜீவராசிகளை உத்தாரணம் செய்ய வேண்டும். நான் போய் வரட்டுமா?"

"ஸ்வாமீ! என்னைத் தனியாக விட்டுச் செல்லுவது நியாயமா? என்னால் தங்கள் பிரிவைத் தாங்க முடியாது."

"இல்லை. ப்ரியே! நாமிருவரும் சேர்ந்தே போகலாம். மக்களை உத்தாரணம் செய்வது நம்மிருவர் கடமை."

குருஜீ விழித்துக்கொண்டார். எதிரே தலை குனிந்து பணிவுடன் நிற்கும் சுசீலாவைக் கண்டதும் மனம் நிலைகொள்ளாமல் தாவியது. வெறிபிடித்தவனைப் போலத் தாவி அவள் கையைப் பிடித்துக்கொண்டு, "ப்ரியே! ராதிகா!" என்றார்.

சுசீலா கையை உதறிகொண்டு, கீச்சென்று கூச்சலிட்ட வண்ணம் "சேகர்! என்னைக் காப்பாற்று!" என்று ஓடினாள்.

சேகர் தண்ணீர்த் தொட்டியுடன் படியருகில் வந்துகொண்டிருந்தான். திடீரென்று இந்தக் காட்சியைக் கண்டதும் பிரமித்து நின்று விட்டான். அதே சமயம் சுசீலாவும் மின்னலைப்போல் தாவி ஓடிவந்து அவன் காலடியில் விழுந்து அலறினாள். தண்ணீர்த் தொட்டியின் முனை நெற்றியில் தாக்கியதால் ரத்தம் பெருகி ஓடியது.

மூர்ச்சையடைந்து விழுந்த சுசீலாவைத் தூக்கிக்கொண்டு சேகர் ஆச்ரமத்திற்குவெளியே போய்விட்டான். ஆச்ரமத்தில் எங்கும் ஒரே கலவரம். என்ன நடந்தது என்பதை அறிய ஆச்ரமவாசிகள் மகாத்மாவைக்காண விரும்பினர். ஆனால் குருஜீ கதவைத்திறக்கவில்லை. குரு தேவர் சமாதியிலிருப்பதாக எண்ணிக்கொண்டு அவர்கள் திரும்பி விட்டனர்.

சேகர் ஒன்றும் கூறாமலேயே தன் கூட்டாளிகளிடம் விடை பெற்றுக்கொண்டான்.

* * *

தந்தையின் மடியில் தலைவைத்துக்கொண்டு விம்மி விம்மி அழுதாள் சுசீலா. தந்தையும் வேதனையினால் வெதும்பினார். "அம்மா! இப்பொழுதாவது நீ வந்தாயே. அதுவே சந்தோஷம். இனிமேல் நான் பிழைக்கமாட்டேன். உன்னைக் காணப்போகிறேனா என்று தவித்தேன். நல்ல வேளை. வந்துவிட்டாய்." என்றார் ரவிகுமார பாபு. அவர் முகம் விகார மடைந்து காணப்பட்டது. பேசிக்கொண்டிருக்கும்போதே அவர் வாந்தி எடுத்தார். ரத்தம் வந்தது.

சேகர் அவருக்குத் தகுந்த சிசுருஷைகள் செய்தான். "என்னை அனுப்பிவிட்டு இப்படி உடம்பைக் கெடுத்துக் கொண்டீர்களே அப்பா!" என்று கதறினாள் சுசீலா.

* * *

வேலைக்காரன் கொடுத்த கடிதத்தைப் பிரித்துப் படித்துக்கொண்டிருந்தான் சேகர்:

"ப்ரிய சேகர்! சுசீலா என் கண்களைத் திறந்துவிட்டாள். நான் தீராத மயக்கத்திலிருந்தேன். மனம் ஒரு குரங்கு. அதையடக்குவது மிகக் கடினம். இதுவரை நான் எதைக் கனவு என்று நினைத்தேனோ அது கனவல்ல. உண்மை அதுதான். எதை உண்மை என்று நினைத்தேனோ அதுதான் கனவு, மாயை என்பது. எனக்கு என்னுடைய வழி எது என்று இப்பொழுதுதான் தெரியவருகிறது. நான் புறப்பட்டுச் செல்லுகிறேன். ஆச்ரம நிர்வாகத்தை உன்னிடம் ஒப்படைத்திருக்கிறேன். சுசீலாவும், நீயும் சேர்ந்துதான் இந்த ஆச்ரமபாரத்தை வகிக்கவேண்டும், சுசீலா உனக்கு ஏற்றவள். அவளை நீ விவாகம் செய்துகொள். உனக்கு மங்களமுண்டாகும். மனிதகுலத்தின் அன்புதான் உன்னைத் திவ்ய பதவிக்கு, பக்தி மார்க்கத்திற்கு அழைத்துச் செல்லும். பெண்மையின் இனிய பிரேமைதான் ஆத்மசாதனைக்கு வழிகாட்டியாக இருக்கும். திவ்ய லோகத்தில் உனக்கு அழியாத அன்பு கிடைக்கும். மன உணர்ச்சிகளை அடக்கி யாளுவதினால் மட்டும் மனச் சாந்தி ஏற்பட்டு விடாது. இயற்கையைக் கண்டிக்காமல், மனதை ஆத்மபரிசோதனையில் ஈடுபடுத்தி, அத்யாத்மவழியில் செல்லுவதுதான் சாந்தியடைய உண்மையான வழி. இதுதான் ரகசிய முறை. இதுதான் சாந்தி ரகசியம். இதுதான் உன் குருவின் கடைசி உபதேசம். மங்களமுண்டாகட்டும்.

இப்படிக்கு,
குருதேவர்

பொங்கி வரும் கண்ணீரைத் துடைத்துக் கொண்டான் சேகர். அவன் கைகளைக் கூப்பி, குருதேவரை மானசீகமாக வணங்கினான்.




## டால்டாவில் தயாரித்த ஜிலேபிகளை குழந்தைகள் மிகவும் விரும்புகிறார்கள்!

2 கப் மைதாமாவில் தண்ணீர் ஊற்றி
பிசைந்து நெகிழச்செய்து கொள்ள
வும். பிசைந்தமாவை மூடி இரண்டு
தினங்கள் வைத்திருக்கவும். ¼ பவு
ண்டு சர்க்கரையில் நீர்க்க பாகுதயா
ரித்து அதில் ½ தேக்கரண்டி குங்குமப்
பூவும் சில சொட்டுகள் பன்னீரும்
சேர்த்துக்கொள்ளவும். பிசைந்த மா
வில் 1 தேக்கரண்டி தயிர்விட்டு நன்
ருக கலந்துகொள்ளவும். கலவை
யை ¼ அங்குலம் குறுக்களவுள்ள
துவாரம் வழியாக ஊற்றவும். தகரப்
போணியில் அல்லது உலர்ந்த கொட்
டாங்கைச்சியில் துவாரம் செய்து
இதற்காக உபயோகிக்கலாம். டால்
டாவை குழிவுகுறைந்த வாணலியில்
நன்ருக சூடாக்கி மாவை வட்ட வட்
டமாக பிழிந்து வறுத்தெடுக்கவும்.
பிறகு சிறு சூடான பாகில் போடவும்.
சிலமணி நேரம் ஊறின பிறகு ஜிலே
பிகளை அப்புறப்படுத்தி நல்லகாகிதத்
தில் பரப்பி உலரவைக்கவும்.

போஷாக்குகளை இழக்காமல்
காய்கறிகளை சமைப்பது
எப்படி?

இலவசமான ஆலோசனை
களுக்கு இன்றே—அல்லது
என்று வேண்டுமானாலும்—
எழுதுங்கள்!

## தி டால்டா அட்வைஸரி ஸர்வீஸ்

தபால் பெட்டி நெ. 353,
பம்பாய் 1

HVM. 95-23 TM




# வெண்ணெய் திரளும் சமயம்...?

விசுவம்

பெண்ணைப் பார்த்தவுடனேயே பிடித்து விட்டது ராகவனுக்கு. பெண்ணின் தகப்பனார் தம் பெண் மிகவும் நன்றாக நாட்டியமாடுவாள் என்று பெருமையடித்துக் கொண்டார். ராகவன் அசுவாரஸ்யமாக "அதையுந்தான் பார்த்து விடலாமே" என்றான்.

நாட்டியத்தின் பெயரால் கையையும் காலையும் உதறிக் கொண்டு குதிப்பாள் என்றுதான் ராகவன் எதிர்பார்த்தான். ஆனால் அவள் நளினமும் நடனமும் அவளுக்கு இயற்கையாகவே நாட்டியத்திற்கு வேண்டிய அம்சங்கள் அமைந்திருப்பதை எடுத்து விளக்கின. ராகவன் அயர்ந்தே விட்டான்.

ராகவனுக்கும் சரசுவதிக்கும் திருமணம் நடந்தது. சரசுவதியைப் பிரபல நாட்டிய நட்சத்திரமாக்க வேண்டுமென்று ராகவன் தீர்மானித்தான். குடித்தனம்வைத்த கையோடு பிரபல நாட்டிய ஆசிரியர் கோபால் ராம் என்பவரை நியமித்து, சரசுவதிக்கு நாட்டியப் பயிற்சி செய்வித்தான்.

சரசுவதி கண்ணும் கருத்துமாகப் பயின்றாள். கோபால் ராமும் அக்கறையாகச் சொல்லி வைத்தார். ஒரே வருஷத்தில் சரசுவதி தேர்ச்சிபெற்று விட்டாள்.

நல்ல முகூர்த்த நாளில் கலைஞர்களுக்கும் பிரமுகர்களுக்கும் முன்னால் சரசுவதியின் நாட்டியம் அரங்கேறிற்று. பார்த்தோரனைவரும் பிரமித்து விட்டனர். பத்திரிகைகள் பத்தி பத்தியாக அவள் புகழ் பாடின. மனைவியின் கலைத்திறனையும் புகழையும் கண்டு புளகாங்கிதமடைந்தான் ராகவன்.

கச்சேரிகளுக்கும் அழைப்பு வந்தது. ராகவன் இசைந்தான். தொடர்ந்து சில கச்சேரிகள் மூலம் சரசு



வதியின் பெயர் பரவிற்று. ராகவனிடம் பணமும் குவியத் தொடங்கியது.

அடிக்கடி கச்சேரிகளுக்குவாய்ப்புக் கிடைத்ததால் ராகவன் தன் குமஸ்தா உத்தியோகத்தை ராஜிநாமாச் செய்துவிட்டான் புகழும் பணமும் வேறு வகையில் கிடைக்கும் போது உத்தியோகம் எதற்கு?

நாட்டிய உலகிலேயே ஒரு புரட்சி உதயமாயிற்று. தனியொருவர் ஆடும் நடனத்தைவிடக் கோஷ்டி நடனத்திற்கு ஆதரவு அதிகம் கிடைத்தது. சரசுவதியும்



கோபால்ராமும் சேர்ந்து ஆடினால் மிகவும் நன்றாயிருக்குமென்று ஒரு ரசிகர் கட்டுரையொன்றின் மூலம் சிபார்சு செய்தார். அதைப் படித்த சபைக் காரியதரிசிகள் நச்சரித்தனர்.

அடுத்த மாதமே கோபால் ராம்—சரசுவதி தேவியின் நாட்டிய கோஷ்டி திக் விஜயம் செய்யத் தொடங்கியது. நடன ஜோடியின் உருவப் படங்கள் பத்திரிகைகளில் பிரகாசித்தன. புகழ் மாலைகள் வந்து குவிந்தன.

ராகவனுக்குப் பெருமிதமாகத்தானிருந்தது. கச்சேரிக்கு மேல் கச்சேரி. திட்டம் போடுவது அவனே. விளம்பரம் செய்வது அவனே. இரண்டொரு நிகழ்ச்சிகள் கூடக் கற்பனை செய்து கொடுத்தான்.

சரசுவதி நாட்டியம் தொடங்கிய புதிதில் "ஸ்ரீமதி சரசுவதி ராகவன்" நாட்டியம் என்று தான் விளம்பரம் வந்தது. இப்போது "ஸ்ரீ கோபால் ராம்—சரசுவதி தேவி" நாட்டியம் என்று விளம்பரம் பறந்தது. வர வர, பொது மக்கள் ராகவன் பெயரை மறந்து விட்டார்கள்.

ஒரு முந்திரிக் கொட்டை பத்திரிகாசிரியர் "கோபால் ராம்—சரசுவதி தம்பதிகளுக்குப் பாராட்டு" என்ற தலைப்பில் கட்டுரை எழுதி விட்டார்.

வர வர ராகவனுக்குக் கோபால் ராமின் மேல் ஒரு வித வெறுப்புண்டாயிற்று. நாட்டியத்தில் சுவாரஸ்யமிழந்தான். கிராக்கி வந்தால் குதூகலத்துடன் ஏற்றுக் கொண்டு வந்தவன் தட்டிக் கழிக்க வாரம்பித்தான். ஜனங்கள் விடுவார்களா? மீண்டும் அதே கிராக்கி கோபால் ராம் மூலம் வரும். தட்ட முடியாமல் விழிப்பான் ராகவன். நாட்டியம் நடக்கும். வேண்டா வெறுப்பாகக் கச்சேரிக்குப் போவான் ராகவன். முன்பெல்லாம் ரசித்துக் குதித்தவன் மூலையில் உட்கார்ந்து கொண்டு முகத்தைத் தூக்கிக் கொண்டிருப்பான்.

வந்தவர் போனவர் எல்லோரும் சரசுவதியையும் கோபால் ராமையுமே பாராட்டுவார்கள். ராகவனைப் பற்றி ஒருவரும் விசாரிக்கமாட்டார்கள். தவறி யாராவது பழைய நண்பர் விசாரித்தாலும் ராகவன் அவர்களைக் காணக் கூசி ஒளிந்து நழுவுவான்.

அன்று கோகலே ஹாலில் சச்சேரி. மறுநாள் கோயமுத்தூரில், அடுத்தாற் போல் பெங்களூரில் இரண்டு கச்சேரிகள் ஏற்பாடாகியிருந்தன. எல்லாம் கோபால் ஏற்பாடு செய்தவை.

மாலை, கச்சேரிக்குப் புறப்பட வேண்டிய நேரம். ராகவன் வீட்டிலில்லை. காலை சென்றவன் இன்னும் வீடு திரும்பவில்லை. சரசுவதி காத்துப் பார்த்தாள். கச்சேரி நேரம் வந்து விட்டது. இனி காக்க முடியாது. சென்று விட்டாள்.

வேண்டுமென்றே மறைந்திருந்த ராகவன் நடன மண்டபத்திற்குச் சென்றான். வாயிலில் நின்றிருந்த டிக்கட் பரிசோதகன் ராகவனைத் தடுத்து விட்டான். ராகவன் என்ன சொல்வது என்று தெரியாமல் மென்று விழுங்கினான். திரும்பி விடலாமா என்று தோன்றிற்று. கடைசியில் ஒரு ரோசம்.

"நான் யார் தெரியுமா?" என்றான்.

"யாரானாலென்ன டிக்கட்?" என்றான் டிக்கட் பரிசோதிப்பவன்.

ராகவனுக்குக் கோபம் பொங்கிற்று. அவமானம் தாங்காமல் தன்னை யவமதித்தவனை ஓங்கியறைந்து விட்டான். கூட்டம் கூடி விட்டது. சபைக் காரியதரிசி வந்தார். ராகவனைச் சமாதானப்படுத்தி உள்ளேயழைத்துச் சென்றார்.

பொங்கும் சீற்றத்துடன் மேடையின்மேல் ஒரு மூலையில் உட்கார்ந்திருந்தான் ராகவன். அவனை ஒருவரும் கவனித்ததாகத் தோன்றவில்லை.

"பஸ்மாசுர மோகினி நடனம்" கண்கொள்ளாக் காட்சியாக அமைந்தது. மோகினி தன் கோமள உருவத்தாலும், மோகன நடனத்தாலும் பஸ்மாசுரனை வசியம் செய்துகொண்டிருக்கிறாள். பின்னணி வாத்திய கோஷ்டியார் தங்கள் ஐக்ய சக்தி பூராவையும் சேர்த்து மோகன கானம் பொழிந்து கொண்டுள்ளனர். ரசிகர்களிடையே அமைதியான மௌனம்.

மோகினி ஆடி ஒரு முத்தாய்ப்பு வைத்து இடுப்பை நெளித்து, தலையைச் சற்றுச் சாய்த்து, முத்துப்பல் வரிசை தெரிய, புன்னகை அரும்பி, பஸ்மாசுரனிடம் நிற்கிறாள். பஸ்மாசுரன் கண்ணில் காதல் சுடர் விடுகிறது. சித்திரம்போல் அவளை நெருங்குகிறான். பின்னணி அமைதியான இசை பொழிகிறது. பஸ்மாசுரன் மோகினியைத் தொட்டுப் பிடித்து விடப்போகிறான்.

அமைதியான இசை விறுவிறுப்புக் கொள்கிறது. மோகனம் அடாணாவாக மாறி நாலாங் காலத்தில் ஸ்வரஜதி உதிர்கிறது. ஒரு துள்ளில் மேடையைக் கடந்து எதிர் மூலையையடைகிறாள் மோகினி. பஸ்மாசுரனும் ஆடி அணுகுகிறான். மோகினி மயக்கி மயக்கி மறைகிறாள். எல்லாம் துரிதம்.

பஸ்மாசுரன் தொடர்ந்து ஓடினான். மோகினி எதிர் மூலையில் நின்று சிரித்தாள். பஸ்மாசுரன் தாவினான். தொடப் போகிறான். தொட்டிருப்பான். ஆனால்.........?

ஒரு வெட்டில் "திதிதை திதிதை" யெனத் தேய்ந்தோடினாள் மோகினி. பஸ்மாசுரன் களைத்துப் பெருமூச்சு விட்டான்.

ரசிகர்கள் கை தட்டினார்கள்.

ராகவன் இதயத்தில் ஈட்டி கொண்டு தைத்தது போலிருந்தது. தான் கண்டது கலைக் காட்சி என்பதை அசூயை வெறியில் மறந்துவிட்டான். உடல் வியர்த்தது. தலை சுழன்றது.

"எப்படி?" என்ற குரல். பழைய நண்பர் ஒருவர் கிட்ட வந்து நின்று கேட்டார்.

ராகவன் பதில் சொல்லவில்லை நண்பர் விடுகிறாரா? "பிரமாதமில்லே?" என்றார்.

முணுமுணுத்துக் கொண்டே ராகவன் வேறு பக்கம் சென்றான்.

திரை விழுந்தது.

அடுத்த நிகழ்ச்சிக்காக உடை மாற்றிக் கொள்ள உடுப்பறைக்குள் சென்று கொண்டிருந்தாள் சரசுவதி. ராகவன் எதிரே வந்ததைக் கவனிக்கவில்லை. என்ன அலட்சியம்? என்று ராகவன் மனம் சொல்லிற்று. அவளை விழுங்கி விடுபவன் போல் பின் தொடர்ந்தான். யாரோ குறுக்கிட்டு என்னவோ விசாரித்தார். ராகவன் வெடுக்கென்று வெட்டிக் கொண்டு ஓடினான்.

உடுப்பறைக்குள் அவன் கண்டது என்ன?

சரசுவதியின் தலையில் இடது கை வைத்து அவள் கன்னத்தை வலது கையால் தடவிக் கொண்டிருந்தான் கோபால் ராம்—கலைந்திருந்த மேக்கப்பைச் சரி செய்து கொண்டிருந்தான்.

அரண்டவனுக்கு இருண்டதெல்லாம் பேய்.

ஒரே குத்தில் இருவரையும் கொன்றுவிட வேண்டும் போல் தோன்றிற்று ராகவனுக்கு. கண் தலை தெரியாமல் நெருங்கி வந்தான்.

அப்போதே ராகவனைப் பார்த்த கோபால் ராம் சிரித்து வணக்கம் செலுத்தினார்.

சீறிய சர்ப்பம் தலை கவிழ்ந்தது. ராகவன் கோபம் போன இடம் தெரியவில்லை. கோபால் ராமின் முகத்தில் தோன்றிய நேர்மை ராகவனைக் கோழையாக்கி விட்டது. வேறு வழியின்றிக் கோபால்ராமைப் பாராட்டிவிட்டுச் சென்றான் ராகவன்.

மேலும் அங்கே தங்க மனமில்லாமல் வீட்டிற்குச் சென்றான். நேரே மேல் மாடிக்குச் சென்று வெளி நிலவில் மல்லாந்து படுத்துக் கொண்டான். எண்ணக் குவியல் அவன் சாந்தியைக் கெடுத்தது.

'ஜல் ஜல்" என்ற சலங்கை நாதம், "விறு விறு" என்ற வாத்திய இசை, "கல கல" வென்ற சிரிப்பொலி, "பட பட" வென்ற கை தட்டு எல்லாம் சேர்ந்து அவன் காதை நிரப்பின.

கண்களை மூடிக் கொண்டான். ஜால வர்ணங்களைப் பரப்பும் மின்சார வெளிச்சத்தில் ரதிமன்மத நடனம். ரதிமன்மதனை யணுகி அணைகிறாள். மன்மதன் ரதியின் நெற்றியைத் தடவி, தலையை வருடி அவள் முகத்தில்............

ராகவனால் சகிக்க முடியவில்லை. அவனே கற்பனை செய்து தொகுத்துக் கொடுத்த நிகழ்ச்சி தான் ரதிமன்மத நடனம். ஒத்திகையில் தானே இந்தக் காட்சியை இப்படியமைத்தான். எனினும் மனக்கண்முன் காணக்கூடச் சகிக்கவில்லை அவன்.

கண்ணைத் திறந்தான். ஒரு கரு மேகம் சந்திரனைக் கௌவியது. ஒரு இருள் சூழ்ந்தது.

ராகவன் மனத்திலும் இருள் சூழ்ந்தது. சந்தேக மேகம் அவன் சாந்தியைக் கவ்வியது. தன் காதலியை—தன் மனைவியை—ஒரு கூத்தாடி கவர்ந்து விட்டானே!

படுக்கப் பிடிக்கவில்லை. எழுந்து உலாவினான். வானத்தில் மேகம்படர்ந்து சிறு தூறல் விழுந்தது. ஜில்லென்ற குளிர் காற்று வீசியும் ராகவனுக்கு வியர்த்தது.

எண்ணற்ற எண்ணங்களுக்குப் பலியானான் ராகவன். எவ்வளவு நேரம் உலாவினானோ?

வாசலில் மோட்டார் சத்தம். மின்சார ஊதல் அலறிற்று, ராகவன் உணர்வு பெற்று முன் புறம் போய் வீதியில் எட்டிப் பார்த்தான். கோபால் ராம் காரிலிருந்து இறங்கி, சரசுவதியைக் கைகொடுத்து இறக்கி விட்டார்.

ராகவன் பல்லைக் கடித்தான்.

கோபால் ராம் மீண்டும் வண்டியில் ஏறிக்கொண்டு "விடியற்காலம் வருகிறேன் கோயமுத்தூர் போகத்தயாராயிரு. உன் புருஷனையும் சமாதானப்படுத்திவை" என்றார். சரசுவதி தலையையசைத்தாள். கோபால்ராம் கையை நீட்டினார். சரசுவதி பிடித்துக் குலுக்கினாள். கார் சென்று மறைந்தது.

19804

"மோகன ராமா" என்ற பாட்டை முணுகிக் கொண்டே சரசுவதி கேட்டைத் தாண்டினாள்.

சரசுவதி உள்ளே வருவதற்கும் ராகவன் மாடிப்படியிறங்குவதற்கும் சரியாயிருந்தது.

"ஏன் முன்னாலேயே வந்துட்டே‌ள்?"

"ஏனோ?"

"ஏன் உடம்பு சரியாயில்லையா?"

"ஏன்? ரொம்ப அக்கறையோ உனக்கு?"

சரசுவதி திகைத்துப்போனாள். கொஞ்ச நாட்களாகவே ராகவனிடத்தில் ஏற்பட்ட மாறுதலை உணர்ந்து அவள் கவலைப்பட்டு வந்தாள். தவிர இன்று............

"சரசு..."

"ஏன்?"

"இன்றோடு உன் நாட்டியம் சரி. முற்றுப் புள்ளி."

"ஏன்?"

"ஏனோ? என்னிஷ்டம்"

"நாளைக்குக் கோயமுத்தூரில்......"

"நடக்காது. நான் சாயங்காலமே நிறுத்தச் சொல்லி, தந்தியடித்து விட்டேன்."

"ஏன்?"

"ஏனோ?.........என்னிஷ்டம்"

"உங்க இஷ்டமா? கச்சேரி ஏற்பாடுசெய்தது அவரல்லவா?"

"அவர்!......அவர்! யாரடி அவர்?"

"வாத்தியார்"

"ஹ.........ஹ.........ஹ.......வாத்தியார்! அவர்?......ஓங்க உறவெல்லாம் இதோடே சரி."

"ஏன்?"

"ஏனோ......என்னிஷ்டம்.

ராகவன் என்னென்னவோ பேசிக் கொண்டே போனான். பெண்மையையே பரிகசிப்பது போல் ஒலித்தன அவன் வார்த்தைகள். எந்தப் பெண் தான் பொறுப்பாள்?

சரசுவதி தலை குனிந்தாள். ராகவன் வெற்றி கண்டு விட்டதாக எண்ணி மேலும் அநுசிதமான வார்த்தைகளை யடுக்கிக் கொண்டே போனான். பெண்ணின் பொறுமைக்கும் எல்லையில்லையா?

சரசுவதி வெகுண்டு நிமிர்ந்தாள். கண்ணீர் கக்கிக் கொண்டிருந்த அவள் கண்கள் கோபத் தனல் கக்கின. நாக்கு, 'பட பட' வென்று பொரிந்து கொட்டிற்று.

ராகவன் மிருகமானான். சரசுவதியின் கன்னத்தில் ஒரு அறை. தலை சுழன்றது. கண் இருண்டது.

சரசுவதியின் உட் குரல் "கணவன்" என்ற சொல்லைத் திருப்பித் திருப்பி உச்சரித்தது. ஏன் கணவனுடன் வாதாட வேண்டும்? ஏன் அவருக்கு இஷ்டமில்லாததைச் செய்ய வேண்டும்? அவள் மனத்தில் கடமைக்கும் கலைக்குமிடையே முரண்—போராட்டம்.

நீண்ட யோசனைக்குப்பின் பெரு மூச்சு ஒன்று விட்டாள் சரசுவதி.

"இப்போ என்ன செய்யணும்?"

"நாட்டியத்திற்கும் கோபால் ராமின் சினேகிதத்துக்கும் முழுக்குப் போடணும். விடியற் கால வண்டிக்கு ஊருக்குப் புறப்படணும்."

"சரி"

திடீரென்று அவள் இவ்வாறு பணிந்து விட்டது ராகவனுக்குச் சற்றுப் பயத்தையே கொடுத்தது. சரசுவதி பிரயாணத்துக்குத் தயாரானாள்.

விடியற் காலம் கோயமுத்தூர் செல்லக் காருடன் வந்த கோபால்ராம், வீடு பூட்டியிருக்கக் கண்டு திகைத்துப் போனார்.

சரசுவதியைப் பிறந்த வீட்டில் கொண்டு விட்டு அடுத்த ராத்திரி திரும்பினான் ராகவன். கேட்டவர்களுக்கெல்லாம் சரசுவதி உடம்பு சரியில்லாமையினால் அவள் தகப்பனார் அழைத்துக் கொண்டு சென்று விட்டார் என்று சொல்லி வந்தான். கோபால் ராம் கேட்ட போது மட்டும் சற்றே பிரமித்துப் பதில் சொன்னான்.

எப்படியோ ஒரு வாரம் கழிந்தது. சரசுவதியின் உடல் நிலையைப் பற்றி விசாரிக்க வந்தார் கோபால் ராம். ராகவன் சீறி விழுந்தான்.

இரவு ராகவனுக்குப் படுக்கை பிடிக்கவில்லை. சலங்கைச் சப்தமும், வாத்திய இசையும் எதிரொலி செய்தன. கண்களை மூடினால் சரசுவதியின் உருவம் மனக் கண் முன் நாட்டியமாடியது; அவனால் பொறுக்க முடியவில்லை.

சடக்கென்று எழுந்தான். புத்தக அலமாரியண்டை சென்றான். சரசுவதியின் முகம் அங்கே சிரித்துக் கொண்டு இருந்தது. எட்டிய புத்தகத்தை எடுத்தான், பிரித்தான், படித்தான்.

"மாதர் தம்மை யடிமை செய்யும் மடமையைக் கொளுத்துவோம்........"


இன்னுமொரு சினிமா நட்சத்திரம்
டி. எ. ஜயலக்ஷ்மி
லக்ஸ் டாய்லட்
சோப்பின்
புதிய
பரிமளத்தால்
வசியப்படுத்
தப்பட்டார்
LUX
LUX TOILET SOAP
சினிமா
நட்சத்திரங்களின்
அழகு
தரும் சோப்
“நான் லக்ஸ் டாய்லட் சோப்பின்
ரம்மியமான புதிய பரிமளத்தை
மிகவும் விரும்புகிறேன்” என்று கூறுகிறார்
LTS. 207-23 TM

# Coffee

**Ours for Quality**




# GANESH & Co.

## (MADRAS), LTD.

*Retail Branches*

285, China Bazaar :: 71, Pondy Bazaar T. Nagar,

MADRAS.

---

| | | |
|---|---|---|
| அதிகாரம் பெற்ற மூலதனம் | ரூ | 1,00,00,000 |
| வழங்கி வாக்களிக்கப்பட்ட மூலதனம் | ,, | 72,00,000 |
| செலுத்தப்பட்ட மூலதனம் | ,, | 53,00,000 |
| ரிஸர்வ் நிதி | ,, | 62,00,000 |

எல்லாவித பாங்கு அலுவல்களும்
நடத்தப்படுகின்றன.

N. கோபால அய்யர்
செக்ரெடரி



N.P.B.

# ஸ்ரீ இந்தியன் பாங்க் லி.

என்ற பாட்டு எடுத்ததும் கண்ணில் பட்டது. அவன் நெஞ்சில் நெருப்பிட்டது போல் சுறுக்கென்றது. வீசி எறிந்தான் புத்தகத்தை.

மீண்டும் படுத்தான். மறுபடி பழைய நினைவுகள். கோபால் ராமின் களங்கமற்ற சிரிப்பு அவன் நெஞ்சைப் பிளந்தது.

மன்னிக்க முடியாத குற்றம் செய்து விட்டவன் போல் அவன் மனதை ஒரு பாரம் அழுத்திற்று. அவன் செய்தது துரோகம் என்று அவன் மனச்சாட்சி அறிவுறுத்தியது. பொது மக்களின் குரல் பலவாறு அவன் செவியில் ஒலித்தது—

"ராகவன் முட்டாள். ரசனையென்பதே சிறிதும் இல்லாத மூடன். மனைவியின் புகழைக் கண்டு சகிக்காத குரூரன். துரோகி. அவள் கலையையும் அழகையும் அடுப்பங்கரையில் அடைத்துப் போடவா கல்யாணம் செய்து கொண்டான்?"

இன்னும் பல மாதிரியான அவதூறுகள்.

ராகவன் மனச்சாட்சியின் குத்தலுக்குப் பலியானான். தான் செய்தது தவறு என்பதை உணர வாரம்பித்தான். இரவு பகல் எந்நேரமும் இதே போல் எண்ணங்கள்.

சரசுவதியை அழைத்து வந்து மறுபடி நாட்டியம் நடத்த அனுமதிக்கலாமா என்று தோன்றிற்று. தான் கணவன் என்ற மமதை அடுத்த கணம் அந்த யோசனையை மாற்றிற்று.

என்ன தான் செய்வது? இரவு பகல் இடைவிடாது வேதனையோடு வெளித்தொல்லைகளையும் அனுபவிக்க அவனால் முடியவில்லை. சரசுவதியின் உடல் நிலையைப்பற்றி விசாரிப்பவர்களுக்குப் பதில் சொல்லமுடியவில்லை. கடிதங்களும் தந்திகளும் வேறு தினமும்.

ராகவன் கொஞ்ச நாட்களாக ஒருவர் கண்ணிலும் படவில்லை. எங்கே சென்றான்? எப்போது சென்றான்? ஏன் சென்றான்? என்பன ஒன்றும் ஒருவருக்கும் தெரியா.

ஒரு வருஷம் கடந்தது.

ஒரு கிராமத்தில் பெருமாள் கோவிலில் ஒரு பெண் தெய்வம் தொழுகிறாள். எளிய உடை; நகையற்ற உடல். முகத்திலும் நகையில்லை. கண்ணும் கருத்தும் கடவுளையே நாடுகின்றன.

பல கண்கள் அவளையே பார்த்துக்கொண்டிருக்கின்றன. பல மனங்கள் அவளைப் பற்றிப் பலவாறு எண்ணுகின்றன.

"வாழாவெட்டி! புருஷனுடன் வாழக்கொடுத்து வைக்கவில்லை."

"பின்னென்ன! கண்ட புருஷாளோடே சரசமாடிண்டு சதிராடினா?...புருஷன் மானி; தள்ளி வச்சுட்டான்."

இப்படிப் பல விதம் பெண்கள் வம்பு.

"ஆஹா.........இவ்வளவு நல்ல டான்ஸர் எனக்குக் கிடைச்சா அப்படியே ஆகாசத்துலே பறப்பேன்.........குடுத்து வக்கணுமே ......அனுபவிக்கத் தெரியாத கபோதி இவள் ஹஸ்பண்ட்"

"நான் என்ன செய்வேன் தெரியுமா? அப்படியே கொழிச்சுக் கொட்டிடுவேன் பணத்தை"

'ஏன் இப்போது தான் என்ன? அவளைச் சேர்த்துக் கொள்ளேன்......நான் அவள் தகப்பனரிடம் விஷயத்தைச் சொல்லட்டுமா......"

"சீசீ!"

இப்படிப் பலவிதம் வாலிபர் வம்பு.

இவையொன்றையும் அவள் கவனிப்பதில்லை. துறந்த வாழ்க்கை நடத்தினாள். புருஷன் இருப்பிடம் தெரியவில்லை. நல்ல புத்தகங்களைப் படிப்பது, இறைவனை வழிபடுவது இரண்டுமே அவள் செய்தவை.

முற்போக்கு மனப்பான்மையுடைய சிலர் தங்கள் பெண்களுக்கு நாட்டியம் சொல்லி வைக்க வேண்டுமென்று அவளை நச்சரித்தனர். அவள் மறுத்துவிட்டாள். தன் அநுபவம் உலகில் ஒருவருக்குமே வேண்டாம் என்பது அவள் எண்ணம்.

சரசுவதி நாட்டியத்தையே மறந்து விட்டாள்.

ஒரு காலை.

சரசுவதி மாடியில் உட்கார்ந்து கீதைபடித்துக் கொண்டிருந்தாள். வாசலில் வண்டி வந்து நின்றது.

"சரசுவதி! உன் புருஷன் வந்திருக்கார்" என்றது அவள் தகப்பனாரின் குரல். அவளால் நம்பமுடியவில்லை. மறுபடியும் அதே குரல் அதையே சொல்லிற்று. அடுத்தது ராகவன் குரலே! "எங்கே சரசுவதி?"

சரசுவதியின் உடலின் மின்சாரம் பாய்ந்தது. ஒரே தாவில் மாடிப் படிக்கட்டையடைந்தாள். அடுத்தகணம்? அந்தோ! தடாலென்று கீழே விழுந்தாள்! கைகொடுத்துத் தூக்கினான் ராகவன்.

ஒரு வருஷம் வடக்கே மறைந்திருந்த ராகவன் தீவிரமான பயிற்சியின் பலனாய்த் தேர்ந்த நாட்டியக்காரனானான். இனிமேல் சரசுவதியோடு தான் சேர்ந்து ஆடலாம், திடீரென்று அவளைச் சந்தோஷப்படுத்திவிட வேண்டும் என்று சொல்லாமல் கொள்ளாமல் வந்து நின்றான், சரசுவதியை அழைத்துக்கொண்டுபோக. அவன் ஆசையில் மண் விழுந்தது. வெண்ணெய் திரளும் சமயம் தாழி உடைந்து விட்டது.

மாடியிலிருந்து விழுந்ததனால் சரசுவதி நிரந்தர நொண்டியானாள்.

# பெண் ஜன்மம்

சேஷ்டை

“மேலே போய் டிரெஸ் செய்து கொள்ளுங்கள். அதற்குள் கலந்து கொண்டு வந்து விடுகிறேன்!” என்றேன் நான். நான் சொல்லியது கணவரிடம். குறிப்பிட்டது காப்பியை.

“நீ எதற்கு வர வேண்டும்? நானே......” என்றார் அவர் கன்னம் குழியச் சிரித்தவாறே.

“வேண்டாம், வேண்டாம். அவ்வளவு கரிசனம். நீங்கள் போங்கள்” என்றேன். அவர் போய் விட்டார்.

அவருக்கு வெளியே போக அவசரம்.

கொதித்த வெந்நீரை எடுத்தேன். பில்டரில் பொடியைப் போட்டு அதன் மேல் ஊற்றினேன். அடுப்பிலே பாலை ஏற்றி வைத்து விட்டு அடுப்பருகிலேயே உட்கார்ந்து கொண்டேன். பில்டரிலிருந்து டிகாக்ஷன் ‘சொட், சொட்’ என்று விழுந்து கொண்டிருந்தது.

அந்தச் சப்தத்திடையே “அடியே, நவநீத கிருஷ்ணனை நேற்று இங்கே பார்த்தேன்!” என்ற அவர் குரல் மீண்டும் ஒலித்தது. அவர் அதை நேற்று மாலை சொன்னார்.

கண்கள் உள் நோக்கின.

* * *

அந்தக் காலம் கடந்து இன்று பன்னிரண்டு வருஷங்களாய்விட்டன. எனக்கு அப்பொழுது வயது ஒன்பது. அவனுக்கு வயது பன்னிரண்டு. அவன் தன்னுடைய ஒன்று விட்ட மாமா வீட்டிலிருந்து கொண்டு படிக்க வந்திருந்தான். நான் என் தாய் தந்தையுடன் சேர்ந்து வசித்தேன். ஒரே வீட்டில் நாங்கள் முன் கட்டில் இருந்தோம். அவன் மாமா வீட்டினர் பின் கட்டில் இருந்தனர்.

இன்று நினைத்தாலும் அவன் அன்பு கனிந்த உள்ளத்தை மறக்க மறுக்கிறது மனது. நான் அன்று பள்ளிக்கூடத்திலிருந்து சீக்கிரம் வந்து விட்டேன். அவன் பள்ளிக்கூடத்திலிருந்து வரும் வழியில் தான் என் பள்ளிக்கூடம். தினம் வரும் போது அவன் அழைத்து வருவான். அவன் ஒரு நாள் சொன்னான்: “இதோ பாரு. உன்னை அழைத்து வருவதற்காகத் தினம் விளையாட்டைவிட்டுவர வேண்டியிருக்கிறது”. அவன் புகார் செய்ய வில்லை. அது இன்று தெரிகிறது. அன்று அகம்பாவம் தான் அதிர்ந்து நின்றது.

“அட அப்பா! நான் தான் உன்னை அழைக்க வரச் சொன்னேனா! உனக்குத் தான் என்னை அழைக்க வராது போனால் போது போக வில்லை! வருகிறாய்!” என்று சொல்லி விட்டேன்.

மறுநாள் அவன் கூப்பிட வரவில்லை. நானே வந்து விட்டேன். இரண்டு நாளாயிற்று. எனக்கும் இந்த ஏற்பாடு பிடிக்க வில்லைதான். ஆனால் பிடிவாதம்; பெண்மையின் அகங்காரம் போலும்! ஒன்றும் சொல்லவில்லை. அவனுடன் பேசுவதும் கிடையாது.

அன்று காலை அவனாகவே வந்தான் “ரங்கம். இன்று நான் சீக்கிரமே வருகிறேன். இரண்டு பேரும் சேர்ந்து வரலாம்.”

நான் பதில் சொல்லவில்லை. அன்று ஒரு ‘பீரியட்’ முன்னமே டீச்சரைக் கேட்டுக் கொண்டும் வந்து விட்டேன்.

அவன் சாயந்திரம் வந்தான். முகத்தைப் புஸ்தகத்தில் புதைத்துக்கொண்டு உட்கார்ந்திருந்தேன். அவன் “ரங்கம்! நீ பரிகாசம் வேண்டுமானாலும் பண்ணிக்கொள். ஆனால் தினம் மட்டும் என்னோடே சேர்ந்து வா!” என்றான்.

* * *

அடா! பால் பொங்கக்கூட ஆரம்பித்து விட்டதே!

உடனே எடுத்துக் கலந்தேன். சர்க்கரையை எடுத்துப்போட்டு இரண்டு ஆற்று ஆற்றிக் கொண்டேன். ஒரு டபராவிலும் டம்ளரிலும்எடுத்துக்கொண்டு கிளம்பினேன். எண்ணப்பாரமோ என்னவோ எழுந்திருக்கவே ‘தம்’ பிடிக்க வேண்டியிருந்தது.

மனம் சக்கரத்தைச் சுழற்றி விட்டது.

“பாவம் அந்த நவநீத கிருஷ்ணன் வந்திருக்கிறானும். அழைத்துவரச்சொல்ல வேண



டும்!'' என்ற எண்ணம் தோன்றிற்று. நடுவில் பேசும் பையன் தலையில் ஒரு குட்டுக் குட்டி அமர்த்தி மேலே பேசும் உபாத்தியாயரைப்போல் மனமே அந்த எண்ணத்தை அமர்த்தி மேலே கதை சொல்லிற்று:

''அடியே, நவநீதகிருஷ்ணன் நேற்று என் ஆபீசுக்கு வந்திருந்தாண்டீ! பாவம் எப்படி ஆய்விட்டான் தெரியுமா?'' என்றார் அவர் நேற்று. நான் பதில் சொல்லவில்லை. அவர் அதை லக்ஷியம் செய்யாமல் சொல்லிச் சென்றார்.

''என்ன ரங்கம் பேச மாட்டேன் என்கிறாய்? அவன், பாவம், வேலையில்லாமல் 4 வருஷமாகத் திண்டாடுகிறானாம்! எங்கள் ஆபீசில் வேலை கேட்க வந்தான். பாவம்......''

அவர் அவன் உடல் நிலையை வர்ணித்தார். மனது நெகிழ்ந்தது. கட்டு முடி. அகன்ற மார்பு. அழகிய உருவம். இளமையிலே கண்டு கற்பனையிலே நான் வளர்த்த அவன் உருவம் எங்கே! இதோ சொல்கிறாரே இந்த நவநீதம் எங்கே?

''சை. கண்டிப்பாய் அழைத்துவரச் சொல்ல வேண்டியதுதான்!'' என்றது மனம். காலில் ஒரு பரபரப்புத் தோன்றிற்று.........

''என்ன ரங்கம்? வரட்டுமா?'' இது அவர் குரல். இல்லை இதோ வந்துவிட்டேனே!'' என்று பதில் கொடுத்தேன். சமையலறை தாண்டி, நீளத் தாழ்வாரம் தாண்டி, ரேழிவழிபுகுந்து வாசல் வந்து மாடிப்படி ஏற வேண்டும்.

'அவனை வரவழைத்து உபசாரம் செய்ய வேண்டும்!' என்று எண்ணிய நான் ரேழிக்கு வந்து விட்டேன்.

குரங்கு மனம் பழைய ஏடுகளைப் புரட்டிற்று :—

* * *

என் கலியாணத்துக்கு அவன் வந்திருந்தான். என்னைப் பார்த்துச் சிரித்தான். அது ஒன்பது வருஷத்துக்கு முன்பு. எனக்கு அதற்கு அர்த்தம் தெரியும். அவன் ஆண் பிள்ளை. நான் தான் ஒரு நாள் அவனிடம் சொன்னேன்: ''அம்மா சொன்னாள்—உனக்கும் எனக்கும் கலியாணம் செய்து வைத்து விடலாம்......என்று'' அவன் சிரித்தான். அன்று எரிச்சல் வந்தது. இன்று அழுகை வந்தது. புகையில் வரும் கண்ணீருடன் இந்தக் கண்ணீரையும் கலந்து இதயத்தை லகுவாக்கிக் கொண்டேன்.

பிறகு இவருடன் மதராஸ் வந்தாகி விட்டது. இவர் ஒரு பாங்கியின் உதவி மானேஜர்.

வாழ்க்கை நன்றாகத் தான் நடந்தது. ஆனால் என்ன காரணம் என்று எனக்கு அப்பொழுது புரியவில்லை. அவரிடமும் ஒரு ஆத்திரமும், போட்டியில் ஜயித்தவன் பரிசை அமுக்க முற்படுவது போன்ற ஒரு நடத்தையும் மட்டும் காணப்பட்டு வந்தது.

ஒரு நாள் மாலையிலே வரும்போதே ''தங்கம்!'' என்று அழைத்தார். அவர் அப்படித் தான் அழைப்பது வழக்கம்.

நான் ''ஏன்?'' என்றேன்.

அடியே! நவநீதம்...! அவன் தாண்டி நீ...''

''சரி சரி சொல்லுங்கள்!''

''என்ன ஆத்திரம் பார்க்தாயா?......சரி சரி. அவன் பெரிய ஆபீசர் ஆகிவிட்டான். மாதம் சுமார் ரூ 500 ரூபாயாவது இருக்கும் சம்பளம்.''

''ஊம்!'' என்றேன். கண்கள் மலர்ந்திருக்க வேண்டும். முகம் ஒளி காட்டியிருக்க வேண்டும்.

'அடி, இப்படி பணக்காரனாவான் என்று தெரிந்திருந்தால் நீ அவனைக் கலியாணம் செய்துகொண்டிருப்பாய் அல்லவா?'' என்றார். கேள்வி சுத்தமாய் வரவில்லை. அது எனக்குத் தெரியவில்லை. ஆசையுடன், 'அவனை எங்கே பார்த்தீர்கள்? எப்பொழுது?' என்று கேட்டேன். 'கலியாணம் கார்த்தியாய் விட்டதாமா?' என்றும் கேட்டுவிட்டேன்.

அவர் மற்றதை எல்லாம் விட்டார். 'ஏன் கலியாணம் ஆகாவிட்டால், மீண்டும் அவனை நீயே......?' என்றார்.

''சை! இந்த ஆண் பிள்ளைகள்!'' அவர் தொடர்ந்தார்:

'அசடே. அவன் இப்பொழுது உன்னைத் திரும்பிக்கூடப் பார்க்கமாட்டான்...' என்றார். முற்றிலும் விஷம் தோய்ந்த அம்பு. எனக்கு என்னென்னவோ சொல்லத் தோன்றிற்று. ஆனால் மௌனமாக வந்து விட்டேன்.

அந்த விஷக் கலயத்தின் ஆழம் மூன்று வருஷத்துக்கு முன்புதான் புரிந்தது.

ஒட்டுக் கேட்பது பிசகுதான். ஆனாலும்...

அவர் அம்மா அவரைக் கேட்டுக் கொண்டிருந்தாள்: ''இன்னம் எவ்வளவு நாளடா பார்க்கப் போகிறாய்?''

அவர் சொல்லிக்கொண்டிருந்தார்:

"பார்க்கலாம் அம்மா! ஜோஸியர் சொன்ன அந்த இரண்டு வருஷமும் போகட்டும்."

"போடா போ. உன்னிடம் அவளுக்கு அன்பிருந்தால் தானே......!"

"அதுவும் வாஸ்தவம் தான். நவநீத கிருஷ்ணன் இருக்கிறனே, அந்தப் படுபாவி ......அவன் நினைவு மறந்தால் தானே......!"

'ஆகா! நாராயண நாரயணா! நாராசம்.

* * *

கடைசிப்படி ஏறிவிட்டேன். மீண்டும் அந்த ஆசை எழுந்தது. "அவரை அழைத்து வரச் சொல்வோம்."

"அட அசடே! உன் கணவன் குணம் மறந்து விட்டாயா?" ஆம் அது போன வருஷம் நடந்தது.

"அடியே. தங்கம்!" என்றாரம்பித்தார் அவர். நான் அன்றும் பரபரப்புக் காட்டி யிருக்கவேண்டும்.

அவர், "சனியனே! நீ இன்னம் மறக்க வில்லையா?"

சனியனே நீ மறக்கவில்லையா? இதற்கு என்ன அர்த்தம்.? நான் அவனைக் குழந்தை யில் பிரிந்தது முதல் பார்த்ததுகூடக் கிடை யாது. அவனை உள்ளத்தை விட்டுப் போய் விடு அப்பா என்றாலும் அவன் மறுத்துவிட்டு உட்கார்ந்து விடுகிறான். இதில் என் பிசகு என்ன?

"உங்க நவநீதம் வேலையை விட்டு விட்டா னும்.!" நான் பதில் சொல்லவில்லை.

"மூளை கெட்ட பயல்! இவருக்குத் தனியா கச் சுய கௌரவம் வந்துவிட்டதாம்! காலிப் பயலுகள்-பொறுப்புத் தெரிந்தால் தானே."

இவரிடம் எனக்கு என்றுமே மரியாதை குறைந்ததில்லை. இன்று அவர் செய்யும் இந் தக் காரியம்......? என் மனதைச் சோதிக் கிறார் இவர்!

கண்ணுக்கும் கடும் உத்தரவு போட்டுக் கல்போல் நின்றேன். ஆனால் கண்கள் ஏமாற் றிவிட்டன.

"என்னடி நீலி! அவனிடம் இருக்கிற கரி சனம்கூட என்னிடம் இல்லையே உனக்கு...?"

* * *

அவர் இருந்த அறை வாசற்படியைத் தாண்டியும் விட்டேன். 'ஏன்னா?' என்ற வார்த்தையும் என் உதடுகளைத் தாண்டிவிட்டது.

'என்னடீ! என் தங்கமா?' என்று திரும் பினார் "டை" கட்டிக்கொண்டிருந்த அவர்.

"எனக்குத் 'திக்'கென்றது.

"என்ன சொல்ல ஆரம்பித்தது என் தங் கம்? சொல்லட்டுமே! இந்தச் சமயத்தில் நீ புலிப்பால் வேண்டும் என்றாலும் தரவேண் டாமா நான்? இல்லாவிட்டால் நாளைக்கு உன் கட்சிபேச இன்னொரு......"

எனக்கு வெட்கம் பிடுங்கித் தின்றது.

"அடக்கு கிடக்கு; சொல்ல வந்ததைச் சொல்லு"

"ஒன்றுமில்லை!" என்று அழுத்தமாகச் சொன்னேன். டபரா டம்ளரைக் காப்பி யுடன் மேஜைமேல் வைத்துவிட்டு அவர் டையைச் சீர்திருத்துவதில் முனைந்தேன்.


## காவேரி சந்தா விகிதம்

| | உள் நாடு ரூ. அ. பை. | பர்மா, மலேயா முதலிய வெளி நாடுகளுக்கு ரூ. அ. பை. |
|---|---|---|
| ஒரு வருஷம் | 6 0 0 | 7 8 0 |
| அரை வருஷம் | 3 0 0 | 3 12 0 |
| தனிப் பிரதி ஒன்றுக்கு | 0 8 0 | 0 10 0 |

ஏஜன்ஸி இல்லாத இடங்களில் டிபாஸிட் கட்டி நாணயமும் பொறுப்புமுள்ள ஏஜண்டுகள் தேவை.

ஸர்குலேஷன் மானேஜர், "காவேரி,"
பெஸண்ட் ரோடு, கும்பகோணம்.

தொடர்கதை

# லக்ஷியக் கனவு

கே. சுந்தரம்மாள்

## அத்தியாயம்—5

"ரங்கேசா உந்தன் ஸ்ரீ பங்கஜ பாதத்தை". என்று பூபாள ராகத்தில் மார்கழி மாத பிராதகால பூஜையினிமித்தம் சிவன் கோவில் மேளகாரன் ஸ்வர சுத்தமாக வாசித்த நாதஸ்வர இன்னிசையும், கோவில் மதிலையொட்டி ஓடும் காவேரியின் ஓவென்ற அமர்ந்த சப்தமும் மனதிற்கு இன்பமளிப்பனவாக இருந்த போதிலும், வெடவெடன்று உதறும் குளிரை அலக்ஷ்யம் செய்து ஸ்னானம் செய்துவிட்டு, சுவாமி தீபாராதனைக்குச் செல்ல வேண்டும் என்ற பரபரப்புக் கிடையிலும் 'ஆற்றங்கரை வம்பு' என்னும் பழமொழிக்கு மதிப்புக்கொடுப்பது போல் பேச்சைத் துவக்கினாள் ஜானகி.

"ஏனடி சரசு, எச்சுமுமாமி வரவில்லையா" என்றாள் ஜானகி.

"அந்தப் பெண் லீலாவிற்கு உடம்பு சரியில்லையாம்; அதனால் அவள் வரவில்லை" என்றாள் சரசு.

"என்னடி உடம்பு? ஏதாவது தேகத்திற்குள் சரீரம் புகுந்து விட்டதா?" என்று சிரித்தபடி கூறினாள் மீனாக்ஷி.

"என்னடி திமிரு? தாயில்லாக் குழந்தையைப்பற்றிக் கண்டபடி பேசுகிறாய்?" என்றாள் சாலாப் பாட்டி.

"பாட்டி கோபித்துக் கொள்ளாதேயுங்கள். நடக்கிற மாதிரியும் இருக்கிற இருப்பும் அப்படிச் சொல்லத் தோன்றுகிறது. மிலிட்டரி மாமி பிள்ளை சங்கர் சதா அந்தப் பெண் வீட்டுடன் தானே கிடக்கிறான். பள்ளிக்கூடத்திலிருந்து வர வேண்டியது தான் தாமதம். ஆசாமி உடனே ஆஜர். இப்பொ உத்யோகம் பார்க்கப் போய் விட்ட பின்பும் வாரத்தில் ஒரு நாள் வந்து விடுகிறான். வந்த சமயம் பூராவும் இவள் வீட்டில் தான். படிப்புச் சொல்லிக் கொடுக்கிறதாகப் பாவனை. சிரிப்பும் கும்மாளமும் தான் நடப்பது. வயது வந்த பெண், கல்யாணம் தான் செய்யவில்லை யென்றால் இப்படியா நடந்து கொள்ள வேண்டும்?"

"எல்லாம் கலிகாலம். சாரதா சட்டம் வந்துடப் போகிறது என்று ஐந்து வயதுப் பெண்ணுக்குக் கூடக் கல்யாணம் நடந்தது. பெத்தவர்கள் இருந்தால் கல்யாணமாகி மூணு வருஷமாகியிருக்கும். ஏதோ புண்யத்திற்குச் செய்யறா. ஆனால் அவ அம்மா இருந்து கல்யாணம் பண்ணாமலிருந்தால் அக்கிரஹாரமே ஏசி விட்டிருக்கும். மிலிட்டரி மாமி பொறுப்பு ஏற்றுக் கொண்டதினால் எல்லோரும் சலாம் போட்டு வாயைப் பொத்திக் கொண்டிருக்கா" என்றாள் வறுமையின் கொடுமையில் வாழும் பவானி.

"ஏண்டி இந்த வம்பு? லக்ஷம் தான் தன் பிள்ளைக்கு அந்தப் பெண்ணைக் கட்டப் போகிறதாகச் சொல்லிக் கொண்டிருக்கிறாள். அதனாலே தான் அவன் அப்படி நடக்க அனுமதி கொடுத்திருக்கிறாள். உனக்கும் எனக்கும் ஆக வேண்டியதென்ன?" என்றாள் சாலாப் பாட்டி.

"ஏது பாட்டி, நாகரிகத்தில் முன்னேறி விட்டாப் போலிருக்கிறதே. பாட்டி, அப்படியிருந்தாலும் கல்யாணம் என்ற ஆயத்தைக் கழித்து விட்டுட வேண்டும். இல்லாத பக்ஷத்தில், கொஞ்சம் அடக்கமாகத் தான் இருக்க வேண்டும். மனிதர்கள் நினைத்தபடி நடந்து விடுமா? பிராப்தம், விதி என்பது தனியாக இருக்கிறதே" என்றாள் மீனாக்ஷியம்மா.

"வர, வர படிப்புலே மோசு விழுந்திருக்கிறது. அதனால் பணங்கட்டி எழுதினப்பறம் கல்யாணம் பண்ணப் போவதாகச் சொன்னாள். இருந்தாலும் கொஞ்சம் அடக்கமா இருக்கலாம். ஆனா எச்சுமு ஒருத்தி விழுந்து கெடக்கிறாளே. அவளுக்குத் தெரியாமலா போய் விடும். வித்யாசமாக நடப்பதோ பேசுவதோ கிடையாது என்று தான் சொல்லறாள்" என்றாள் பாட்டி.

"ஆமாம், எச்சுமு அவ்வளவையும் கண்டு விட்டாள். அவா இங்கிலீஷில் அடித்து

நொறுக்குவா. இவள் வாயைப் பாத்துண்டு உட்கார்ந்திருப்பாள். இதைப் பாருங்கோ பாட்டி, பிள்ளையார் வேஷம் போட்ட பிறகு தான் கல்யாணம் நடக்கப் போகிறது. மிலிட்டரி மாமி, கெட்டிக்காரியாக எல்லாரோடும் நியாயம் பேசுவாள். சொல்லுவது யாவரும் ஒத்துக் கொள்ளக் கூடியதாக இருக்கும். இந்த விஷயத்தில் ஏனோ இப்படி விட்டிருக்கிருள். அவள் மனதில் நல்ல எண்ணத்துடன் செய்கிருளோ ஏதாவது கெட்ட எண்ணத்துடன் தான் செய்கிருளோ?'' என்று முடிக்குமுன்,

''நான் எப்படிச் செய்தாலும் பகவான் இருக்கிருர் கூலி கொடுக்க. நீங்களெல்லாம் அதைப் பற்றிக் கவலைப்பட வேண்டாம்'' என்ற மி. மாமியின் குரல் கேட்டு யாவரும் திடுக்கிட்டு விழித்தார்கள்.

''லக்ஷ்ம்மா! இவர்களுக்கென்ன வேலை? நீ காதில் போட்டுக்கொள்ளாதே. உனக்குத் தெரியாதா இன்னதுசெய்யவேண்டுமென்று? நீ ஸ்னானம் பண்ணியாயிடுத்தோல்லியோ? காலை அலம்பிக்கொண்டு வா. திபாராதனைக்குப் போவோம். நானும் புடவை பிழிந்து உடுத்திண்டு வறேன்'' என்ருள் பாட்டி.

மி. மாமி எச்சுமுவினிடம் இவ்விஷயத்தைச் சொல்லி வருத்தப்பட, எச்சுமு மாமி லீலாவை எச்சரிக்கையாக இருக்கும்படி புத்தி புகட்ட ஹேதுவாயிற்று.

செலக்ஷன் பரீக்ஷை முடிந்து பணம் கட்டியாகி விட்டது. அவ்வாரம் சங்கரின் வருகையை ஆவலுடன் எதிர்பார்த்துக்கொண்டிருந்தாள் லீலா. ஆனல் அவன் வரவேண்டிய தினத்தில் அவனிடமிருந்து ஓர் கடிதம் வந்தது.

பிரிய லீலா,

உன்னைப் பார்க்க வேண்டுமென்ற ஆவல் துடிக்கிறது. செலக்ஷனில் சரிக்குச் சரி மார்க் வாங்கியது பற்றிய சந்தோஷத்தை எவ்விதம் தெரியப்படுத்துவது? இவ்வாரம் உன்னை ஏமாற்றும்படி நேர்ந்துவிட்டது. நான் என்ன செய்வேன்? நிலைமை அவ்விதம் அமைந்து விட்டது. எங்கள் சங்கத்திற்கு வடக்கேயிருந்து ஒரு புதிய தலைவர் வந்து ஆறுமாத மாகிறது என்று சொன்னேனல்லவா? அவர் பல நூதன சீர்திருத்தங்களைச் செய்து வருகிருர். அவரின் கட்டளைப்படி இந்தவாரம் இந்த ஊரில் அவரின் தலைமையில் சங்கம் கூடுகிறது. அதில் ஒவ்வொருவர் ஒவ்வொரு சபதமெடுத்துக் கொள்ள வேண்டுமென்பதற்காக, உறுதி, தீரம் இவைகளுள்ள ஆசாமிகளாகப் பொறுக்க அவர் ஏற்படுத்திய பரீக்ஷையில் இருபது பெயரே வெற்றி பெற்றதில் நானும் ஒருவன் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்ளுகிறேன். இந்தக் கூட்டத்தில் சீட்டுக் குலுக்கிப் போட்டுக் கட்டளை கொடுக்கப் போகிருர். அது முடிந்ததும் நான்கு நாள் சேர்ந்தாற்போல் லீவு எடுத்துக் கொண்டு வந்து தூங்கும் நேரம் தவிர மற்றப் பொழுதை உன்னுடனேயே கழிக்கிறேன். வருத்தப்படாதே. இந்த வாரம் தவறினதற்காக மன்னித்துவிடு. நான் வேண்டுமென்று அவ்விதம் செய்யவில்லை. நான் என்றும் உன்னுடையவன். ஊர் வம்பைக் காதில் வாங்கிக்கொள்ளாதே. தைரியமாக முன்னேறிச் செல். சங்கம் முடிந்த மறு நாளே என்னை நீ அவ்விடம் காணலாம்.

இப்படிக்கு என்றும் மறவாத உன் அன்பன்

சங்கர்

வரவில்லை என்ற வருத்தம் தோன்றினலும் கடிதம் மனதிற்கு ஆறுதலையளித்தது. சங்க நடவடிக்கைகளைப்பற்றிப் பத்திரிகைகளில் படித்து வந்தாள். சீட்டுக் குலுக்கப்படும் விஷயம் பத்திரிகையில் பிரசுரிக்க அனுமதியில்லை. அதனல் விபரம் அறிய ஆவலாக நின்ருள். ஒரு வாரம் சென்றது. அன்று வெள்ளிக்கிழமை.

''பக்கத்து ஊரில் உத்ஸவம். ரிஷபவாகனத்திற்காகக் கிராமத்தில் பத்துப் பெயர்கள் சேர்ந்து செல்லுகிருர்கள். அவர்களுடன் நானும் செல்லப் போகிறேன். நீ சீக்கிரமாக வந்துவிடு'' என்று எச்சுமு மாமி காலையில் சொல்லியிருந்தபடியினல் நான்கு மணிக்கே வீடு திரும்பின லீலா ஹாலின் மேஜையினருகேயுள்ள நாற்காலியில் சங்கர் உட்கார்ந்திருப்பதைப் பார்த்ததும்,

''ஓ. தாங்களா' ஹல்லோ! குட் ஈவினிங் சார்'' என்று புஸ்தகத்தை மேஜைமீது போட்டுவிட்டு உங்கள் கடிதப்படி நாளைக்குத்தான் எதிர்பார்த்தேன். காலையில் வலக்கண் துடித்தது. பெண்களுக்கு நல்லதல்லவே என்று நினைத்தேன். என் விஷயம் ஏறுமாறுதானே. அதனல் நல்ல பலன் கிடைத்து விட்டது. அப்பா ஒருவாரமாக என் மனம் பட்டபாடு; உங்கள் சங்கத்தின் தீர்மானங்கள் என்னென்ன? இவ்விடமிருந்து சென்றது முதல் புறப்பட்ட வரை நடந்த விஷயம் முழுவதும் சொல்ல வேண்டும்''

''ரயிலில் வந்தது?'' என்ருன்.

ஆரோக்கியமான, சிறந்த, ருசியான, உணவிற்கும்,
ஊறுகாய்களுக்கும் அவசியமானது ?




— எங்கள் —
டெக்கான் குவீன்
மார்க்
மிஸ்கி
பெருங்காயமே
காரம், குணம், மணம்
ருசி இவைகளில்
உயர்ந்தது.
எல்லா இடங்களிலும்
கிடைக்கும்.

நாராயணதாஸ் கேஸுர்தாஸ் & சன்ஸ்,
17, கோவிந்தப்பநாயக்கன்தெரு, மதராஸ்.

ஹெட் ஆபீஸ்:- வட்காடி, பம்பாய். பிராஞ்சு:- பெரியகடைத்தெரு, கும்பகோணம்.

# MEHTA'S SPECIALITIES

*Well-known for their efficacy and Medicinal values*

1 *SUNDARI ELIXIR*
For all kinds of female irregularities in menses and a great uterine tonic.

2 *PHOSPHORUS OIL*
A great pain relieving oil ever prepared in annals of medicine.

3 *MASTANA PILLS*
Unique in the field, combining both Allopathic & Ayurvedic systems, curing general debility, Rheumatic pains, Hay fever & what not.

4 *DRAKHYASAVA WITH GOLD & MAKARDHWAJA*
A great Blood Purifier & digestive & Potential Tonic.

Stocked by all important Chemists & Druggists of South India

**K. S. MEHTA & CO.**
**250, China Bazaar, MADRAS.**

"அதுவும் கூடத்தான். சரி, கொஞ்சம் இருங்கள். மாமி எங்கோ போகவேண்டுமென்றார். அவரை அனுப்பிவிட்டுக் காப்பி சாப்பிட்டுவிட்டு உங்களுக்கும் மைசூர் பாகும் காப்பியும் எடுத்துக்கொண்டு வருகிறேன். பிறகு சாவகாசமாக ரொம்ப விஷயங்கள் பேசலாம்" என்றாள்.

"ஆமாம் சீக்கிரம் வா; ரொம்ப விஷயங்கள் பேசவேண்டியிருக்கின்றன. ஆனால் மாமி உள்ளே இல்லை. எல்லோரும் புறப்பட்டுவிட்டார்களென்றும் நீ வந்தால் சொல்லும்படி என்னிடம் சொல்லிவிட்டுச் சென்றுவிட்டாள்."

"இதோ ஓர் மினிட்" என்று உள்ளே சென்றவள் இரண்டு மினிட்டில் காப்பியும் ஒரு தட்டில் மைசூர் பாகும் கொண்டுவந்து மேஜைமீது வைத்துவிட்டு, அவன் எதிர்ப்பக்கமுள்ள நாற்காலியில் உட்கார்ந்துகொண்டான்.

ஒரு துண்டு மைசூர்பாகை வாயில் போட்டுக்கொண்டு "ஏது? மைசூர்பாகு?" என்றான்.

‘ஏது என்றால் செய்தது. எப்படியிருக்கிறது?"

"பலே ஜோர். யார் செய்தார்கள் மாமியா, அம்மாவா?"



"இருவருமல்ல, என் கையினுல் செய்து பார்த்தேன். நாளை நீங்கள் வருவதற்காக இன்று காலை செய்தேன்."

"உன் கை விசேஷமல்லவா? அதுதான் அதியற்புதமாக இருக்கிறது" என்ருன்.

"ஆமாம், கேலி செய்யாதீர்கள்" என்று காப்பியை ஆற்றினுள்.

அதை வாங்கிச் சாப்பிட்டான். லோட்டாவை வைத்துவிட்டு 'அம்மாடி' என்று நாற்காலியில் சாய்ந்துகொண்டான்.

"நன்ருக இருக்கிறது என்று சொன்னீர்கள். அப்படியே வைத்து விட்டீர்களே" என்ருள்.

"போரும் லீலா! சாப்பிடமுடியவில்லை" என்றவனை நிமிர்ந்து பார்த்துவிட்டு,

"உங்கள் உடம்பிற்கென்ன? வந்தது முதல் நானும் கவனிக்கிறேன்; வழக்கம் போலுள்ள குதூகலமில்லை. முகம் ஒரு மாதிரியாக இருக்கிறதே ஏன்?" என்ருள்.

"ஒன்றுமில்லை. பிரயாண அலுப்பு. உன்னுடன் சற்று நேரம் பொழுதைக் கழித்தால் தானே உத்சாகம் ஏற்பட்டு விடுகிறது" என்ருன்.

"சரி சீட்டுக் குலுக்கிய தீர்மானம் என்ன சிதம்பர ரகசியம்? பத்திரிகைக்காரர்களுக்குக்கூடத் தெரியக்கூடாது என்ற ஏற்பாடாமே."

"ஒன்றுக்குப் பத்தாக எழுதிவிடுவார்கள். அதனுல்தான். பொறுக்கி எடுத்த இருபது ஆசாமிகளும் கொழுத்த பணம் படைத்தவரின் புதல்வர்கள். தங்கள் பங்குக்கு வரும் சொத்துகளை ஹரிஜன முன்னேற்றத்திற்குச் செலவிட்டு ஏழ்மை வாழ்க்கையை மேற்கொள்ளல், பாடுபடும் தொழிலாளிக்கு லாபத்திலும் பங்கு பெற, சொந்த முயற்சியில் செய்தல், பெண்களுக்குச் சொத்துரிமைக்கு தன் குடும்பத்தில் ஏற்பாடு செய்தல், ஏழைப் பெண்ணை மணந்து கொள்ளுதல், விதவா விவாகம், தங்கள் பங்கை முதலாக வைத்து ஏழை பாட்டாளிக்குக் கடன் கொடுத்து வாங்குதல்—இவை மாதிரி இருபது தீர்மானங்களோடு அறுபது வயதைக் கடந்தவர் பதினுறு வயதுப் பெண்ணை மணப்பதுபோல், தனக்குப் பத்து வயது மூத்த விதவையை மணம் செய்து கொள்ளவேண்டும் என்ற விஷயமும் சேர்ந்துளது."

"இதென்ன வெட்கக்கேடு. மற்றத் தீர்மானங்கள் சமூகத்திற்குச் சேவை செய்வதாகும். வயது சென்ற விதவையை மணப்பதில் என்ன பிரயோஜனம் சமூகத்திற்கு. எப்படி மனமொத்த வாழ்க்கை நடத்த முடியும்?"

"ஐம்பது வயது தாத்தாவுடன் பதினெட்டு வயது இளம்பெண்கள்வாழ்க்கைநடத்துகிருர்களே! அவர்கள் மனமொத்து இருப்பதாக உன் அபிப்பிராயமா? அந்தப் பெண் நெஞ்சு துடிப்பது போல் ஆண் நெஞ்சும் துடித்தால் தான் சமூகத்திற்கு வழி காட்ட முன் வருவார்கள்"

"எனக்கென்னவோ இவ் விஷயத்தினுல் சமூகத்திற்கு நன்மையுண்டாகும் எனத் தோன்றவில்லை. ஏதாவது ஒரு வாலிபன் நெஞ்சு துடிக்க வாழ்க்கை நடத்துவதினுல் அந்தப் பெண்களின் நெஞ்சுத் துடிப்புக்கு ஆறுதல் கிடைக்குமா? கிழக் கோட்டான்களுக்குத்தான் புத்தி வருமா? இதைவிடச் சொந்தச் செலவில், வறுமையில் வளரும் பெண்கள்தானே கிழவர்களுக்கும் பலியாகிருர்கள், அதனுல் ஒவ்வொரு ஜில்லாவிலும் விவாகச் சங்கம் என்று ஏற்படுத்தி, அப்பெண்களுக்குக் குமரனைப் புருஷன் தேடிக்கொடுக்கப்பாடுபட வேண்டும். 'இவ்வளவு வயதுக் கிழவர்கள் இவ்வளவு வயதுள்ள இளம் பெண்களை மணந்தால் தண்டனை' என்று சட்டம் கொண்டுவரப் பாடுபடவேண்டும். அப்பொழுது விமோசனம் ஏற்படலாம். ஒரு இளைஞன் கிழவியைக் கட்டிக்கொண்டால் அதனுல் சமூகத்திற்கு நன்மை என்பது குதிரைக் கொம்பு தான். இந்த அருமையான யோசனையைத் தெரியப்படுத்த இங்குள்ளவர்களுக்கு மூளையில்லையென்பதற்காக வெகு தூரத்திலிருந்து தலைவரைத் தேர்ந்தெடுத்தீர்களோ?"

"அப்படியல்ல. ஆங்கிலேயர்களில் இந்த விதமான விவாகம் சர்வ சகஜம்." என்று முடிக்கு முன்,

"விவாகரத்தும் சர்வசகஜம். நமது இந்து சமூகத்தில் 'விவாக ரத்து' என்ற தொற்று வியாதி இதுவரை ஏற்படவில்லை. இனியும் ஏற்படாது. ஒரு இந்து ஸ்திரீயானவள் குடும்பத்தையும் குழந்தைகளையும் விட தன் சுகத்தைப் பெரிதாகக் கருதமாட்டாள். அப்படிக் கருதினுலும் நூற்றிலொருவர் இருப்பர், ரத்தத்தில் ஊறிய பழக்கம், இஷ்டப்படி நடக்க மனம் லேசில் இடமளிக்காது. அப்படி சஞ்சல சுபாவமுள்ளவர்களானுலும் தனக்குச் சமதையானவர்களை அடையமுயற்சிப்பார்களே தவிர, பத்துவயது இளையவர்களுடன் வாழ்க்கை நடத்த விரும்புவார்களா விதவையானுலும்? உங்கள் கொள்கை அற்புதமாக இருக்கிறது. சமூகத்திற்கும் பழக்க வழக்கத்திற்கும் மிகவும் அப்பால் சென்று விட்டது புரட்சிகரமான துறையில் இறங்கு

வது எங்கள் சங்கத்தின்நோக்கமல்லவென்று சொன்னீர்கள். இது சாதாரண புரட்சிகூட இல்லையே, வாழ்க்கையைப் பணயம் வைக்கும் புரட்சியாக வன்றோ இருக்கிறது? நல்ல தலைவர், நல்ல வாலிபர்கள்!

"ஆங்கிலேயர்கள் அவ்வித வாழ்க்கையைச் சர்வ சகஜமாக நடத்துகிறார்கள், நாமும் நடத்திப்பார்ப்பது. இளம் பெண்கள் குமுறலை அனுபவித்த ஆண்கள், மற்ற ஆண்களை எச்சரிக்க அவர்களின் மனக்குமுறல் தூண்டுதல் செய்யும். அதற்காகவே சிலர் இந்நிபந்தனையை மேற்கொள்ள ஒத்துக்கொண்டது"

"ஒரு பெண் தவறினால் பெண்ணினத்தையே பழிப்பதும், ஒரு ஆண் தவறினதற்காக ஆண் இனத்தையே தூற்றுவதும் நல்ல செய்கையாகுமா? நீங்கள் செய்யும் இக்காரியம் பச்சாத்தாபப்படக் கூடிய விஷயம். இதனால் கிழவர்களுக்குப் புத்தி வருமென்று எனக்குத் தோன்றவில்லை"

"பல துளிதான் பெருவெள்ளம். சில சில இடங்களில் இவ்விதம் செய்து பிரசாரம் செய்தால் பலன் ஏற்படாமல் போகாது."

"சரி, எப்படியாவது போகட்டும். அதைப் பற்றி நமக்கென்ன? அகப்பட்டுக்கொண்டவன் திண்டாடுகிறான். அந்தச் சீட்டு விழுந்த மஹானுபாவன் யாரோ?" என்றாள்.

"அந்த மஹானுபாவன்......"

"உங்கள் தலைவரா?" என்று சிரித்தாள்.

"இல்லை."

"பின் யார்? பெயரைச் சொல்லவே நாஎழும்பவில்லையோ?"

"லீலா! அந்த மஹானுபாவன் அடியேன் தான்"

"ஹா! என்ன? நிஜமாகவா?" என்றாள்.

"உண்மையாக அந்தச் சீட்டு எனக்குத் தான் விழுந்தது"

"அதன்படி நடந்தாக வேண்டுமா? நடக்கப்போகிறீர்களா?

"அதில் சந்தேகமென்ன? நடந்துதானாக வேண்டும்."

"அப்படியானால் என்கதி?" என்றாள் கண்ணீர் நிறைந்த கண்களுடன்.

"உன் கதியென்றால்?"

"உங்களையே நம்பியிருக்கும் அனாதையான என் கதி"

"என் உதவியினாலேயா இவ்வளவு நாள் வளர்ந்தாய்? ஏதோ பாடம் சொல்லிக் கொடுத்தேன், அவ்வளவே. என் அம்மா தான் உன்னைக் கவனித்துக் காப்பாற்றி வருகிறாள். நீ எப்படி அனாதையாவாய். இன்னும் உன் வாழ்க்கைப் பாதையைக் குளிர்ந்த தென்றலுள்ளதாக வகுப்பார்கள் என்பது சர்வ நிச்சயம்."

"பாதையை வகுப்பார்கள். அதில் பிரயாணம் செய்ய உதவும் துணைவன் தங்களையன்றி யாராக அமைய முடியும்?"

"என்னைவிட மேலானவன் கிடைக்கலாம்"

"கிடைக்கலாம் என்பது உண்மை தான். அதை என் மனம் ஏற்கவேண்டாமா?"

"அப்படியாக இது வரை நம்மிருவருள் பேச்சு நடந்ததாக ஞாபகம் இல்லையே?"

"பேச்சு எதற்கு? 'கண்ணோடு கண் நோக்கினால் வாய்ச் சொல்லில் பயனேது' என்ற வாக்யத்தைத் தாங்களே அடிக்கடி எடுத்துச் சொல்லுவதில்லையா?"

"உனக்கும் எனக்குமாகவா சொன்னேன். பாடம் சொல்லும் பொழுது உதாரணமாக எடுத்துக் காட்டினேன். வீணாக மனதை அலட்டிக் கொள்ளாதே. என் லக்ஷியம் நிறைவேறியே ஆக வேண்டும். அதினின்றும் விடுபட முடியாது; விடுபடவும் விரும்பவில்லை. நாம் இது வரை சகோதரர்கள் போல், அல்லது உற்ற நண்பர்கள் போல் நடந்து வந்தோம் என்று தான் நான் நினைத்து வந்தேன். நீயும் அவ்விதம் தான் நினைப்பாயென்று நம்பியிருந்தேன்."

"நான் அப்படி நினைக்க வில்லையென்றான்" குரலில் கடுமை தோன்ற.

"அதற்கு நானா ஜவாப்தாரி" என்றான் தரையைப் பார்த்த வண்ணம்.

"ரோமியோ ஜூலியட் படிக்கும் பொழுது ஒரு வருஷமாக வார்த்தைகளைப் பரிமாறிக் கொண்டோமே, அது எந்த முறையில் சேர்ந்தது?"

"உற்ற நண்பர்கள் என்ற முறையில். ஏதோ சற்று வித்தியாசமாகப் பேச வேண்டிய சந்தர்ப்பம் ஏற்பட்டு விட்டால் அதற்காகத் தவறான அபிப்ராயம் கொண்டு விட முடியுமா?"

"சங்கர்! இவ்விதம் நான் அழைத்தால் தான் உங்களுக்கு இன்பந்தருவதாகவும் அது மாதிரி அழைக்காவிடில் பேச மாட்டேனென்று சொன்னதும் எந்த முறை கொண்டு?" என்றாள் கோபமும் அழுகையும் கலந்த தொனியில்.

"உள்ளன்பு கொண்ட உற்ற நண்பன் என்பதற்காகவே"

“உள்ளன்பு என்றால் அதற்கு மாறும் குணமுண்டா?”

“இதென்ன கேள்வி? எப்படி மாற முடியும்?”

“அப்படியானால் தங்கள் உள்ளன்பு?”

“அது ஒரு நாளும் மாறாது, சகோதர பாசத்தினின்று.” என்று முடிக்கு முன்,

“சங்கர்!” என்று எழுந்து நின்றாள். அவள் குரலின் கடுமை அந்த ஹாலெங்கும் எதிரொலித்தது. “சென்ற ஜூன் மாதம் பதினைந்தாம் தேதி பௌர்ணமி யன்று ரோமியோ ஜூலியட் படம் பார்த்து விட்டு ஏழரை மணிக்கு வீடு திரும்பினோம். சாப்பாடு முடிந்ததும் இந்த வீட்டுப் பின் தோட்டத்திலுள்ள கருங்கல் மேடை மீது உட்கார்ந்து பூத்துக் குலுங்கும் மல்லிகைச் செடிகளைப் பூர்ண சந்திரனின் பவனியின் ஒளியில் பிரகாசிக்கும் மலர்களின் வாசனையில் மனதைப் பறிகொடுத்து, அதிலிருந்து அன்று பார்த்த படக்காட்சியின் சம்பவங்களில் மனதை லயிக்கவிட்டிருக்கும் சமயம் எதிர்பாராத வகையில் தாங்கள் அவ்விடம் வந்தீர்கள்.

“அந்த அகால வேளையில் தனிமையில் உங்களைக்கண்டதும் முதலில் மனம் திடுக்கிட்டாலும் பிறகு வரவேற்கவே துடித்தது. அந்த நிலைமையில் ‘ஏது இவ்வேளையில் இவ்வளவு தூரம்?’ என்று சிரித்தவாறு கேட்டேன்.’

“சாப்பிட்டு விட்டு மேல்மாடிக்குச் சென்றேன். தாவள்யமான நிலவு மனதைக் கவர்ந்தது. குழந்தைகள் அம்மா முதலியவர்கள் தூங்கிவிட்டார்கள். நித்திரை என் கண்ணைத் தழுவ மறுத்தது. தனிமை கசந்தது. ஆற்றங் கரைவரை போய்வரலாமென்று வந்தேன். வம்பர் மஹாநாடு கோபு வீட்டில் மும்முரமாக நடந்துகொண்டிருந்தது. எச்சுமு மாமி அவ்விடமிருந்தாள். அவளைப் பார்த்ததும், நீ தூங்காமலிருந்தால் உன்னுடன் சற்று நாழிகை நிலவில் பொழிலிலே பேசிக்கொண்டிருக்கலாமென்று வந்தேன். கதவு தாழிடப்படவில்லை. நேராக இவ்விடம் வந்தேன். வனமோஹினிபோல் செடிகளுக்கு மத்தியில் வீற்றிருக்கிறாய்” என்று சொல்லிய வண்ணம் என் அருகில் உட்கார வந்தீர்கள். நான் எழுந்து நின்றேன்.

“ஏன் எழுந்திருக்கிறாய் உட்கார். பக்கத்தில் உட்கார உரிமையில்லையா?” என்று இதே வாயினால்தான் கேட்டீர்கள்.

“உரிமையிருந்தாலும்.........” என்று தயங்கினேன். என்றுமில்லாத வழக்கமாக என் கையைப்பிடித்து உட்கார வைத்தீர்கள். அச்செய்கை பயத்தையும், இன்பத்தையும் ஒருங்கே உண்டாக்கின. பிறகு நிலவைப் பற்றியும் காதலைப்பற்றியும் பேசிக்கொண்டே வந்தீர்கள். ரோமியோ ஜூலியட்டிலிருந்து சாகுந்தலத்திற்குத் தாவினீர்கள். சர்ச்சைக்கு, துஷ்யந்தன் சகுந்தலை சந்திப்பை எடுத்துக்கொண்டீர்கள். கொஞ்ச நேரத்தில் நாமே துஷ்யந்தனும் சகுந்தலையுமாக மாறிப் பேசலானோம். நம்மிருவருக்கும் நடுவிலிருந்த இடைவெளி குறைந்துகொண்டே வந்தது.

“ஏதோ ஒன்று என்னைத் தடுக்கப், ‘பராதீனம்’ என்றேன்.

“இல்லை சுயாதீனம்” என்று, எதிர்பாராத வகையில் அணைத்து முத்தமிட்டீர்கள். மறுக்கும் சக்தி என்னிடத்திலில்லை. அன்புடன் ஏற்றுக்கொண்டேன். பதிலும் தந்தேன். அந்த அணைத்த கையும் பொய்யா? முத்தமிட்ட அதரமும் பொய்யா? அந்த நிலைமையில் எவ்வளவு நேரமிருந்தோமோ, எச்சுமு மாமி கதவைத்திறக்கும் சப்தம் கேட்கவே சுய உணர்வு வந்து பிரிந்து நின்றோம்.

“நாசமாய்ப்போக அதற்குள் வந்துவிட்டாளே என்று முணுமுணுத்தீர்கள். எனக்கும் அவள் கன்னத்தில் அறைந்தால் என்ன? என்று தோன்றிற்று. உங்கள் நாட்டு வழக்கம் சகோதரியை இம்முறையில் நடத்துவது தானோ?” பிறகு,

“மாமி, தூக்கம் வரவில்லை. ஆற்றுப்பக்கம் போகலாமென்று வந்தேன். லீலா தனியாக இருப்பதைப் பார்த்தேன். நீங்கள் வரும் வரை பேசிக்கொண்டிருக்கலாமே என்று உட்கார்ந்தேன். சரி நான் சென்று வரட்டுமா? லீலா! குட்நைட் எவ்வெரி பாடி.” என்று சொல்லிவிட்டுச் சென்றீர்கள்.

“ஒன்றும் அறியாதவள்போல் எச்சுமுமாமி பக்கத்தில் வந்து படுத்துக்கொண்டேன்.

“லீலா!” என்றார் மாமி.

“ஏன்” என்றேன் பதில்.

“தற்சமயம் நான்தான் உன்னைப் பார்த்துக்கொள்ளவேண்டியது. அதனால் நான் சில விஷயங்களை எடுத்துச் சொல்லுகிறேன். குற்றமாகக் கொள்ளாதே. நானும் குற்றமாகச் சொல்லவில்லை. ஸ்வாதீனத்தில் சொல்லுகிறேன். உனது நன்மைக்கே சொல்லுகிறேன். உன்னைப்போல் படித்தவளல்லவானாலும் உலகத்தின் நன்மை தீமையான அனுபவங்களை நேரில் கண்டறிந்தவள். மிலிட்டரி மாமி உன்னை நாட்டுப்பெண்ணாக ஏற்கப் போவதாக உறுதி செய்துகொண்டிருக்கிறாள்

# ஹமாம் - ஒவ்வொருவருடைய

## மனதிற்கு மிசைந்த ஸோப்பு! ★




★ மற்றெந்த ஸோப்பையும் விட ஹமாமுக்கே அதிக கிராக்கி என்பதற்கு அசல் விற்பனை புள்ளி விவரங்களே சான்று.

**தி டாடா ஆயில் மில்ஸ் கம்பெனி, லிமிடெட்**

என்பது உண்மைதான். சங்கர் நாளை உனது கணவனாக வரப்போகிறவன் தான். ஆனாலும் நம் பெரியோர்கள் ஏற்படுத்தியிருக்கும் ஒரு வரைக்குக் கட்டுப்பட்டு நடப்பது எவ்வளவோ நன்மை தரும். உன் கழுத்தில் மஞ்சள் கயிறு ஏறிவிட்டால் கவலையே இல்லை. ''விதி'' என்பது ஒன்றுக்கும் கட்டுப்படாத விஷயம். அதை மீறி நடக்கும் சக்தி தேவர்களுக்கும் கிடையாது என்று காலம் வரையறுத்திருக்கிறது. போனவருஷம் சிமாச்சு வீட்டில் நடந்த ரகளை தெரியுமே உனக்கு. கல்யாணமாகிவிட்டது, பணத்தாசை பிடித்த மாமியார், தன் வீட்டிற்கு வருமுன் நாட்டுப்பெண் பிள்ளையார் வேஷம் போட்டுவிட்டாள் என்பதற்காக 'விபசாரி' என்று பழிபோட ஏற்பாடு செய்தாள். கோழை, பயங்காளிப் பிள்ளை அம்மாவிற்கும் சொல்ல முடியாமல், மனைவிக்கும் சொல்லமுடியாமல், கல்லுப் பிள்ளையார் மாதிரி இருந்தான். கடைசியில் தைரியமுள்ள பெண்ணானதினால் நாலுபேர் முன்னிலையில் வேளைபொழுது என்று மானத்தைவாங்கினாள். தைரியமில்லாவிடில் வீண் பழிக்கஞ்சி ஆற்றில் கிணற்றில் விழுந்திருக்கும். நம் மனச்சாக்ஷிக்கு விரோதமில்லாமல் நடந்தாலும், கொஞ்சம் உலகத்திற்கு மதிப்புக்கொடுத்தே நடக்கவேண்டும். இதெல்லாம் எதற்குச் சொல்லுகிறேனென்றால், மஞ்சள் கயறு கழுத்திலேறும் வரை தொட்டுப் பேசும் வழக்கத்தை விட்டுவிடு. இன்று தற்செயலாக நான் பார்க்க நேர்ந்தது. இதுவரை போனது போகட்டும். இனிமேல் எச்சரிப்பாக நடந்துகொள். ஆண் பிள்ளைகள் திடமாக நடப்பார்கள் என்று நம்ப முடியாது. ஏதாவது விபரீதமாக நடந்துவிட்டால் உனக்கு உற்றமனிதர் கிடையாது.'' என்றாள்.

''மாமி! இதுவரை இப்படி நடந்ததில்லையென்பதைப் பிரமாணமாகச் சொல்லுகிறேன். இன்று ஏதோ இப்படி நேர்ந்துவிட்டது. இனிமேல் உங்கள் புத்திமதிப்படி நடக்கிறேன். நீங்கள் கூறுவது முற்றிலும் உண்மை. ஆனாலும் வழிதவறிநடக்கும்குணம் அவரிடத்தில் கிடையாது'' என்றேன்.

''தேவாதி தேவர்களும் இந்த விஷயத்தில் தவறுவது சகஜம். இவன் எம்மாத்ரம்? நானும் இனிமேல் இரவில் வெளியில் செல்லும் பழக்கத்தை நிறுத்திவிடுகிறேன். அதற்காக நீங்கள் பேசும் இடத்தில் உட்காரமாட்டேன். மாளிகை காவல் ஏன்? மனக்காவல் தான் வேண்டுமென்றாள்.

''அப்புடியே நடந்துகொள்ளுகிறேன்'' என்றேன். பிறகு ஊருக்குச் சென்றுவிட்டு இரண்டு மாதம் கழித்துத் திரும்பிவந்த அன்று இரவு எட்டு மணிக்கு எவ்விதமோ மாமியை வெளியில் அனுப்பிவிட்டு நான் இருக்குமிடம் வந்தீர்கள். அன்று உங்கள் மனம் இருந்தநிலைமையில் எதிர்த்தால் வீண் மனஸ்தாபத்திற்கு இடமாகும் என்று உங்கள் ஸ்பரிசம் ஏற்படாமலிருக்கப், பொய்யாகத் தேள்கடித்து விட்டது என்று அழுது சாகஸம் செய்தேன். வீடு முழுவதும் தேளைத் தேடி விட்டு, மாமியின் உதவியினால் மருந்து போட்டு விட்டு வீட்டிற்குச் சென்றீர்கள். நீங்கள் சென்ற பிறகு எச்சுமு மாமியினிடம் மட்டும் சொன்னேன். என்னை மிகவும் மெச்சிக் கொண்டார்.

''மறு நாள் தாங்கள் வந்த பொழுது, நாம் எச்சரிக்கையாக நடக்க வேண்டுமென்பதற்காகவே தேள் கடித்து விட்டதோ என்று இரவு முழுவதும் வேதனைப் பட்டதாகச் சொன்னீர்கள். மேலும் இப்படி பயந்து காலம் கழிப்பது எவ்வளவு நாள். கூடிய சீக்கிரம் முடிவு ஏற்பட அம்மாவினிடம்......'' என்று முடிக்கு முன்,

அது வரை பதுமை போல் தலையைக் கவிழ்ந்தபடி உட்கார்ந்திருந்த சங்கர் நிமிர்ந்து, ''லீலா! போதும். இனிமேல் என்னால் பொறுக்க முடியாது'' என்றான் கண்ணில் நீர் பளபளத்தது.

''ஏன்? உள்ளதைச் சொன்னால் கேட்க முடியவில்லையோ? சகோதரி ஸ்தானம் எப்படி? பதில் வேண்டும் எனக்கு'' என்றாள் அவன் பக்கத்தில் வந்து நின்ற வண்ணம்.

''லீலா, என்னை மன்னித்து விடு. ஏதோ மேல் வாரியாகப் பேசினால் லஜ்ஜையினால் மறுக்க மாட்டாய் என்று அவ்விதம் மனச்சாக்ஷிக்கு விரோதமாய்ப் பேசினேன். ஆனாலும் அந்த ஒரே நாளைத் தவிர என்றாவது நாம் மனதின் அன்பு வெளிப்பட நடந்ததில்லையென்பதை நீ மறுக்க முடியாது. என்னை மறந்துவிட நீ பிரயத்தனம் செய்துவிட வேண்டும்''

''மறப்பதா எப்படி முடியும்? தாங்கள் என்னிடம் நடந்து கொண்ட விதம் எவ்விதமானாலும், ஊர் முழுவதும் என்னைத் தூற்றினதோ, பேசினதோ, அளவிலடங்குமா? உங்கள் தாயாரையுமன்றோ பேசினார்கள். கூடிய சீக்கிரம் நமது பிணைப்பு ஏற்பட்டு அவர்கள் வாயை மூட வைக்க வேண்டும் என்று எதிர்பார்த்திருந்த எனக்கு உங்கள் சொல் எத்தகைய துன்பத்தைத் தரும் என்பதைச் சிந்தனை செய்தீர்களா? வாழ்க்கையின் லக்ஷியமே சிதையும் சமயம் லஜ்ஜைப்பட முடியுமா? பெண்கள் முன்னேற்றத்திற்குப் பாடுபடுவதற்காக வாழ்க்கையைத் தியாகம் செய்வதாகச் சொல்லிக் கொண்டு இயற்கைக்குப்

புறம்பான லக்ஷியத்தை நிறைவேற்ற ஒரு இளம் பெண்ணின் வாழ்க்கை பலியாகிறது என்பதைச் சிந்தனை செய்தீர்களா? உங்களுடைய உன்னத லக்ஷியம் எனது வாழ்வின் சமாதியின் மேல் ஸ்தாபிதமாகிறது என்பது புரிந்ததா? செய்கை இன்னது என்பதை அறியாமல் பிரமாணம் செய்வாருண்டா? நான் உங்களை விடமாட்டேன்'' என்று அவன் காலின்கீழ் உட்கார்ந்துகொண்டு அவன் பாதங்களைப் பிடித்துக்கொண்டாள்.

''லீலா! நொந்த புண்ணில் கோலை விடாதே. மூன்று நாட்களாக நரகவேதனைப்பட்டு வேறு வழியின்றி உன்னைக் காண வந்தேன். வராமலே இருந்து விடுவோமா, ஒரு கடிதம் எழுதி விடலாம் என்று நினைத்தேன். ஆனால் கள்ளமற்ற அன்பு என்னை அவ்விதம் செய்ய விடவில்லை. ஊரார் சொல்லிற்கும் ஓர் மதிப்புக்கொடுத்து விடலாம். உன் வாழ்க்கையும் மேலான முறையில் செல்லும். எப்படியாவது எங்கள் குடும்பத்திற்குள் நீ இருக்க வேண்டும். என்னைவிடப் படிப்பிலோ, அழகிலோ, குணத்திலோ, சகல அம்சங்களிலும் சிறந்தவன் என் தம்பி கோபால். நீ சம்மதமளித்தால் அன்புடன் ஏற்றுக்கொள்ளுவதாக வாக்களித்தான். அவனை மணந்து வாழ்க்கையின் இந்திர ஜாலங்களைக்கண்டு இன்புறுவாய். என் காலைவிடு. ஏதோ ஒரு தடவை தடுமாறி, தவறு செய்துவிட்டோம். அதைத்தமாஷ் என்றே சொல்லலாம். தவறு என்று சொல்வது கூட அனுசிதம். நாடகங்களில் நடிக்கவில்லையா? இனிமேல் என்னைத் தீண்டாதே'' என்றான் அமைதியாக.

''தவறுதல்! ஒரு தடவை! அது உங்களைப் போன்றவர்களுக்கு கன்னிகையிடத்திலும், வயதுக்கிளைய விதவையிடத்திலும், வயதிற்கு மூத்த விதவைகளிடத்தும், இன்னும் உங்கள் குறிக்கு இலக்கானவர்களையும், கட்டிப்பிடிப்பது சர்வ சாதாரண விஷயமாகத் தோன்றலாம். என்போன்ற பெண்கள், தூய்மை ஒன்றையே பிரதானமாகக் கொண்ட பெண்ணுள்ளம், ஆயுளில் ஒரே ஒருவரிடம் தான் இத்தவறுதலைச் செய்ய அனுமதிக்கும். அது ஒரு தடவையானாலும் ஓராயிரம் தடவையானாலும் ஒரே மதிப்புத்தான். உங்கள் தம்பி அழகனாக இருக்கலாம், குணவானாக இருக்கலாம். என்னை மனப்பூர்வமாக ஏற்கலாம். ஆனால் என்மனம், என் பெண்ணுள்ளம், எவரைத் தன் மனத்திரையில் முதல் தடவையாகப் படம் வரைந்ததோ அவரை அதைவிட்டு அழிக்கும் சக்தியைப் பெறவில்லை. என்னைக் கைவிடுவது நீதியல்ல. தர்மமுமல்ல. ஆசைக்கனலை மூட்டிவிட்டுப் பற்றியெரியும் பொழுது அணைக்க முன் வருவது சமூக சேவையாகாது. உலகத்திற்கு நீங்கள் செய்யும் நன்மையைவிட உங்களை அண்டினவர்களைக் கைவிடாமலிருப்பது பெரிய சேவையாகும். தன் குடும்பத்தைத் தவிக்கவிட்டு உலகத்தைக் காக்கப் புறப்படும் மனிதன் முன்னேற முடியுமா? முடியாது. என்னைவிட்டு நீங்கள் செல்ல முடியாது. எனக்குப் படிப்பும் வேண்டாம்; மற்றும் ஒருவரும் வேண்டாம். நீங்கள்தான் வேண்டும். நீங்கள் போகுமிடத்திற்கு என்னையும் அழைத்துச் செல்லுங்கள். நீங்கள் செய்யும் எவ்வேலையிலும் நானும் பங்கு கொள்ளுகிறேன். 'தாய் தந்தை குரு எல்லாம் கணவனே' என்று சொல்லுக்குச் சொல்லுவார்கள். ஆனால் நிர்க்கதியான, அனாதையான எனக்கு உண்மையில் சர்வமும் நீங்களே'' என்று அவன்பாதத்தில் முகத்தைப் புதைத்துக்கொண்டு தேம்பினாள்.

''லீலா!'' என்றான் தழுதழுத்த குரலுடன்.

நிமிர்ந்து அவனை நோக்கினாள் தேம்பலுடன்.

''என்னைச் சோதனை செய்யாதே. இருதலைக் கொள்ளி எறும்பாகத் தவிக்க விடாதே. ஒரு முடிவைக் காட்டு''

'முடிவு என்ன? என் காதல் நிறைவேற வேண்டும். காதலைப்பற்றி அணு அணுவாக உபதேசித்து, விஷயங்களைச் சங்குவைத்துப் போட்டுவதுபோல் போட்டி, ரோமியோ ஜூலியட், குதிரைக்காரன் ராஜகுமாரி கதை இந்த நாட்களை எண்ணிப்பாருங்கள். சமூகத்தில் தலைமுறை தலைமுறையாகப் பெரியோர்கள் வகுத்தவந்த பாதையைவிட்டுக் குறுக்கே திரும்புவதில் பலன் என்ன? அவர்கள் அனுபவத்தின்பேரில் தானே சொல்லியிருப்பார்கள். உங்கள் சங்கம் பாழாய்ப் போக, வயதிற்கு மீறினவளுடன் வாழ்க்கை நடத்தினால் என்ன சுகம் காணலாம்''

''அந்த விஷயம்பற்றி உனக்கும் தெரியாது; எனக்கும் தெரியாது. அனுபவத்தில் தான் தெரிந்துகொள்ள வேண்டும், எப்படியிருந்தாலும் சகித்துக்கொண்டு நடந்தால் பழக்கத்தில் சரியாகி விடுகிறது, கிழவர்களுடன் இளம் பெண்கள்போல்''

''இவ்வளவு நாழிகை நான் கதறினது செவிடன் காதில் சங்குதானா? ஐயோ! என்னால் தாங்கமுடியவில்லை. என்னைக் கொன்று விட்டுப்பின் உங்கள் லக்ஷியத்தைக் கடைப்பிடியுங்கள்.''

''லீலா! என்ன சொன்னாய்! உன்னைக் கொல்லவா? உன்னைக் கொல்லுவதற்கு

நான் யார்? ஆனால் கடைசித் தீர்மானமாக முடிவு செய்துகொண்டு தான் இவ்விடம் வந்தேன். நான் விடுதலை பெற இரண்டே வழி தான் உண்டு. ஒன்று நீ மனமிரங்கி எனக்கு விடுதலையளித்தால், சங்கத்தின் சப்தத்தை நிறைவேற்றி லக்ஷியத்தைக் கடைப்பிடித்தவனாவேன். இல்லையென்றால், கையில் ரிவால்வர் தயாராகக் கொண்டு வந்திருக்கிறேன். அது நிரந்தர விடுதலையளித்துவிடும். எனக்கு விடுதலையளிப்பது நீயா? அதுவா? என்பது உன் உள்ளத்தைப் பொறுத்திருக்கிறது'' என்றான் அமைதியாக.

''சங்கர்! அவ்வித விடுதலை நானா அளிப்பது? அதன் உபயோகத்தைத் திருப்பினால் நீங்கள் விடுதலை பெறலாம். சங்கர்! இதைத் தவிர வேறு வழியே கிடையாதா?''

''இல்லை! லீலா! இல்லை! விதி'' அன்றைக்கு நம்புகிறாயா? என்று கேட்டாயே. என்னையறியாமலேயே என்னை இவ்வித நிர்ப்பந்தத்திற்கு ஆளாகும்படி செய்தது விதி செய்த சதிதானே? இல்லாவிடில் புதிய தலைவர் வருவானேன்? இதுவரையிலும் இல்லாத புரட்சிகரமான இயக்கத்தைத்தொடங்குவானேன்? சங்கத்தினின்றும் விடுதலை பெற முடியாத பிரமாணம் செய்திருக்கிறோம். பயங்கொள்ளியாக, கோழையாக, மறைவாக ஓடி வாழ்க்கை நடத்துவது அழகா? உன் அன்பு என் மனமறிந்ததென்றாலும் இவ்வளவு தூரம் உன்னைப் பாதிக்கும் என்று நான் எதிர்பார்க்கவில்லை. இவ்வித அன்பைப்பெற என்ன தவம் செய்திருக்கவேண்டும். அன்பின் வெப்பத்தில் வெடிக்கும் உனது சொல்லமுதம் என்னை நிலைகலங்கச் செய்கிறது. என் சுவாதீனத்தை இழந்துவிட்டேன். முன் சொன்ன இரண்டுடன், கண்காணமல் வசிப்பது என்பதையும் சேர்த்துக்கொள். எதற்கு உன்மனம் விடைகொடுக்கிறதோ அதன்படி நடக்கத் தீர்மானித்து விட்டேன். கண்ணீர் விடாமல் சிந்தனை செய்து விடையளி. இன்றைக்குப் பன்னிரண்டு மணிக்கே இவ்வூர் வந்து விட்டேன். இவ்விடம் வரும் வரை, அம்மா அப்பா இவர்களுடன் போராடினேன் என்றே சொல்ல வேண்டும். எதற்கு என்று நினைக்கிறாய்? அம்மாவின் இந்த ஒரு வாக்கியத்தில் தெரிந்து கொண்டு விடலாம்.

''அட பாவி, ஏண்டா இந்த அநியாயம் செய்கிறாய். பெண் பாவம் பொல்லாது. இப்படி சதி செய்வாய் என்று தெரிந்திருந்தால் அந்தப் பெண்ணின் நகக் கண்களைக் கூட நீ காண முடியாமல் வைத்திருப்பேனே. பணம் நம்மிடமிருக்கிறது. அழகும் குணமும் அவளிடமிருக்கின்றன. இரண்டையும் ஒன்று சேர்த்தால்? என்ற மனப்பான்மையில் இவ்வளவு தாராளமாகப் பழக விட்டேன், ஊராரின் வசைச் சொல்லைக் கூடக் கவனிக்காமல். இனி அந்தப் பெண்ணிற்குக் கல்யாணம் நடப்பதே கஷ்டமாகி விடுமே. மானியான அப்பெண் வேறு ஒருவனை நினைக்கவும் மாட்டாளே. நீ இப்படிச் செய்வதைக் கேட்டதும் பிராணனை விட்டாலும் விட்டு விடுவாளே. அட பாவி, என் வயிறு பற்றி எரிகிறது. நீயும் உன் லக்ஷியமும் நாசமாய்ப் போக'' என்றாள்.

'எதற்கு வளவள வென்று கத்துகிறாய். அடேய், உலக வழக்கத்திற்கு நேர் விரோதமாக இருக்கின்றது உன் செயல். இந்த மாதிரி விவாகங்களைப்பிள்ளைகள் விரும்புவார்கள். பெற்றோர்கள் மறுப்பார்கள். ஒரே வார்த்தை. உன் சங்கத்திற்கு ஒரு முழுக்குப் போட்டு விட்டு லீலாவைக் கல்யாணம் செய்துகொண்டு ஒழுங்கா முறையாகக்குடித்தனம் செய்வதானால் இந்த வீட்டில் இடமும், சொத்தில் பங்கும் உண்டு. இல்லையேல் உனக்கும் எங்களுக்கும் ஸ்னானப் பிராப்திகூடக் கிடையாது.விடுதலைப் பத்திரத்தில் கையெழுத்துப் போட்டுவிட்டுத் தலையில் துணியைப் போட்டுக்கொண்டு உன்சங்கத்தைக் கட்டி அழுதுகொண்டிரு. அடே கோபால், அவன் செய்த துரோகத்திற்குப் பிராயச்சித்தமாக நீ அந்தப்பெண்ணைக் கல்யாணம் செய்து கொள்ளவேண்டும். முடியுமா?'' என்றார் அப்பா.

''அவள் சம்மதித்தால் எனக்கு யாதொரு ஆக்ஷேபனையுமில்லை. ஆனாலும் அண்ணாவைச் சற்று விட்டுப் பிடித்தால் ஒருசமயம் நன்மையாக முடியலாம்'' என்றான் கோபால்.

''கோபால்! என்வழிபோனால் திரும்பமுடியாது. அவர்களின் கட்டளையைச் சிரமேற்கொண்டு விடுதலைப் பத்திரத்தில் கையெழுத்துப்போட்டுவிடுகிறேன். நீயாகிலும் லக்ஷியம் மண்ணாங்கட்டி என்று அலையாது அவர்களைச் சந்தோஷப்படுத்து. லீலாவை உன்னை ஏற்கும்படி கெஞ்சி மன்றாடி சம்மதிக்கச் செய்கிறேன். புத்திசாலியான பெண்ணானபடியினால் என் லக்ஷியம் நிறைவேற உதவியளிப்பாள். ஊராரின் பழிச்சொற்படி நாங்கள் கேவலமான முறையில் பழகவில்லையென்பதைப் பிரமாணமாகச் சொல்லுகிறேன். நீ ஐயமில்லாமல் அவளை ஏற்றுக்கொள்ள வேண்டும்.'' என்றேன்.

''இதெல்லாம் எதற்கு? உன்னால் ஏற்பட்ட களங்கம் என்னால் மறைக்கப்பட்டு விடும்'' என்று சட்டென அவ்விடம் விட்டுச் சென்றுவிட்டான். அம்மாவின் பரந்த

நோக்கத்தின்படி இவ்விஷயம் எங்கள் மூவருக்குள்ளும் அடங்கிவிட்டது. உத்யோக நிமித்தம் வெகுதூரம் செல்லவேண்டியிருப்பதினால் கல்யாணம் செய்துகொள்ளவில்லை. லீலாவின் தனிமையை உத்தேசித்து என் அனுமதியின்பேரில் கோபாலுக்குக் கல்யாணம்செய்துவைப்பதாகப்பிரஸ்தாபம்செய்துவிடுகிறது என்று தீர்ப்புக் கூறப்பட்டது. ஆனால் இப்பொழுது என் மனம் குழம்புகிறது. உன் சொல்லில் அடங்கியிருக்கிறது எனது வாழ்வு" என்று அவளைத் தூக்கி நிறுத்தினான்.

தேம்பல் நின்றது. கண்ணீர் மட்டும் வடிந்துகொண்டிருக்க அவனையே உற்று நோக்கிய வண்ணம் சற்று நேரம் நின்றாள். பிறகு "உங்கள் ஹ்ருதயத்தில் என் முகத்தைப் பதித்துக்கொண்டு அழுவதற்குச் சற்று அனுமதியளியுங்கள். பிறகு எனது விடையைச் சொல்லுகிறேன். அழுதபின் தான் சாந்தி ஏற்படும்" என்றாள்.

"வா!" என்று இரண்டு கைகளையும் விரித்தான்.

மடியில் உட்கார்ந்துகொண்டு மார்பில் முகத்தைப் புதைத்துக்கொண்டாள். கைகளால் அணைத்தவண்ணம் கன்னத்தை அவள் தலைமீது வைத்தபடி சிந்தனையிலாழ்ந்தான். இப்பொழுது அவளது அழுகை நின்றுவிட்டது. பயங்கர மௌனம் குடிகொண்டது. கால்மணி நேரம் சென்றது. தலையை நிமிர்ந்து, "லீலா!" என்றான்.

"ஏன்" என்று கேட்பதுபோல் நிமிர்ந்து உட்கார்ந்துகொண்டாள்.

"விடை யென்ன ?"

"என்னை உங்கள் தலைவர் இருக்குமிடம் அழைத்துச் செல்லுங்கள். மன்றாடிக்கேட்டு விடுதலை வாங்கிவிடுகிறேன்"

"அது நடவாதவிஷயம் லீலா! சீட்டு எடுத்ததுமே தலைவர் என்னை அழைத்து, மற்றவர் விஷயங்கள் அதிகப் பிரயாசையில்லை. உன் விஷயம்கடுமையான சோதனை. அதனால் விதிவிலக்கு அளித்துவிடுகிறேன். 'ஒரு பெண்ணின் முன்னேற்றத்திற்காக ஒரு பெண்ணின் வாழ்க்கை கெடலாகாது' என்றார்.

"அப்பொழுது பக்கத்தி லிருந்தவர்கள் எனக்குக் கல்யாணமாகவில்லை யென்பதைத் தெரிவித்தார்கள். அவர் என்னைக்கேட்டபொழுது ஆமாம் என்று ஒப்புக்கொள்ளுவதைத் தவிர என்ன செய்ய முடியும்? அந்தச் சமயம், உன் நினைவு வரத்தான்செய்தது. விதி இப்படி வழிவிட்டுவிட்டதே என்ற நினைப்பில், ஒத்துக்கொள்ள வேண்டி வந்தது. பிறகு யாவரும் கூடி நிற்கும் சபையில் 'எனக்குப் பத்துவயது பெரியவளான விதவையையே எனக்கு வாழ்க்கைத் துணையாகக் கொள்வேன். அமைதியுடன் நடந்து வயோதிகர்களுக்குப் புத்தி கற்பிப்பேன்.' என்று சங்கமுறைப்படி சத்யம் செய்தேன். இன்னும் மூன்று மாதத்தில் எங்கள் லக்ஷியத்தைச் செய்கையில் காட்ட வேலை தொடங்க வேண்டும். அப்பொழுது இவ்விஷயங்கள் பத்திரிகையில் பிரகடனம் செய்யப்படும். அதனால் நான் சொன்ன மூன்று வழிகளே உள்ளன."

"நான் யாராவது ஒருகிழவருக்கு வாழ்க்கைப்பட்டு, அவரைக் கொன்று விதவையாகி உங்கள் லக்ஷியப்படி உங்களை மணப்போமென்றால், எட்டு வயதிற்கு இளையவளாகவன்றோ இருக்கிறேன். அதுவும் நடக்க முடியாது, இப்படியே உங்கள் அணைப்பில் என் ஜீவன் விடுதலை பெறுமாயின் எவ்வளவு நன்மை யாவருக்கும்.?"

"நீ சுயநலம் பேசுகிறாய். நான் அப்படி நினைக்கவில்லை. இந்த நிலைமையில் இருவர் ஜீவனுமே இவ்வுலகத்தில் விடை பெறுமானால்? எவ்வளவு நன்மை? என்று என் மனம் எண்ணுகிறது. ஆனால் அது விஷயம் இயற்கையாக நேராது. நாமாகச் செய்துகொள்ளலாம். சரி யென்று சொல்லு. உடனே நிறைவேற்றி வீடுகிறேன்."

சற்று நேரம் மௌனம் நிலவியது. ஒருவர் விழி ஒருவரைக் கவ்வ உட்கார்ந்திருந்தார்கள். நீண்ட மூச்சுக்குப் பின்னர் "சங்கர்! அப்படிச் செய்வது இகபரம் இரண்டிற்கும் நன்மையாகுமா? மேலும் உங்கள், கொள்கையான விதி ஏறுமாறாக ஏதாவது செய்துவிட்டால்? அப்பா! நினைக்கவும் என் நெஞ்சம் நடுங்குகின்றது. என் காதல் தெய்வீகமென்றால் உங்கள் நன்மையைத் தானே என் ஹ்ருதயம் நாடும். எங்கேயாவது நீங்கள் ஸௌக்யமாக இருந்தால் அதுவே எனது ஆத்ம சாந்திக்குரிய விஷயம். உங்களுடன் வந்து, உங்கள் தலைவரிடம் 'என்னைச் சேர்த்துக்கொள்ளுவதினால் ஸ்த்ரீகள் விஷயத்திலும் உங்கள் சங்கங்கள் முன்னோக்கிச் செல்லுகிறதென்று பெருமையுண்டாக்குங்கள்.' என்று கேட்பேன். ஆனால், தாங்கள் கிழவியுடன் இல்லற வாழ்க்கை நடத்துவதை என்னால் பார்த்துச் சகித்துக்கொண்டிருக்க முடியாது. எந்தப் பெண்ணுள்ளமும் அதை வரவேற்காது. அதனால் அந்த நினைப்பைக் கைவிட வேண்டியது. நீங்கள் விளையாடிவிட்டு, உங்கள் தம்பி விளையாடுவதற்கு அனுமதிப்பதற்கு நான் மண்பதுமை

யல்ல. உணர்ச்சி யுள்ள பெண் என்பதை நினைப்பூட்டுகிறேன். இவ்வளவிற்குப் பின் என் மனம் தெளிவுறாமலிருக்கமுடியுமா? தாங்கள் தங்கள் லக்ஷியப்படி கிழவியை மணந்து இன்ப வாழ்க்கை நடத்தச் செல்லுவதை நான் தடுக்கவில்லை. தாராளமாகச் சென்று வாருங்கள். நான் இந்தப் பரீக்ஷை முடிந்ததும் ஏதாவது அனாதை ஆசிரமத்தில் சேர்ந்து என்னாலான தொண்டு செய்து வருகிறேன். நீங்கள் சமூக சேவையில் விளம்பரஸ்தானத்தில் விளங்கினால் ஏதோ குடத்தினுள் விளக்குப் போல் என் ஆத்ம திருப்திக்காகவும் ஈசுவரார்ப்பணமாகவும் "பணிசெய்து கிடப்பதே என் கடன்" என்று என் வாழ்நாளைக் கழித்துவிடுவேன். மனமிருந்தால் மாதம் ஒரு கடிதமாவது உங்கள் சுகத்தைத் தெரிவிப்பதற்காக எழுதினால் இருக்குமிடம் தெரிந்து ஏதோ நானும் எழுதி ஆறுதலை அடைவேன். இல்லையேல் இதோ இந்த லாக்கெட்டினுள் உங்கள் கையினால் வைத்த பிரதி பிம்பம் இருக்கிறது. நீங்கள் என்னை மறக்கப் பிரயத்தனப்பட்டாலும் என் ஹ்ருதயத்தைத் தொட்டு நிற்கும் இதன் சக்தி என்னை மறக்க முடியாது என்பது சத்யம் (என்று லாக்கெட்டைக் கையிலெடுத்துக் காட்டிவிட்டு) என் நினைப்புடன் தான் மற்றவனுடன் வாழ்க்கை நடத்தவேண்டும்.

'நளாயினி போன்ற பைத்தியக்காரப் பெண்மணிகள் தோன்றிய பாரத பூமியில் பிறந்து. அதே ரத்தம் ஓடுவதினால், நீங்கள் உங்கள் லக்ஷிய வாழ்வை நடத்திவிட்டு மெய் தளர்ந்து பின்பு என்னை நாடி வந்தால் அப்பொழுதும் உங்களை மனமுவந்து ஏற்றுக் கொள்ளவே பைத்தியக்காரப் பெண்மனம் இடமளிக்குமே தவிர மற்றப்படி எந்த ரூபவானானாலும் குணவானானாலும் இடமளிக்காது. இது இந்தியகலாசாரத்தின், இந்துப் பெண்களின் பண்பு.

"ஒன்று மட்டும் என்னால் சொல்லாமலிருக்க முடியவில்லை. இயற்கைக்குப் புறம்பான உங்கள் லக்ஷியம் கனவில்தான் சுகங் காணலாம். கனவில் நிறைவேறும். ஆகையால் உங்கள் லக்ஷியக் கனவு கனவுதான்.

"ரோமியோ ஜூலியட்டின் உவமை கொண்டு நமது காதல் ஆரம்பமாயிற்று. நிறைவேறாக் காதலாக முடிந்தது.

"காதல் வனத்தில் விளையாடப் புகுந்ததை, தவறுதல் என்று இன்று திர்ப்பளித்துவிட்டீர்கள். முதல் தவறு அன்று. லக்ஷியக் கனவுகாணத் துயில இடந்தேடிப் புறப்படும் இச்சமயம் தவறுதல் இரண்டாந்தடவை நடைபெறுகிறது. எதுவும் மூன்றாவது என்பது முடிவைக்காட்டும் நிகழ்ச்சியாகக் கருதப்படுகிறது. இனி மூன்றாவது தவறுதலாக நடப்பது என்பது, ஒன்று எனது காதலாகிய ஜீவன் அணையும் தறுவாயில்நிச்சயம் உண்டு. அப்படியில்லையேல் காதல் வனத்தில் லக்ஷியச் சூறாவளி புகுந்து சின்னபின்னப்பட்டுப் போனாலும், காலத்தின் மாறுதலினால் பருவமழையைத் தடுக்காதவாறு, காதல்வனம் மறுமலர்ச்சி பெறுமானால் அந்தத் துவக்கத்தில் மூன்றாவது தவறு நடக்கும். தாங்கள் சென்றுவரலாம்" என்று மளமளவெனச் சொல்லி முடித்துவிட்டு எழுந்து நின்றாள்.

"லீலா! நீ தான் லக்ஷியப் பெண்மணி. ஆனால் வரும் விதியை எதிர்பாராது, தெளிந்த நீரோடை போலிருந்த உன் மனதைக் கலக்கிச் சேறாக்கி விட்டுச் செல்லும் மதயானையாக நான் ஆனது பற்றி மிகவும் வருந்துகிறேன். "விதி" என்பதை நான் பூர்ணமாக நம்புவதினாலேயே இத்தகைய சோதனைகள் ஏற்படுகின்றன போலும். இன்னும் அவ்விதியை நம்பியே செல்லுகிறேன். உன் மனதைப் பூர்ணமாக அறிந்துகொண்டு மேல் பேச்சாக நீ வாழ்க்கைப் பாதையைக் கடக்க மற்றொருவனின் துணையைத் தேடவேண்டுமென்று சொல்ல மனம் இடமளிக்கவில்லை. உன் மனப்படி விதி என்பது எந்தப் பாதையைக் காண்பிக்கின்றதோ அதில் பிரயாணம் செய். விதி அனுமதிக்குமானால் மறுபடியும் நிச்சயம் சந்திப்போம், காதல் வனத்தில் விளையாடச் செல்ல. அல்லது மரண தேவனின் கைக்குள் சிக்கிவிட்டோமானால் மறு உலகில் நிச்சயமான வாழ்க்கை நடத்துவோம்" என்று எழுந்து அவள் அருகில் வந்து நின்றான்.

"கடைசியாக ஒன்று யாசிக்கிறேன்" என்றாள்" தன் இரு கைகளினாலும் அவன் இரு தோளைப்பற்றியவாறு.

"என்ன வேண்டுமானாலும் கேள். எனது லக்ஷியத்தைத்தவிர"

"அதைக் கேட்கப் பைத்தியமா? தாங்கள் போகும்வரை என் அருகில் இருக்கமாட்டீர்களா?" என்றாள் கண்ணீர் ததும்ப.

"லீலா! புறப்பட அரைமணி நேரமே இருக்கிறது. ஒன்பதரை வண்டிக்குப் போக வேண்டும். மணி எட்டு எட்டரைக்குப் புறப்பட்டால் தானே ஒன்பதேகாலுக்காவது ஸ்டேஷன் போய்ச் சேரமுடியும். அதுவரை உன் அருகிலேயே இருக்கிறேன்."

"வீட்டில் அப்பா அம்மாவிடம் சொல்லிக்கொள்ள வேண்டாமா?"

"விடுதலைப் பத்திரத்தில் கையெழுத்திட்டதுமே ஒரே அடியாக விடை பெற்றுக்கொண்டு வந்துவிட்டேன். சாமான்களுடன் கோபால் வண்டியில் இவ்விடம்வந்து என்னை அழைத்துச் செல்லுவதாக ஏற்பாடு செய்துவிட்டு வந்திருக்கிறேன்"

சற்று நேரம் அவனைப் பார்த்தபடியே நின்றாள். பிறகு, "சங்கர், தங்களை மறுமுறை எப்பொழுது காணமுடியும்?" என்று சொல்லும் பொழுதே அழுகை பீரிட்டுக்கொண்டு வந்துவிட்டது. அப்படியே அவன் தோளில் சாய்ந்துகொண்டு தேம்பலானாள்.

சமாதானம் சொல்லிப்பிரயோஜனமில்லையென்ற நினைப்பினால் அவள் கன்னத்தின்



மீது தனது கன்னத்தை வைத்தவாறு இறுக அணைத்துக்கொண்டான். எவ்வளவு நேரமாயிற்றோ அதை அவன் கவனிக்கவேயில்லை. அவன் முதுகை வருடியவண்ணமிருந்த கை ஜீவனற்று நழுவி நின்றது. தேம்பலேயில்லை. "லீலா!" என்றான். பதிலில்லை. சட்டெனத் தன் முகத்தை நிமிர்த்திக்கொண்டு முகவாய்க் கட்டையைப் பிடித்து நிமிர்த்தினான். அழுகை, மனப்புயல் இரண்டும் அவளைச் சுய உணர்வு அற்றுப்போகும்படி செய்துவிட்டன என்பதை அறிந்தான். சட்டெனக் குழந்தையைப் போல் தூக்கி எடுத்துப்பக்கத்திலிருந்த நார்க் கட்டிலின்மீது ஒருகையினாலேயே படுக்கையை விரித்துப் படுக்கவைத்தான்.

அவள் கண் விழிக்கவில்லை. சைத்யோபசாரம் செய்து எழுப்பலாமென்று நினைத்து உள்ளே சென்று ஜலம் எடுத்து வந்தான். அவள் அருகில் வந்ததும் சட்டென ஓர் நினைப்புத் தோன்றலாயிற்று. 'இது சாதாரண மூர்ச்சைதான். சற்று நேரத்தில் எழுந்துவிடலாம். அதனால் இப்படியே விட்டு விட்டு நாம் செல்லுவது தான் இருவருக்கும் நன்மை. விழித்தால் பிரிவது மிகவும் கஷ்டமாகி விடும்.' என்று ஜலத்தைக் கீழே வைத்துவிட்டு அவளையே உற்று நோக்கினான்.

"ஒரு சமயம் இதுவே மரண மூர்ச்சையாக இருந்துவிட்டால், ஐயோ! பயங்கரமே" என்று தலையை இரு கைகளினாலும் பிடித்துக் கொண்டான். பிறகு "விதி அப்படி இருக்குமானால் நாம் அதை எவ்விதம் மாற்ற முடியும்" என்று பலவாறு எண்ணமிட்டுவிட்டுக் கடைசியில் அப்படியே விட்டுச் செல்லுவது தான் உத்தமம் என்ற முடிவிற்கு வந்தது மனம். இரு பக்கமும் கைகளை ஊன்றிய வண்ணம் குனிந்து அவள் முகத்தை உற்று நோக்கியபடியே நின்றான். அவன் கண்ணீர் அவளின் நெற்றியில் உருண்டது. திடுக்கிட்டவனாக நிமிர்ந்தான் விழித்துக் கொண்டு விட்டால்? என்ற பயத்தால்.

"லீலா! உன்னைத் தூக்கியவாறு மனித சஞ்சாரமற்ற இடத்திற்குச் சென்றுவிடட்டுமா?" என்று வாய் முணுமுணுக்க நீண்ட மூச்சுவிட்டான். அடுத்தகணம் சங்கக் கூட்டமும், தான் ஆவேசத்துடன் சபதமேற்றதையும் நினைவில் கொண்டுவர, "சே, என்ன கோழைத்தனம்? தியாகம்? லீலாவின் தியாகமே எனது லக்ஷியத்தை நிலைநாட்ட உறுதி கொடுக்கும். விதி அவளைக் காப்பாற்றும் என்று சொல்லும் பொழுதே வாசலில் ஹாரன் சப்தம் கேட்டது.

"லீலா! நான் போய் வருகிறேன். நான் வரும்பொழுது இருந்த திட வைராக்யம் உனது அன்புக் குமுறலில் வெடித்த சொற்களால் அசைவுற ஆரம்பித்துவிட்டது. மூர்ச்சையுற்ற நிலைமையிலே தூக்கியவாறு உலகெங்கும் சுற்றலாம் என்ற அவாவும் எழுந்தது. நானே தேடிக்கொண்ட விதியின் விளைவை நினைக்க உணர்வுடன் உன்னைப் பிரியும் சக்தி என்னிடமில்லையென்பது புலனாயிற்று. அதனால் இந்த நிலைமையில் விட்டுச் செல்லுகிறேன். என்னை மன்னித்துவிடு. உன் பெண் மனம் எனக்கு நிச்சயம் மன்னிப்பை அளிக்கும். ஈசன் உன்னைக்காப்பாராக. நான் சென்று வருகிறேன் லீலா! கோபாலை உன் மூர்ச்சை தெளியும்படி செய்யச் சொல்லிப் போகிறேன்.

என்றும் உன் அன்பன்
சங்கர்

என்று துண்டுக்கடிதத்தில் சட்டென எழுதி, தலைமாட்டில் வைத்து, பக்கத்திலிருந்த கண்ணாடி டம்ளரைப்பாரமாக வைத்துவிட்டு அவள் முகத்தருகில் குனிந்தான். சட்டென நிமிர்ந்து கன்றைப்பிரியும் பசுவைப்போல் திரும்பித் திரும்பிப் பார்த்தவாறு சென்று வாயிற்படியில் நின்று ஒருமுறை நோக்கிவிட்டு விர்ரெனச் சென்றுவிட்டான்.

(தொடரும்.)

# நாலில் ஒன்று

வாரன்

**1941** ஆம் வருஷம் ஜனவரி மாதம் ஒரு நாள். மாலை மணி ஐந்திருக்கும் கோயமுத்தூரில் ஜெயில் ரோட்டின் மீது விஸ்தாரமாகவிருந்த காம்பவுண்டில் பெரியதொரு பங்களாவின் எதிரேயிருந்ததும் நான் வாஸம் செய்துகொண்டிருந்ததுமான ஔட் ஹவுஸில் கையில் ஏந்திய புஸ்தகத்தோடு கவிதானுபவத்தில் ஆழ்ந்திருந்தேன். "எதிரே காப்பியை வைத்து ஒரு நாழியாகிறது. 'ஆறிப்போகிறது' என்று பத்துத் தரம் சொல்லியும் காதில் வாங்காமல் என்ன படிப்பு இது?" என்று என் மனைவி உரத்த குரலில் அதட்டியதுபோல் பேசினாள். அப்போதுதான் என் மனம் கவிதையுலகைவிட்டு இம் மண்ணுலகத்திற்கு வந்தது. எதிரே வைத்திருந்த காப்பியை ஒரே மடக்கில் உள்ளே விட்டேன். உடனே மேலும் படிக்கலாமென்று புத்தகத்தைத் திருப்பினேன்.

அதே சமயத்தில் 'சாஸ்திரிகளே' என்று யாரோ வீட்டு வாசலிலிருந்து அழைக்கும் குரல் கேட்டது! பழக்கமில்லாத புதுக் குரலாயிருக்கிறதே. யாரோ? பார்க்கலாம், என்று புஸ்தகத்துடன் வெளிச்சென்றேன். மகாகனம் ஸ்ரீநிவாஸ சாஸ்திரியார் கைத்தடியுடன் வாசலில் நின்றுகொண்டிருந்தார். எனக்கு மிகவும் ஆச்சரியமாகவிருந்தது. உலகக் கியாதி பெற்றவரை, மகாத்மாவின் அன்பிற்கும் மரியாதைக்கும் பாத்திரமான மகாபுருஷரை முயற்சி எதுவுமின்றி நமது வீட்டு வாசலிலேயே காணப் பெற்றோமே என்ற மகிழ்ச்சியும் உண்டாயிற்று. பங்களாவின் சொந்தக்காரர் சேஷா சாஸ்திரிகள் ஒரு மாதத்திற்கு முன் காலமான செய்தி தெரியாமல் அவரைத் தேடி வந்திருப்பாரோ என்று ஆலோசனை செய்தேன்.

'சாஸ்திரிகள்' வெளியே போயிருக்கிறாரோ? என்று மறுபடி என்னையே பார்த்துக் கேட்டார். எந்தச் சாஸ்திரிகளைப் பார்க்கிறீர்கள்? அவர் பெயரென்ன? என்றேன்.

எனக்கு ஸம்ஸ்க்ருத பாடம் சொல்லிவரும் சாஸ்திரி, இந்த ஔட் ஹவுஸில் இருக்கிறாரே அவரைப்பார்க்க வந்தேன்!' என்று சொன்னதும் தவறு இன்னதென்பதை நான் புரிந்துகொண்டேன்.

அவர் இருப்பது பங்களாவின் பின்புறம். அங்கும் இதேபோல ஒரு ஔட் ஹவுஸ் இருக்கிறது. ஆனால் அவர் சற்று முன்புதான் இங்கே வந்தார். கடைத் தெருவுக்குப் போகிறேன், திரும்பிவர இரவு ஏழரை மணியாகும் என்று எனக்கும் ஒரு 501 ஸோப் பார் வாங்கி வருவதாகச் சென்றிருக்கிறார் என்று தெரிவித்தேன்.

கையில் என்ன புஸ்தகம்? என்று என்னைக் கேட்டபோது அதை மகாகனம் சாஸ்திரியாரிடம்கொடுத்து அங்கே திண்ணையில் போட்டிருந்த பெஞ்சியில் உட்காரும்படி வேண்டிக் கொண்டேன். அவர் உட்கார்ந்ததும் நான் கொடுத்த புஸ்தகத்தைப் புரட்டிப் பார்க்க ஆரம்பித்தார். அந்தச் சமயம் பார்த்து வீட்டிற்குள் போய் ஒரு டம்ளரில் காப்பியை எடுத்துக்கொண்டு வந்து அவர் முன்னே வைத்துச் சாப்பிடச் சொன்னேன். 'கொடுத்தபோதெல்லாம் சாப்பிடும்படி உடல் நலம் சரியாயில்லை' என்று மறுத்துவிட்டார்.

"உமக்கு ஸம்ஸ்க்ருத காவிய நாடகங்களில் விசேஷப் பயிற்சியும் அநுபவமும் இருக்கும் போலத் தெரிகிறது. பென்சில் அடையாளம் இட்டிருக்கிற இந்தச் சுலோகத்தைச் சந்தத்தோடு படித்துக் காட்டும்" என்று சொல்லிக்கொண்டே பக்கம் பிரித்தபடியே கையிலிருந்த புஸ்தகத்தை என்னிடம் கொடுத்தார்.

அவர் முன்பு படிக்க எனக்குக் கூச்சமாயிருந்தது. சிறிது நேரம் தயங்கி

னேன். என்னையறியாமலே திடீரென்று ஒரு தைரியம் பிறந்தது. ஒரு கணைப்புக் கனைத்துக் கொண்டு, 'எதிரே இருப்பவர் தம் வாக்கு வன்மையால் உலகையே மோஹிக்கச் செய்தவர்' என்பதைக் கூட மறந்து நான் ஒரு பிரசங்கமே செய்ய ஆரம்பித்து விட்டேன்.

ஸம்ஸ்க்ருதத்தை விடத் தமிழிலும் தமிழ்க் காவியங்களிலும்தான் எனக்கு விசேஷப் பயிற்சி உண்டு. ஐரோப்பிய கவிகளின் புகழுரைகளைப் பார்த்த போது காளிதாஸன் இயற்றிய காவியங்களையும் நாடகங்களையும் ஒன்றும் விடாமல் படிக்க வேண்டும் என்ற ஆசை உண்டாயிற்று. ஆங்கில மொழி பெயர்ப்பின் உதவியால் ஆறு மாதங்களாகப் படித்து வருகிறேன். மொழி பெயர்ப்பைக் கொண்டு தெரிந்து கொள்ள முடியாத நுட்பமான பொருள்களைத் தங்களுக்குப் பாடம் சொல்லும் சாஸ்திரியிடமே நேரம் வாய்த்த போது கேட்டுத் தெரிந்து கொள்கிறேன்.

தெலுங்கில் கன்னடத்தில் மலையாளத்தில் ஹிந்தியில் ஆக எல்லாப் பாஷைகளிலும், காளிதாஸன் இயற்றிய கிரந்தங்களுக்குச் சரியான மொழி பெயர்ப்பு இருக்கும்போது நமது தமிழில் இல்லாதது மகா துர்ப்பாக்கியம் என்றே சொல்லவேண்டும். அதிலும் சாகுந்தல நாடகத்திற்குத் தக்க மொழிபெயர்ப்பில்லாத குறை நினைக்க நினைக்கத் துக்கத்தைப் பெருக்குகிறது' என்று மேலும் சொல்லப்போன பொழுது மகாகனம் சாஸ்திரியார் என் பேச்சை நிறுத்தும் பொருட்டுத் தம் கையினால் ஜாடை காட்டினர். நான் நிறுத்தினதும் "நீர் இனிமேல் துக்கத்தை விடும். சந்தோஷத்தைப் பெருக்கும். நீர் பென்சில் அடையாளம் செய்திருக்கிற சுலோகம் தமிழிலும் கவிரூபத்திலே இருக்கிறது. தெரிந்து கொள்ளாதது உம்முடைய குற்றம்தான். சொல்கிறேன் கேளும்" என்று ஒரு தமிழ்ப் பாட்டைச் சாஸ்திரியார் சந்தத்துடன் தமக்கே உரிய இனிய குரலில் அர்த்த பாவம் மனதிலே பதியும்படி சொன்னர்:

வருந்தவரு தாகம்உள போதுநுமை முன்நீர்
வார்த்துஅளி செயாதுமுதல் மாந்த முயலாளால்
பொருந்த அணி செய்வதை விரும்பியுளளேனும்
பொத்தில்உயர் நட்பினும் இடைத்தளிரும்
வவ்வாள்
அரும்பிவரு போதின்ஒரு கன்னிமலர் பூப்பின்
அந்நிலையின் மங்கல விழாஅயர்வள் அந்நும்
இருந்துணை சகுந்தலை புகும்கணவன் கோயில்
இவண்விடை அளிப்பிர் அனைவீரும் இவளுக்கே

[நுமை முன் நீர் வார்த்து அளி செயாது—உங்களை முதலில் தண்ணீர் விட்டு அன்பு செய்யாமல், முதல் மாந்த முயலாள்—முதலில் தான் பருக முயற்சி செய்ய மாட்டாள், அணி செய்வதை—(தான்) அலங்கரித்துக் கொள்வதை, பொத்தில் உயர்நட்பினும்—மலர் அரும்பில் மிக்க ஆசையாலும்கூட, வவ்வாள்—பறிக்கமாட்டாள், அரும்பி வருபோதின்—பூப்பூக்கும் வசந்த காலத்தில், கன்னி மலர்—முதலாவது வெளிவரும் பூ, அந்நிலையின்—அப்பொழுதே, விழா அயர்வள்—திருவிழாக் கொண்டதில் ஈடுபட்டவள்போல் உற்சாகம் பெறுவள், அந்நும் இரும்துணை—அத்தகைய உங்களின் அரும் துணைவி (தோழி).]

இப் பாடலை இரண்டுமுறை பாவார்த்தம் விளங்கப் பாடிக் காட்டினர். 'இதை விட வடமொழிச் சுலோகத்தில் என்ன ரஸனையைக் கண்டு அநுபவித்து விட்டீர்' என்று சொல்லி என் முகத்தை உற்றுக் கவனித்தார். 'ஒன்றுமில்லை' என்று சொன்னதுபோல் நான் தலையை அசைத்தேன். "இந்தச் சுலோகத்தில் அடங்கிய உயர்ந்த பாவத்தை நான் ஐரோப்பாவில் இருந்தபோதுதான் உள்ளபடி கிரகித்து உணர்ந்து அநுபவித்தேன். அந்த விவரத்தைக் கவனித்துக் கேளும்" என்று வசீகரமாக மேலும் சொல்லலானர்.

நமது தேசத்தில் பண்டிதர் கோஷ்டியில் 'கிரந்தங்களில் சிறந்தது காவியம். காவியங்களில் சிறந்தது நாடகம். நாடகங்களில் சிறந்தது சாகுந்தலம். சாகுந்தலத்தில் சிறந்தது நாலாம் அங்கம். அதில் சிறந்தது நாலு சுலோகங்கள்.' என்று கர்ண பரம்பரையாகச் சொல்லப் படுகிறது. அந்த நாலில் ஒன்றைத்தான் நீரும் உமது புஸ்தகத்தில் பென்சில் அடையாளமிட்டுக் குறித்திருக்கிறீர்.

பரம வேதாந்தியும் ஜெர்மன் மஹா கவியுமான காதே என்பவன் இச் சுலோ

கத்தை நம் தேசத்தார் பலரைவிட ஆழ்ந்து அநுபவித்திருக்கிறான். தன் அனுபவத்தை ஒரு பாராட்டுக் கவிரூபமாக நாலுவரிகளில் வெளியிட்டிருக்கிறான். அக்கவி ஆங்கிலத்தில் மொழி பெயர்க்கப்பட்டது. அதன் சாரம்—

'மண்ணுலகின் நலங்களும் விண்ணுலகின் நலங்களும் ஒன்றாகச் சேர்க்கப்பட்ட வஸ்துவா நீ? அவ் வாறாயின் உடனே உன்னைச் சகுந்தலை என்றே பொருத்தமாகப் பெயரிட்டு அழைக்கிறேன்!'

இதுபற்றி வரும் ஆங்கிலக் கவியில் சகுந்தலா (Sakuntala) என்று ஒரு பதம் வருகிறது, அதைப் பல அறிஞர்கள் 'சாகுந்தலா' என்று படித்துக் காதே ஆசிரியர் சாகுந்தல நாடகத்தைப் பாராட்டியிருப்பதாகவே பொருள் செய்துகொண்டனர். 'சாகுந்தலா' என்று சொல்வது செய்யுளின் ஓசைக்குப் பொருத்தமாயில்லை. 'சகுந்தலா' என்றிருப்பதுதான் சரி என்று கண்டுகொண்டேன். ஆனால் 'சகுந்தலா' என்பது நாடகத்தைக் குறிக்காதே. 'சாகுந்தலா' என்றிருப்பதுதானே நாடகத்திற்குப் பெயராக முடியும். செய்யுள் ஓசையைக் கவனித்தால் தக்க பொருளுக்கு இடமில்லையே என்ற பிரச்னை எனக்குண்டாயிற்று, என்ன செய்வதென்று ஆலோசித்துப் பார்த்தேன்.

திடீரென்று ஒரு யோசனை தோன்றிற்று. லண்டனில் எனது ஜாகைக்குப் பக்கத்தில் ஜெர்மன் பாஷையிலும் இலக்கியத்திலும் தேர்ந்த ஆங்கில நண்பர் ஒருவர் இருந்தார். உடனே அவரிடம் சென்று காதே இயற்றிய ஜெர்மன் மூலகவியைப் படிக்கச் சொல்லி அதன் பொருளைக் கேட்டேன். நான் விரும்பியபடி அப் பதம் நாடகத்தைக் குறிக்காமல் 'சகுந்தலை' என்ற நாடக பாத்திரத்தையே குறித்தது எனக்கு அளவு கடந்த வியப்பையும் ஆனந்தத்தையும் உண்டாக்கிற்று. அவ்வானந்த அனுபவம் எனக்கிருந்த அளவிற்கு, நூதன உண்மையைக் கண்டுபிடித்த ஒரு விஞ்ஞானிக்குக்கூட இருக்குமா? என்பது எனக்குச் சந்தேகம் தான்.

ஜெர்மன் கவி, காளிதாஸன் அற்புதமாகச் சிருஷ்டித்திருக்கிற சகுந்தலை



என்ற பாத்திரத்தையே கொண்டாடுகிருன். அதிலும் இந்தச் சுலோகத்தையே ஆதாரமாக வைத்துக் கொண்டாடுகிருன்.

தேசம் மதம் பாஷை சமுதாயம் முதலிய பேதங்களைக் கடந்து மனிதன் தன்னைப் போல் பிறமனிதர்களை நேசிக்க வேண்டும். இவ்வுயர்ந்த லக்ஷியம் நாடக காவியங்களில் பிரசாரம் போல் புகுத்தப்படாமல் வாழ்க்கையின் தத்துவமாகக் காவிய நாடக பாத்திரங்களில் இயற்கைக்கு மாறுபடாதபடி காட்டப்படவேண்டும். 'அதுவே சிறந்த கலையாகும்' என்று விமர்சனக்காரர்கள் மேல் நாட்டில் அடிக்கடி சொல்வதுண்டு.

காளிதாஸனின் சகுந்தலை என்னும் பாத்திர சிருஷ்டி விமர்சகர் எதிர்பார்க்கும் அளவிற்குமேல் கலையழகில் பன்மடங்கு முன்னேறிவிட்டது. தன்னைப் போல் பிறரையும் எண்ணி மனிதன் மனிதனை நேசித்து உதவுவது அரிது. அதனினும் அரிது அவன் மிருகங்களை நேசிப்பது. அதனினும் அரிது தாவரங்களை நேசிப்பது.

சகுந்தலை தன்னைப் பார்க்கிலும் அதிகமாகத் தாவரத்தை நேசிக்கிருள். தனக்குரிய வசதிகளையும் விட்டுச் செடிகொடிகளை நீர் வார்த்தும் வளர்வதற்கேற்ப நிலத்தைப் பண்படுத்தியும் பராமரிக்கிருள். நாக்கை வறட்டி வேதனை செய்யும் தாகம் தனக்கு எடுத்தாலும் பொருட்படுத்துவதில்லை. செடிகளுக்கு நீர் வார்க்குமுன் தான் நீர் அருந்த நினைப்பதேயில்லை.

பெண்களுக்குப் பூவினல் தங்களை அலங்கரித்துக் கொள்ளவேண்டும் என்ற விருப்பம் இருப்பது இயல்பு. சகுந்தலையும் இதற்கு விலக்கல்ல. ஆனல் அலங்காரம் செய்துகொள்ளும் ஆசையிருந்தாலும் சகுந்தலை நிறையப் பூக்கள் பூக்க வேண்டுமென்று செடியிலிருந்து ஒரு தளிரைக்கூடப் பறிப்பதில்லை. வஸந்த காலத்தில் தான் வளர்த்த செடியில் முதற் பூத் தோன்றினல் அதைக் கண்டு சகுந்தலை தன் குடும்பத்தில் விழா வந்ததைப் பார்க்கிலும் பன் மடங்கு சந்தோஷமடைவாள். தாய்க்குக் குழந்தை விஷயமாக ஏற்படும் மனநெகிழ்ச்சியைவிடத் தாயாகப்போகும் சகுந்தலைக்குத் தாவரத்தினிடம், பன்மடங்கு அதிகமாக உண்டாயிருந்த மன நெகிழ்ச்சியும் அன்பும் கண்ணுவ முனிவர் உள்ளத்தையே கொள்ளை கொண்டுவிட்டன.

எல்லாவற்றையும் துறந்த தமக்குக் கூட ஏற்படாத அளவிற்குச் சகுந்தலை பெற்றிருந்த விரிந்த ஹ்ருதயத்தையும் சம நிலையையும் கருணையையும் நினைந்து நினைந்து தந்தையாகிய கண்ணுவர் உருகுகிருர். குணக் களஞ்சியமாகிய சகுந்தலை என்னைவிட்டுப் பிரிகிருள். பிரிய மனம் இடம் கொடுக்காவிட்டாலும் அவளைக் கணவனிடம் அனுப்பவேண்டிய கருமத்தைநினைந்து விடை கொடுத்துவிட்டேன். அன்போடு உங்களைப் பராமரித்த இச் சகுந்தலைக்கு, செடிகொடிகளே! போக விடையளிப்பீர்களா? என்று முனிவர் ஏங்கிப் பேசுவதையும் அதில் அடங்கிய கருணை ரஸத்தையும் காதேபோல் வேறு எவரும் அனுபவிக்க வில்லை. 'தமிழ்ச் சாகுந்தலத்திலிருந்து அதே நாலில் ஒரு பாடலை மறுபடி சொல்லுகிறேன். பாவத்தை அநுபவித்துக் கேளும்' என்று சாஸ்திரியார் அப் பாட்டைச் சுலோக சந்தத்திலேயே பாடிக் காட்டினர். அவ் வற்புதத்தில் சிறிது நேரம் மெய்மறந்து மூழ்கியிருந்தேன். 'நேரமாகிறது' என்று மகாகனம் எழுந்திருக்கவாரம்பித்தார். அவரைப் பிரிய மனமில்லை.

'மற்றச் சுலோகங்களுக்கும் பாடல்கள் உண்டோ?' என்று ஆர்வத்துடன் கேட்டேன்.

'எல்லாச் சுலோகங்களுக்கும் பாடல்கள் உண்டு. இப்படியே எல்லாம் காளிதாஸன் செய்தது போலவிருக்கும்' என்ருர்.

'எனக்கு ஒரு பிரதி வேண்டுமே' என்று கேட்டதும் தம் காரில் ஏறிக் கொள்ளச் சொன்னர். நானும் ஏறிக் கொண்டேன். வேகமாகச் சென்றுபோஸ்டல் சூபரின்டென்டாக இருந்த சாஸ்திரியார்குமாரர் வீட்டுவாசலில் கார் நின்றது. சாஸ்திரியார் என்னிலும் ஆத்திரத்தோடு உள்ளேபோய் ஒரு புத்தகப் பிரதியை எடுத்து என்னிடம் கொடுத்தார்.

பிரித்துப்பார்த்தேன். அதை இயற்றியவர் சேது சமஸ்தானம் மஹாவித்வான் ராகவையங்கார்; வெளியிட்டவர் மகாகனம் ஸ்ரீநிவாஸ சாஸ்திரியார்; என்பதைக் கண்டபோது அளவிலா மகிழ்ச்சி உண்டாயிற்று.

# ஒன்பதாவது மணி

ஆர். எஸ்.

காலைப் பனி செய்துகொண்டிருந்தது. மேஜையின்மேல் வைத்திருந்த அருமையான காப்பி ஆறிக்கொண்டிருந்தது. அன்றைய செய்தித்தாள் பிரிபடாமல் கிடந்தது. நான் என்னென்னவோ நினைத்துக் கொண்டிருந்தேன்.

நான் டாக்டர் பரீக்ஷை பாஸ் செய்து ஒரு வருஷம் ஆகப்போகிறது. இன்னும் என்னிடம் வைத்தியம் செய்து கொள்ளும் தைரியம் யாருக்கும் இல்லை. ஒரு தடவை என் தாயாரிடம் "என் முதல் சம்பளத்தில் உனக்கு ஒரு புடவை வாங்கித் தருகிறேன்." என்று சொல்லி இருக்கிறேன். ஏன் சொன்னேனென்றுகூட இப்போது எனக்கு வருத்தமாக இருக்கிறது. புடவை விலை மலியும் வரை எனக்குப் பீஸே வராது போலிருக்கிறதே?

காப்பியை எடுத்து உறிஞ்சினேன். சர்க்கரை இல்லை. பையன்மேல் அசாத்திய கோபம் வந்தது. அந்தச் சமயத்தில் அவனே வந்து நின்றான். "இதற்குப் பெயர் காப்பியா?" என்று எரிந்து விழுந்தேன்.

"இல்லை ஸார்; சர்க்கரை ஆகிவிட்டது... வந்து...வந்து... வாசலில் யாரோ காத்துக் கொண்டிருக்கிறார்கள்..." என்று திணறினான்.

முக்கால் டம்ளர் காப்பியைத் தியாகம் செய்துகொண்டே "சீக்கிரம் உள்ளே வரச் சொல்." என்றேன்.

சில நிமிஷங்கள் கழிந்தன. உள்ளே வந்தது தலை முதல் கால் வரை திரையிட்ட உருவம். திரையினூடே விக்கல் கேட்டது. என் மனம் துடித்தது. பையனை வெளியே போகச் சொன்னேன். தக்ஷணமே அவன் வெளியே போய்க் கதவைச் சாத்தினான். இதோ சாவித் துவாரத்தின் வழியாக அவன் கண்கள் தெரிகின்றன!

அவள் என் முன் அமர்ந்தாள். முகத் திரையைக் விலக்கினாள். அவளுக்குச் சுமார் ஐம்பது வயது இருக்கலாம். முகத்தில் சோபை இல்லை. சொல்லவொண்ணாத சோகம் அவள் முகத்தில் கவிந்திருந்தது. கண்ணில் நீர் துளித்தது. எனக்கு விவரிக்க முடியாத வேதனை உண்டாயிற்று.

"அம்மா! நான் ஒரு புதிய டாக்டர், அனுபவம் அதிகம் இல்லாதவன். இருந்தாலும் என்னிடம் வந்திருக்கிறீர்கள். என்னால் போக்கக்கூடிய உங்கள் துயரம் எதுவானாலும் சொல்லுங்கள். நான் உங்கள் பிள்ளையைப்போல."

அவள் வருத்தம் அதிகமாயிற்று. அழத் தொடங்கினாள். பிறகு தடுமாறிய வண்ணம் பேசினாள்.

"இல்லை டாக்டர்! நீங்கள் ஒரு இளம் டாக்டர். என்னைப்போல வயதானவர்களுக்கு உதவி செய்வீர்களென்ற உறுதி எனக்கு உண்டு. அதனால் தான் உங்களிடம் வந்தேன். ஆனால் எதைச் சொல்லவேண்டுமென்று வந்தேனோ அதைச் சொல்லுவதற்கு வேண்டிய துணிவு எனக்கு இல்லையே?"

அவள் பரபரப்பு எனக்கு ஆச்சரியமாக இருந்தது. என் ஆவலையும் தூண்டியது. அவள் மேலும் கூறினாள்.

"டாக்டர்! எனக்கு வேண்டியவர் ஒருவர் ஆபத்தான நிலையில் இருக்கிறார். அவரை நீங்கள் காப்பாற்ற வேண்டும்."

"நிச்சயம் உதவி செய்கிறேன் அம்மா! உடனே புறப்படுங்கள். அவருக்கு என்ன வியாதி? நீங்கள் ஏன் முன்னாலேயே என்னிடம் வரவில்லை?"

அவள் துயரம் கரை மீறியது. "ஐயோ! என் துயரத்தைக் கிளப்பாதீர்கள். நீங்கள் அவரைக் காப்பாற்றவேண்டும். நிச்சயமாகக் காப்பாற்றுகிறேனென்று சொல்லுங்கள்."

"வருத்தப்படாதீர்கள். நிச்சயம் வருகிறேன். உடனே புறப்படுங்கள்."

"இல்லை: டாக்டர், என்னால் இப்போது உங்களை அழைத்துக்கொண்டு போக முடியாது. போய்ப் பயனும் இல்லை. நீங்கள் நாளைக்காலையில் ஒன்பது மணிக்கு வர வேண்டும்."

எனக்கு அவள் பைத்தியமோ என்ற ஐயம் உண்டாயிற்று.

"உங்களுக்குத் தெரியாது. உடனே வைத்தியம் செய்யாவிட்டால் ஒரு பயனும் இல்லை. உடனே கிளம்புங்கள்,"

## போர்ட்ஸன் மேஜர் டிராக்டர்களை

### உபயோகப்படுத்தி உணவைப் பெருக்குங்கள் !!!




**Use Fordson MAJOR TRACTORS**

நேரப் போக்கைச் சமாளிக்க உழைத்து வரும் இந்நெருக்கடியான வருடத்தில், வேலையைத் துரிதப்படுத்தவும் போதிய வேலையாட்களில்லாமையைச் சமாளிக்கவும் போர்ட்ஸன் மேஜர் டிராக்டர் விவசாயிகளுக்கு மிகவும் உதவியுள்ளது. சுலபமாகக் கையாளக்கூடிய இந்த மேஜர் சிக்கன முறையில் பெரிய அல்லது சிறிய நிலப்பரப்பை உழுவதற்கு உதவுவதோடு போரடிக்கும் கருவியை இழுக்கவும் போதிய சக்தி பெற்றிருக்கிறது. ஹைடிராலிக் முதலிய பிரத்தியேக சாதனங்களோடு கூடிய இந்த மேஜர் உழவுத்தொழிலுக்குத் தேவையாயுள்ள ஒவ்வொரு வேலைக்கும் விசையளிக்க வல்லது.

## சிம்ப்ஸன் & கம்பெனி லிமிடெட்

**போர்ட்ஸன் மேஜர் டிராக்டர் டீலர்ஸ்**

**202-203 மவுண்ட் ரோடு சென்னை—2**

கிளைகள்: **பெங்களூர், உதகமண்டலம், திருச்சிராப்பள்ளி,**

**ஹைதராபாத் (டெக்கான்)**

டெப்போ:— **கோயம்புத்தூர்.**

"இல்லை டாக்டர்! எல்லாம் என் தலை விதி! நான் ஏன் உயிரோடு இருக்கிறேன்? நீங்கள் நாளைக் காலை ஒன்பது மணிக்கு நான் சொல்லும் இடத்துக்கு நிச்சயம் வரு வீர்களா? வருகிறேனென்று உறுதி கொடுங் கள், இல்லாவிட்டால் நான் மூர்ச்சையாகி விடுவேன்!"

எனக்கு அவளைப் பார்க்கவே பரிதாபமாக இருந்தது. "அவசியம் வருகிறேன். ஆனால் ஒரு விஷயம். டாக்டர் என்ற முறையில் சொல்லுகிறேன். எப்போதும் சீக்கிரம் வைத்தியம் செய்வதுதான் நல்லது. நாழிகை ஆகிவிட்டால் நல்ல மருந்தினால்கூடப் பிர யோஜனம் இல்லை. உங்களால் அவரை நெருங்க முடியாமற் போனால் அவர் இருக் கும் இடத்தையாவது சொல்லுங்கள். நிச் சயம் நான் அங்கே போய் வேண்டியதைச் செய்கிறேன்."

"முடியாது! நீங்கள் நாளைக் காலையில் வந்தால் போதும்." என்று சொல்லிவிட்டு அவள் விலாசத்தை ஒரு கடிதத்தில் குறித்து என்னிடம் கொடுத்தாள். மௌனமாகத் தள்ளாடிய வண்ணம் எழுந்து வெளியே போனாள்.

எனக்கு ஆச்சரியமாக இருந்தது. உயிர் போகும் தறுவாயில் ஒருவர் இருக்கிறார். சாதாரணமாக ஜனங்கள் அந்தச் சமயத்தில் டாக்டரை நடுநிசியிலும் வந்து கூப்பிடுவார் கள். இவளோ நிதானமாக வந்து நாளைக்கு வரச் சொல்லி இருக்கிறாள், இது என்ன விஷயம்? அவளுக்கு உண்மையிலே அவர் மீது சிரத்தை இருக்குமானால் ஏன் அப்படிச் சொல்லவேண்டும்? சிரத்தை இல்லையென் றால் ஏன் என்னிடம் வரவேண்டும்?

பையன் சர்க்கரை ஜாடியுடன் ஒன்றும் விளங்காமல் நின்று கொண்டிருந்தான்.

2

மறுநாள் விடிந்ததிலிருந்து எனக்கு ஒன்று மே ஓடவில்லை. மனம் படபடத்தது. கை நடுங்கியது. நான் ஒரு டாக்டர். கணக் கில்லாத பிரேதங்களை அணு அணுவாக அறுத்துப் பரிசோதனை செய்தவன். ஆனா லும் இது என்ன அனுபவம்? அந்த ஒன்பது மணி என் முன் காட்டப்போகும் காட்சி என்ன? அதில்தான் எவ்வளவு மர்மம்? என் உள்ளம் நடுங்கியது. சொல்லமுடியாத உணர்ச்சி என் உடல் முழுவதும் பரவியது.

காலை எட்டு மணிக்கே வீட்டை விட்டுக் கிளம்பிவிட்டேன். என் மனம் ஒன்பது மணியைச் சுற்றி வட்டமிட்டது. ஏன் இப் படிச் சொல்ல வேண்டும்? ஒரு வேளை என்னை அந்த இடம் தெரியாத இடத்தில் வைத்து உதைக்கப் போகிறார்களோ? நான் எனக்குச் சமைத்துப் போடும் அந்தப் பையனைத் தவிர வேறு யாரையும் வைததில்லையே? இன்னும் நான் என் தொழிலின் பெயரை வைத்துக் கொண்டாவது யாருடைய வாழ்க்கைக்கும் முற்றுப்புள்ளி வைத்ததில்லையே? அப்படி இருக்க யார் என்னை அப்படியெல்லாம் செய்யப்போகிறார்கள்? ஒரு கணம் முதல் நாள் வந்தவளை நினைத்துப் பார்த்தேன். அவள் முகத்தில் தேங்கிய துயரம் நிச்சயம் வஞ்சகத்தின் நிழலாக இருக்க முடியாது.

எவ்வளவோ பெரிய வீதிகளைத் தாண்டி னேன். தெருக்கள் சந்துகள் ஆகிவிட்டன. குடிசைகள் பரவிக்கிடந்த இடங்களில் அசுத் தமும் அநாகரிகமும் தலைவிரித்தாடின. கடைசியாக விலாசத்தில் கொடுத்திருந்த வீட்டை அடைந்தேன். வீட்டை ஒருமுறை நிமிர்ந்து பார்த்தேன். அட ஈசுவரா! இது என்ன அநுபவம்? நெஞ்சில் மிகச் சிறிதே ஒளிவிட்டுக்கொண்டிருக்கும் தைரியத்துடன் கதவைத் தட்டினேன். பதில் இல்லை. உள் ளே போகலாமா வேண்டாமா என்று நினைத் தேன். உள்ளிருந்த கடியாரத்தில் மணி எட்டரை அடித்தது. ஒன்பது மணி! அந் தப் பரிதாபமான முகம்! என் மனம் கலங் கியது. கதவை மறுபடி தட்டினேன்.

கதவு திறந்தது. சுமாராக வயதான ஒரு வன் கதவைத்திறந்தான். அவன் முகத்தில் ஜீவகளையையே காணோம். எதையோ பறி கொடுத்தவன்போலக் காணப்பட்டான்.

"ஓஹோ! டாக்டரா! ரொம்ப சீக்கிரம் வந்துவிட்டீர்களே?"

எனக்கு வியப்பாக இருந்தது. என்ன? 'இவர்களுக்கெல்லாம் ஒரே சமயத்தில் துயர மிகுதியினால் பைத்தியம் பிடித்துவிட்டதா?'

"என்ன? உங்களுக்குக் கூட விரைவாக வைத்தியம் செய்யவேண்டுமென்ற பரபரப்பு இல்லையா?"

அவன் பதிலே சொல்லவில்லை. அவன் சிரிப்பில் சோகம் கலந்திருந்தது. "சரி டாக் டர்! நீங்கள் மாடி அறையில் போய் உட் கார்ந்து கொள்ளுங்கள்."

அவன் என்னை அழைத்துக்கொண்டுபோய் மாடி அறையில் விட்டான். கதவைச் சாத் தினான்.

3

எனக்கு ஒன்றும் விளங்கவில்லை. என்ன செய்வதென்றே புரியவில்லை. அறை யைச் சுற்றிப்பார்த்தேன்.

அறையில் வெளிச்சத்தை விட இருட்டே அதிகமாக இருந்தது. பாழடைந்த காரணத்தினால் செரல்ல முடியாத துர்நாற்றம் கூட வீசியது. காற்று வரவோ வெளியே செல்லவோ வகையில்லை. ஏற்கனவே இருந்த பரபரப்பினாலும் காற்றில்லாததினாலும் வியர்வை பெருகியது. அழுக்கை மெதுவாகத் துடைத்துவிட்டு ஒரு நாற்காலியில் உட்கார்ந்து கொண்டேன்.

வெளியே யாரோ தடதடவென்று ஏறி மாடிக்குவரும் சத்தம் கேட்டது. பல மனிதர்கள் வெளியே செல்லும் சத்தம் கேட்டது. என் மனம் துடிதுடித்தது. என் பரபரப்பு அதிகமாயிற்று. கீழே மணி ஒன்பதுஅடித்தது. என் ஆவலை என்னால் அடக்க முடியவில்லை. கதவைத் திறக்க எழுந்தேன்.

கதவு திறந்தது! அந்த ஸ்திரீ, முகத்திரை கூட மாறாமல் உள்ளே வந்தாள். அவள் முகம் வெளுத்திருந்தது. கண்களில் நீர் வற்றி விட்டது. உதடுகள் துடித்தன "சீக்கிரம் வாருங்கள் டாக்டர்!"

"இதோ!" என்று மருந்துப் பெட்டியை எடுத்துக்கொண்டு கிளம்பினேன். மாடியில் விசாலமான ஒரு ஹாலுக்குள் நுழைந்தேன். அங்கே எந்தவிதமான சப்தமும் இல்லை. வாசலில் எனக்காகக் கதவைத் திறந்தவன் மட்டும் நின்று கொண்டிருந்தான். அவன் முகத்தில் ஈயாடவில்லை. என்கூடவந்த அவளால் பேசக்கூட முடியவில்லை. அவள் ஒரு மூலையைக் காட்டினாள். என் ஆவல் அதிகரித்தது. நான் அங்கே சென்றேன். அங்கே கட்டிலின்மீது ஒரு வாலிபன் படுத்திருந்தான். அவன் உடலைத் தொட்டுப் பார்த்தேன். என் மனம் துணுக்குற்று நின்றது. அந்த உடலில் உயிர் இல்லை.



"நான் முன்பே சொன்னேனே! கேட்டீர்களா அம்மா! உயிர் போய் விட்டதே! என்ன செய்யப் போகிறீர்கள்?"

"ஐயோ! அப்படிச் சொல்லாதீர்கள். எவ்வளவோ டாக்டர்கள் செத்துப்போனவர்களுக்கு உயிர் கொடுக்க வில்லையா? உயிர் இல்லை என்று சொல்லாதீர்கள். என் உயிர் பிரிந்துவிடும் போல இருக்கிறது."

"உண்மையாகத்தான் அம்மா! உயிர் போய் அதிகம் நேரம் ஆகவில்லை. எட்டரை மணிக்கு நீங்கள் என்னை அனுமதித்திருக்கக் கூடாதா?"

"இல்லையே! அதற்கு நான் கொடுத்து வைக்க வில்லையே டாக்டர்!" என்று அவள் கதறினாள்.

நான் மறுபடி அந்தப்பிரேதத்தை நெருங்கிப் பரிசோதனை செய்தேன். சாவதற்கு முன் அந்த உடலில் நோய் எதுவும் இல்லை. பின் எப்படி சாவு நேர்ந்தது? என் கை தடுமாறியது. கழுத்துப்புறம் வீங்கி இருந்தது. என் வியப்பும் ஆத்திரமும் கரைகடந்தன.

"இது இயற்கையான சாவே அல்ல! இவரைக் கொன்றதற்கு நீங்கள்தான் ஜவாப்தாரி!" என்று கூவினேன்.

முதலில் என் கண்ணில் பட்டவன் கதவைத் திறந்தவன்தான். அவனைப் பிடித்து உலுக்கினேன்.

"உண்மையைச் சொல். இந்தக் கொலைக்கு யார் உடந்தை?"

தடுமாறிய வண்ணம் அவன் கூறினான். "பதட்டப் படாதீர்கள் டாக்டர்! நடந்ததைச் சொல்கிறேன். இந்த வாலிபன் இந்த அம்மாளின் பிள்ளை. சிறுவயதிலேயே தந்தையை இழந்து விட்டதால் செல்வமாக வளர்ந்தவன். அதனால் அவன் கெட்ட வழிகளில் செல்ல இடம் உண்டாயிற்று. கண்டபடி செலவு செய்தான். கெட்டவர்களுடன் சகவாசம் வைத்துக்கொண்டான். அதன் பலனாக ஒரு கொலை வழக்கில் அகப்பட்டுக் கொண்டான். கொலையைச் செய்த அவன் நண்பர்கள் எப்படியோ நழுவி விட்டார்கள். இவன் மட்டும் அகப்பட்டுக் கொண்டான். போனவாரம் அவனுக்குத் தூக்குத் தண்டனை விதித்தார்கள். அதைக்கேட்டதும் அவள் பதறி மூர்ச்சையானாள். ஆனால் யாராலும் அவனைக் காப்பாற்ற முடியவில்லை. இன்று தண்டனை நிறைவேறியபின் உடலை ஒன்பது மணிக்குக் கொடுப்பதாகச் சொன்னார்கள். அதற்காகத்தான் உங்களைச் சரியாக ஒன்பது மணிக்கு வரச்சொன்னதும்!"

நான் சிலையாக நின்றேன்.

* * *

அதற்குப் பிறகு எவ்வளவோ தடவைகள் அந்த வீட்டின் வழியே போகும்படியான சந்தர்ப்பம் எனக்கு ஏற்பட்டது. ஆனால் அந்த ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் என் உள்ளத்தில் விவரிக்கமுடியாத வேதனை ஏற்பட்டது.

துயரமும் சோகமும் கலந்த அவள் முகத்தை என்னால் மறக்கமுடியவில்லை. அவளைத் தேற்றவும் என்னால் முடியவில்லை.

நாகரிகமான

ஸ்டெயின்லெஸ் ஸ்டீல் பாத்திரங்கள்

வீட்டுக்குத் தேவையான சகல பாத்திரங்களும்
விதம் விதமான ரகங்களில் கிடைக்கும்

●

சாப்பாட்டுத் தட்டுகள், பிளேட்டுகள், டிபன் செட்டுகள்.
அடுக்குச் சட்டிகள், ஸாஸ்-பான்கள், கரண்டிகள், டவரா,
டப்பா டம்ளர்கள், கிண்ணங்கள் மற்றும் ஏராளமானவை.

●

"ஸன் பிராண்டு பர்த் ஸ்டேபிரைட் ஸ்டீல் பாத்திரங்கள்,
கிரௌன் ப்ராண்டு அலுமினியப் பாத்திரங்கள், மற்றும்
பித்தளை, தாம்பரம் பாத்திரங்கள் மொத்தத்திலும்,
சில்லறையிலும் மலிவாகக் கிடைக்கும்.

●

எம். ஏ. எதிராஜுலு நாயுடு

7/4 ஈவினிங் பஜார், பார்க் டவுன், மதராஸ்-3.

தொடர்கதை




கே. எம். முன்ஷி

ஹிந்தியிலிருந்து மொழி பெயர்ப்பு—"சேதி"

பட்டண் பெருமையை விரும்பினான் மதி மந்திரி முஞ்ஜால். ஜைன மதத்துக்குச் சாம்ராஜ்யம் வேண்டினார் ஜைன யதி ஆனந்த ஸூரி. இருவரையும் ஓரிடத்தில் சேர்த்து விதி விளையாட ஆரம்பித்தது. கதை உயிர்பெற்று எழுந்தது.

ராணி மீனல்தேவி தனக்குப்பெருமை தேடினாள். அவள் 'கருவியாக' மட்டும் இருக்க விரும்பவில்லை; ஜைனயதி சொற்படி கேட்க ஆரம்பித்தாள்.

முஞ்ஜால் வெகுண்டான். ஆனால் கெட்டிக்காரன் அடக்கிக்கொண்டான். அரசன் கர்ணதேவன் சாக, அவன் மகன் ஜயதேவன் பட்டம் பெற்றான். முதல் மாறுதல் முஞ்ஜால் மதுபுரி மாற்றப்பட்டான். கோட்டை யதிகாரி ஜைனத்தலைவன் சாந்தி சந்திரனான்.

இப்படி எரிய ஆரம்பித்த தீயிலே அறுகிறது ஒரு சிங்கத்தின் கட்டு. தேவப்ரஸாத் அரசனுடைய அண்ணன் மகன். அவன் மனைவியைப் பிரித்து மறைத்து அவனை ஒறுத்துக்கொண்டிருந்தது பட்டண்பெருமை. அவன் மனைவியைப் பெறச்செய்த முயற்சிகள் பாழ்த்தன. மறந்திருந்த சமயம் சாகும்அரசன் நம்பிக்கை நெய்யை ஊற்றி ஆசைத்தீயை வளர்த்து விட்டான். அரசி மழுப்பி விட்டாள். தந்தைக்காக அவன் மகன் திரிபுவன் மாமாவிடம் தூதும் சென்றான். முஞ்ஜாலா அசைந்து கொடுப்பான்!

ஆனால் அது அந்தக்காலம்! இப்பொழுது முஞ்ஜாலும் தேவப்ரஸாதும் ஒன்று. மதுபுரி செல்ல வெளியேற வந்த முஞ்ஜாலும், கோட்டை சாத்தப்படும் என்று அறிந்து ஓடவந்த தேவப்ரஸாதும் சந்திக்க நேரிட்ட சமயம் வைரத்தை மறந்து ஒன்றுகின்றனர், மைத்துனனும் மைத்துனனும். ஹம்ஸா இருக்குமிடத்தை அறிவித்த முஞ்ஜால் மறுநாள் சந்திக்கத் திட்டமிட்டுச் சென்று விட்டான். தேவப்ரஸாத் மீண்டும் அரண்மனைக்குச் சென்றும் அரசி ஏமாற்றி விட, ஆத்திரப்பட்டுக் கொண்டு ஓடிவந்து அகழைத் தாண்டிப் பாய்ந்து விடுகிறான்.

இனி இருவரும் சந்திப்பதா? அரசி சூழ்ச்சி செய்கிறாள். ஹம்ஸாவை அனுப்பவேண்டும் அவள் கணவனிடம்! அதற்கு விதி உதவி செய்கிறது. திரிபுவனுக்கும் ஜயதேவனுக்கும் சண்டை. வீரர்கள் திரிபுவன்மேல் பாய்கின்றனர். யாராவது இடைப்பட்டால் ஒழிய, திரிபுவன் பாடு அதோகதி தான். ஹம்ஸாவுக்கு இது காட்டப்படுகிறது. அவள் கணவனிடம் செல்ல ஒத்துக்கொண்டால், மீனல் இடைப்பட்டு அவனைக் காப்பாற்றத் தயார். வேறு வழி?

---

(ஹிந்திப்பிரதி பிரசுர கர்த்தாவான ஹிந்தி கிரந்த ரத்னாகர காரியாலயத்தைச் சார்ந்த ஶ்ரீ நாதூராம் பிரேமி அவர்கள் அனுமதி பெற்றது.)

ஹம்ஸா ஒப்புக் கொண்டாள். கணவ னிடம் வந்தாள். மீனல் எண்ணமும் ஈடேறிற்று. தேவப்ரஸாத் எல்லாவற் றையும் மறந்து அவளுடன் தங்கி விட் டான்.

கருவியே கர்த்தா ஆனுல்? விளைவு என்ன ஆகும்? பார்க்கலாம்:— மீனல் இயங்க ஆரம்பித்தாள்! யதி, தன் மகன், அடிபட்டுப் படுக்கையிலிருக்கும் காதல னுக்குக் கருத்தொடு சேவைபுரியும் மரு மகள் பிரஸன்ன மூவரையும் அழைத்துக் கொண்டாள். கோட்டையைச் சாந்தி சந்திரன் வசம் ஒப்புவித்தாள். இரவோடு இரவாய் வெளியேறி விட்டாள், தானே சென்று முஞ்ஜாலை மடக்க.

முஞ்ஜால் வழியில் அகப்பட்டான், கை தும் ஆனுன். ராணி விக்ராட் வழியாக அரண்மனை செல்லத் திட்டமிட்டு மேலே போய்க்கொண்டிருந்தாள்.

நாம் ஒன்று நினைக்க அது ஒன்று நடந்தால் தான் கதை. இடையிலேயே பிரஸன்ன வெளியேறி விட்டாள். அரசி வெளியேறிய சமாசாரமும் வெளியேறி விட்டது. இரண்டு பொக்கிஷங்களும் ஊநா மார்வாடியையே சென்றடைந்தன! அவன் ஊரையே கூட்டிவிட்டான். 'அரசி வெளியேறி விட்டாள். ஜைனச் சேனை கொண்டு வருவாள். பட்டண் ஜைனர் வசமாகும்!' இருக்கும், இருக்கும்! இல் லாவிட்டால் அரசி வெளியேறுவாளா? அதுவும் துக்கம் காக்கும் இந்தச் சமயத் திலா?

வாசலிலே பெருங்கூட்டம். சோதா டுங்கர் நாயக் முதல் பெரும் பெரும் சிற்றர சர்கள் வரை வந்து கதவைத் தட்டுகின் றனர். ஊநா பின்கட்டுவழி உள்ளே புகுந் தான். 'திரிபுவன தேவா! நீதான் இனி பட்டணுக்கு அரசன்!' என்றான். திரிபு வன் எழுந்து வந்தான். வாசலிலே கூட் டம்: உள்ளே திரிபுவன். சாந்தி சந்திரன் ஆனமட்டும் பார்த்தான். கதவைத் திறக் கவேயாயிற்று. சபை கூடிற்று. சாமல் பார்ஹட் கடைசி முறை பேசினர். ஜனங் கள் கொதித்து எழுந்தனர். சாந்தி சந் திரன் வார்த்தையை முற்றிலும் பொய் யாக்க வந்தது விக்ராட்தலைவன் அனுப் பிய சமாசாரம். மக்கள் முடிவு செய்துவிட் டனர். திரிபுவன் அரசன். பட்டண் கோட் டையைக் காக்கவேண்டியது அவன் பொறுப்பு.

களைத்த திரிபுவனுக்குப் பிரஸன்ன சுசு ருஷை புரிந்தாள். உடற் களைப்பில் நிலை தளர்ந்த அவன் உள்ளம், நாலேணியே ழி அவளிடம் சென்றது, இருவரும் சாமல் பார்ஹட்டிடம் சென்றது, மாளவ ராணி யாவாள் என்றறிந்து ஆத்திரப்பட்டு ஓடி யது, தாதி கொண்டுவந்த அம்பை ஒடித் தெறிந்தது முதலியவற்றை ஞாபகப்படுத் திற்று; கடைசியாகப் பார்த்தது எப்பொ ழுது? என்ற ஆராய்ச்சியில் ஈடுபட்டது. என்ற வரை சென்ற இதழில் படித்தோம்.

இனி மேலே:—

பிரஸன்ன இனிய குரலில் கேட்டாள்: "ஏன் தலையை வலிக்கிறதா? பிடிக்கட் டுமா?" திரிபுவன் சும்மா இருக்க இருக்கப் பிரஸன்னவின் உள்ளம் பிளந்து கொண்டே வந்தது." ஏன் திரிபுவன் இந்த விதம் செய் கிறன்? வேண்டும் என்றே மனதைக் கொல் கிறன்? முன் போலப் பேசுகிறதுஇல்லையே?" திரிபுவன் அவளை வெறுப்புடன் பார்த்தான்.

அவன் மெதுவாகச் சொன்னன்: "தலையா! ஆம் என் தலையை என்னவோ செய்கிறது? பிரஸன்ன! நான் உன்னை எங்கே பார்த் தேன்? எனக்கு ஒரே பிரமையாக இருக் கிறது"!

"பிரமை என்ன?"

திரிபுவன் ஆவலுடன் கேட்டான்: "நான் உன்னை எங்கே பார்த்தேன்? உன்னுடன் யார் இருந்தது?"

"என்னுடனு.? மீனல் அத்தை....ஆம்... பிரஸன்ன நின்றுள்.

"ஏன்? என்ன சொல்ல வந்தாய்?"

"ஒன்றுமில்லை; திரிபுவன்.! உனக்கு என் னிடம் கோபமா? பின் அப்படிப் பார்க்கிரு யே. வெறித்து வெறித்து?" பிரஸன்ன வின் குரல் கெஞ்சிக் கொஞ்சிற்று!

திரிபுவன்.! நீ அவந்தியை எண்ணி அல மலக்கிருய்! என்னை அத்தை இழுத்துச் சென்றுள். நான் உனக்காக ஓடிவந்து விட் டேன். இங்கே வருவதற்கு என்ன ஓட்டம் ஓடி வந்தேன், இரவு முழுவதும் தெரியுமா?

அப்படியும் உன் கல் இதயம் நம்ப மாட்டேன் என்கிறது! எவ்வளவோ தடவைகள் நீ கோபித்திருக்கிறாய்; உன்னைச் சமாதானப்படுத்தி விட்டேன். இந்தத் தடவை அதிக தூரம் போய்விட்டாயே!...''

“பிரஸன்னா? இது நான் கேட்டதற்குப் பதிலா?'' இதுதான் பிரஸன்னா கெஞ்சலின் பலன்! பிரஸன்னாவுக்குக் கோபம் வந்தது.

“என்ன கேள்வி?''

“உன்னுடன் யார் இருந்தது?'' கேள்வியில் இதயம் இல்லை; கோபித்த வெறுப்புத்தான் இருந்தது!

“என்னுடனா......உண்மையைச் சொல்லட்டுமா? பதறாதே... உன் தாய் ஹம்ஸா தேவி இருந்தார்கள்!''

‘ஊம், எங்கிருந்து வந்தார்கள்?...'' திரிபுவன் மலர்ந்த விழிகளுடன் எழுந்து நின்றான்.

“நீ பதறாதே. பாக்கியைப் பிறகு சொல்கிறேன்...கொஞ்சம் அமைதியுடன் தூங்கு. வைத்யர் என்ன சொல்லிவிட்டுப் போனார்?'' என்று இதமாகக் கேட்டுக்கொண்டே நெருங்கினாள்.

திரிபுவன் புரண்டு எழும் ஆசை அலைகளை அமுக்கிக்கொண்டு அவளைப் பிடித்துத் தள்ளினான். “இல்லை இல்லை. பிரஸன்னா! நீ சொல்வதை எல்லாம் செய்வேன். இப்பொழுது எனக்குப் பொறுத்திருக்கத் தைரியம் இல்லை. என்ன வேண்டுமானாலும் பெற்றுக்கொள். எல்லாவற்றையும் சொல்லிவிடு.''

பிரஸன்னாவின் இதயம் பித்துக்கொண்டு புழுங்கிற்று. வெட்கம் அவள் உள்ளத்தைப் பிடுங்கித் தின்றது. இளம் பருவத்தின் வேகத்தில் ‘லோகத்தை' மறந்து விட்டாள். “திரிபுவன் ஒரு வார்த்தை நான் சொல்,



வதைக் கேள்! பிறகு நீ சொல்வதற்கெல்லாம் நான் தயார்!"

"என்ன அது? சொல்; என் பிராணன் அடைக்கிறது"

"என்னை உன்னுடன் வைத்துக் கொள்கிறேன், என்று சொல்" பிரஸன்னு முழங்கால்களில் அமர்ந்து பேசினுள். சாதகியைப் போல் திரிபுவன சந்திரனிடமிருந்து சப்தச் சொட்டுக்களை எதிர்பார்த்து ஏங்கி நின்ருள்.

திரிபுவனுக்கு வேறு ஆவல். அதை அடைய வழியில் வந்த எதையும் வாரிப் போட்டுக் கொள்ளத் தயார். கைகொடுத்துத் தூக்கி எடுத்து, "பிரஸன்னு! சரி, நீ எது சொன்னுலும் சரி சொல். என் தாயார் எங்கே போனுர்கள்? இப்பொழுது எங்கே? ஏன் காணப்படுகிறதில்லை?" என்று பதறினுன்.

பிரஸன்னு அவன் கையை மார்புடன் அமுக்கி எழுந்து நின்ருள்.

"திரிபுவன், அன்பே, நாமறியாமலே தாயார் அரண்மனையிலேயே இருந்திருக்கிருர்கள். நீ சண்டையிட்டபோது அவர்கள் உன்னைப் பார்த்தார்கள். உன்னைக் காப்பாற்றச்சொல்லி அத்தையிடம் பிரார்த்தனை செய்தார்கள். அத்தை அவர்களை உன் தந்தையிடம் அனுப்ப முயன்றுகொண்டிருந்தார்கள். அவர்கள் மறுத்துக் கொண்டிருந்தார்கள். ஆனுல் அத்தை அவர்களிடம் வாக்குப் பெற்றுக்கொண்டு உன்னைக் காப்பாற்றினுர்கள்."

"உண்மைதானு?" திரிபுவன் குரல் யாரையும் பயமுறுத்தியிருக்கும்! "உனக்கு எப்படி இதெல்லாம் தெரியும்?"

"நான் பின்னுல் நின்று அத்தையும் ஆனந்த சூரியும் பேசுவதைக் கேட்டேன். தவிர உங்கள் தாயாரும் என்னிடம் சொன்னுர்கள்."

"ஆ, என் தாய், அம்மா, இந்த விதமா வந்து மறைந்தார்கள்!" திரிபுவன் அழுதே விட்டான். "இவ்வளவு நாள் கழித்து மீனல் ஏன் அவர்களை அப்பாவிடம் அனுப்ப வேண்டும்?.........ஆம்" அவன் தலையில் இரண்டு கைகளையும் வைத்துக்கொண்டான், அவனுக்கு ஏதோ ஒரு புத்தொளி தோன்றிற்று.

"ஏன், என்ன?"

"அப்பாவும் மாமாவும் இன்று சேருவதாக இருந்தார்கள். மீனல் சின்னம்மாவுக்கு இது தெரியுமா?"

"கண்டிப்பாய்த் தெரிந்திருக்கும். அவர்களைத் தம்வழி திருப்பத்தானே அத்தை போயிருக்கிருர்கள்......!"

"சரி. அதுதான் விஷயம். சின்னம்மா! உன் புத்தியை எப்படிப் புகழ்வது?" என்று சொல்லிக்கொண்டே திரிபுவன் முஷ்டியை மடக்கிக்கொண்டு இங்கும் அங்கும் நடக்க ஆரம்பித்தான்.

"அப்படியானுல் சேனை விக்ராட்டில் வந்து விட்டதே. முஞ்ஜாலை வசப்படுத்தியிருப்பார்களோ, அத்தை," பிரஸன்னு பயந்துகொண்டே ருத்ரரூபம் எடுத்துவரும் திரிபுவனிடம் சொன்னுள்.

திரிபுவன் திடீரென்று பிரஸன்னு பக்கம் திரும்பி மிகுந்த பயங்கரமான நிச்சயத்தை வெளிப்படுத்த எண்ணிக் கர்ஜித்தான்: 'பிரஸன்னு! இங்கேவா. நீ என்னை மணக்க உண்மையிலேயே விரும்புகிருயா?"

பிரஸன்னு, கீழே பார்த்துக்கொண்டு, "எவ்வளவு தடவை கேட்டு என் மானத்தை வாங்கப் போகிருய்?"

திரிபுவன் ஈரமற்ற குரலில், கேட்டான்: "என்ன எண்ணம் கொண்டு?"

பிரஸன்னு அறியாமலேயே சொன்னுள்: "உனக்கு முன்னமேயே எனக்குச் சுவர்க்கம் கிடைக்கும் என்ற எண்ணம் தான்!"

"மண்டலேசுவரனுக்கும் மீனல் சின்னம்மாவுக்கும் இடையே உடன்படிக்கை ஏற்படுத்தவா நீ என்னை மணந்துகொள்ள வேண்டுகிருய்?"

"திரிபுவன், திரிபுவன்! இது என்ன இடி போடுகிருய், நீ? உன் பக்கம்தான் நானும், உன்னுடைய சமரஸம் எனக்குச் சம்மதம்......"

"சரி. நான் எடுக்கும் விரதத்தை நீயும் எடுத்துக் கொள் உன் அத்தை நாட்கள் முடிவடைந்து விட்டன. நான் உயிருடன் இருக்கும்போது மீனல் சின்னம்மா நகருக்குள் வரக்கூடாது. ஸோம்நாதனின் பேரில் ஆணை. நீ என்னுடன் சேரச் சம்மதமா?"

பிரஸன்னு யோசித்தாள். அந்த வீரச் சிறுமி தலை நிமிர்ந்து சொன்னுள்: உன் பிரதிக்ஞை என்பிரதிக்ஞை. சரிதானே...... சரி. உன் உடல் நிலை......!"

'பிரஸன்னு. கவலை ஒழிந்தது. நான் போகிறேன். என் கைகள் துடிக்கின்றன. பார்க்கலாம்; மீனல் சின்னம்மா இன்னும்

எவ்வளவு நாள் தன் சுமையினால் உலகை சுக்க முடியும் என்று." களைப்பையும் மறந்து சிம்ம நடையில் திரிபுவன் வெளி யேறிவிட்டான்.

பிரஸன்னா அவசியமான பொருளை ஆற் ருேடு போகவிட்டவள் போல் அழிந்து நின்ருள். அவள் திரிபுவனுடன் மணக்க வாக்குக் கொடுத்து அவன் அன்பைப் பெற் றுக்கொண்டாள். தாய் தந்தையற்ற சிறு பெண்ணை அன்பு ஊட்டி வளர்த்த அத்தை யை அடியுடன் அறுக்கச் சபதம் செய்தாள். அந்த விலை கொடுத்து அவன் அன்பைப் பெற்ருள். அவள் இதயம் அப்படியும் அழுதது. விக்கி, விம்மி அழ ஆரம்பித் தாள்.

## துறவிதானு?

ராணியை விட்டுச் சென்ற ஆனந்த சூரியின் மனுேநிலை மிகவும் விசித்திரமாக ஆகிக் கொண்டிருந்தது. இரவு முழுவதும் கண் விழித்து வெகுநாளாய் ஏற்றுக் கொண் டிருந்த செயல்கள், அநேக வர்ஷங்களாகப் பட்ட கஷ்டத்தின் பலன் கிட்டிவரும் தோற் றம், இக்காரணங்களால் அவர் உள்ளம் பித் துப் பிடித்து மறுகிற்று. அவர் கண் முன்னே ஒரே விஷயம்தான் பேருருத்தாங்கி நின்றது: ஜைனர்களின் உயர்வு. முதலில் இது மிகவும் சுலபமாகக் அண்மையில் நெருங்கி வந்து விட்டதாகத்தோன்றிற்று. ராணி ஜைனமதத் தினள்; பிரதான சேனுதிபதி தண்ட நாயக் ஜைனர்; ராஜகுரு நிலைமையில் ஜைனத் துற வியான தாம்; சந்திராவதி சேனை வேறு இருக் கிறது. குஜராத்தில் பிறகு ஜைனர்களுக்கு என்ன வேண்டும்? இந்த நிலை நீடித்தால் ஜைனமதம் வேரூன்றி வானளாவி விடும். ஜைனக் கோவில்கள் பத்துத் திசைகளிலும் காணப்பட ஆரம்பித்து விடும்.

ஆனுல் பிறகு என்ன ஆய்விட்டது? பந்தயம் மாறிவிட்டது. ராணிக்கு மதாபிமானத்தை விட அதிகாரம் அதிகமாகப் பட்டது. சாந்தி சந்திரனிடமோ சரக்குப் போதாது. முஞ் ஜாலும் தேவப் பிரஸாதும் எதிர்த்து நிற் கிருர்கள். சில நாட்களுக்குள் இந்த நிலை மாரு விட்டால் எல்லாம் வீண்தான் என்று யதிக்குப் பயம் ஏற்பட்டது. எப்படியாவது சதுரங்கக் (ஆட்டக்) காய்களை நேராக நகர்த்தியாக வேண்டும். எப்படி நகர்த்துவது? வீரர்களைப் பின்னுல்விட்டு, துறவி பெருவேகமாகப் பாகே சுவரி மாதவின் கோயிலுக்குப் போய்ச் சேர்ந் தார். அங்கே ஒருவரும்தென்படவில்லை. யதிக் குப் பரம சந்தோஷம். ஹம்ஸாவைக்கொண்டு என்ன நடத்த ஏற்பாடு அவர்கள் செய்தார் களோ அது தான் நடந்தேறியிருந்தது.

அங்கேயே கோயில் மேடையில் அமர்ந்து சேனை வரவை எதிர்பார்க்க ஆரம்பித்தார். ராணியுடன் கலந்து செய்த ஆலோசனையின் படி மண்டுகேசுவரத்தின் வாயிலிலேயே சூழ வேண்டியிருந்தது. அதுவரை நேரத்தை எப் படிக் கழிப்பது? அவர் ஒவ்வொரு நரம்பிலும் ரத்தம் குதித்துக் குதித்து ஓடிக் கொண் டிருந்தது.

கையில் திரிசூலம் கொண்டு கழுத்தில் அம் மனின் ஆடை சுற்றிக் கால்களில் பாதக் குறடு அணிந்து அம்மனின் பூசாரி, கையில் தேங்காய் மூடிகளுடன் எதிரே வந்து சொன்னுன்: "ஸ்வாமி, பிரஸாதம் எடுத்துக் கொள்ளுங்கள்."

ஆனந்த சூரி திரஸ்காரத்துடன் மேலே பார்த்துக் கையை அமர்த்தினர். அம்மன்- ஈசுவரனை மரியாதை செய்ய அவர் இப்பொ ழுது தயாராயில்லை. ஜைன மதத்தின் திக் விஜயத்துக்கு அது கொஞ்சம் கெடுதலாய்ப் பட்டது. "பூசாரி, மன்னியுங்கள். இன்று எனக்கு உபவாசம்!"

பூசாரி சிரித்தான். "ஸ்வாமி! அம்மனின் பிரஸாதத்துக்கு உபவாசம் தடையாமா, என்ன? அம்பிகை-ஜகதம்பிகையிடம் வேண் டிக்கொள்ளுங்கள்; எங்கும் மங்களமே உண் டாகட்டும்."

"பூசாரி! துறவியிடம் வாதம் செய்து யாராவது ஏதாவது லாபமடைந்திருக்கிருர் களா?"

பூசாரி குறிப்பொருளுடன் பேசினுன்: "தாங்களும் துறவியா? இந்த உடையிலிருந்து யாராவது அப்படி நினைக்கக் கூட முடியுமா? தவிர இதில் வாதம் என்ன வந்திருக்கிறது? நான் என் அம்பிகையின் அடிமை. அவள் பூஜை தான் என்வாழ்வு. ஸ்வாமி, நான் எல் லாவற்றையும் தங்களைப் போன்றவர்களுக்கு அர்ப்பணம் செய்து விட்டேன்."

"மெதுவாக இந்தக் கோயிலையும் விட்டு விடுவாய். பார்த்துக் கொண்டேயிரு. இப் போது கர்ண தேவரில்லை அரசர். ராணி மீனல் தேவியின் ஆட்சி நடக்கிறது!"

கொஞ்சம் தலையசைத்துப் பூசாரி சொன்னுன்: "துறவியாரே! தேவி வந்தால் என்ன? மற்ற யார்வந்தால் என்ன? இந்தப் பாரததேசம் பாகேசுவரி அம்மனுடையது. அப்படியேதான் எப்பொழுதும் இருக்கும். அந்தச்சக்தியின் சாம்ராஜ்யம் அசைவற்றது, அப்படியே என்றென்றும் அழியாமல் இருக்கும். தாங்கள் படித்தவர்கள். உங் களுக்கு உண்மை எந்த விதம் பட்டாலும்

எனக்கு என்னவோ எல்லா மார்க்கங்களும் அம்பிகையின் பாதாரவிந்தங்களில் தான் போய்ச் சேருகின்றன என்பது தான் உண்மையாகப் படுகிறது.''

யதி சிரித்தார்: "இதை எந்தச் சமயத்தினரும் சொல்லக் கூடுமே! ஆனால் உண்மை ஜைனர்களின் பறை உலகம் முழுவதும் அறைவிக்கபடும் போது தெரியும்!''

''ரொம்ப சரி, சுவாமி! எனக்கு ஒன்று தான் தெரியும். பாரத தேசத்தில் "போலா நாதரும் என் அம்பிகை பவானியம்மனும் தான் பூஜிக்கப் படுவார்கள். ஒரு உருவத்திலோ, மற்றொரு உருவத்திலோ! சமயத்திலோ, எல்லாச் சமயத்திலுமோ! பாக்கி எல்லாம் வீண் வார்த்தைகள்.''

ஆனந்த சூரியின் உள்ளத்தை இந்த வார்த்தைகள் தைத்தன. இருந்தாலும் வந்த சிரிப்பை அடக்க முடியவில்லை. "ஓகோ! உங்கள் போலா நாதர் தான் கஜனிக்கு உல்லாசப் பிரயாணம் போய் விட்டாரே! அம்பிகையும் பாவாகட்டுக்குப் போய் விட்டாளே!'' என்றார். ஸோமநாத் தேவரின் மூர்த்தியை முஹம்மத் கஜனிக்கு எடுத்துப் போன கசப்பான விஷயத்தை அப்படிக் குறிப்பிட்டார் அவர்.

"தங்கள் ஊனக் கண்களுக்கு எதிரே அப்படித்தான் தென்படும். என் அகக் கண்களில் இதோ ஈசுவரன் அம்மனின் பிரபாவம் தோன்றுகிறதே!''

"அது எப்படி?''

''யதிஜீ! உங்களுக்கு இந்தக் கர்வம் இருப்பதனால் தான் எல்லோரையும் எதிர்த்து நிற்கிறீர். உங்கள் கர்வத்தைப்போசுக்க, குஜராத்முழுவதும் ஒன்று சேரப்போகிறது. சரி, சுவாமி. 'ஸ்தோத்திர பாடத்துக்கு' நேரமாகிறது. நான் போகிறேன்'' பூசாரி அமைதியுடன் சென்று விட்டான்.

பூசாரியின் இரண்டு வாக்கியங்கள்யதியின் காதுகளைக் குடைந்து சுற்றிநின்றன. 'பாரத தேசத்தில் போலாநாத் என் தாய் பவானி அம்மன் இருவர் பூஜையும் தான் நடக்கும் என்பது முதல் வாக்கியம். இரண்டாவது வாக்கியம் உங்கள் கர்வத்தைச் சிதைக்க குஜராத் பூராவும் ஒன்று சேர்ந்துவிடும். அவர் கண்கள் இருண்டு வந்தன. 'இந்தப் பூசாரி என்ன திர்க்கதரிசியா? இவ்வளவு ஆழ்ந்த உண்மைகள் அவன் வாயிலிருந்து



எப்படி எழுந்தன? அவன் சொல்வது உண்மையாகி விடுமா? என் கனவுகள் எல்லாம் வீணாகிவிடுமா!' உடைந்த மனதுடன் யதி எழுந்து நின்றார். அவர் அப்பொழுதே தம் கோட்டைகள் எல்லாம் இடிந்து வீழக் காண்பவர் போல் தென்பட்டார். தாம் ஜைன மதத்தில் வைத்திருக்கும் பற்றை மற்றவர்களும் வைத்திருக்கிறார்களா? "என்ன ஆனாலும் சரி, வெற்றிபெற்று ஜைனமதத்தைப் பரவவைக்க வேண்டும்" என்று எவ்வளவு ஜைனர்கள் தயாராயிருப்பார்கள்? அநேகர் ஹிந்துமதம் ஜைனமதத்துக்கு வேற்றுமைகூட அறியாமல் இருக்கிறார்கள். அநேகர் பிராமணர்களின் பெருமைக்கு அடிபணிந்து விடுகிறார்கள். அவர்கள் சொற்படியே கிரியைகளும் செய்கின்றனர். அப்படிப் பட்டவர்கள் ஜைனமதத்தைப் பரப்ப எப்படி உதவுவார்கள்? புது மதத்தின் சாம்ராஜ்யம் அவர்களுக்கு எப்படிப் பிடிக்கும்? உள்ளபடி வேத தர்மத்துக்கும் ஜைனமதத்துக்கும் வித்யாசம் உண்டா! பாரத தேசத்தில் போலாநாதரும் "என் தாய்" பவானி அம்மனும் தான் பூஜிக்கப்படுவார்களா?

யதி எழுந்து மெதுவாகக் கோவிலுக்குள் சென்று பாகேசுவரியின் பயங்கரமான மூர்த்தியைப் பார்த்தார். அம்மனின் காலடியில் கிடக்கும் பெரிய சிங்கத்தைப்பார்த்து யதி ஒருமுறை உடல் சிலிர்த்தார். தாயின் திரிசூலத்தின் மூன்று கூர்க்கோல்களும் அவர் இதயத்தைக் குத்திப் பிளப்பது போல் பட்டன. பயங்கரமான கண்கள் அவரை நடுங்க வைத்தன. அவர் அவைகளின் பலத்துக்கெதிரே நடுங்கி நின்றார். தம்முடைய மனோரதங்களை இழிவுபட்டதாகத் தென்பட ஆரம்பித்தன. மகா சக்தியின் எதிரே அவள் மந்திர சக்தியினால் கட்டுண்டவர் போல அசையாமல் நின்றார். அந்தச் சமயத்தில் பக்கத்திலுள்ள மஹாதேவன் கோயில் மணியை யாரோ அடித்துவிட்டனர். அச்சுறுத்தி அகங்குலைத்து ஒறுக்கும் அந்தச் சூழ்நிலையில் யதிக்கு இந்தச்சப்தம் மிகவும் பயங்கரமாக இருந்தது. இது எந்தச் சக்தியின் வெற்றி நாதம்? வெருண்டு வெகுண்டு திரும்பிப்பார்த்த துறவி, "இது என்ன இந்தத் தேவதைகளின் வெற்றி முழக்கமா?" என்று தம்மைத்தாமே கேட்டுக்கொண்டார். இந்த பவானி, இந்த போலாநாத், இந்த மணிச் சத்தம்....ஜன்மஜன்மாந்தரமாக நடந்து வருகிறது. இதேமாதிரியே தான் நடந்துகொண்டேயிருக்குமா? அவர் எதிரே வைராக்யத்தின் எல்லையாய், அதிகாரத்தின் நிறைவின் பூர்ண ஒளி பெற்ற பிரதிமூர்த்தியாய் பினாகபாணியான சாம்ப சதாசிவன் தோன்றி நின்றார். அவர் முன்னே தோன்றிய அந்த உருவம், ஞானத்தின் அருகிற்பாயும் நதியைத் தலையில் தாங்கி, இந்தப் பூவுலகிலே ஞானத்தைப் பரப்ப வந்துள்ளது போல நின்றதைக் கண்டார். பித்துக் கொண்டு விழிக்கும் அவர் கண்கள் எதிரே பார்சுவந்தனின் உருவம் தோன்றிற்று. தம் தர்மத்தில் பரிபூர்ண நம்பிக்கையுள்ள அத்துறவிக்குக் கூட வருங்காலம் யார் காலடியில் தலை வணங்கும் என்ற ஓர் சந்தேகம் தீயெனப் பற்றி எழுந்தது. உலகம் எந்த வைராக்கியத்தை, அதிகாரத்தை, எந்தப் பரிபூர்ண நிறைவை ஏற்றுக் கொள்ளப் போகிறது? பக்கவாதமற்ற நடுநிலை கொண்ட, சாந்தமான அசைவற்ற பரிபூர்ணத் தன்மையாலா உலகம் உய்யப் போகிறது? அல்லது ஜ்வலித்தெழும், வெற்றி நிறை, திரி சூல பாணியின் பரிபூர்ணத் தன்மையாலா? அவர் கண்ணெதிரே நின்ற பார்சுவ நாதனின் இமை மூடியிலிருந்த கண்கள் மெதுவாகத் திறந்தன. கையிலே கத்தி ஒளித்தது. அமைதியின் தடமாய் விளங்கிய முகம் அதிகாரத்தின் அழகைப் பெற்றது. நாம் எண்ணும்படி ஜைனமதம் வெற்றி பெற்றால் என் அர்ஹந்தர் (மகாவீரர்) இந்த உருவம் ஏற்பாரா? அப்பொழுது மகாதேவனுக்கும் மகாவீரருக்கும் என்ன வேற்றுமை இருக்கும்? இல்லை, இல்லை, இல்லை. துறவி சந்தேகத்தை உரத்த இல்லை சபதத்தால் விரட்டியடிக்க முயன்றார். சந்தேகங்களும் அதே குரலில் ஆம் ஆம் என்று அலறின.

இவ்வளவில் 'மகாராஜ்' என்ற சப்தம் கேட்டது.

துறவி வேகமாகத் தலையசைத்தார். அகக்கண்களுக்கு அடைப்புக் கொடுத்தார். புறக் கண்களைத் திறந்தார். மனம் நிலை கொண்டது. பழைய காட்சி மறைந்தது. எதிரே கோவில்; அதே பிரகாரம் நின்றது. அருகில் நெருங்கி வந்திருந்த ஒரு சேனையின், நாய்க், இருந்தான் கூப்பியகைகளுடன். 'மகாராஜ்!' என்று கூப்பிட்டான்.

"ஏன்?" துறவி கடுமையான குரலில் கேட்டார்.

"ஒன்றுமில்லை., மேலே எங்கே போக வேண்டும்? என்று கேட்க வந்தேன். கட்டளையிட்டால் இங்கேயே கூடாரம் அடித்து விடலாம்."

உத்வேகம் கொண்ட துறவி அதட்டினார்: "என்ன, பைத்தியம் பிடித்துவிட்டதா உங்களுக்கு? போங்கள் மண்டுகேசுவரத்துக்கு. அங்கே ஒரு சத்துரு தற்சமயங்கூட ஆனந்தக்

"கூத்து ஆடிக் கொண்டிருக்கிறான்" சொல்லி விட்டு யதி வேகமாக வந்து குதிரை மேலே ஏறி சேனை வீரர்களுடன்கூட மேலேறிச் சென்றார்.

கொஞ்சம் தூரத்தில் கம்பீர் மல்லன் முதலிய ஓரிரண்டு ஜாகிர்தார்கள் வந்தனர். அவர்களையும் பிடித்து இட்டுக் கொண்டு சென்ற துறவியின் சிறிய சேனை மண்டு கேசுவரத்தின் வாயிற் படியை வழிய டைத்து நின்றது.

பகல் ஏறி, நடுப்பகல் வந்தது. மாலையும் ஆயிற்று. ஆனால் ருத்ரன் கோவிலில் ஒரு அசைவையும் காணோம். அமைதி இழந்த ஆனந்த சூரி சலித்து நின்றார். இரவு ஆகியும் தேவப்பிரஸாத் என்ன செய்கிறான் என்று தெரியக்காணோம். ஆத்திரம் கொண்ட யதி சேனையுடன் கோவில் வாசலை நோக்கிச் சமீபித்தார். அங்கேயும் அமைதி குடிகொண்டிருந்தது. மண்டுகேசுவரத்தின் சமீபத்திலுள்ள கிராமங்களிலும் சேனையைப் பார்த்த பயத்தால் ஒருவரும் வெளியே தலை காட்டவில்லை. ருத்ர மஹாலயத்தின் கதவைத் தட்டிய போது ஒரு வீரன் உள்ளிருந்து கதவு திறந்து எட்டிப் பார்த்தான்.

"இங்கே மண்டலேசுவரர் தேவப்ரஸாத் இருக்கிறாரா?"

"ஏன்? அவரிடம் உனக்கு என்ன வேலை! என்று கேட்டுக்கொண்டே கதவு திறந்த சமயம் பின்னேயிருந்து அவனை உள்ளிழுத்து விட்டு, சேனை அதிகாரி தான் வெளியே தலையை நீட்டி 'ஏன் என்ன வேலை?' என்று கேட்டான். "நான் அவரைச் சந்திக்க வந்திருக்கிறேன்."

"ஆனந்த சூரி! மண்டலேசுவரரிடம் போவதற்கு முன் உங்கள் கைகால்களைக் கட்டிக் கொண்டு போக வேண்டிவரும். தெரியுமா?" என்று சொல்லி விட்டு வேகமாகக் கதவைச் சாத்தினான். பின்னே தாழ்ப்பாள் ஏற்றும் சத்தத்தை ஆனந்த சூரியின் காதுகள் வெறுப்புடன் கேட்டன.

துறவி பல்லைக்கடித்து நின்றார். ராஜபுத்திரன் வேஷத்திலும் அவரைக் கண்டுகொண்டார்கள். கோபம் எல்லைமீறிச் சீறிற்று. பாகேசுவரி அம்மனின்கோயிலில் அவர் அகக் கண் முன் எழுந்த உருவத் தோற்றத்தால் அவர் உள்ளம் நெருப்புக் கனிந்திருந்தது. இப்பொழுது பட்ட பரிபவம் அதில் நெய்யை ஊற்றிற்று. காலிக்குடிசைகளில் வீரர்களைத் தங்கி இருக்கச் சொல்லிவிட்டு, பிரேதவித்தை மூலம் பைரவநாதனின் ஆராதனை செய்



STERILINE

ஸ்டெரிலைன்

மாதவிடாய் கோளாறுகள் உங்கள் வாழ்க்கையின் ஆரோக்யத்தையும், இன்பத்தையும் பாதிக்கின்றன. இனி துயரப்பட வேண்டிய அவசியமில்லை. நவீன ஆராய்ச்சிகளின் விளைவான 'ஹார்மோன் எஸ்ட்ரின்' எனும் மருந்தின் சக்தி நிறைந்த ஸ்டெரிலைன் உங்கள் தொல்லைகளை நீக்க, சுலபமான முறை அளிக்கிறது. இன்றே ஸ்டெரிலைன் உட்கொள்ளத் தொடங்கவும். ஆரோக்கிய வாழ்வு மீண்டும் உங்களைத் தேடி வரும்.

'ஸ்டெரிலைன்' 3 விதங்களில் கிடைக்கிறது.

| | |
|---|---|
| சிறிய பாட்டில் — | விலை ரு. 8. |
| பெரிய பாட்டில் — | ... ரு. 15. |
| ஸூபர் ஸ்டெரிலைன் | ... ரு. 15. |
| பெரிய சைஸ் — | ... ரு. 25. |
| நீண்ட நாளைய கேஸ்களுக்கு | ... ரு. 45. |

கடிதங்கள் ஆங்கிலத்தில் எழுதவும்

**ELLIS & MARTYN**

Kothari Mansion, Opp. G. P. O.
Post Box No. 414 (C. V.)
Fort, BOMBAY-1.

பவரைப்போல அங்கிருந்த ஓர் மரத்தின் மேலே அலைய ஆரம்பித்தார்.

அறிவு நிலைக்கும் அறிவு சுற்றும் பைத்திய நிலைக்கும் வித்யாசம் கொஞ்சம் தான். சுய நிலையில் மனிதன் மனதை ஒரு நிலைப்படுத்தி அவசியமில்லாத போது அதை விட்டு இழுக்க இயலும். பித்து நிலையில் ஒன்று மனது ஒரு நிலைப்படாது அல்லது பட்டுவிட்டால் அந்த நிலையிலிருந்து மனதை இழுக்க முடியாது. துறவியின் ஆவேசம் அவர் அறிவைச் சுழற்றி உன்மத்த நிலையில் மாற்றிக் கொண்டிருந்தது. ஜைன மதத்தின் வெற்றி ஆர்வத்தில் ஜைனர்களின் எதிரிகளின் தோல்வியை விரும்புவது எளிது தான்; அவர்களை வெறுப்பதும் எளிதாய்த்தான் இருந்தது. அவருடைய துவேஷம் எல்லாம் இப்பொழுது தேவப்ரஸாதிடம் ஒருமித்திருந்தது. இந்தச் சமயம் அவருடைய மனது பயங்கரமான விதத்தில் உறுதிப்பட்டுக் கொண்டிருந்தது—பித்துப் பிடித்துக் கொண்டிருந்தது. நடந்து நடந்து ருத்ர மஹாலயத்தின் மதில் சுவருக்குப் பின்பக்கம் ஸரஸ்வதி நதியின் கரைக்கு வந்து சேர்ந்தார்.

நடு இரவு ஆகும் நேரம். கம்பீர மல்லன் முதலியவர்களிடமிருந்தும் ஒரு சமாசாரமும் வெளியாவதாக இல்லை. தேவப்ரஸாத் ஒரு கால் அங்கிருந்து வெளியேறியிருந்தால்? எங்கே போயிருப்பான்? தேஹஸ்தலத்துக்கா? பிறகு வீரன் அந்த விதம் சொல்லவில்லையே! என்றெல்லாம் எண்ணியவாறே ஸரஸ்வதியின் கரைக்கு வந்து சேர்ந்தார். அதன் தண்ணீர் ருத்ர மஹாலயத்தின் மதிலுடன் சேர்ந்து ஓடிக் கொண்டிருந்தது. சந்திரனின் ஒளி அதன் மேல் வெண்ணிறம் பூசிக் கொண்டிருந்தது. "மண்டலேசுவரன் எங்கே இருப்பான்?" அவர் மேலே பார்த்தார். மஹாலயத்தின் மிக உயர்ந்த தளம் மதில் சுவருக்குச் சரியாய் இருந்தது. அவர் மேலேயே பார்த்துக் கொண்டிருந்தார். திடீரென்று அவர் சரீரம் ஒரு உதறல் உதறிற்று. அங்கே யார்?

ஒரு மனிதனின் நிழல். அனுமானத்தால், அது உருவத்திலும் நிற்கும் விதத்திலும் அவனாய்த்தான் இருக்கவேண்டும்.

மண்டலேசுவரன் அருகில் மற்றொரு நிழல். துறவி சிரித்தார். ஆனந்தக் கேளிக்கையில், விலாசத்தில் அதிகாரத்தைக் கூட மறந்து உதறி நிற்கும் அந்தத் தேவப்ரஸாதிடம் துறவி வெறுப்புக் கொள்ளாமல் இருக்கமுடியவில்லை. அவர் உள்ளம் கிளர்ந்து எழுந்தது. குருதேவரின் தீர்க்க தரிசன வாக்கு, காதுகளில் ஒலித்தது. "தேவப்ரஸாத்! வந்துவிட்டது உன் முடிவுக்காலம். நீயும் ஆனந்த சூரியின் கைகளின் சக்தியை அனுபவிப்பாய்!" துறவி ஆவேசமறதியில் தம் கைகளை மூடிப் பிடியைக் குலுக்கிக் காட்டினார்.

கொஞ்ச நேரம் அங்கிருந்து துறவி மெதுவாகத் திரும்பினார். கொஞ்சதூரம் வந்ததும் அவருக்குக் குதிரைகளின் காலடிச்சத்தம் கேட்டது. அவர் திடுக்கிட்டார். இந்தச் சமயம் வருவது யார்? சத்துருவா, மித்திரனா? அவர் வீரர்கள் தொலைவில் இருந்தனர். தனித்து நின்று, எதிரியானால் எப்படிச் சமாளிக்க முடியும். தைரியத்தை வருவித்துக் கொண்டு அதே துணையாய் அங்கேயே நின்றார். கடுகிவந்த குதிரைகள் அண்டிவந்தன. இரண்டு மூன்று வீரர்கள்தான் வந்தனர் என்று தெரியவந்தது. இன்னும் கொஞ்சம் தைரியம் ஏற்பட்டது. அங்கங்கே சில வீரர்களை வேவுபார்க்கக் காவல் வைத்திருந்தார்; அவர்களுள் சிலராக இருக்கலாம். குதிரை அருகில் வந்ததும் 'யாரது?' என்றுகேட்டார்.

முதல் வீரன். 'ஜய்! ஜயதேவ் மகாராஜாவுக்கு ஜய்! 'என்று வணக்கம் கூறினான்.

'யாரது, சித்திர விஜயனா? எங்கே வந்தாய் இந்தச் சமயம்!"

"மகாராஜா! மண்டலேசன் 'வல்லபசேன்' இந்தப் பக்கம் வருகிறார்." துறவி அச்சக்குறிகள் அலரிவெளியேற "ஊம்? தனியாக இருக்கிறாரா? துணைகொண்டு வருகிறாரா?" என்று கேட்டார்.

"அவருடன் ஐந்நூறு எழுநூறு குதிரை வீரர்கள் இருக்கின்றனர். கேள்விப்பட்டவுடன் தங்களுக்குத் தெரியப்படுத்த வந்தேன்."

"எவ்வளவு தூரத்திலிருப்பார்கள்?"

"மூன்று நான்கு மணி நேரத்தில் இங்கே வந்து விடுவார்கள்"

"சரி. கொஞ்ச தூரத்தில் நம் வீரர்கள் தங்கியிருக்கின்றனர். சென்று நீயும் தங்கியிரு. நான் இதோ வருகிறேன்." சித்திர விஜயன் விடைபெற்று நகர்ந்தான்.

துறவியின் புத்தி வேறுபாடு அதிகரித்தது. இது என்ன? வெண்ணெய் திரண்டு வரும் நேரத்தில் தாழி உடைந்து விடுமா? கடைசி நேரத்தில் மண்டலேசுவரன் வலையைவிட்டுக் குதித்து வெளியேறி விடுவானா? வல்லபசேன் வருவதற்கு முன்பே தம் எண்ணத்தை எவ்விதம் நிறைவேற்றுவது? மதில் சுவருக்குமேல் பெரிய பெரிய ஆணிகள் குத்தி நிறுத்தப்பட்டிருந்தன. அதன்மேல் ஏறுவது ஆகாத காரியம், அவர் வெகு வேகமாக

ஸரஸ்வதி நதி சுவருடன் ஒட்டி ஒண்டி ஓடும் இடத்துக்கு வந்து சேர்ந்தார். பார்வையைக் கஷ்டப்படுத்தி வேலை வாங்கினார். மதிலிலிருந்துவரும் ஒரு மோரி தென்பட்டது. கொஞ்சம்கூடத் தயங்காமல் ஒருகத்தி தவிர மற்ற ஆயுதங்களை எறிந்துவிட்டு நதியில் குதித்தார்; நீந்தி மோரிப்பக்கம் சென்றார். மோரி வழியாக அழுக்குத் தண்ணீர் பாய்ந்து வந்து கொண்டிருந்தது. அதைப் பற்றிக் கூட லக்ஷியம் செய்யவில்லை. மிகவும் கஷ்டப்பட்டு உடலைக் குலுக்கி—(துறவியல்லவா? ஆஸனங்கள் ஸ்தம்பனங்கள் செய்து பழக்கம் இருக்குமே!) துர்நாற்றத்தைப் பொறுத்து மோரியில் நுழைந்து நீந்தி உள்ளே சென்று வெளியேறி எழுந்து நின்றார். பக்கத்திலே இருந்த ஒரு கிணற்று நீரைக் கொண்டு முகம் கை கால் கழுவிக் கொண்டு மஹாலயத்தைச் சுற்ற ஆரம்பித்தார். மேலிருந்த யாரோ சிரித்த ஓர் சப்தம் அவருள் ஒரு அர்த்தமற்ற ஆவேசத்தைத் தூண்டிவிட்டது.

மேலே சென்று சண்டையிடுவதில் புத்திசாலித்தனம் இருப்பதாகத் தோன்றவில்லை. உள்ளே உள்ள வீரர்களின் எண்ணிக்கை தெரியாமல் தம் வீரர்களுக்குக் கதவு திறப்பது சரியான விவகாரமில்லை. வினாடிக்கு வினாடி வல்லபசேன் முன்னேறி வந்து கொண்டிருந்தான். ஆகவே அவர் முன் கொஞ்ச நேரம் தான் பாக்கி இருந்தது. அந்த நேரத்துக்குள் எப்படி மண்டலேசுவரனை ஒழித்துக் கட்டுவது என்ற கவலை தான் அவரை வாட்டிக் கொண்டிருந்தது. அவர் அங்கும் இங்கும் பார்த்தார். எதிரே ருத்ர மஹாலயத்தின் கோசாலை (பசு மாட்டுக் கொட்டில்) தென்பட்டது. அதே சமயம் வெளியில் தொலைவிலிருந்து காதுக்கெட்டின குதிரைக் காலடிச் சப்தம் வல்லபசேன் வந்து விட்டானோ என்ற பயத்தை ஏற்படுத்திற்று. என்ன செய்வது? இப்பொழுது என்ன செய்வது? என்ன செய்வது? மாட்டுக் கொட்டகையின் பக்கத்தில் கட்டிடத்துடன் ஒட்டிக் கிடந்த ஒரு பெரும் வைக்கோல் போர் துறவியின் கண்களில் தென்பட்டது. அவர் உள்ளத்தில் ஓர் அரக்க எண்ணம் வேரூன்றி எழுந்தது. யதி அங்கும் இங்கும் ஓடினார். ஒரு முற்றத்தில் ஒரு இடையன் ''ஹுக்கா'' பிடித்துக் கொண்டே தூங்கி விட்டிருந்தான். எரியும் புகையிலையின் நாற்றம் துறவியைத் தூண்டி இழுத்தது. அங்கே ஓடி உலோபி புதையலை வாரி எடுப்பது போல் நெருப்பை எடுத்தார். அதை வாயால் ஊதி எரிய விட்டுக் கொண்டே வந்து, வைக்கோல் போரில் வைத்து அங்கேயும் ஊதினார். அது பிடித்து எரிய ஆரம்பித்தது.

துறவி விலகி நின்று சந்தோஷத்துடன் கைகளைப் பிசைய ஆரம்பித்தார். நன்றாகப் பிடித்துக்கொண்டுவிட்டது என்று தெரிந்தவுடன் ருத்ர மஹாலயத்தின் மதில் சுவரில் ஓர் சிறிய வாசற் படியில் வந்து கதவைத் திறந்து கொண்டு வெளியேறினார். அவர் வாழ்வின் குறி நிறைவேறி விட்டது. அவர் ஆனந்தம் எல்லையற்றுப் பரவ ஆரம்பித்தது. அஹிம்ஸா பரமோ தர்ம:— ஆம், அது தான் அவர் மந்திரம். அவர் பிரசாரம் செய்வதும் அதுதான். ஆனால் அது ஜைனமதத்துக்குள் வந்தவர்களுக்கு மட்டுந்தான்!

சென்று நதிக்கரையை அடைந்து முடிவைக் கண்களால் காண விரும்பி அந்தப் பக்கம் பார்வையைச் செலுத்தினார். கொஞ்ச நேரம் வரை ஒன்றும் தென்படவில்லை. ஒரு கால் நெருப்பே அணைந்துவிட்டதோ? இல்லை, இல்லை. அதோ... மஹாலயத்தின் முதல் படியின் ஜன்னல் பற்றி எரிந்து வெடித்தது. இரண்டு ஜன்னலிலிருந்து புகையும் வர ஆரம்பித்திருந்தது. துறவி ஆனந்த சொரூபராக ஆய்விட்டார்! அவருடைய ஸ்திரப்பட்ட மனோநிலை பலன் பெற்று விட்டது!

## ''ஸரஸ்வதி'' மாதாவின் இதயத்தில் (காலடியில்)

ஜனங்களின் கூச்சல், எரிகின்ற கட்டைகளின் வெடிப்புச் சத்தம் இவைகள் தன் அன்பின் பக்கத்தில் படுத்துறங்கும் மண்டலேசுவரனை எழுப்பிவிட்டன. ஹம்ஸாவும் எழுந்து கண்களைத் துடைத்துப்பார்க்க ஆரம்பித்தாள். நெருப்பு ஜ்வாலைவிட்டு எரிந்து கொண்டிருக்கிறது. எல்லாம் ஒரே சூடு. வெடித்து எரிந்துவிழும் பொருள்களின் பயங்கரமான சப்தம். தானவனின் பயங்கரமான நாக்கைப்போல் கொழுந்துவிட்டு எரியும் நெருப்பின் பிரதிபிம்பம் ஸரஸ்வதி நதியின் இதயத்தில் காணப்பட்டது. மண்டலேசுவரன், ''ஹம்ஸா. செத்தோம். யாரோ சூழ்ச்சிக்காரன் மஹாலயத்தில் நெருப்பை வைத்துவிட்டான்.'' என்றான்.

ஹம்ஸாவின் திறந்த கண்கள் மூடவில்லை. என்ன நடக்கிறதென்றே அவளால் அறிய முடியவில்லை. தேவப்ரஸாத் இன்னலுக்கெதிரே மனம் உடைபவனல்ல. ''பிரியே, கவலைப்படாதே. இந்தப் போர்வையைப் போர்த்துக்கொள். இதோ ஒரு நொடியில் கீழே சேர்ந்துவிடலாம்'' என்று சொல்லி அவன் வேகமாக ஹம்ஸாவை இழுத்துச் செல்ல ஆரம்பித்தான். முன் வாசலைத் திறந்து கீழே இறங்க ஆரம்பித்தான். கீழ் அறை முழுவதும் சிவந்து நின்றது.

"நாதா, என்னால் ஓட முடியாது. நீங்கள் போங்கள். என்னை விட்டு விடுங்கள்"

"விட்டுப் போவதா? சற்று இரு." என்று சொல்லிக்கொண்டே தேவப்ரஸாத் அவளைப் பூப்போல் பந்தாய்ச் சுருட்டித் தூக்கிக் கொண்டான். மேலே சென்று படிக்கட்டருகில் வந்தான். வாசலைத் திறந்தவுடன் நெருப்பு உள்ளேவர ஆரம்பித்தது. அதிகரித்து வந்தது. மூச்சுக்கூட விடமுடியவில்லை. தைரியத்துடன் அவன் மேலேறினான். படிக்கட்டின் வழியே இறங்கிவர முயன்றான். படிக்கட்டுக் கீழே எரிந்துவிட்டது. இறங்குவது எப்படி? அங்குமிங்கும் சென்ற விழிகளுக்கும் வழி ஒன்றும் தெரியவில்லை.

"நாதா, இனி என்ன செய்வீர்கள்?"

"மண்டுகேசுவரரின் கருணை. நீ ஏன் பயப்படுகிறாய்?" என்று அவளைத் தைரிய மூட்டிக்கொண்டே மண்டலேசுவரன் அங்குமிங்கும் ஓடினான். குழந்தையைப்போல் அவளை அப்போது இறுக அணைத்துக் கொஞ்சிக் கொண்டே பின்னடைந்து சென்றான். மேல் தளம் மட்டும் தான் இதுவரை நெருப்புக்குத் தப்பியிருந்தது. மறுபடியும் ஏற்கனவே தூங்கியிருந்த அறைக்கே வந்து சேர்ந்தான்.

"பிராணேசா, நானே உம் தலைக்கு எமனாய் வந்தேனே! இனி என்ன செய்வீர்கள்?"

"போடி அசடே! நேற்று ஒரு நாள் நாம் சேர்ந்திருந்தோமே, அந்த இன்பத்துக்கு எனக்குப் பத்துத்தலைகள் இருந்தாலும் அவ்வளவையும் கொடுத்துவிடுவேனே! இந்தக் கோழைகள் பெண்களைப்போல் மஹாலயத்தில் நெருப்பு வைத்து என்னைக்கொல்ல முயற்சி செய்திருக்கிறார்களே! பரவாயில்லை ஹம்ஸா! நம் ரத்தங்கள் இந்த உலகைவிட்டு எங்கே போகும்? சிலர் உயிருடனே வெற்றி காண்கிறார்கள். சிலர் வெற்றி இறந்தபிறகு தான் பிரகாசிக்கிறது. நாம் இருவரும் இறந்து பெருமை பெறுவோம். பயப்படாதே, பயப்படாதே. வா. உன்னை மேல் மாடிக்கு எடுத்துச் செல்கிறேன்." மண்டலேசுவரன் இவ்விதம் சொல்லிக் கொண்டே அவளை மேல்மாடிக்கு எடுத்துச் சென்றான். நான்கு புறங்களிலும் நெருப்பு பரவி வந்து கொண்டிருந்தது. சரி இனித் தப்ப வழி இல்லை. உயிருடன் இருக்கும் அந்தக் குறைந்த நேரத்துக்குள் அவன் ஹம்ஸாவிடம் பல ஜன்மங்களின் அன்பைச் செலுத்தினான். அவளை அடிக்கடி முத்தம் இட்டான்.

"நாதா. இது என்ன நேர்ந்து விட்டது?"

"ஸோலங்கி தேவப்ரஸாதுக்கு ஏற்ற நெருப்பு—சிதை இது தான்! அதோபார், அங்கே தான் என் தகப்பனாரின் சடலமும் எரிந்தது... ஆம். ஆம். ஹம்ஸா! தைரியமிருக்கிறதா, சொல். அதோ ஸரஸ்வதி மாதா ஓடுகின்றாள். அதில் குதித்து விடுவோம்!"

"நாதா. எனக்கு ஒன்றும் புரியவில்லை. எப்படியும் இறந்து தானே ஆக வேண்டும். தங்கள் கீர்த்திக்கு ஏற்றது எதையும் செய்யுங்கள்... !"

"சரி, வா. என் இடுப்பைக் கட்டிப் பிடித்துக்கொள்"

ஹம்ஸா எல்லாவற்றையும் மறந்து, காதல் இதயத்தைப் பிணைத்துக் கொள்வதுபோல, தேவப்பிரஸாதின் இடுப்பைக் கட்டிப் பிடித்துக் கொண்டாள். தேவப்பிரஸாத் மற்றத்துணிகளை எடுத்துவிட்டு வேஷ்டியை மட்டும் கச்சம் கட்டி, கூரையின் நுனியில் வந்து நின்று கொண்டான். அவன் கண்கள் ஒரு முறை சுழன்றன. கீழே எரியும் தீயின் வேகவைக்கும் நாக்குகள், கோவிலின் கலசத்தில் பறக்கும் கொடி, மேலே கவிந்து நிற்கும் ஆகாசம், கீழே இனிய நாதத்துடன் செல்லும் ஸரஸ்வதி மாதாவின் நீரோட்டம், மதில் சுவருக்கும் அவனுக்கும் உள்ள இடைவெளி, தேவப்பிரஸாத் மனது பொங்கி வந்தது. சாவுடன் போராடுவதில் அவனுக்குத் தனி இன்பம். பிள்ளைப் பருவத்தில் பட்டண் நகரில் நதியில் குதித்துப் பழக்கம் பெற்றவன். அந்த உற்சாகம் இன்றும் குறையவில்லை. ஒரு பார்வை, ஒரு முத்தம்... ஜய் சோம்நாத்!— நதி நீர் வேகமாய் எழும்பிக் குதித்தது.

* * *

நதிக் கரையில் நின்ற யதி ஆனந்த நதியில் புரண்டு கொண்டிருந்தார். மஹாலயம் இரண்டு மணி நேரத்துக்குள் தலை பணிந்து விழுந்து விடும். அவர் தர்மத்தின் வெற்றி... அதே நேரத்தில் அவர் நெருப்பின் சிவந்த வெளிச்சத்தில் கூரையின்மேல் இரண்டு உருவங்களைப் பார்த்தார். ஆனந்தம்: அவர் மதவிரோதி உயிருடன் எரிந்து கருகப் போகிறான். ஆனால் அடுத்த நிமிஷமே அவர் ஆனந்தம் பறந்து விட்டது. ஆத்திரப் பட்டு அலறினார். உயர்ந்த கூரையிலிருந்து ஒருவரை ஒருவர் கட்டிக் கொண்டு இருவர் விழுந்தனர்; நதியில் குதித்து விட்டனர். நீர் குதித்து மர உயரம் எழும்பிற்று. அது தணிந்தவுடன் ஓர் உருவம் கையடித்து



நீந்த ஆரம்பித்தது. யதி அழைத்தார்; வீரர்கள் வந்து குழுமிநின்றனர்.

"சித்திர விஜயா!"

"மகாராஜ்!"

"குதிரையுடன் வீரர்களை நதிக்கரையுடன் போகச் சொல். அதோ நீந்துபவன் கரை யேறினால் வேலை முடித்துவிடச் சொல்."

"கட்டளைப்படியே!"

துறவி அதிகம் யோசிக்கவில்லை. அங்கு மிங்கும் பார்த்தார். உடனே நதியில் குதித்தார். வேகமாக முன்னே செல்பவனைத் தொடர்ந்தார்.

## "எஜமானர் பின்"

காலை நேரம். மேரளத்தின் அருகே வல்லபசேன் தேவப்ரஸாதை எதிர்பார்த்து, ஏமாற்றத்தைப் பல்லைக் கடித்துத் தெரியப் படுத்திக் கொண்டிருந்தான். வல்லபசேன் ஒரு சிறிய மண்டலத்தின் அதிபதி. சிறுவயதிலிருந்தே தேவப்ரஸாத் அவனை ஒரு புத்திரன்போல் பராமரித்து வந்திருக்கிறான். வல்லபசேனும் அவனை ஒரு தந்தைக்கு அதிகமாகவே நேசித்துவந்தான். அவன் கம்பீரமானவன்; அதிகம் பேசாதவன். நேர்மையுள்ளவீரன். தேவப்ரஸாத் என்னசொன்னாலும் அது அவனுக்கு வேதவாக்கு: அது அவன் வாழ்க்கையின் மந்திரம். தேவப்ரஸாத் கட்டளைப்படி சேனையுடன் மேரளத்தருகில் தங்கி, தேவப்ரஸாதின் வரவை எதிர்பார்த்துக் கொண்டிருந்தான். பகல் ஏறஏற அவன் யோசனையும் அதிகரித்துக்கொண்டே வந்தது. நடுப்பகலில் சிற்றரசன் விசுவபாலன் தன் குதிரை வீரர்களுடன் மதுபுரியிலிருந்து வந்து சேர்ந்தான்.

வல்லபன் தனக்குரிய முறையில், "எனக்கு நேரமில்லை; நீங்கள் எங்கே வந்திருக்கிறீர்கள்?" என்று கேட்டான்.

"பார்த்தாயா? குஜராத்தில் இவ்வளவு சேனையா? நீ வீரன். சண்டையில் வல்லவன். உனக்குத் தெரியாததில்லை. இப்பொழுது மாளவ ராஜனைத் தோற்கடிக்க வேண்டும். நாம் இப்படி விலகி விலகியிருந்தால் காரியம் எப்படி நடக்கும்?" சொல்லிய விசுவபாலன் கொஞ்சம் நின்றான். இளம் வீரன் சித்திரம் போலானான். விசுவபாலன் மனம் விட்டுப்பேச ஆரம்பித்தான். மீனல் தேவியின் பெருந்தன்மையைப்பற்றிக் குறிப்பிட்ட அவன், 'வல்லபசேன் சேனையுடன் சென்று உடனே அவளைப்பார்க்கலாமே' என்று மறைவாக ஆசை காட்டினான்.

வல்லபசேன் மிகச்சுருக்கமாக, "மண்டலேசுவரர் உத்தரவிருக்கிறதா?" என்று கேட்டான்.

விசுவபாலன் தேவப்ரஸாதின் நிலைமையை விளக்கிக் கூறினான். இதுவரை கைதியாயிருப்பான் என்றும் ஜோசியம் கூறினான். தேஹ ஸ்தலம் வீழ்ந்தால் அதையும் வல்லபசேன் அடைவதில் மீனல்தேவி சந்தோஷமடைவாள், என்றான். வல்லபசேன் முகத்தில் மாறுதல் ஒன்றும் ஏற்படவில்லை. வெடுக்கென்று எழுந்து நின்றான். "விசுவ பாலரே. சென்று மண்டலேசுவரர் உத்தரவு வாங்கி வாருங்கள். எதையும் செய்கிறேன்" என்றான்.

"இல்லாவிட்டால்.........?"

"ஒன்றும் நடவாது" என்று சொல்லி வல்லபசேன் விசுவபாலனை விட்டு நகர்ந்து விட்டான். விசுவபாலன் களைத்து வெளியேறினான். வல்லபசேனிடம் அந்தக் கதை நடக்கவில்லை.

விசுவபாலன் சென்றுவிட்ட பிறகு வல்லபசேன் கவலை அதிகரித்தது. நாள் ஏற ஏற, மண்டலேசுவரனிடமிருந்து ஒரு செய்தியும் கிட்டாமல் இருக்க இருக்க, சேனையிலும் பரபரப்பும் கசகசப்பும் பரவ ஆரம்பித்தது. மாலை நேரத்தில் மதுபுரியிலிருந்து அவ்விடத்துச்சேனை பட்டண பக்கம் போகிறதென்றும் அதனுடன் அநேகமாக ராணியும் இருக்கலாம் என்றும் சமாசாரம் வந்தது. இது என்ன? மண்டலேசுவரனின் எல்லா ஏற்பாடுகளும் வீணாகி விட்டனவா? வல்லபசேனுக்குப் பயம் ஏற்பட்டு விட்டது. அசாதாரணமான காரணமில்லாமல் மண்டலேசுவரன் தம் சேனையை விட்டு இருக்கமாட்டாரே! வல்லபசேன் கலவரத்துடன் சிக்கலில் பட்டிருந்தான். அவனிடமுள்ள மரியாதை காரணமாகச் சேனை அடங்கியிருந்தாலும் அங்கங்கே ஏற்பட்ட கசகசப்பை அவன் அறியாமலில்லை.

இரவு இருண்டு வந்தது. அவனால் அனுப்பப்பட்ட ஒற்றர்கள் வந்து வழியில் எங்கும் மண்டலேசுவரன் சமாசாரமே தெரியவில்லை என்று சொன்னார்கள். வல்லபசேன் தன் எஜமானனைத் தேடிப் புறப்படத் தீர்மானித்தான். உடனே பொறுக்கி எடுத்த ஐந்நூறு வீரர்களை மண்டுகேசுவரத்துக்குப் போகச்சொல்லி உத்தரவிட்டான். தானும் இருபத்தைந்து வீரர்களுடன் ஒட்டகங்களின் மேல் அமர்ந்து பிரயாணமானான். பாக்கி சேனை ஒரு நம்பிக்கையுள்ள சிற்றரசன் மேற்பார்வையில் விடப் பட்டது. மதுபுரி சேனை ஒருகால் இங்கே வரலாம் என்ற சந்தேகம்.

# புது வருஷ தீபாவளிக்கு

எங்கள் ஆதரவாளர், வாடிக்கைதாரர்
அன்பர்கள் யாவருக்கும் எங்கள் மங்கள வாழ்த்துக்கள்

TODAY'S FAVOURITE




பரிசுத்தமான வேப்பெண்ணெயும் இதர வாசனைச் சத்துக்களும் சேர்த்துத் தயாரிக்கப்பட்ட மலபார் **லிம்டா** சோப் அழகுக்கு அழகு அளிப்பதோடு ஓர் கிருமி நாசினியாகவும் வேலை செய்கிறது. இன்றைக்கு அது தேசத்தில் ஒவ்வொருவருடைய அன்பையும் கவர்ந்திருப்பதில் ஆச்சர்யம் ஒன்றுமில்லை.

**malabar LIMDA Soap**

FAS-480

VEGETABLE SOAP WORKS . . . CALICUT.

PROPRIETORS: SAIT N.P. & CO. LTD. CALICUT - BOMBAY-2 - MADRAS-1

சில குதிரை வீரர்களை ஒரு கால் பாகேசுவரி கோயிலில் மண்டலேசுவரர் இருக்கிருரோ என்று பார்க்க அனுப்பி வைத்தான்.

வேகமாகவே ஒட்டகங்களை விரட்டிக் கொண்டு அவர்கள் மண்டுகேசுவரத்துக்கு வந்தார்கள். நிலவு தவழும் இரவில் வானத்தின் ஒரு புறம் ஒரே சிவப்பு மயமாயிருப்பதைக் கண்டான் வல்லபசேன். பல்லை இறுகக் கடித்து அவன் "மண்டுகேசுவரர் கோயில் பக்கம் இது ஏது நெருப்பு?" என்று கேட்டுக் கொண்டான். ஏனே அவன் உள்ளம் உருத் தெரியாத பயத்தினுல் பதறிற்று. ஒட்டகங்கள் ஓட உத்தர விட்டான். அவன் கண்கள் நெருப்பையே உன்னிக் கவனித்தன. மரக் கூட்டங்களை விட்டு வெளியேறின அவர்களுக்கு நெருப்பு ஸ்பஷ்டமாகப் பட்டது. மண்டுகேசுவரரின் கோயில் தான் எரிகிறது என்று கண்ட வல்லபசேனின் உதடுகள் பற்களின் பலத்தைப் பரீக்ஷிக்க ஆரம்பித்தன.

இதே சமயம் மூன்று நான்கு குதிரை வீரர்கள் எதிரே வந்தனர். வல்லபசேன் அவர்களை அதட்டி நிறுத்தினுன். "நில்லுங்கள் யார் நீங்கள்?" வந்த வீரர்கள் அவனை அறிந்து கொண்டு, "வல்லபசேனு?" என்ருர்கள்.

"யாரது? கம்பீரமல்லரா? ஏன், என்ன சமாசாரம்? மகாராஜா எங்கே?"

"மகாராஜரா? அவர் தான் மஹாலயத்தில் எரிந்து மடிந்தாரே! இனி நாம் ஓட வேண்டியது தான்."

ஒட்டகத்தை உட்கார வைத்து வல்லபன் கீழே இறங்கினுன். கம்பீரமல்லனிடம் வந்தான். சிங்கத்தைப் போலக் கர்ஜித்தான்: "மகாராஜ் இறந்தாரா? என்ருல் நீ எப்படி உயிருடனிருக்கிருய்?"

"தங்களுக்குத் தெரியாதா? காலையில் நாங்கள் முஞ்ஜாலைப் பார்க்கப் போய்க் கொண்டிருந்தோம். இவ்வளவிலே ஹம்ஸாதேவி வந்து விட்டார்கள்."

"ஊம்?"

"ஆம். அவர்கள் உயிருடனே தான் இருந்தார்கள். ராணி அவர்கள் சமயம் பார்த்து அவர்களை மகாராஜாவிடம் அனுப்பி வைத்தார்கள். மகாராஜா உடனே மற்றவைகளை எல்லாம் நிறுத்தி விட்டு எங்களை மட்டும் முஞ்ஜாலைச் சந்திக்க அனுப்பினுர்கள். வழியில் யதி எங்களை மடக்கி இங்கே அனுப்பி விட்டார். இந்தச் சமயத்தில் தான் மஹாலயம் பற்றி எரிய ஆரம்பித்தது. அதைக் கண்டதும் சேனையில் ஓட்டமும் பிடியும் ஆரம்பிக்கவே நாங்கள் தப்பி ஓடி வந்து விட்டோம்."

கொஞ்ச நேரம் வல்லபசேன் சும்மா பார்த்துக் கொண்டே இருந்தான். அவன் கண்கள் மிகவும் ஆழ யோசித்தன. "கம்பீரமல்லா, திரும்பிச் செல். போய்த் தான் பார்க்கலாம். இந்த ஒட்டகத்தின் மேலேயே ஏறிக்கொள்" என்ருன். எல்லோருமாகக் கிளம்பிச் செல்ல ஆரம்பித்தனர். மஹாலயம் பிரசண்ட வேகத்தில் எரிந்து கொண்டிருந்தது. அவர்கள் நதியின் கரை வழியை பிடித்துக் கொண்டு சென்ருர்கள்.

அங்கே மஹாலயம் பெரிய சொக்கப் பானை போல எரிந்து கொண்டிருந்தது. ஜனங்கள் கரையில் நின்று கொண்டு மேலேயும் கீழேயும் பார்த்துக் கொண்டிருந்தனர்.

வல்லபசேனும் அவன் தோழனும் அங்கேயே இறங்கினுர்கள். அவர்களைக் கண்டதும் ஜனங்களில் சிலர் ஓட ஆரம்பித்தனர். வல்லபசேன் அவர்களுள் ஒருவனைப் பிடித்துக் கொண்டான். அவனை உறுக்கிக் கேட்டான். "நீயார் மனிதன்?"

அந்த மனிதன் கைகளைக் கூப்பி, "யார் வல்லபசேன மஹாராஜாவா! நான் தான்."

"யாரது, ராம்பால சிங்கா?"

"ஆம். மகாராஜா!"

"இது என்ன, இது எல்லாம்?" வல்லபசேன் கடுமையான குரலில் கேட்டான்.

"மகாராஜா! நான் மண்டலேசுவரருடன் மஹாலயத்தில் தான் இருந்தேன். நெருப்புப் பிடித்தவுடன் நானும் மற்றத் தோழர்களும் மேலே சென்று அவர்களை எழுப்ப முயன்ருேம். உள்ளே தூங்கிய படியால் அவர்கள் அதைக் கேட்க முடிய வில்லை. நாங்கள் வெளியேறி விட்டோம். இப்பொழுதும் அவர்கள் நதியில் குதித்து விட்டார்கள் என்று இந்த ஜனங்கள் சொல்கிருர்கள்."

"இவர்கள் யார்?"

"சந்திராவதி வீரர்கள்; துறவியுடன் மகாராஜாவைக் கைது செய்ய வந்தார்கள். அவரும் இங்கே தான் நின்ருர். மகாராஜ் நதியில் குதித்தவுடன் அவரும் குதித்துவிட்டார்."

"யார், ஆனந்த சூரியா?"

"ஆம் அவர் தான்; பட்டணத்துக்குப் புதிதாக வந்துள்ள துறவி: அவர் குதிரை வீரர்களையும் கரையூடே வரும்படி உத்தரவு தந்து விட்டுப் போயிருக்கிருர்."

"ஏன்? மகாராஜா கரையேறினுல் கழுத்தை நெறிக்கவா?" வல்லபன் துறவியின் எண்ணத்தை அறிந்தான். "சரி கிளம்பு. ஒட்டகங்கள் தயாராயிருக்கின்றன. நாமும் குதிரை வீரர்களைப்பின் தொடர்வோம்."

வல்லபன் ஒட்டகத்தில் உந்தி ஏறினுன். அவர்கள் தண்ணீரில்குதித்து இரண்டுமூன்று மணி நேரம் இருக்கும். எல்லோரும் வேகமாகச் செல்ல ஆரம்பித்தனர்.

(தொடரும்)



# தாயுள்ளம்

சி. ஏகந்தராணம்.

"போரும், என்னைக் குட்டிச் சுவராக்கியது! உன் பேச்சைக்கேட்டுக் கேட்டுக் கைம்பெண் வளர்த்த கழிசடை என்று எல்லாரிடமும் ஏச்சுக்கேட்டதும் போரும். இனி நான் கைக்குழந்தையுல்ல, தட்டித்தாலாட்டி வளர்ப்பதற்கு. இன்றிலிருந்து நான் 'மேஜர்' ஆய்விட்டேன்! ஆம், அழுத்தம் திருத்தமாகச் சொல்கிறேன். என் இஷ்டப்படி நான் சுமுகத்தைத் தான் மணக்கப் போகிறேன்!" என்ன! சுந்தரமா இப்படிப் பேசுகிறான்? நேற்று வரை குழந்தையாயிருந்தவன் ஒரே ஒரு இரவில் மேஜர் ஆய் விடுவதாவது! அவன் எவ்வளவு பெரியவனாக ஆனாலும் தான் என்ன, அவளுக்குஅவன் குழந்தை தானே.

அவன் தலையெடுத்து, நாலு பேருக்கு மதிப்பாய், நல்வாழ்வு வாழவேண்டும் என்று அவனைக் கட்டிக்காத்து, சிறுவயதில் சிதறிப்போகாமல் கண்காணித்து, எப்படியாவது முன்னுக்குக் கொண்டுவர வேண்டுமென்று அவள் எடுத்துக்கொண்ட சிரமமெல்லாம் வீணா? குற்றங்குறையுள்ளதா? வேலி எங்கேயாவது பயிரை அழித்து விடுமா?

இந்த சுந்தரம், அவள் சதையின் சதை, உயிரின் உயிர், இவன் வேற்று மனிதன் போல ஒரு கணத்தில் அவளைத் தூக்கியெறிந்து பேசிவிட்டானே! அலக்ஷியமாக, அறுத்துப்பேசிய அந்த அரை மாத்திரைப் போது—ஆம், அதற்குத்தான் அவள் தியாகமயமான தன் வாழ்நாட்களை யெல்லாம் தத்தம் செய்தாள் போலும்! விதியின் விளையாட்டு என்பது இதுதானா?

அவள் கண்கள் கலங்கின, லேசாக. ஒரு திரை படர்ந்து அவள் பார்வையை மறைத்தது. அதை ஒரு புறம் கிழித்துக்கொண்டு கண்ணீர்த் துளிகள் அவள் கன்னங்களிலே உருண்டன.

வாழ்வுச் சாலையில் அவள் வெகுதூரம் வந்து விட்டாள். இப்பொழுது பின்னோக்கிப் பார்த்தாள். அவள் எண்ணங்கள், சுருள் பாய் போல் விரிந்துகொண்டே சென்ற இந்த நினைவுப் பாதையில் விரைந்தன.

*　*　*

அதோ! குழந்தை வருகிறான்! என்ன குறும்புத்தனம்தான் இந்தப் பிள்ளைக்கு. தோளிலே தொங்கவிட்ட புத்தகப் பை ஒரு புறம் ஊசலாட, கைகால்களை வீசி அவன் வருவதே ஒரு அழகு.... திடீரென்று அவன் இரண்டு சிறு கற்களைப் பொறுக்குகிறான். அவைகளை ஒன்றின்மேல் ஒன்றாக வீசியெறிந்து கொண்டே வருகிறான். ஒவ்வொரு வீச்சின் போதும். அவன்புத்தகப்பை தரைபடிந்து நமஸ்காரம் செய்து எழுந்திருக்கிறது. இதற்கிடையில், குப்பை மேட்டில் குருட்டு யோசனையில் ஆழ்ந்திருக்கும் ஒரு குக்கலின் மேல் ஒரு கல்லை வீசுகிறான். அது, தியானம் குலைந்து, வாள், என்று குரைத்துக் கொண்டே ஓடுகிறது. தன் சாமர்த்தியத்தைத் தானே மெச்சிக்கொண்டு அவன் கும்மாளமிட்டுக் குதிக்கிறான்.! அவன் பையும் துள்ளிக் குதிக்கிறது. இப்படி அவன் வந்து கொண்டிருக்கும் இந்தக் கண் கொள்ளாக் காட்சியை—ஒரு தாய்க்கு வேறு என்ன காட்சி ஆனந்தம் தந்துவிடும்?— அவள் கண் கொட்டாமல்

பார்த்துக்கொண்டே வாசலில் நிற்கிறாள். அந்தப் பார்வையிலே தான் என்ன கனிவு, என்ன பெருமிதம்! பார்த்துப் பார்த்தே அவனை உருவாக்கிச் சமைத்து விட்டவள் போல அல்லவா தோன்றுகிறது. தன் குழந்தை ஆடியசைந்து வரும் காட்சியைக் காண, அவள் எத்தனை தரம் உள்ளுக்கும் வாசலுக்கும் 'பாய்' போட்டிருப்பள்! வீடு சமீபிக்கவே, பையன் ஓடி வருகிறான். மற்ற நினைவுகள் மங்கிவிட்டன. அன்னையை அணுகவேண்டும். அதுதான் இப்பொழுது அவன் நெஞ்சில் நிறைந்திருக்கிறது. பையை ஒரு பக்கம் வீசிவிட்டு, ''அம்மா! இன்னிக்கு இங்கிலீஷ் பரீக்ஷையில் நான் தான் முதல். சோமுவுக்கு சுன்னம். பாரம்மா, கோபு என்னைப் பார்த்துக் காப்பி அடித்தான். விழுந்தது பூசை.'' அதை நினைத்துக்கொண்டு முகங் கொள்ளாக் களி கொள்கிறான். அன்னைக்குப் பெருமிதம் தாங்கமுடியவில்லை. அவள் இந்த உலகத்தைவிட்டு, ஏழாவது சுவர்க்கத்தை எட்டி விடுகிறாள்.

''கண்ணு! கணக்கிலே எத்தனை?

''அது நேத்திக்கின்னா அம்மா!''

''ஆமாம்! நேத்திக்குத்தான். என்ன வாங்கினாய்!''

''அந்த ஓரக்கண் கணக்கு வாத்தியாருக்கு சரியாகவே மார்க்குக் கொடுக்கத் தெரிகிறதில்லை அம்மா. கோபுகூட சொல்றான். மேலே சைபரைப் போட்டுவிட்டு கீழே கொண்டு போய் பத்தைப் போட்டு விடுகிறார் அம்மா! கோபு சொல்றான்.

''அவன் கிடக்கிறான். நீ சாப்பிடவா''

* * *

அது என்ன சத்தம்? அதோ சட்டியிலே தயிர் இருக்கிறது. கொஞ்சம் தான். தோள்பட்டை வரையில் கை முழுவதும் அதற்குள்ளே விடமுடியாது. ஆனால், அவன் சின்னஞ்சிறு கையிலே எவ்வளவு வரும்? கஷ்டப்பட்டுக் கையை மடித்துக்கொண்டாவது முழங்கை வரை அதில் விட்டுத் துழாவுகிறான். விரலிலிருந்து முழங்கை வரையிலும் அள்ள வேண்டும். என்ன ஆசை, அவசரம்; அன்னையின் குரல் கேட்கிறது. 'என்னடா அங்கே விஷமம்? இதோ வந்தேன்.' வேகமாய்த் தன் கையை எடுக்கிறான் குழந்தை. சட்டி சாய்ந்து தயிர் உடம்பெல்லாம் கொட்டி விடுகிறது. வாயிலிருந்தும் வயிற்றிலிருந்தும் வழிந்த தயிர் முத்தம் வழியே கொட்டுகிறது. ''சுளீர்'' என்று முதுகில் பூசை விழுகிறது. 'வீல்' என்று கத்திக்கொண்டே அன்னையின் காலைக் கட்டிக்கொண்டே அவள் முகம் நோக்கி அஞ்சி அழுகிறான் பாலன். நீரும் மோரும் கலந்து அவள் புடவை நனைந்து ஈரமாகிறது. ஈரம் நெஞ்சிற்கும் எட்டி விடுகிறது, ஒரு நொடியில்! அடித்த கை இப்பொழுது அதை அணைக்கிறது.

* * *

அடியம்மா! போதும் போதும். இந்தப் புருஷர் முகத்தில் இனி......ஆம், பிரசவ வைராக்யம்தான் (தலைச்சன் அல்லவா? சிரமம் ஜாஸ்தி......இதை நினைக்கும் போதே, இந்தத் துக்கத்திலும் அவள் முகத்தில் லேசாகப் புன்னகை பூக்கிறது.) ராம ராம!.........அவள் பிரக்ஞை இழக்கிறாள். எங்கேயோ எண்ணெய் மழை பெய்வதுபோல 'குவா, குவா' என்றொரு கீச்சுக் குரல் கேட்கிறது...........அவள் கண்ணை விழிக்கிறாள். அவள் சதையோடு சதையாய் விலாப்புறத்திலே ஒட்டிக்கொண்டு கிடக்கும் அந்தச் சின்னஞ்சிறிய வஸ்து—நேற்று வரை வெளிப்படையாய் இல்லாதிருந்து இன்று 'இருக்கிறேன் இருக்கிறேன்' என்று கையாலும் காலாலும், வாயாலும் அமோகமாகப் பிரகடனம் செய்யும் இந்தப் பட்டாணிக் குஞ்சு'—இது என்ன? வேற்றுமுகமாயிருக்கிறதா? இல்லவேயில்லை! தன்னையோ தன் புருஷனையோ, அவன் சகோதரியையோ அப்படியே 'உரித்து' வைத்திருக்கும் இந்த அற்புத வஸ்து, இது என்ன? மயிர்க்காலுக்கு மயிர்க்கால் உயிரின் ஒளிக்கிரணங்களை அள்ளி வீசும் இந்த விசித்திர வஸ்து—இது என்ன? அவள் சதையின் சதை, உயிரின் உயிர்! அவள் உடம்பிலிருந்தும் உயிரிலிருந்தும் ஒருவரும் பிரித்து விட முடியாதபடி அதை அவள் தன் உடம்போடு சேர்த்து அணைத்துக் கொள்ளுகிறாள். இந்தக் 'கண்'ணுக்கு, ''பட்டுக் குஞ்சல'த்திற்கு என்ன பெயர் வைக்கலாம்? சுந்தரம்! அது தான். என் சுந்து, என்று மறுபடியும் அதை அணைத்துக் கொள்ளுகிறாள்— கந்தல் துணிக்குள்ளே கையையும் காலையும் நிமிர்த்தும் அந்தக் கோமள உருவத்தை. அவள் அணைப்பு, இந்த உலகம் பூராவும் தன்னை எதிர்த்தாலும், தான் ஒண்டியாகவே நின்று தன் சிசுவைக் காப்பேன் என்று சொல்வது போலிருக்கிறது!

ஆம்! அவளதே. அவன்தான் சுந்தரம்—அவனா இவன்? அவனேதானா? துக்கம் பந்து போல் எழும்பி அவள் தொண்டையை அடைக்கிறது. அடைபட்ட மடை திறந்தது போலக் கண்ணீர் பாய்கிறது.

* * *

நீங்கள் பேசாமல் இருங்கள் மாமி! அவருக்குத் தெரியாதா தம் உடம்பைப் பார்த்துக் கொள்ள? இந்த வேற்று முகங்கொண்ட சிறுபெண் எப்படியோ அவர்கள் குடும்பத்திற்குள் வந்து நுழைந்துவிட்டாள். இவள் யாரு? நேற்றுவரை இந்த வீட்டையே எட்டிப்பார்த்

திராத இவள், இன்று வீட்டில் நுழைவதற்குள் சுதந்திரம் கொண்டாடுகிறாளே! அவராமே அவர்! துவர்! அவரையும், துவரையும் இவள் எத்தனை நாளாய்க் கண்டு விட்டாள். அவன் பிறந்து ஐந்து ஆண்டுகள் வரை பூண்டற்றுக்கிடந்த இவள்! நடந்தால் நொடிக்குமோ, நின்றால் துவளுமோ, என்று தோன்றும் இந்த அல்லிக்கொடி! தாம்பத்ய வாழ்க்கையின் வாயிற்படியைக் கூட இன்னும் தாண்டாத இவள்! மார்த்துணியை இழுத்து இழுத்து விட்டுக்கொண்டால் ஆய் விட்டதா? உலகம் பூராவையும் அதற்குள்ளே அடக்கிவிட்டதாக எண்ணம் போலும்! தாய்க்குப் பின் தாரமா, அல்லது தாரத்திற்குப் பின் தாயா?......சம்சார சக்கரத்தில் எது முன் எது பின்?

* * *

"அம்மா! நான் தான் சுமுகம். நமஸ்காரம் பண்றேன்."

"ஆயிரங்காலம் அமோகமாய் வாழ வேண்டும்! பிள்ளை குட்டிகளைப் பெற்று...."

"இதோ உங்கள் பேரன்! உங்களை ரொம்ப ரொம்பக் கண்டுவிட்டவன் போல், உங்களைப் பார்த்துத் தன் பொக்கைவாயைக் காட்டிச் சிரிக்கிறான்......"

ஆர்வத்தோடு அள்ளி அவனை அணைக்கிறாள் பாட்டி.

"சுமுகம் இங்கே வாம்மா"

உலர்ந்து ஒட்டிக் கிடக்கும் அவள் கை தன் நாட்டுப் பெண்ணின் முதுகை லேசாகத் தடவுகிறது. கண்ணிலிருந்து ஆனந்த பாஷ்பம் உதிருகிறது. வயிற்றிலிருந்து ஒரு பந்து எழும்பி அவள் தொண்டையை அடைக்கிறது. நாக் குழறுகிறது. தட்டுத் தடுமாறி வார்த்தைகள் வெளி வருகின்றன.

"சுமுகு! நீயும் ஒரு தாய் ஆய்விட்டாய்! இனி நீ எல்லாம் உணர்வாய்!"

ஆம், தாய் அறியாத தத்துவம் என்ன இருக்கிறது.?




சிறந்த சலவை ...
இந்த OK கொண்டுதான்!
ஓ. கே. சலவை சோப்பை
OK
தயாரிப்பவர்கள் ; ஈஸ்ட் ஏஷியாடிக் கம்பெனி (இந்தியா) லிமிடெட், சென்னை.

தேவையற்ற ரோமத்தை விலக்குங்கள்!

கடந்த 50 ஆண்டுகளாக உலகப் பிரசித்திபெற்ற

# பாத்ஷாஹி



வாசனைப் பவுடர்—ஸோப்—லோஷன்

நேர்த்தியான சரும சுகத்திற்கு இணையற்றது.

தென்னிந்தியாவிற்கு ஏஜண்டுகள் தேவை.

எல்லா ஷாப்புகளிலும் கிடைக்கும்.




ரிஜிஸ்டர்டு நெ. 529

ஊற்பத்தியாளர்கள்:

**C. C. மஹாஜன் அண் கோ., பம்பாய்-2.**




## பார்லிக் கஞ்சி தயாரிக்க சுலபமான முறை

இரண்டு டீஸ்பூன் பார்லியை சிறிது ஜலத்தில் பசைபோல் கரைத்து, பின் இரண்டு டம்ளர் ஜலத்தில் போட்டு ஐந்து நிமிஷம் நன்றாகக் கொதிக்கவைக்கவும். பின்னர் இறக்கி ருசிக்கு வேண்டிய உப்பு அல்லது சர்க்கரை சேர்த்துப் பருகவும். இவ்வளவு சுலபத்தில், ஐந்தே நிமிஷத்தில், ஓர் ருசியான சிறந்த பானத்தைத் தயாரிக்கலாம். வியாதியுற்றோ குணப்படும் தருவாயிலோ உள்ள பலஹீனருக்கு இது சிறந்த உணவு. பியூரிடி பார்லி புஷ்டியான தானியங்களினின்றும் தயாரித்து காற்று புகாமல் தகரடப்பாக்களில் அடைக்கப்பட்டிருக்கிறது. ஒரு பங்கு பியூரிடி பார்லி எட்டு பங்கு அரிசி பார்லிக்கு ஈடாகும். இதனால் எவ்வளவு நேரம், சிரமம் மிச்சமாவது என்று நினைத்துப்பாருங்கள்.

**பியூரிடி**

**இந்தியன் பார்லி**

APSX 100

# தி யுனைடெட்
# கமர்ஷியல் பாங்க் லிமிடெட்

**கல்கத்தா**

| | | |
|---|---|---|
| அதிகாரம் பெற்ற மூலதனம் | .... | ரூ. 8,00,00,000 |
| வழங்கி வாக்களிக்கப்பட்ட மூலதனம் | .... | ரூ. 4,00,00,000 |
| செலுத்தப்பட்ட மூலதனம் | .... | ரூ. 2,00,00,000 |
| ரிஸர்வ் நிதி | .... | ரூ. 45,00,000 |

●

*டைரக்டர்கள்*

**G. D. பிர்லா—சேர்மன்**

ஈஸ்வரி ப்ரஸாத் கோயென்கா
(வைஸ்-சேர்மன்)

ரமண்லால் ஜி. ஸரையா
(வைஸ்-சேர்மன்)

ஆநந்த சரண் லா.
பைஜ்நாத் ஜலான்
கோவிந்த்லால் பங்கூர்
மதன்மோகன் R. ரூயியா
மஹாதேவ் L. தஹானுகார்

மோஹன்லால் L. ஷா
மோதிலால் தபூரியா
நவீன் சந்த்ர மபட்லால்
P. D. ஹிமத்சிங்கா
R. L. கோப்னி

*ஜெனரல் மானேஜர்*

**B. T. தாகூர்**

●

**இந்தியாவிலும் பர்மாவிலும் உள்ள முக்கிய நகரங்களில்
70 பிராஞ்சுகளுக்கு மேலும், உலகெங்கும் சேவை செய்யத்
திறமை மிக்க ஏஜன்ஸி வசதிகளும் உள்ளன.**

Edited & Published by N. R. Ramanujan & Printed by S. Rangaswami
at the Cauveri Colour Press, Besant Road, Kumbakonam.




புதுப் பொலிவு அளிக்கவல்ல ஒரு புதிய சோப் அறிமுகம். அனேக வருஷ ஆராய்ச்சி அனுபவத்தைக் கொண்ட புதிய சிருஷ்டி ரூப் சோப். மனோகரமான மலர்களின் மணம் கமழும் ரூப் சோப் சருமத்திற்கு மிருதுத் தன்மையும், கவர்ச்சி மிக்க காந்தியையும் அளிப்பது. இன்றே ரூப் உபயோகித்துப் பாருங்கள்.

தயாரிப்பு:

**மேட்டூர் கெமிகல் & இண்டஸ்ட்ரியல் கார்ப்பொரேஷன் லிமிடெட்**

மேட்டூர் அணை, சேலம்.

மானேஜிங் ஏஜண்ட்ஸ்:

**சேஷசாயி பிரதர்ஸ் லிமிடெட்.**

திருச்சிராப்பள்ளி.

பூரண விற்பனை ஏஜண்டுகள்:

**அலைட் இண்டஸ்ட்ரியல் டிஸ்ட்ரிப்யூடர்ஸ் லிமிடெட்**

120. அரமனைக்காரர் தெரு

மதராஸ்-1.




The Cauveri Colour Press, Kumbakonam.